# மத விசாரணை

இஃது

"ஞானசூரியன்" ஆசிரியர்

## சுவாமி-சிவானந்த ஸரஸ்வதி

அவர்கள் இயற்றியது

---

பிரசுரிப்பவர்

தேவகோட்டை

**D. V. அருணாசலன்.**

மதுரை, ராஜா பிரஸில்

அச்சிடப்பெற்றது.

விலை 1931 ரூ ஒன்று

சகல உரிமைகளும் பிரசுரிப்பவர்க்கே உரியது.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ் வென்று மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர் மாண்புறச் செய்வோம்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடுங் காணீர்.

பாரதியார்.



D. V. ARUNACHALAN.

# முகவுரை.

தமிழ் நாட்டில் பெரும் பாலோராகிய மக்கள் தம்மை ஹிந்துக்கள் அல்லது ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களென்றே சொல்லிக்கொள்கின்றார்கள். ஆனால் அவர் தம்முள், அவ்வாறுநாம் ஏன் சொல்லிக்கொள்கின்றோம், இந்துமத மென்றாலென்ன அதன் அடிப்படையான ஆதாரங்கள், கொள்கைகள் யாவன என்ற இன்னோரன்ன கேள்விகளை எழுப்பிப் பரிசோதித்துணரும் தகைமையாளர் மிகச் சிலரே யாவர்? "ஏன் நீ இந்து" என்று கேட்டால், 'இந்து மதத்தில் பிறந்தேன்' 'பெற்றோர் இந்துக்கள்' 'பிறர் என்னை இந்து என்று சொல்லுகிறார்கள்,' எனக்கூறி அமையும் மக்களே மிகுதியாளர்.

எனவே எதையும் விசாரணை செய்து ஊன்றிநோக்கும் அறிவின் திறனை இழந்து நலிந்து சாகும் மக்கள் மலிநது கிடக்கும் இந்நாளிலே அவர்தமைத் தட்டியெழுப்பி மதவிசாரணை செய்யுமாறு தூண்டுகின்ற ஒரு புத்தகத்தின் அவசியத்தை மறுப்பவர் ஒருவருமிரார்.

இன்னும் இந்து மததலாலும் அதன் பெயராலும் நடக்கின்ற மனிதரை அடிமையாக்கக் கூடியதும், கேவலமான புத்தியுடையவராக்கக் கூடியதுமான பல வழிபாடுகளையும், ஆராதனைகளையும், விழாக்களையும் பழக்கவழக்கங்களையும் தவிர, ஒருவன் இந்து என்று சொல்லிக்கொள்வதற்கு ஆதாரமும் அடிப்படையுமான சீரிய கொள்கை அல்லது கொள்கைகள் ஏதேனுமுண்டா என்பதே இககாலத்தில் சந்தேகத்திற்கிடமாயிருக்கிறது. வேத ஸ்மிருதிகளை ஒத்துக்கொள்ளாதவனும் இந்து என்று சொல்லிக்கொள்ளலாம. அவற்றை வாசிக்கவோ, கேட்கவோ, கூடாதவனும் இந்துவாக இருக்கலாம். புராண இதிகாசங்களைப் பொய்யெனப் புறக்கணிப்பவனையும் இந்துவெனலாம். ஆலயவழிபாடுகளைக் கண்டிப்பவனும் இந்துவாகயிருக்கலாம். சாதியை ஒழித்தவரும் இந்துக்களாகயிருக்கலாம். எவன் எதைவேண்டுமானாலும் மறுக்கலாம், செய்யலாம், ஆனால் இந்து என்றும் சொல்


லிக்கொள்ளலாம். ஒரு கிறிஸ்தவனும் மகமதியனும் கூட இந்து என்று சொல்லிக்கொண்டால், ஏன் சொல்லிக் கொள்ளக் கூடாதென்பதற்கு ஆதாரமில்லை இதுவே இமமதத்தின் பெருமை என்பாருமுளர்.

இத்தகைய சீர் கேடான மதத்தின் ஆணிவேரான பார்பனீயத்தையும், அதன் பயனாய கேவலமான பழக்க வழக்கங்களையும், அவை எவ்வாறு மனிதமுன்னேற்றத்திற்கு இடையூறாக விருக்கின்றனவென்பதையுமபற்றி இந்நாட்டிலும் இன்னுமம வெளிதேசங்களிலுமுள்ள பல உயர்ந்த ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளரும் ஆங்காங்கே எடுத்து எழுதியிருக்கின்றார்கள். எனினுமம தமிழ் மககள் அவற்றான் பெரும் பயனடைந்ததாகத் தெரியவில்லை. தமிழில் வேதஸ்மிருதிகளைப்பற்றிய உண்மைகளைத் தாத்தக்க புத்தகமில்லாக் குறையே இதன் காரணமெனக் கருதுகிறேன. இக் குறையை நீக்குதல் என் கடனாகக் கருதி இநத மதவிசாரணை,என்னுமம தமிழ்ப் புத்தகத்தை வெளியிடத் துணிந்தேன். இப்புத்தக ஆசிரியரான ஸ்வாமி சிவாநநத ஸரஸ்வதி அவர்களின் கல்வியின் உயர்ச்சியையும், சாஸ்திரப் பயிற்சியையும், ஆராய்ச்சியின் திறனையும் "ஞான சூரியன்" என்னும் புத்தகத்தை வாசித்தவர்கள நன்குணர்வர். எனவே தமிழ் மக்களனைவருமம இப்புத்தகத்தை வாசித்து இனியேனும் தமது மூட நம்பிக்கைகளையும், கெட்ட பழக்க வழககங்களையும் அறவே ஒழித்து வாழ்க்கையில் முன்னேற்றமடைய முற்படுவார்கள் என்று நமபுகிறேன.

**D. V. அருணாசலன்.**

மாணிக்க விலாஸ்,

தேவகோட்டை.



சுவாமி சிவானந்த சரஸ்வதி.

# மதவிசாரணை.

சகோதரர்களே!

"ஞானசூரியன்" என்னும் புத்தகத்தில் வேதத்திலும், ஸ்மிருதிகளிலும் உள்ள புரட்டுகளில் பல வெளியிட்டிருக்கிறேன். ஆயினும் தமிழர்களாகிய நமக்கு நம்முடைய பழைய சரித்திரம் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் வேதங்களையே ஆராய வேண்டும். தற்காலத்திய பார்ப்பனர்களும் அவர்களின் ஆட்களும் நம்மை நாகரீக மற்றவர்களின் சந்ததிகள் என்று சொல்லுகிறார்கள். இதற்கு பிரமாணம் புராணங்களிலுள்ள சில சுலோகங்களும் இடைக்காலம் முதல் கட்டாயப்படுத்தி அனுசரித்துவந்த சில பழக்க வழக்கங்களுமேயாம். ஆரியர்கள் தங்கள் பழக்க வழக்கங்களையும் தங்களுக்கும் பிற நாட்டினருக்கும் நடந்த சண்டையையும் மற்றும் எழுதிவைத்திருப்பதே வேதமெனப்படுவது. இவ்வுண்மையை முன்னும் கூறியுள்ளேன். வேதத்தில் பலவிடங்களில் நமது மூதாதைகளின் மேன்மையைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. அவைகளை நன்கு அறிய வேண்டுமானால் வேதத்தை வாசித்தே ஆகவேண்டும். இவ்வாறே ஆராய்ச்சியாளரும் சொல்லுகிறார்கள். தமிழர்களின் பழக்க வழக்கங்களை உணர்த்துவதற்கு சங்கநூற்களே போதுமானவை யெனச் சிலர் கூறுகின்றனர். இது பொருத்தமற்றதாகும். ஏனெனில் அந் நூல்களுக்கு 2000 ஆண்டுகளுக்கு மேல் பழக்கமில்லை அன்றியும் அவையுள் பல ஜைனர்களாலும் பௌத்தர்களாலுமே எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் தமிழர்களுள்பட பதினேழுகோடி பார்ப்பனரல்லாத இந்துக்கள் வேதங்களை ஆராய்ந்தே தங்கள் முன்னோர்களின் சரித்திரங்களை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆரியர்கள் தங்கள்வேதத்தில் தமிழர்களுக்கு தஸ்யுதாஸன், மிலேச்சன், அசுரன், சூத்திரன், அனரியன் என பற்பல இழிபெயர்கள் வழங்கியும் தங்களுக்கு பூதேவர், ஸ்வயம்பூவின் சந்ததிகள், யஜமானர், பண்டிதர், பிராமணர் முதலிய உயர்பெயர்கள் வழங்கியுமிருக்க நம் முன்னோர்களின் மேன்மை வேதஆராச்சியினல் அறியப்படுவது எப்படியெனில் முற்கூறிய ஆரிய அனரிய வகுப்பினரின் ஒழுக்கங்களை தெளிவாய் கூறியிருப்பதால் பிறர் நலத்திற்கு பாதகமில்லாத பழக்க வழக்கங்களையுடையவர்கள் உயர்ந்தவர்களென்றும் இதற்கு எதிரிடையாயிருப்பவர்கள் தாழ்ந்தவர்களென்றும் அறியலாம்.

ஒவ்வொரு மதத்தினரும் தங்களை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியும் சொல்லுவது சகஜம். உதாரணமாக முஸ்லீம்கள் தங்கள் மதத்தினரல்லாத பாரதநாட்டு மக்கள் பார்ப்பனருள்பட எல்லாரையும் "ஹிந்து காபிர்" என்று இழிவாகவும் தங்கள் வகுப்பினரை "இஸ்லாம்" என்று உயர்த்தியும் கூறுகின்றனர். பாரசீக பாஷையில் 'இந்து கபிர்' என்றால் மெய்க்கடவுளை வழிபடாதவன் கொள்ளைக்காரன், பேடி, சிசினத்தை தெய்வமாக வழிபடுபவன் இவைமுதலிய இழிபொருள்களையும் 'இஸ்லாம்' என்றால் உண்மைக்கடவுளை வழிபடுபவன், பொறுமையாளன் இவை முதலிய மேன்மையான பொருளையும் குறிக்குமாம். இந்து வென்றும் இந்தியாவென்றும் நமது தென்மொழியிலோ வடமொழியிலோ எழுதப்பெற்ற நூல்களில் எங்கும் காணப்படவுமில்லை. ஆயினும் இந்து, இந்தியா, இரண்டையும் எக்காரணத்தைப்பற்றியோ ஒப்புக்கொண்டாய்விட்டது. இவ்வாறே கிருஸ்தவர்களும் தங்கள் மதத்தினரைத் தவிர ஏனையோரை "அஞ்ஞானிகள்" என்கின்றனர் இதும் பாமரமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. பர்மா தேசத்தினர் நம் நாட்டினரை "கல்லா" என்று அழைக்கின்றனர். நாகரிக முதிர்ந்தவர்களும் தங்கள் ஆட்சியில் மக்கள் யாவரும் சமத்துவமாக நடத்தப்பட்டு வருவதாக வாய்கூசாமற் சொல்லுகின்றவர்களுமான ஆங்கிலேயர்கள் தங்களை உயர்குலத்தினராகவும இந்நாட்டு மக்களைக் கீழாகவும் மதித்து எல்லாத் துறைகளிலும் அவ்வாறே நடத்தியும் வருகின்றனர். இவை யாவும் பலஹீனன் பலவானுக்கு அடிமை என்பதையே உணர்த்துகின்றன. ஆனல் அறிஞர்கள்

பிறருக்கும் தமக்கும் நன்மையான ஆசாரங்களையுடையவர்களை உத்தமர்களாகவும் எதிர்மறையானவர்களை கடையர்களென்றும் கொள்ளுவர். ஆகையால் வேதத்தில் தமிழர்களைப்பற்றி இழிவாய் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும் அவர்களின் பழக்க வழக்கங்களும் கூறப் பட்டிருககின்றன. அத்தகைய வாக்கியங்களிற் சில உதாகரிப்போம்.

''வதீர்ஹி தஸ்யும் தனினம் கனேன ஏகஸ்சரன் னுபசாகேபி ரிந்த்ர! | தனோரதி விஷுணக்தேவ் யாயன்னயஜ்வான: ஜனகா: ப்ரேதிமீயு: ||''

(ரிக்வேதம் மண்டலம் 1. காண்டம் 33. மந்த்ரம் 4.)

பொருள்:— இந்திரனே! பகைவர்களை அழிப்பதற்குரிய பல வகை உபாயங்களையுடைய தேவரீர் (அசுவமேதம், கோமேதம், நரமேதம், பௌண்டரீகம், சௌத்ரமணி முதலிய) யாகங்களை வெறுக்கின்றவர்களும் தனவந்தர்களுமான தஸ்யுக்களை வஜ்ராயுதத்தினல் கொன்றுவிடககடவீர்.

இதனுல் தஸ்யுக்கள் என்று ஆரியர்களால் கூறப்படும் ஜாதியினர் அநியாயமாக உயிர்களை வதைத்துத் தின்னும் ஆரியர்களின் யாகங்களை வெறுக்கின்றவர்களென்றும பொருட் செல்வமுடையவர்களென்றும் பெறப்பட்டது. இவ்விருவகுப்பினரில் உயர்ந்தோர் யாவர்? ஆரியர்களா? தஸ்யுக்களா? வாசகர்களே! நீங்களே தீர்மானம் செய்யுங்கள்.

''சதமச்மன்மயீனும்'' புராமிந்த்ரோ வ்யாஸ்யத் திவோதாஸாய தாசுஷே ||. (ரிக்வே 4—30—20.) (இந்திரனே! தேவரீர் திவோதாஸ மஹாராஜனிடத்து வைத்துள்ள அன்பினல் சம்பரன் என்கிற தஸ்யு அரசனின் கற்களால் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டிடங்களையுடைய பட்டணங்களை அழித்துவிட்டீர்.)

''அச்வாபயத் தபீதயே ஸஹஸ்ராத்ரிம் சதம் ஹதை: | தாஸானுமிந்த்ரோ மாயயா ||''. (ரிக்வே 4—30—21.) இந்திரனே! தேவரீர் தபீதி மஹாராஜனிடத்து வைத்துள்ள அன்பினல் முப்பதினுயிரம் தஸ்யுக்களை வஞ்சனைசெய்து பலவகையான ஆயுதங்களால் கொன்றொடுக்கினீர்.)

இவ்விரு வாக்கியங்களாலும் பெறப்படுவது யாதெனில் அனாரி யர்கள் பெரிய பெரிய கோட்டைகள் கட்டி சைனியங்களுடன் அர சாட்சி பண்ணி வந்தவர்களென்றும் ஆரியர்கள் அவர்களுக்கிடையில் புகுந்து சச்சரவையுண்டுபண்ணி அழித்ததுமேயாகும். 'தபீதி, திவோதாஸன்' எனககூறப்பட்ட இருஅரசர்களும் தமிழர்களேயாவர்.

"இந்த்ர ஜஹி புமாம்ஸம் யாதுதான முதஸ்த்ரியம் | மாயயா சாசதானம். ||"

(இந்திரனே! யாதுதானர் (ராட்சதர்)களின் ஆண்களையும் பெண் களையும் அழித்துவிடக்கடவீர்.)

இதனால் அனாரியர்களின் பெண்களையும் கூட ஆரியபாவிகள் சதிசெய்து கொன்றுவிட்டிருக்கிறார்களென்பது கண்டோம். பிற ருடைய நல்வாழ்க்கையில் பொறாமையுடைய பழிகார ஆரியரின் மற் றொரு வேண்டுகோளையும் கவனியுங்கள்.

"கிம்தே க்ருண்வந்தி கீகடேஷு காவோ நாசிம்துஹ்ரே நத பந்திகர்மம் | ஆனோ பரப்ரமகந்தஸ்ய வேதோ நைசாசாகம் மகவன் ரந்தயாந: ||" (நிருக்தம் நைகமகாண்டம் 32.)

(இந்திரனே! கீகடதேச (அனாரியதேசம்)த்தில் பசுமாடுகள் தேவ ரீரின் பொருட்டு பாலைத்தராமலும் எங்களுக்கு யாகஞ்செய்வதற்கு உதவாமலும் இருக்கின்றனவே ஆகையால் அவைகளைக் கொள்ளையிட்டு எங்களுக்குத் தந்தருளும். அன்றியும் கீகடதேசத்தை அரசுபுரியும் ப்ரமகந்தனுடையவும் அவனுடைய பிள்ளை பேரன் முதலிய அவனைச் சார்ந்த எல்லோருடையவும் பொருள்களைக் கொள்ளையிட்டு எங்களைக் காப்பாற்றும்)

இதனால் தஸ்யுக்கள் என்போரும் ஆரியரும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தார்கள் என்பது பெறப்பட்டது. அன்றியும் ஆரி யர்களாகிய சதிகாரர்கள் குடிக்க கஞ்சியும் இருக்க இடமும் உடுக்க உடையும் இல்லாது பரிதவித்து இந்நாட்டுக்கு வந்த காலத்தில் இப்

பாதகர்களின் வேதத்தில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களினாலேயே அனாரியர்கள் (நம்மவர்கள் பரோபகாரிகளென்றும் பலமான கோட்டைகள் சைனியங்கள் முதலியவைகளோடு அரசுபுரிந்து வாழ்ந்து வந்தவர்களென்றும் பிறப்பினால் உயர்வுதாழ்வு பாராட்டாமல் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தவர்களென்றும் ஆரியர்கள் வாயில்லாப் பிராணிகளாகிய ஆடு மாடுகளையும் மக்களையுமகூட யாகமென்ற பெயரால் கொலை செய்து தின்றுவந்தவர்களென்பதும் வெளிப்பட்டது. இத்தகைய பழிகாரர்களின் சமயத்தை நம்பியதன் பயனாக சமூகச்சண்டையும் அதனால் அழிவும் ஏற்பட்டு எஞ்சியவர்களும் நாடும் அன்னியருக்கு அடிமைப்பட்டும் இருக்க நேர்ந்தது ஆயினும் "பசு இறந்தும் மோரின் புளிப்பு நீங்கவில்லை" என்கிற பழமொழிபோல ஆரியர்கள் தங்களையும் தங்களை அடுத்தோரையும் அடிமைப்படுத்திய பிறகுங்கூட அகங்காரத்தை ஒழித்த பாடில்லை.

அனாரியன் ஆரியமதத்தில் சேர்ந்த பின்பும் ஆரிய அனார்ய வேற்றுமை.

"இமம் தேவா அஸபத்நம் ஸுவத்வம் மஹதே க்ஷத்ராய மஹதே ஜ்யைஷ்டாய மஹதே ஜானராஜ்யாயைந்த்ரஸ்யேந்திரியாய!!" இமம முஷ்ய புத்ரமமுஷ்யை புத்ரமஸ்மை விச ஏஷ வோமீ ராஜா ஸோமோஸ்மாகம் ப்ராஹ்மணானாம் ராஜா"!! (யஜுர்வேதம் 9/40) (இந்த்ரன் முதலிய தேவர்களே! இவ்வரசனுடைய பகைவர்களை அழித்துவிட்டு இவனை கர்மத்தில் ஏவுங்கள் (யாகம் முதலிய கொலைபாதகத் தொழிலில் ஈடுபடச் செய்யுங்கள்) (இங்ஙனம் செய்வதனால்) க்ஷத்திரிய பதவிக்கு மிகவும் மேன்மையும் பிராமணர்களாகிய நமக்கு மிகவும் அனுகூலமுமுண்டாகும். ஓ குடிகளே! (அனாரியர்களே!) இன்ன அரசனுடையவும் இன்ன அரசியினுடையவும் புத்திரனான (இச்சிங்காதனத்தின் மீது இருப்பவன்) இவன் உங்களுக்கு அரசனாவன். ஆகையால் இவனை காக்கவேண்டியது உங்கள் கடமையாகும். இவனது கட்டளைக்கு கீழ்ப்படிந்து நீங்கள் நடந்துகொள்ளவேண்டும். ஆனால் பிராமணர்களாகிய எங்களுக்கு இவன் அரசனல்லன் எங்களுக்குச் சந்திரனே அரசன்.

இந்த மந்திரத்தினால் தெரிந்து கொள்ளப்படுவது யாதெனில் பிராமணனுக்கு க்ஷத்திரியன் அரசனாகமாட்டானென்பதும் பிராமண வகுப்பானது உயர்ந்த ஓர் தனி வகுப்பென்பதுமே. அன்றியும வேதத்தில் எந்த விடத்தில் நான்கு வர்ணங்களின் பெயர் கூறப்பட்டிருக்கின்றனவோ அங்கு முதலில் பிராமணனையே உதாகரித்திருப்பதாலும் பிராமணன் மற்ற வருணங்களுக்கு கட்டுப்படாதவன் என்பது வெளிப்படை ஆனால் க்ஷத்திரிய அரசன் பிராமணவர்ணத்தின் நன்மை ஒன்றையே விரும்புபவனாய் மற்ற வகுப்பினரை முன்னுக்கு வரவொட்டாமல் அடக்கியாண்டு வருவதோடு பிராமணவர்ணத்திற்கு தாஸானு தாஸனாகவும் இருந்து வரவேண்டும். இத்தகைய சில கோடரிக்காம்புகளை * (க்ஷத்திரியர்களை) கைவசப்படுத்தாவிட்டால் அனாரியர்கள் ஆரியர்களுக்கு அடிமைப்பட்டு இருக்கமாட்டார்கள். இவ்வாறே கலக மூட்டுவதும் கொள்ளையடிப்பதுமே இவ்வாரியரின் பரம்பரைத் தொழில். "ஊர்பிளவுபட நூலை விடு" என்னும் பழமொழியே இதற்கு சாக்ஷி: இவ்வாரியர்களின் சேர்க்கையாலும் கொடுமையாலும் அனாரிய (தமிழர்)ரின் நாகரிகம் அழிந்துபோய் இரண்டு கால் மிருகங்களாக மாறிவிட்டதோடு தங்களுககுள் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்து நாய்களைப்போலச் சண்டையிட்டும் வந்திருக்கிறார்கள்; வருகின்றார்கள். இப்பிராமணமதம அழிந்துபோம்வரைக்கும் அல்லது இப்பிராமண மதத்தினின்று தமிழர்கள் விலகும்வரையிலும் சண்டையிடுவார்கள்.

அன்பர்களே! ஆரியர்களின் நித்தியப்பிரார்த்தனைகளுள் ஒன்று இவ்வாறு காணப்படுகின்றது.

> "சுமித்திரியா ந ஆப ஓஷதய: ஸந்து துர்மித்திரியாஸ் தஸ்மை ஸந்து" யோஸ்மான் த்வேஷ்டியம் சவயம் த்விஷ்ம: !!
>
> (யஜுர் 6, 22, 36, 23,)

---

* க்ஷத்திரியர்கள் எல்லாம் அனாரியர்களே; பார்ப்பனரல்லாதாரை அடக்கியாளப் பார்ப்பனர் செய்த சூழ்ச்சியினாலேயே இவ்வகுப்பு தோன்றிற்று. இத்தகைய க்ஷத்திரியர்களால் பார்ப்பனரல்லாதார் அடைந்த துன்பம் இராமாயணம் முதலிய புராண இதிகாசங்களில் தெளிவாய் காணலாம்.

இந்திரனே! உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதவையான பிராணவாயு ஜலம் அன்னம் முதலியவைகள் ஆரியர்களாகிய எங்களுக்கு அமிர்தமாகவும் எங்களை யார் பகைக்கின்றார்களோ (வேதஸ்மிருதிகளின்படி யாகம் முதலிய கொலைபாதகங்களுக்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்யாததனால்) அவ்வாறே தெய்வத்தின் பெயரால் கள்ளுண்ணல், வியபிசரித்தல், கொலைசெய்தல் முதலியன இழிவாகக் கருதுகின்ற யாரை நாங்கள் வெறுக்கின்றோமோ அத்தகைய அனாரியர்களுக்கு விஷமாகவும் ஆகட்டும்.)

இதனால் கொலைகார ஆரியர்மட்டும் எக்காலத்தும் க்ஷேமமாயிருக்க வேண்டு மென்பதும் கொலையை விரும்பாத அனாரியர்கள் அழியவேண்டுமென்பதுமே ஆரியர்களின் கருத்து என்று தெளிவாயிற்று. இம்மந்திரமானது ஒவ்வொரு பிராமணனும் நாள்தோறும் கடவுளை நோக்கி பிரார்த்தித்தற்குரியது. இத்தகைய ஜன்ம சத்துருக்களைத் தங்கள் குருமாராக எண்ணி ஏமாந்து அவர்கள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்துமுடித்து அவர்களின் அருளால் மோட்சமடைய எண்ணியிருக்கிற நம்மவர்கள் அடைந்ததும் அடைவதும் என்ன? மோசம்தான். மோசத்திற்கும் மோட்சத்திற்கும் இருக்கிற வேற்றுமை யாது? மிகக்குறைந்ததே "ட்" என்னும் ஒரே ஒரு சிறுஎழுத்து. ஆகையால் சகோதரர்களே! பிராமணர்களை நம்பின நீங்கள் உங்களுக்கும் உங்கள் சமுதாயத்திற்கும் எமன்களாக ஆனீர்கள். இனிமேலாவது உண்மையை உணர்ந்து இவ்வாபத்தினின்றும் மீளவழி தேடுகின்றீர்களா? அழிந்தே போகின்றீர்களா? யுக்தம்போல் செய்யுங்கள்.

யஜுர்வேதத்தில் ஓரிடத்தில் இவ்வாறு கூறப்படுகின்றது.

"யத்ர ப்ரஹ்ம சக்ஷத்ரம் சஸம்யஞ்சௌசரத: ஸஹ தம்லோகம் புண்யம் யஜ்ஞேஷம் யத்ரதேவா: ஸஹாக்நிநா" (யஜுர் 20/25) (எந்தவிடத்தில் பிராமணர்களும் க்ஷத்திரிய அரசனும் ஒற்றுமையோடு ஆட்சிபுரிகின்றார்களோ வைசிய சூத்திரர்களின் பெயர் வெளிவருகிறதில்லையோ அத்தேசம் யாகத்திற்குரிய பரிசுத்தமான தேசமென உணர்கின்றேன்.)

இதனாலும் வைசிய சூத்திரர்கள் மேன்மைக்கு வரலாகாதென்றும் குடிகளை அடக்கியாளும் க்ஷத்திரியனையே பிராமணர்கள் விரும்புகிறார்களென்பதும் விசதமாகின்றது. வேதம் கடவுளின் திருவாக்கென்பது ஆஸ்திக இந்துக்களின் கூற்று. இவர்களின் கடவுள் பக்ஷபாதமே உருக்கொண்டவர். பிராமணர்களும் க்ஷத்திரிய அரசனும் ஒற்றுமைப்பட்டு ஆட்சிபுரிவதென்றால் கடவுளின் பெயரால் கள்ளுண்ணல், வியபிசரித்தல், வாயில்லாப் பிராணிகளைக்கொன்று பொசுங்கித்தின்னல் இவையோடு அனாரியர்களின் பொருட்களைக் கொள்ளையிட்டு அடிமையாக்குவதுமேயாகும். இவ்வடக்குமுறை பரம்பரைத் தொழிலானதால் பிராமணர்கள் இக்காலத்தும் விட்டுவிடுகின்றார்களில்லை. பார்ப்பனரல்லாதாரை அடக்கியாளுவதில் பார்ப்பனர் இக்காலத்தும் முனைந்து வேலை செய்கின்றார்களென்பதற்கு உத்தியோகத்துறை ஒன்றை கவனித்தால் போதுமானது. அன்றியும் பார்ப்பனனல்லாதானுடைய பொருள்களை நயத்தினாலோ பயமுறித்தியோ பார்ப்பனன் அபகரிக்கலாமென்று பார்ப்பனனல்லாத ஏழைகளுக்கு ஏதேனும் உதவி செய்வது முறையன்றென்றும் கருதி அவ்வாறே நடந்துவருவதோடு நிற்காமல் நெறிதவறிய இவ்வநியாயக் கொள்கையைப் பார்ப்பனரல்லாத பணக்கார அறிவிலிகளுக்கும் போதித்து அவர்களையும் தங்கள் பக்கம் திருப்புவது வழக்கம். இத்தகைய அநியாயபோதனையின் பயனன்றோ இக்காலத்திலும் நமது தென்னாட்டில் பார்ப்பனரின் அனுகூலத்திற்காக மட்டும் அன்னசத்திரங்களும், சமஸ்கிருதபாடசாலைகளும் மலிந்துகிடக்கின்றன. பாடசாலைகளில் பார்ப்பனரல்லாதாரின் பிள்ளைகளைச் சேர்க்காததைப் பற்றிக் குறைகூறுபவர் சிலரே. ஆனால் அன்னத்திற்கு பசியுள்ளவனன்றோ பாத்திரம்? இது பார்ப்பனரின் ஸ்மிருதியிலுமிருக்கிறதே "அன்னஸ்யக்ஷுதிதம் பாத்ரம்" இது ஏட்டில் இருக்கிறதேயொழிய சத்திரங்களில் இதுகாறும் நடவடிக்கையில் வரவேயில்லை. ஏழைப் பார்ப்பனனல்லாதான் ஒருவன் பலநாட்கள் பட்டினிகிடந்து களைத்துத் தெருவீதியில் விழுந்திருப்பதைப்பார்த்த சத்திரத்து அதிகாரிகளும் ஏன் அதிகமாகச் சொல்லவேண்டும், சத்திரத்து சொந்தக்காரர்கள்கூட அந்தோ இரக்கங்காட்டமாட்டார்கள். அதிகமாகத்தின்று விட்டு புளியேப்பத்தினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் பார்ப்ப

னரைக்கூடப்பரிந்து வேண்டி வேளைதவருமல் அன்னம் போட்டு உபசரிப்பார்கள். சில சத்திரங்களில் ஏழைகளுக்கு ஏதேனும் உணவு அளிப்பதாயிருந்தாலும் பகலில்கிடையாது. பகலில் பார்ப்பனனல்லார் தான் உண்டால் சத்திரத்தில் மிச்சப்பட்டிருக்கும் அன்னம்கூட * "சேஷ" மாய்விடுமாம். சேஷமானபின் பிராமணார்கள் உண்ணமாட்டார்களாம். ஆகையினுல் இரவில்தான் கொடுக்கவேண்டும் இவ்வளவு சிரமத்துடன் சத்திரத்துச் சிப்பந்திகளால கொடுக்கப்படும். உணவை வேறு விதியில்லாததனுல் வாங்கியுண்பவன் பலநாட்கள் பட்டினி கிடந்து வருந்தியவனுயிருப்பதோடு இத்தகைய அன்னம் உண்டபின் பலகாலம வருந்தி இறந்துபோனுலும் போவான். ஏனென்ருல் முற்கூறிய அன்னம பலநாட்கள் பழகியதாகவும் அழுக்குபடிந்த பாத்திரங்களில் எப்படியோ வைக்கப்பட்டதாகவும் தும்பி, பாசை, ஈ முதலிய பிராணிகள் விழுந்து செத்திருப்பதாகக்கூட இருக்கும். இதோடு சாதம்போடுகிற பிராமணன் வாய்நிறைய தாம்பூலத்தை அடக்கிக்கொண்டு சாதம் வாங்க வருகிறவர்களை வைதுகொண்டேயிருப்பான். அவனுடைய வாய்நீர் புகையிலையின் விஷத்தோடு அன்னத்தில் விழும். இத்தகைய விசேஷங்களுடைய அன்னம் உட்கொண்டவனை வியாதிகள் விட்டகலுமா? இவ்வுணவின் பெருமையைக் குறித்து இதைவிட விளக்கமாகக்கூற என்னுல்முடியாது. நான்தெரிவித்தவரையில் இவ்வுணவின் பெருமையில் ஆயிரத்தில் ஒருபங்குகூட ஆகவில்லை. விவரமாக அறியவிரும்புவோர் தென்னுட்டுப்பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் பார்ப்பனருக்காக ஏற்படுத்தியிருக்கும் அன்னசததிரங்களில் போய்ப்பார்த்து உணர்ந்து கொள்ளுங்கள். சகோதரர்களே! நம்மவருள் உயர்குலத்தினரென்று தங்களுக்குத் தாங்களே அபிமானித்துக்கொள்பவர்கள் எக்காலத்தும் தங்கள் குலத்திற்கு நெருப்புபோன்றிருக்கும் பார்ப்பனரின் வஞ்சனைக்குட்பட்டு தங்களுடைய சுகத்திலும துக்கத்திலும் பஙகுக்காரர்களான ஏழைப் பார்ப்பனரல்லாதாரைப் பிறப்பினுல் தாழ்ந்தவர்களாக மதித்து ஒரு

* "சேஷம்" என்பது தமிழ் நாட்டில் மாத்திரம் வழங்கிவருகிறது வட இந்தியாவில் இவவழக்கு இல்லை. அஙகுள்ள பாாப்பனர் பார்ப்பனரல்லாதாருக்கு முதல் உணவளித்துவிட்ட பிறகு உண்பார்கள இதனுல் அவர்களுக்கு ஒரு கெடுதியும் காணவில்லை.

வகையிலும் உதவிசெய்யாமலும் அவர்களின் முயற்சியைக் கெடுத்தும் வந்ததனுலும் வருவதனுலுமன்ருே பலர் பிறசமயத்தைச் சாண் புகவும் தீவாந்தரங்களுக்கு விலங்குகளைப்போல ஏற்றுமதியாகி அங்கும் மானங்கெட்ட வாழ்க்கையை நடத்திவரவும் செய்கின்றனர். இத்தகைய கொடுஞ் செய்கைகளை நினைத்தால் பார்ப்பனரைக் காட்டிலும் பார்ப்பனரல்லாத ‡ உயர்குடி மக்களே கொடுமையாளராவர். இவர்களின் செய்கைக ளிரங்கி எவனேனும் இதோபதேசம் செய்தால் அத்தகைய உத்தமனின் உயிரை வாங்கவும இவ்வுயர் ஜாதியினர் பின்னடையார்.

பார்ப்பனரின் நித்திய நைமித்திக கர்மாக்களின் முடிவில் சொல்லுகிற சில மந்திரங்களாவன:—

"ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாயேன மார்க்கேண மஹீம் மஹீசா: |
கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து. ||"

(குடிகள் க்ஷேமமடையட்டும், அரசர் நியாயமான வழியில் பூமியை ஆளக்கடவர். எப்போதும பசுக்களுக்கும பிராமணர்களுக்கும் சுபமுண்டாகட்டும். உலகமெல்லாம் சுகத்துடன் இருக்கட்டும்.)

இதன்பொருள் வெளிப்பார்வைககு அழகாகவே தோன்றும். ஆய்ந்துபார்த்தால் அவ்வாறில்லை. குடிகள் க்ஷேமத்தையடையட்டும் என்கிற வாக்கியத்திற்குமுன் வேதஸ்மிருதிகளில் விதித்துள்ளபடிக்கு என்பதையும் சேர்த்து வாசித்துப் பாருங்கள். அரசர்கள் நியாயமான வழியில் அரசுபுரிவதென்ருல் மனுஸ்மிருதிப்படி என்பது சொல்லாமலே விளங்கவில்லையா? மனுஸ்மிருதிப்படி நடக்கும் ஆட்சியில் பார்ப்பனரல்லாதாரின் சுகம் எத்தகையது? அன்றியும் குடிகள் க்ஷேமத்தையடையட்டும் என்று முதலில் சொல்லிவிட்டு "பசுககளுக்

‡ சூரியனைக் காட்டிலும் சூரிய கிரணத்தால் பழுக்கக் காய்ந்த மணல் உயிர்களுக்கு அதிக துன்பத்தைத் தரும். இவவாறே பார்ப்பனக் கொடுமையைக் கண்டு பழகிய சைவ வேளாளர் முதலிய பார்ப்பனரல்லாத உயர் குடிகளால் ஏழைகள் படுந்துன்பம் அனுபவித்தே உணரவேண்டும்,

கும் பிராமணருக்கும் எப்போதும் சுபம் உண்டாகட்டும்” என்று பின்னரும் சொல்லுவானேன். இதனால் பிராமணர் அரசனுக்கு கீழ்ப் படிந்தவர்களல்லரென்றும் அவர்கள் அடையும்படியான மேன்மை மற்ற குடிகளின் மேன்மையினின்றும் வேறுபட்டதென்றும் விளங்க வில்லையா? இவ்வாக்கியமானது “ஏஷவோமீ ராஜா; ஸோமோஸ்மாகம் ப்ராஹ்மணானாம் ராஜா” (ஓ அனாரியர்களே! இவன் உங்களுக்கு அரசன். பிராமணர்களாகிய எங்களுக்கு சந்திரனே அரசன்) என்னும் யஜுர் வேத வாக்கியத்தை ஞாபகப்படுத்துகிறதன்றோ. அன்றியும் உலக மெல்லாம சுகமாயிருக்கட்டும் என்கிற இடத்திலும் சிலேடையாகப் பொருள் கொள்ளவேண்டும். வேதஸ்மிருதிகளின்படி ஒழுகினால் உலகம் க்ஷேமமுறுமென்பது ஒன்று. இரண்டாவது “உலகமென் பது உயர்ந்தோர் மாட்டு” எனனும் மூதுரையை அனுசரித்துப் பொருள் கொண்டால் இந்துமதப்படி உயர்ந்தோர் பார்ப்பனரே யாவர். ஆகையால் சுகத்தை அடையத் தகுந்தவர் யாவர்? பார்ப் பனரா பார்ப்பனரல்லாதாரா? வாசகர்களே! பதில் கூறுங்கள்.

மற்றொரு மந்திரமாவது:

“காலே வர்ஷது பர்ஜன்ய:
ப்ரிதிவீ ஸஸ்யசாலினீ |
தேசோயம் க்ஷோபரஹிதோ
ப்ராஹ்மணா: ஸந்து நிர்ப்பயா: ||”

(காலங் கடவாமல் மழை பெய்யவேண்டும். பூமியானது பயிர்களால் செழிப்புற்றிருக்கவேண்டும். இந்நாடானது கலக்கமுறாமல் இருக்க வேண்டும். பிராமணர்கள் பயமற்றவர்களாக இருக்கவேண்டும்.)

மழை பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாவிட்டால் பயிர் விளை யாது ஆகையால் மழைபெய்து பயிர் நன்றாய் விளைந்து பூமிசெழிப் புற வேண்டும். தானியத்தைப் பயிரிட்டு அறுத்து உலர்த்தி சுத்தம் செய்து சொந்தக்காரனாகிய பார்ப்பனனுக்குச சேர்ப்பிக்கிறவரையில் சூத்திரனுக்கு அதிகாரமே யொழிய அதை இஷ்டப்படி உபயோகிக்க மனுஸ்மிருதி இடங்கொடுக்கவில்லை. இவ்வுண்மையை “உசசிஷ்ட மன்னம் தாதவ்யம் ஜீர்ணானி வசனானிச ! புலாகாஸ் சைவதான்யா னாம்” (மனு. அ. 10-சு. 125) இவை முதலிய வாக்கியங்களாற் கண்டு

கொள்க, ஒரு சமயம் தங்கள் கஷ்டத்தை உணர்ந்த சூத்திரர்கள் தங்கள் நியாயமான உரிமைக்காகக் கிளர்ச்சி செய்தால் நாட்டில் கலக்க மேற்பட்டுப் பிராமணரின் நலத்திற்கு பாதகமுண்டாகுமே. இது கூடாதன்றோ. அன்றியும் பார்ப்பனரின் அக்கிரமங்களைப் பலகாலமாகப் பொறுத்திருக்கும் பார்ப்பனரல்லாதார் ஒருவேளை முனிந்து கொண்டால் பார்ப்பனருக்கு ஆபத்து வந்துவிடும். அவ்வாறு வரலாகாதென்றே "தேசோயம் க்ஷோபரஹிதோ ப்ராஹமணு: ஸந்து நிர்ப்பயா: ||" என்ற வாககியங்கள் சொல்லவேண்டியதாயின. ஆகையால் சகோதரர்களே! பிராமணர்கள் மனமொழி மெய்களால் தங்கள் சுகத்தைமட்டுமே கோருகின்றூர்களென்பதை உணர்ந்து உங்கள் சமுதாயத்தை உய்விக்க வழி தேடுங்கள்.

ஷை சமஸ்கிருத சுலோகங்களைத் தழுவிய தமிழ்ச் செய்யுள் ஒன்று ஞானசம்பந்தரால் பாடப்பெற்றுள்ளது அதாவது:—

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலாமரநாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே ||"

இது சைவ சமயாசாரியராகிய ஞானசமபந்தருக்கும் சமணர்களுக்கும் வாதம் நடந்தபோது பாடியது. இதை ஒரு ஏட்டில் எழுதி வைகையாற்றில் போட்டதாகவும் அப்போது அவ்வேடு பிரவாகத்தை எதிர்த்து சிறிது தூரஞ்சென்று கரையில் ஒதுங்கிற்றென்றும அக்காலம் முதல் அவ்வேடு ஒதுங்கின இடத்திற்கு "திருவேடகம" எனப் பெயர் உண்டாயிற்றென்றும் சைவர்கள் கூறுகின்றனர். ஏடு இவ்வாறு நதியின் வேகத்தை எதிர்த்துச் சென்ற நிமித்தத்தினுல் சமண, பௌத்த சமயங்கள் கடவுளுக்குச் சம்மதமில்லையென்று கண்ட ஞானசம்பந்தர் அரசனுடைய ஆக்கினையைப் பெற்று சமணர்களையும பௌத்தர்களையும் கழுவேற்றிக் கொன்றுவிட்டு அதோடு நிற்காமல் ஜீவகாருண்ய சீலர்களான ஜைனர்களைக் கொலைசெய்த கொடுநாளை நன்னுளெனப் பாமர மக்களுக்குப் போதித்து அந்நாளின் ஞாபகத்தின் பொருட்டு தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும் ஆண்டுதோறும் பிரமோற்சவம் நடக்குங்கால் ஆறுந் திருவிழாவைச்

"சமணர்களைக் கழுவேற்றிய புண்ணிய விழா"வாகக் கொண்டாடு கிறார்கள். இது இக்காலத்தும் சிறப்பாக நடந்தேறி வருகிறது. ஆனால் இச்சைவ சமயம் கடவுளுக்குச் சம்மதமோ என்னவோ சமணர்களைக் கழுவேற்றிய காலமுதற்கொண்டே இந்நாடு பிறருக்கு அடிமைப்பட்டுவிட்டது பிராமணர்கள் ஆசீர்வதித்து க்ஷத்திரியரின் சிரசில் சூட்டின கிரீடம் வெகு தூரத்திலிருந்து வந்தவர்களும் சிறு தொகையினரும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்து மனிதர்களில் பெரும் பகுதியினரைச் சோமபேறிகளான சிலருககு அடிமைக ளாகவே கடவுள் படைத்தார் எனச் சொல்லும் வேதஸ்மிருதிகளை நமபாதவரும் ஜாதி வேற்றுமை யிலலாதவருமான பிறசமயத்தினரால் வீழ்த்தப்பட்டு க்ஷத்திரியர்களை மாததிரமல்ல இநதிரனையும் சந்திரனை யும் அரசர்களாககொண்ட பிராமணர்களையும் அடிபணியச்செய்து வருகின்றார்களல்லவா? பிராமணர்களின் இந்திரனும் சந்திரனும் எங்கேயோ தலைமறைவாகத் திரிகின்றார்களபோலுமஅல்லது இறந்து போயிருப்பார்கள். ஒருவேளை உயிருடனிருந்தால் எக்காலத்தேனும் வெளிப்படுவார்கள். அப்போது அரசாங்கம் அவ்விருவர்களையுமகட் டாயம அடிமைப்படுத்தும். "சர்வ வல்லமையுள்ள கடவுளே! பார்ப் பனர்களின் நன்மையை மட்டும் கருதிப் பார்ப்பனரல்லாதாரின் பொருள்களைக் கொள்ளையிட்டும் கொலைசெய்தும் அழித்த படுபாவிக ளாகிய இந்திரனும சந்திரனும இஙகினி வராதவண்ணம ஒழியட்டும். ஒருசமயம வருவார்களேயானால் நேர்மையான அரசாங்கத்திற்கு அடங்கி நடக்குமபடி அருள்புரிவீராக" இவ்வாறு நாமும் பிரார்த் தனை பண்ணுவோம். கடவுள் முழுவல்லமையும் முற்றறிவும் கருணை யும் உடையவராயிருநதால் நம்முடைய பிரார்த்தனைக்கு அவசியம் செவி சாய்ப்பார். அவர் சத்தியத்திற்கு கட்டுப்படாமல் பார்ப்பன ருககு மாத்திரம் நன்மை செய்பவராயிருந்தால் நாம் ஒன்று சேர்ந்து அவ்வஞ்சகக் கடவுளை ஒழிக்க வழி தேடுவோம.

## பிராமணனைத் துன்புறுத்தலாகாது.

"நப்ராஹ்மணோ ஹிம்ஸிதவ்யோக்நி: ப்ரியதனோரிவ | ஸோமோ ஹ்யஸ்ய தாயாத இந்த்ரோஸ்யாபி சஸ்திபா: ||" அதர்வவேதம் 5, 18, 6.

(பிராமணன் இம்சிக்கத் தக்கவனன்று. இவன் நெருப்பிற்கொப்பானவன். இவனுடைய பங்காளி சந்திரனும் இவனுடைய புகழை இரட்சிப்பவன் இந்திரனுமாவான்.)

அன்பர்களே! ஆரியர்களின் கடவுள் திருவாய் மலர்ந்தருளியதன்றோ வேதம். கடவுளுக்குக் கொல்லாமையில் விருப்பமிருந்தால் "நப்ராஸிநோ ஹிம்சிதவ்யா:" (உயிர்க்கொலை வேண்டாம்) என்று சொல்ல வேண்டியிருக்க "நப்ராஹ்மணோ ஹிம்சிதவ்ய:" (பிராமணனைக் கொல்லலாகாது) என்று கூறியிருப்பதிலிருந்தே வாயில்லாப் பிராணிகளாகிய ஆடு மாடுகளையும் ஏழைகளாகிய பிராமணரல்லாதாரையும் கொலைசெய்வது சம்மதமென்றும் ஆனால் கொலைகாரர்களாகிய பார்ப்பனரைத் தண்டிப்பது சம்மதமில்லையென்றும் பெறப்படவில்லையா. பிராமணர் தங்கள் வாழ்க்கை நலத்திற்காகமட்டும் ஆடு மாடுகளைக் கொன்று யாகம் செய்பவரும் மற்ற மூன்று வருணத்தினரையும் அடக்கியாளுபவரும் அவர்களில் நான்காவது வகுப்பினரான சூத்திரர் நெற்றி வியர்வை நிலத்தில் வழிந்தோடப் பாடுபட்டுத் தேடிய பொருட்களைத் தின்றழிப்பதோடு நிற்காமல் மிச்சமானதை "யாகம் தேவபூஜை" என்கிற வியாஜத்தினால் நெருப்பிலும் நீரிலும் தரையிலும் கொட்டிப் பாழ்படுத்துபவருமாவர். இது வேதஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருப்பதும் உலகப்பிரசித்தமுமன்றோ.

## பிராமணனை அவமதிப்பவன் அடையும் கதி.

"தம்வ்ருக்ஷா அபஸேதந்தி
சாயாம் நோ மோபகா இதி |
யோ ப்ராஹ்மணஸ்ய ஸத்தன
மபி நாரத! மன்யதே ‖ ". (அதர்வ வேதம் 5, 19, 9.)

(நாரதனே! எவனொருவன் பிராமணனை அவமதிக்கின்றானோ அவனுக்குச் சாலைமரம் கூட நிழலைத் தருவதில்லை.)

வாசகர்களே! பிராமண வகுப்பானது மற்ற வகுப்பினரை அடக்கி யாளவே கடவுளால் படைக்கப்பட்டதென்பதைப் பாமரர்களை ஏமாற்றி நம்பச்செய்யும் பொய்ச்சுவடிகளே வேதமும் ஸ்மிருதிகளுமாகும். ஒருவனை வசப்படுத்தும் உபாயங்கள் சாமம், தானம்,

பேதம், தண்டம் என நான்கு வகைப்படும். நயமான வார்த்தைகளால் எதிரியை வசப்படுத்துதல் சாமம். அதற்குக் கட்டுப்படாதவனை அவனுக்குப் பிரியமான ஏதேனும் பொருளைக் கொடுத்து வசப்படுத்துதல் தானம். இதற்கும் ஏமாறுதவனை அவனுக்கு ஊழியன்போல இருந்தாவது சமயம பார்த்து அவனைச் சார்ந்தவர்களிடம் கோள் மூட்டிப் பிளவுபடுத்துதல் பேதம். இதற்கும் முடியாவிடத்துச் சண்டைசெய்து கீழடக்குவது தண்டம். இந்நான்கு உபாயங்களும் ஆரியரின் பரம்பரைச் சொத்தாயிருக்கின்றன. இவைகளைப் பிரயோகித்தே நம் நாட்டில் ஆரியர் மேன்மையுற்றனர். இவ்வுபாயங்களை முதன்முதல் கையாண்ட முறையாவது:—ஆரியர்கள் இங்கு வரும் போது ஒன்றுமில்லாத ஏழைகளாயிருந்தார்கள். அக்காலத்தில கூத்தாடியும் மற்றுமே தங்கள் வாழ்நாட்களை நடத்தி வந்தனர். இவ்வுண்மையை * ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்" என்கிற பழமொழியினுல் அறியலாம். இவர்கள் இந்நாட்டுப் பிரபுக்களிடம் இச்சகம பேசியே இருக்க இடம் பெற்றுர்கள். பின்னர் (1) தானம், பின்னர் பேதம் இது ஊர் பிளவுபடச் செய்வதன்றே "ஊர்கெட நூலைவிடு, (2)ஊர் பிளவுபட்டால் பூசாரிக்குக்கொண்டாட்டம்" இவை முதலிய பழமொழிகளே இதற்குச் சான்று. நான்காவது தண்டம் தனக்கு வழிப்படாதவர்களைத் தண்டித்து வழிப்படுத்துவது. இதற்கு மலைநாட்டுச் சரித்திரமும் பழக்க வழக்கங்களும் உதாகாணமாகும். சேரநாடாகிய மலையாளத்தில் அவ்வாசாங்கம் வீழ்ச்சியுற்ற பின் பலவான்களான வேளாளர்களை க்ஷத்தியர்களாக்கியும் உடனிருந்துண்டும் மற்றும் வசப்படுத்தி அவர்களுக்குள் பிளவேற்படச் செய்ததோடு தாய்மொழியாகிய தமிழைப் புறக்கணிக்கச் செய்தும் கோகர்ணம் முதல் கன்னியாகுமரி வரையில் அறுபத்து நான்கு சிற்றூர்களாகப்

* இக்கூத்து இக்காலத்திலும் மலையாளத்தில் நம்பூதிரிப் பிராமணர்களால் "சங்கக்களி" என்னும் பெயரால் நடத்தப்பட்டு வருகிறது.

(1) இத்தானமானது எதிரியின் விருப்பத்தை அனுசரித்துப் பணமோ வேறு ஏதேனுமோ ஆகலாம்.

(2) பூசாரிகள்—பூசை செய்வோர் இத்தொழிலில் முக்கியமாகப் பிராமணரே இருக்கின்றுர்கள்.

பிரித்து ஒரு ஊரிலுள்ளவன் பிற ஊரில் பெண் கொள்வது கொடுப்பது முதலியனவும தடை செய்தார்கள். ஆனால் இத்தகைய தடைகளினால் பிராமண சமுதாயம பாதிக்கப்படவில்லை. க்ஷத்திரியனுக்கு பிராமணர் கீழ்ப்படியமாட்டார்களன்றோ, பிராமணர்கள் எந்த ஊரிலிருந்தும் பெண் கொள்ளலாம கொடுககலாம், சம்ஸ்கிருதம் படிக்கலாம், அவர்கள் எத்தகைய அக்கிரமம் செய்தாலும் அது வேதத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் சம்மதம். வேதமும் ஸ்மிருதிகளும் கடவுளாலும், கடவுளின் அருள் பெற்றவர்களாலும், இயற்றப்பெற்றவையன்றோ. அதிகமாகச் சொல்லுவானேன் ஆரியக் கடவுளைப்போன்ற ஒரு கொடுங்கோல் மன்னன் இருக்கமுடியாது. கிருஸ்துவ துலுக்க மதஸ்தர்களும் தங்கள் மதநூல கடவுளால் அளிக்கப்பட்டதென்றும் தங்கள் மதத்தை நமபி ஒழுகாதவர்கள் நித்திய நரகம் அனுபவிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாமல் தங்கள் மதத்தைச் சேர்ந்த மக்களைச் சமத்துவமாக நடத்துகின்றார்கள். இந்து மதத்தில் இருக்கும்போது பிறப்பினால் தாழ்ந்தவனாகக் கருதப்பட்டு பன்றி, நாய் முதலிய விலங்கினங்கள்கூட இஷ்டமபோல் திரியும் பொதுச்சாலைகளில்கூட நடக்க உரிமையில்லாதவனும் பார்ப்பனனையோ உயர்குடிப் பார்ப்பனரல்லாதாரையோ காணநேர்ந்தால் 'சாமி அடியேன்' என்று அடிபணிய வேண்டியவனுமான ஒரு மனிதன் அவனது நற்காலத்தினால் கிருஸ்தவ சமயத்தையோ துலுக்க சமயததையோ சரண்புகுந்த அன்றைக்கே பார்ப்பனர்களாலும் மற்ற இந்துக்களாலும துரை, சாகிப் முதலிய உயர்பட்டங்கள் சூட்டப்பெற்று மரியாதையாக நடத்தப்படுகின்றான். இது நமது அனுபவமன்றோ. ஆகையால் சகோதரர்களே! அத்தகைய சமத்துவமதக் கடவுளை வணங்குவோர் ஆரியக் கொடுஙகோற் கடவுளையும் அவரின் செல்வப் பிள்ளைகளாகிய பார்ப்பனரையும் அறியாமையினாலும் ஒற்றுமையின்மையினாலும் மற்றும் ஆரியர்களின் அடிபணிந்து அல்லலுற்றுக் கிடக்கும் பார்ப்பனரல்லாதாரையும அடககி யாண்டு வருவதில் வியப்பு என்ன இருக்கிறது.

காசி, காஷ்மீர் முதலிய இடங்களைத் துலுக்கர் ஆகரமித்ததைக குறித்து புராணங்களில் கூறப்பட்டுள்ளன சில வருமாறு:—

"ஆஸ்ரமா யவனை ருத்தாஸ்
தீர்த்தானி ஸரிதோ ஹ்ரதா: |
தேவதா யதனுன் யத்ர
துஷ்டை ருச்சேதி தானி ச" ||

(பத்ம புராணம் ஷஷ்ட உத்தரகாண்டம்
அத்தியாயம் 193)

மஹறிஷிகளின் ஆசிரமங்களும் புண்ய தீர்த்தங்களும புண்ய நதிகளும் மடுகுகளும் துஷ்டர்களாகிய யவனர்களால் முற்றுகையிடப்பட்டன. தேவாலயங்களும் அழிக்கப்பட்டன.)

இவ்வரலாறு திரிலோக சஞ்சாரியான நாரதர் தேவர்களுக்குச் சொன்னதாகப் பத்ம புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஒருநாள் மிகக் கவலையுடன் வருகிற நாரதரைப் பார்த்து தேவர்கள் மனககவலையின் காரணம் விசாரிக்க அவர் மறுமொழி கூறுவதாவது:—தேவர்களே! நான் பூலோகததிலுள்ள பிரயாகை, காசி, காஞ்சி, அயோத்தியா, காஷ்மீரம், மதுரை, ராமேசுவரம், ஸ்ரீரங்கம், அரிக்ஷேத்ரம், குருக்ஷேத்ரம முதலிய திவ்ய தேசங்களில் யாத்திரை சென்று வருகின்றேன். அவ்வவ்விடங்களை யெல்லாம முஸல்மான்கள் ஆக்ரமித்து ஆலயங்களையும் தேவதா விக்கிரகங்களையும் தகர்த்தெறிந்தும், தீர்த்தங்களைப் பாழாககியும பிராமணர்களுக்குப பெருந் துன்பத்தைச் செய்து வருகின்றார்கள்". இவை முதலியன காணப்படுகின்றன. இப்புராணம் மற்றப் புராணங்களைப் போலவே வியாச ரிஷியால் எழுதப்பட்டுள்ளதாக பிராமணர்கள் சொல்லுகிறார்கள். இதை மெய்ப்பிக்க வேண்டிப் பல புராண சுலோகஙகளை மேற்கோள் காட்டவும் செய்கின்றார்கள். இக்கூற்று எங்ஙனம உண்மையாகும. முஸ்லிம்கள் மதப்பிரசாரம செய்வதறகாக இந்தியாவுககு வந்து இநதுக்களின் கோவில்களைத் தகர்ததுத் தஙகள் மதத்திற்குவர மறுத்தவர்களைக் கொலைசெய் தழிக்கத் தொடங்கின காலம A. D. 1014 முதல் 'அவுரங்கசீபி'ன் ஆட்சி A. D. 1726 வரையில் ஆகும். வியாசரோ 5028 வருஷங்கட்கு முன் இருந்தவர். இக்காரணத்தினுலும் மற்றும் பல காரணங்களைக் கொண்டும் புராணங்கள வியாசரால் எழுதப்பட்டவை யல்லவென்றும் சுயநலக்கார ஆரியர்கள் தங்களின் போலிமேன்

மையை நிலைபெறுத்தப் பாமரர்களை ஏமாற்ற எழுதி வைத்தவையென்றும் விளங்கவில்லையா? புராண ஆபாசங்களைக் குறித்தே ஒரு தனி நூல் வெளியிட உத்தேசித்துள்ளேன். மற்றவை அப்போது கூறுவேன்.

## பிராமணர் முதலிய வர்ணங்களின் பிறப்பு.

"ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்ய: க்ருத: |
ஊரூததஸ்ய யத்வைஸ்ய: பத்ப்யாம சூத்ரோ அஜாயத" ||

யஜுர் அ. 31, 11.

(கடவுளின் முகத்தினின்றும் பிராமணன் பிறந்தான், தோள்களினின்றும் க்ஷத்திரியன் பிறந்தான், துடைகளினின்று வைசியன் பிறந்தான், பாதங்களினின்று சூத்திரன் பிறந்தான்.)

"ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்யோபவத் |
மத்யம் ததஸ்ய யத் வைஸ்ய: பத்ப்யாம் சூத்ரோ அஜாயத ||

அதர்வண வேதம் 19, 6, 6
(பொருள் முன்போலவே.)

அன்பர்களே! வேதத்திற்கு உரை யெழுதிய மஹீதரர், சாயணர் முதலிய பழைய ஆசாரியர்கள் இவ்வாறே பொருள் கூறியிருக்கிறார்கள். இது ஆராய்ச்சியாளருக்கு பெரும் வியப்பையே கொடுக்கும். ஆண், பெண் இருவரின் கலப்பால் அவர்களின் வீரியம ஒன்று சேர்ந்து கருத்தரித்துப் பெண்கள பிள்ளைகளைப் பெறுவது வழக்கமாயிருக்க பிராமணன் கடவுளின் முகத்திலிருந்து பிறந்தான், க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் தோள், துடை, கால் முதலிய அங்கங்களிலிருந்தும் முறையே பிறந்தார்கள் என்றால்; வேதத்தில் கூறும் பிராமணன் முதலியவர்கள் உயிர்களா அன்று? உயிர்களானல் முகத்திலிருந்தும் தோளிலிருந்தும் மற்றும் பிறப்பது இயற்கைக்கு முரணையிற்றே. அல்லது வேதத்தில் கூறும் பிராமணன், க்ஷத்திரியன் முதலிய சொற்கள் கடவுளின் முக முதலிய இடங்களில் உண்டான சிரங்கு முதலிய நோய்களைக் குறிக்கினவா? அல்லது ஆரியக் கடவுளின் முகம் முதலிய இடங்களில் பிள்ளைகளைப் பெறும் பெண்களின் அவயவம் இருக்கின்றதா? அவ்வாறு இருந்தால் அவ்வவ்விடங்களிலுள்ள ஷை அவயவத்

தில் யார் யார் சேர்ந்து பிராமணன் முதலிய பிள்ளைகளை உண்டு பண்ணினார்கள்? இத்தகைய வினாக்களுக்கு பார்ப்பனர்கள் என்ன தான் விடையிறுப்பார்களோ நாம் அறியோம். ஒன்று மட்டும் நிச்சயம். இவ்வாறு நியாயமான கேள்வியைக் கேட்பவன் பார்ப்பன மதப்படி நாஸ்திகனாவன். இதற்கு உதாரணம்:—

"ஸ்ருதிஸ்து வேதோ விஜ்ஞேயோ
தர்ம சாஸ்த்ரந்து வை ஸ்மருதி: ||
தே ஸர்வார்த்தேஷ்வ மீமாம்ஸ்யே
தாப்யாம் தர்மோ ஹிநிர்ப்பபௌ || "

(மனு அத்தியாயம் 2 சுலோகம் 10.)

"யோவ மன்யேத தேமூலே
ஹேது சாஸ்த்ராஸ்ரயாத் த்விஜ: |
ஸ ஸாதுபிர் பஹிஷ்கார்யோ
நாஸ்திகோ வேதநிந்தக: || "

(மனு அ. 2 சுலோகம் 11.)

மனுவின் வாக்கியங்களை வேதமும் ஒப்புகொள்ளுகிறது. மனுர் வையத் கிஞ்சிதவதத் தத் பேஷஜம் ||" (மனு எதைச் சொன்னாரோ அது மருந்தே யாம்)

மருந்து கசப்பாயிருந்தாலும் அதை உட்கொண்ட மனிதன் நோயினின்றும் விடுபட்டு ஆரோககியத்தை அடைவதுபோல மனுவின் வாக்கு அனுஷ்டானத்தில் கஷ்டமாயிருந்தாலும் அனுஷ்டிக்கிறவர்களுக்குச் சுகத்தைத் தருமென்பதே இம்மந்திரத்தின் கருத்து.

இவ்வாறெல்லாம் கடவுள் பேராலும சதியாலும் உடல்வலியாலும் பார்ப்பனரல்லாதாரை அடக்கி யாண்டுவந்தும் பண்டைக் காலத்தில் நேர்மையாளர்களாகிய பௌத்தர்களும் ஜைனர்களும உண்மை நோக்குடைய வேறு சில துறவிகளும் வேதஸ்மிருதிகளைக் கண்டிக்காம லிருக்கவில்லை.

"பசுஸ்சேந்நிஹத: ஸ்வர்க்கம்
ஜ்யோதிஷ்டோமே கமிஷ்யதி |
ஸ்வபிதா யஜமானேன
கிந்நு கஸ்மாந் நஹிம்ஸ்யதே||"

யூபம் பத்வா பசூன்ஹத்வா
க்ருத்வா ருதிரகர்த்தமம |
யத்யேவம கம்யதே ஸ்வர்க்கம
நரகம் கேன கம்யதே||"

(ஜ்யோதிஷ்டோம யாகத்தில் பசுவைக்கொன்றால் அப்பசு ஸ்வர்க்கத்தையடைவது உண்மையானால் யாகம் செய்பவன் யாகத்தில் தன் தந்தையை வதைத்து ஏன் ஸ்வர்க்கத்தை யடைவிககலாகாது.)

(யூபஸ்தமபத்தை உண்டுபண்ணி பசுக்களைக் கொன்று தரையைக் குருதியினால் சேறுக்கும மனிதன் ஸ்வர்க்கத்தை அடைவானானல் நரகத்தை யடைபவன் யாவன்.)

"சாத்திரத்தைச் சுட்டு சதுர்மறையைப் பாழாக்கி
சூத்திரத்தைக் கண்டு சுகம்பெறுவ தெக்காலம்"

இவ்வாறு பொய்ம்மையைக் கண்டித்த பெரியார்களின் நூலவுடலைப் பார்ப்பனரின் பொய்ப் பிரசாரத்தில் மயக்குற்ற அறிவிலி அரசர்கள் கழுவேற்றியும் மற்றும் அழித்தார்கள் அந்தோ! அத்தகைய அநியாய அரசாங்கங்கள் அழிந்தன. சுயநலஞ் சிறிதுமில்லாப் பரோபகாரிகளாகிய முற்கூறிய பெரியார்களின் புகழுடம்பு இன்னும நிலைபெற்றுக் கொண்டிருப்பதுபோல் என்றும நிலைத்திருக்கு மென்பதில் ஐயமில்லை.

கர்ப்பாதானம முதலிய வைதிகச் சடங்குகள் பிராமண க்ஷத்திரிய வைசியர்களுக்கே உரியன. இதனாலும சூத்திரர்கள் அனாரியர்கள் என்பது வெளியாகிறது.

## கர்ப்பாதானத்திற்குரிய காலங்கள்.

" ப்ரஹ்மைவ வஸந்த: | க்ஷத்ரம் க்ரீஷ்ம: | விடேவ வர்ஷா: | தஸ்மாத் ப்ராஹ்மணோ வஸந்த ஆததீத | ப்ரஹமஹி வஸந்த: | தஸ்மாத் க்ஷத்ரியோ க்ரீஷ்ம ஆததீத | க்ஷத்ரம் ஹிக்ரீஷ்ம: | தஸ்மாத் வைஸ்யோ வர்ஷாஸ் வாததீத | விட்டி வர்ஷா:||

(சதபத காண்டம் 2–8.)

வசந்தம் (இளவேனிற்காலம்) பிராமணனுக்கும். க்ரீஷ்மம் (முது வேனிற்காலம்) க்ஷத்திரியனுக்கும். வர்ஷம் (கார்காலம) வைசியனுக்கும். ஆகையால், பிராமணன் வசந்தகாலத்தில் கர்ப்பாதானம் பண்ணக் கடவன். பிராமணன் வசந்தமன்றோ. ஆகையால் க்ஷத்திரியன் கிரீஷ்ம காலத்தில் ஆதானம் பண்ணக்கடவன் கிரீஷ்மம க்ஷத்திரியனன்றோ. ஆகையால் வைசியன் வர்ஷகாலத்தில் ஆதானம பண்ணககடவன் வைசியனன்றோ வர்ஷம)

இதனுல் கர்ப்பாதானம முதலிய ஸமஸ்காரங்கள் சூத்திரனுக்கு இல்லையெனறும ஆகையால் சூத்திரன் புறம்பான ஜாதியென்றும பெறப்படவில்லையா?

## யாகாதிகாரிகள்.

" ப்ராஹ்மணோ வைவ ராஜன்யோவா வைஸ்யோ வா தே ஹி யஜ்ஞியா:||"

(பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்கிற பிரசித்தமான மூன்று வருணத்தினர் மாத்திரமே யாகஞ் செய்ய உரிமையுடைய வர்கள்.)

இத்தகைய பிரமாணங்களால் பெறப்படுவது யாதெனில் வேத காலம் முதற்கொணடே ஜாதி வேற்றுமை பாராட்டப்பட்டு வந்திருக் கிறதென்பதேயாம. இக்காலத்தில் பார்பபனரல்லாதாரில் மேதாவி கள் எனத் தங்களுக்குத் தாஙகளே பட்டம சூட்டிக்கொண்ட சிலர்; புராணங்களில் ஜாதி வேற்றுமை காணப்படுகின்றது. அவை பார்ப் பனர்கள் தங்கள மேன்மையை நிலைநாட்ட எழுதிவைத்த கட்டுக் கதைகள் என்பது உண்மையே. ஆனால் வேதம கடவுளால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. அதில் ஜாதி வேற்றுமையில்லை. ஆகையால் வேதத்தைக் குறைகூறலாகாது என்கின்றனர். அவர்களை நான் வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுவது யாதெனின் பெரியோர்களே! வேதத்தை நன்றாக ஆராயுங்கள அதற்குச் சாவகாசமில்லாவிட்டால் வேதத்தினின்றும மிகச் சிரமப்பட்டு என்னால் எடுத்துக்காட்டபபட்ட வாக்கியங்களையேனும் அமைதியோடு படித்துப்பாருஙகள் பின்னரும் வேதத்தைக் குறைகூறுவது குற்றமெனக் கண்டால் என்போன் றோரைக் கண்டியுங்கள் என்பதே.

சர்வ வல்லமையுள்ள கடவுளின் கருணையால் துலுக்க மதஸ்தர்கள் இங்கு படையெடுத்துவந்து பார்ப்பனக கடவுளைத் தகர்த்தெறிந்து பார்ப்பனரையும் அவர்களைச் சேர்ந்தோரையும தண்டித்திரா விட்டாலும் கிருஸ்தவ சமயத்தினரின் ஆட்சியால் வேதசாஸ்திரங்களை யார் வேண்டுமானாலும் படிககலாம் என்ற நேர்மையான சட்டம் ஏற்பட்டிராவிட்டாலும மேடி நூல்களை ஆராய்ந்து அவைகளினால் நம்மவர்கள் பன்னூற்றாண்டுகளாகப் பட்டுவரும் கஷ்டங்களை எடுத்துக் கூற நான் துணிந்திருககமாட்டேனென்றே. ஆகையால் அன்பர்களே! துலுக்கர்களும, கிருஸ்தவர்களும கைமாறு கருதாமல் மக்களுக்குச் சமத்துவம் என்னும் விலையில்லா மாணிக்கத்தை தானம் செய்யும் பெரிய கொடை வள்ளல்கள் என்று ஏன் நமமவர்கள் கூறலாகாது.

ஆங்கில அரசாட்சியின் அனுக்கிரகத்தினால் இக்காலத்தில் காவியுடைதரித்துத் தங்களைச் "சன்னியாசிகள்" எனச் சொல்லித்திரியும பார்ப்பனரல்லாதாரிற் சிலர் இவ்வாறு சொல்லுகின்றார்கள்.

"வேதம், ஸ்மிருதிகள், புராணங்கள் முதலியவைகளில் பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் கற்பித்திருககலாம் வேதாந்த சாஸ்திரத்தில் அவ்வாறில்லை. பிறவியெடுப்பதே துன்பமாகையால் இனிப்பிறவாப் பேரின்ப நிலையையடையவே மக்கள் முயற்சிக்கவேண்டும. அத்தகைய பேரின்பமானது * சிரவண முதலியவைகளால் கைகூடும். சிரவண முதலியவைகளுக்கு நான்கு சாதனங்களையுடையவன் அதிகாரியாவன் அவன் பிராமணனாயினும், சூத்திரனாயினும சரியே ஆகையால் ஒப்புயர்வற்ற வேதாந்த சாஸ்திரம நம்மால் ஒப்புக்கொள்ளத்தக்கதும் அதை வெளிப்படுத்திய வியாசர், சங்கராச்சாரியர் முதலிய பரோபகாரிகளான பெரியார்கள் வழிபடத்தக்கவருமாவர்."

இக்கூற்றில் சிறிதேனும் உண்மையும் நியாயமும் இருக்கிறதாவென் ஆராய்வோம்.

நான்கு சாதனங்களாவன; | நித்யாநித்யவஸ்து விவேகம்.

---

* சிரவண முதலியன — சிரவணம், மனனம், நிதித்தியாசனம். இதைத் தமிழில் கேட்டல், சிந்தித்தல், 'தெளிதல்' என்பர்.

அழியாப்பொருள் அழியும் பொருட்களைப் பகுத்தறியும் ஆற்றல்) 2. இஹா முத்ரார்த்த பல போக விராகம் (இவ்வுலகத்திலும் சுவர்க்க முதலிய பரலோகங்களிலுமுள்ள எத்தகைய சுகானுபவங்களிலும் வெறுப்பு). * 3 சமாதிஷட்க ஸம்பத்தி (சமமுதலிய ஆறு நற்குணங்களின் அடைவு) 4 முமுக்ஷுத்வம (மோக்ஷமடைய விருப்பம) இந்நான்கும் ஒருவனிடம் பொருந்தியிருந்தால் அவன் வேதாந்த சாஸ்திரத்திற்கு அதிகாரியெனப் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிறப்பாகச சூத்திரர்களுககு அதிகாரமில்லையென்று முற்கூறிய வியாசருமட சங்கராச்சாரியரும் மற்றுள்ள பார்ப்பன ஆசார்யர்களும சொல்லியிருக்கின்கிறார்கள். அதைப் பின்னர் விளக்குவோம் அதற்கு முன் சூத்திரனானவன் ஷை நான்கு சாதனங்களை எவ்வாறு சமபாதிப்பன் அதற்கேற்ற வசதியுண்டா? என்பதை விசாரிக்கவேண்டாமா.

முதற்சாதனமான நித்யாநித்யவஸ்து விவேகம சூத்திரனுக்கு எவ்வாறு வரும் ஆராய்ச்சியினாலும ஆன்றோர்களின் சேர்க்கையாலுமென்றால் அது பொருந்தாது தனது வயிற்றைக் கழுவுவதற்காகவே இரவும் பகலும உழைக்கவே பிறப்பெடுத்திருககும ஒருவனுக்கு ஆராய்ச்சிபண்ணச் சமயமேது? சூத்திரன் பிறநதது முதல் இறக்கும வரையில் பிராமணனுக்கு அடிமைத்தொழில் செய்யவேண்டியவனாயிற்றே அவ்வாறு அடிமைத்தொழில் செய்தாலும் பிராமணனால் சூத்திரனுக்கு இடப்படும் உணவு எத்தகையது? ‡ எச்சிலேயன்றோ அதுவும் வயிறு நிறையக் கிடைக்குமா? (2) எசசில் தின்பவனுககு அறிவு விளாங்காதென்று வேதவிதியிருககிறதே. அறிவு விளங்காவிட்டால் ஆராய்ச்சிககிடமேது? ஆன்றோர்களின் சேர்ககையென்றால் பிராமணனுடைய சமீபவாசமும் அவனுடைய பழக்கவழக்கங்களைக் கண்டு

---

* இவை சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தா, சமாதானம, சமம் தமம், விடல், சகித்தல், சமாதானம, சிரததையாளும் எனத் தமிழ்ச் செய்யுள்.

‡ (1) உச்சிஷ்டமன்னம் தாதவயம் ஜீர்ணனி வஸனனிச புலாகாஸ் சைவ தான்யனும். (மனுஸ்மிருதி அ-10-சு-125)

(2) ஆஹாரசுத்தெென ஸத்வசுத்தி: ஸ்த்வசுத்தெென த்ருவாஸ்மிருதி.

பழகுதனுநதானே அவ்வாறு பழகுதல் வேதஸ்மிருதிகளின் பிரகாரம குற்றமாகையால் பிராமணன் இடங்கொடுப்பானு? மீறி இடம கொடுத்தால் அத்தகைய பிராமணன் பிறரால் புறக்கணிக்கப் படுவானன்றே இதனுல் முதற்சாதனம் கைகூடாது. இரவும் பகலும உழைத்தும நல்ல உணவோ உடையோ அகப்படாமல் அல்லலுறுபவன் இவ்வுலகத்திலும் சுவர்க்க முதலிய மேலுலகங்களிலுமுள்ள சுகானுபவங்களை வெறுப்பதென்றல் அது சாத்தியமா? இதனுல் இரண்டாவது சாதனமும சூத்திரனுக்குககிட்டாது. இத்தகைய சூத்திரனுக்கு மூன்றுவது சாதனமும் கிட்டாது காரணம வெளிப்படை நான்காவது சாதனமான *முமுக்ஷுத்வம் (விடுதலையில் விருப்பம) இதும் வேதாந்திகளின் கூற்றுப்படி சூத்திரனுககு கைகூடாது. ஒருக்கால் பூர்வஜன்மபுண்ணிய வலிமையால் நான்கு சாதனங்களையும சில சூத்திரர்கள அடைவார்கள என்றல் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம செய்தவன் இழிவான சூத்திர ஜன்மத்தையடைவானேன்? அதற்குத்தக்க பாவம் இருந்திருககக்கூடும் என்றல் அத்தகைய பாவம் முற்கூறிய சாதனங்களின் அடைவையும தடுக்காதோ. அனேக ஜன்மங்களில சிறிது சிறிதாகச் சமபாதித்த புண்ணிய வாசனையானது பாவசம்ஸ்காரத்தைத் தடுத்து ஷடி சாதனஙகளை அடையச்செய்தது என்றல் அத்தகைய சூத்திர அதிகாரிகளுக்கு உங்கள வியாசரும், சங்கராச்சாரியரும் மற்றப் பெரியார்களும் வேதாந்த சாஸ்திரதஙதை சிரவணம் செய்ய அனுமதியளிக்கவில்லையே அந்தோ! வீண் ஆசையே!! உங்கள் டம்பம் ஆங்கில அரசாட்சியின் அனுக்கிரகமன்றே.

சூத்திரன் சிரவணத்திற்கு அதிகாரியல்லன்.

"ஸ்ரவணுத்ய்ய ஞர்ததப்ரதிஷேதாத் ஸ்மருதேஸ்ச".

(வியாசர் பிரம்ம சூத்ரம 1-3-38.)

[ஸ்மிருதிகளின்படியும சிரவணம், அததியனம், அர்த்தசிநதனம (கேட்டல், ஓதுதல் பொருளை ஆராய்தல்) முதலியன தடுக்கப்பட்டுள்ளதால்]

---

* முமுக்ஷுத்வம்—விடுதலையில் விருப்பம் இது ஒரு வகையில் சூத்திரனுக்குக் கைகூடும். பிறந்தது முதல் காரணமின்றிப் பார்ப்பனனுல் அடக்கியாளப்பட்ட சூத்திரன் பார்ப்பனனுடைய அநியாய ஆட்சியினின்றும் விடுபட விரும்பலாம்.

ஸ்மிருதிகளின்படியும் என்கிற 'உம்' வேதத்திலும் தடுககப்பட்டுள்ளதை உணர்த்துகிறது. (இது வியாசரால் கூறப்பட்டுள்ள பிரம்ம சூத்ரம அபசூத்திராதி கரணத்திலுள்ளது) அபசூத்ராதிகரணம்—சூத்திரனைப் புறகணித்த இடம.

இச்சூததிரத்திற்கு சங்காராசாரியாரின் பாஷியமாவது:-"ஸ்ரவண ப்ரதிஷேதஸ்தாவத்; அதாஸ்ய வேத முபஸ்ருண்வதஸ்த்ரபுஜதுப்யாம் ஸ்ரோத்ர ப்ரிதிபூரணம் பத்யு ஹ வா ஏதத் ஸ்மசானம வை சூத்ரஸ் தஸ்மாத் சூத்ர ஸமீபே நாத்யேதவ்யஞ்ச".

"வேதோச்சாரணே ஜிஹ்வாச் சேதோ தாரணே சரீர பேத:".

(சூத்திரர்களுக்கு சிரவணுதிகளில் தடையாவது—வேதத்தைக் காதிஞல் வாங்கிய சூத்திரனின் இருகாதுகளிலும் ஈயத்தையும் அரக்கையும் காய்ச்சி ஊற்றவேணடும். சூத்திரன் சுடுகாட்டிற் கொப்பானவனுகையால அவனருகில் வேதமோதலாகாது.)

(வேதத்தை உச்சரித்த சூத்திரனது நாக்கைத துண்டித்தலும வேதத்தை உருவிட்டு உறுதிப்படுத்திய நெஞ்சைப் பிளத்தலும் வேண்டும.)

அன்பர்களே! இத்தகைய பிரமாணங்களிஞல் முற்கூறிய போலிச் சன்னியாசிகளின் கூற்று மறுக்கப்பட்டது. மற்ருெரு விஷயமும் உங்களுக்கு எடுத்துக காட்டுகிறேன். வேதாந்த சூத்திரத்திற்கு உரை யெழுதிய "ராமானுஜர், மத்வர் முதலியோர் தங்கள் மதங்களை நிலைநிறுத்தச் சங்கராசாரியரை மாயாவாதி, பிரச்சன்ன பௌத்தன், நாஸ்திகன் என்றும் மற்றும் தூஷித்து உரையெழுதியிருக்க சூத்திரனைப் புறக்கணிககும "அபசூத்ராதிகரணம்" என்கிற இவ்விடத்தில் மட்டும் சங்கராசாரியரைப் பின்பற்றியுள்ளார்கள். இதைப் பார்க்கப் பிராமணர் தங்களுககுள் எத்தகைய வேற்றுமையும் வெறுப்பும் உள்ளவர்களாஞலும சூத்திரனை அடககியாளும் வகையில் ஒருமுகப்பட்டு வேலை செய்பவர்கள் என்பது வெளிப்படவில்லையா?

சமஸ்கிருத வியாகரண கர்த்தாவாகிய பாணினியும் "ப்ரத்யபி வாதே சூத்ரே, சூத்ராணுமனிரவஸிதானும்". முதலிய சூத்திரங்கள் தனது வியாகரண சாஸ்திரத்தில் செய்திருப்பதால் ஆரியர்கள் இங்கு வந்த காலம் முதற்கொண்டே ஜாதி வேற்றுமையும இருந்து வருகிற தென்பது பெறப்படுகிறது.

ஆரிய ஸமாஜ ஸ்தாபகராகிய "சுவாமி தயானந்த ஸரஸ்வதி', சூத்திரர்கள் வேதம் ஓத அதிகாரமுடையவர்கள் என்று கூறி வேதத்திலிருந்தே ஒரு மந்திரத்தின் பாதியை மேற்கோளாக எடுத்துககாட்டி வியாக்கியானம் செய்திருக்கிருர் அது வருமாறு:—

"யதேமாம் வாசம் கல்யாணீ மாவதானி ஜனேப்ய:

ப்ரஹ்மராஜன் யாப்யாம் சூத்ராயசார்யாயச ஸ்வாய சாரணுய".

(யஜுர்வேதம் அத்தியாயம் 26.)

(மங்களகரமான இந்த வேதவாக்கியத்தைப் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் மற்றுமான ஜனங்களுக்காக நான் சொல்லுகிறேன்.) இது இம்மந்திரத்திற்கு தயானந்த ஸரஸ்வதி கூறிய பொருளின் சுருக்கமாகும்.

உண்மையில் இம்மந்திரமானது வேதத்தில் சூத்திரர்களுக்கு அதிகாரம் ஸ்தாபிக்க எழுந்ததல்ல பின்னரோ; யாகமுடிவில் தக்ஷிணை வாங்கும் பார்ப்பனத் தலைவன அங்கு குழுமியிருக்கும் ஜனங்கள் எல்லோருடையவும் காதில் விழும்படிச் சொல்லுவது பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றிப் பணத்தைப் பறிப்பதே இம்மந்திரத்தின் முழுக்கருத்தென்பதை உங்களுக்கு விளக்கும் பொருட்டு முழு மந்திரத்தையும் எடுத்துக் காட்டுகிறேன்.

"யதேமாம் வாசம் கல்யாணீ மாவதானி ஜனேப்ய:

ப்ரஹ்மராஜன் யாப்யாம் சூத்ராய சார்யாயச ஸ்வாய சாரணுய

ப்ரியோ தேவானும் தக்ஷிணுயை தாதுரிஹ பூயாஸமயம் மே காம:

ஸம்ருத்யதாமுப மாதோ நமது". (யஜுர் அ. 26.)

(இந்த மங்களகரமான வார்த்தையை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் முதலிய எல்லாருக்கும் சொல்லுகின்றேன். தேவர்களுக்குப் பிரியமான இந்த யாகமானது என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றட்டும் நான் உங்களுக்கு நண்பனாக யிருக்கக் கடவேன். (எங்களுககு) தக்ஷிணை தரும் நீங்கள் உங்கள் விருப்பத்தை அடையக் கடவீர்கள்.)

இவ்வாறு யாகமுடிவில் தானம் கொடுப்பவர் யாவருடைய காதிலும் விழும்படி தானம வாங்கும் பிராமணன் பொதுவாகச் சொல்லுவதனால் வேதம்படிப்பதற்கு சூத்திரர்கள் அதிகாரிகளாய் விடுவார்களா? ஆங்கில அரசாட்சியாலும கிருஸ்தவ மத போதகர்களின் பிரசாரத்தினலும விழிப்படைந்திருக்கும் பார்ப்பனரல்லாதாரிற் சிறு தொகையினரையுங்கூடப் பார்ப்பனமதப் படுகுழியில் வீழ்த்தவே "தயானந்த ஸரஸ்வதியார்" 'ஆரிய ஸமாஜ'த்தை ஸ்தாபித்தனர். வேதத்தில் சில பாகங்களைத் தனக்கு அனுகூலமானவிதம் வியாக்கியானித்துக் கொண்டு அதைப் போதிக்கவும் செய்தனர். "ஆலையில்லா வூரில் இலுப்பைப்பூ சர்க்கரை" என்கிற பழமொழிக் கிணங்க "வேதமென்பது பச்சிலை மூலிகையா, கடைச் சரக்கா'வென ஐயுற்றிருந்த வடநாட்டுப் பார்ப்பனரல்லாதாரிற் சிலர் ஆரிய ஸமாஜத்தில் சேர்ந்து கொள்ளவும ஆரமபித்தனர். ஆதிகால முதற்கொண்டே ஆரியரின் அடக்கு முறையால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாதார் "தென்னாலி ராமன் வளர்த்த பூனையானது பாலைப் பார்த்ததும் அஞ்சி ஓட்டம் பிடித்ததுபோல் அந்தோ! பரிதாபம்!! 'வேதம்' என்கிற சொல் காதில் விழுந்ததுமே காக்கைவலிப்பு கண்டவனைப்போல் துடிதுடித்து ஐயோ! வேண்டாம!! வேண்டாம!! நாங்கள் சூத்திரர்களாச்சே சூத்திரர்கள் வேதம படிக்கலாகாதே வேதத்தைப் படிக்க வேண்டுமென்று நினைத்த சூத்திரனை விஷ்ணுவின் சக்கராயுதம துணடித்து விடுமே! சிவபெருமான் சூலத்தினல் குத்திச் சிதைத்து விடுவாரே. காளியம்மன் வாளினல் பிளந்தெறிவாளே. மற்றுமுள்ள தேவர்கள் ஒன்றுகூடிக குடியைக் கெடுத்து விடுவார்களே. வேதமானது இராமசாமி ஐயர், ரங்கசாமி ஐயங்கார் முதலிய பிராமணோததமர்களுக்கே உரித்தான தல்லவா. அவர்களுக்குத் தொண்டு செய்யவன்றோ கடவுளின் காலிலிருந்து சூத்திரர்க

ளாகிய நாங்கள் தோன்றியுள்ளோம் என்கிறார்கள் சிலர். வேறு சிலர் சுவாமி! நீங்கள் சொல்வது சரிதான். வேதம படித்து அதிலிருப்பது நன்மையோ தீமையோ அறியவேண்டியது நமமுடைய கடமைதான். ஆயினும வேதம் என்னுஞ்சொல் கேட்ட மாத்திரத்திலேயே உடல் நடுங்குகின்றது. உள்ளம் கலங்குகின்றது. நமக்குள் ஒற்றுமை யில்லையே நாலாயிரம ஜாதிப் பிரிவினைகள் நமக்குள் இருக்கின்றனவே வேதம் பார்ப்பனரின் பொதுச்சொத்தாக வன்றோ மதிககப்பட்டு வரு கின்றது. அதில் சூத்திரர்களாகிய நம்மை யடக்கி யாளுவதற்குரிய சூழ்ச்சிகள் பல இருக்கலாம். அவ்வாறு இருப்பினும பலமாகச் சொல்லாதீர்கள். "பகல் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதும் பேசாதே" என்னும் பழமொழியை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பொது நோக்குடையவர்கள் மககள் யாவரும் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும என்பதே உங்கள் கொள்கை. இது நடப்பில் வந்த அன்றைக்கே நம் பாரதநாடு பொன்னாடாகத் திகழு மென்பதிற் சந்தேகமில்லை. இதனால் பார்ப்பனர்கள் மேலும நன்மையையே யடைவார்கள். ஆனால் இத்தகைய நல்லெண்ணம் பார்ப்பனர்களுக்கு வரவில்லையே. பெரிய பெரிய அதிகாரங்களில் அவர்களன்றோ இருக் கின்றார்கள். ரெயில்வே கமபேனிககாரர்களால் இந்துக்களுககென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும ஹோட்டல்களில் பார்ப்பனர்களுககுத் தனி யிடம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். பார்ப்பனரல்லாதாரை ஒடுக்குவதில் பார்ப்பனர் யாவரும் ஒன்று கூடுவார்கள் என்பதை அறிந்திருந்தும் ஏன் கஷ்டத்தை வலிய இழுத்து தலையில் போடுகிறீர் கள். பார்ப்பனரல்லாத இந்துமககள் மனித சமூகத்தில மரியாதை யோடு வாழ எண்ணமிருந்தால் அவர்கள் ஜாதி வேற்றுமைகளைக் களைந்து ஒன்று சேரட்டும. அவ்வாறு ஒன்று சேருவதில் உயர்குடி கள் பங்குகொள்ளமாட்டார்கள். அப்படியானால் கிருஸ்தவ மதத் திலோ துலுக்க மதத்திலோ சேர்ந்து கொள்ளட்டும; இவ்வுலகத்தில் சமத்துவம் கிடைக்கும். அல்லது ஜாதி வேற்றுமையில்லாததும் உலக முழுவதிலும உள்ள ஜனத்தொகையில் பெரும் பங்கைக்கொண் டதுமான "புத்த சமய"த்தில் சேரட்டும். இவ்வுலகத்தில் சமத்துவம் கிடைபபதோடு ஆத்மாவின் தத்துவத்தையும் அறிந்து சுகமுறுவார் கள் என்கிறார்கள்.

## வேதத்தில் தஸ்யுதாஸன் முதலிய பெயர்களால் கொள்ளப்படுவோர் யாவர் எனல்.

"பரா சிச்சீர்ஷா வவ்ருஜுஸ்த இந்த்ராயஜ்வனோ
யஜ்வபி: ஸ்பர்த்தமானா: ப்ரயத்திவோ ஹரிவ: |
ஸ்தாதருக்ர நிரவ்ரதாம் அதமோ ரோதஸ்யோ:".
(ரிக்வேதம் 1, 33, 5.)

(இந்திரனே! தஸ்யுக்கள் யாகஞ் செய்கின்றார்களில்லை. யாகஞ் செய்பவருடன் பகைத்துக் கொள்ளுகிறார்கள்./ அவர்கள் தேவரீரின் பிரதாபத்திற்குப் பயந்து முதுகு காட்டி/ ஓடுகின்றார்கள். நல்ல குதிரைப் படைகளையுடையவரே! தேவரீர் தஸ்யுக்களை எங்குமில்லாமற் செய்துவிட்டீர்.)

அன்பர்களே! யாகஞ்செய்யாம விருப்பதோடு யாகம உயிர்க் கொலை யாதலால் அதைப் பௌத்தர்களும ஜைனர்களும் அதிகமாக வெறுக்கிறார்கள். "அங்ஙனம் வெறுத்தவர்களை எங்குமில்லாமல் செய்துவிட்டீர்" என்று இந்திரனைப் புகழும் இந்த வாககியமானது புத்த சமயத்தினரைப் பொறுத்ததென்று சில மேதாவிகள் பொருள் கொள்ளுகிறார்கள். இது பொருத்தந்தான். யாகத்தை வெறுத்து மககளுக்குக் கல்வி முதலியவை போதித்துச் சமத்துவம கொடுத்த குற்றத்தினாலன்றோ, பார்ப்பனச் சூழ்சசி பௌத்தர்களை அழித் தது. "இந்திரனே! யாகத்தை வெறுக்கிற தஸ்யுக்களை எங்குமில்லாமற் செய்துவிட்டீர்" என்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் பௌத்தர்களின் விஷயத்தில் உண்மையாகவே இருக்கின்றது.

"த்வமேதான் ருதகேதா ஜக்ஷதஸ் சாயோதயோ ரஜஸ
இந்த்ர! பாரே. அவாதஹோ திவ ஆதஸ்யு முச்சா
ப்ரஸுன்வத: ஸ்துவத: சம்ஸமாவ:" (ரிக். 1, 33, 7)

(இந்திரனே! அழுதுகொண்டும் சிரித்துக்கொண்டும் இருக்கிற இந்த தஸ்யுக்களைத் தேவரீர் யுத்தஞ்செய்து * உலகிற்கு வெளியே ஓட்டிவிடக்கடவீர். அன்றியும் இந்த தஸ்யுக்களுக்குத் தலைவனை எங்கிருந்தேனும் பிடித்துவந்து சுட்டெரித்து விடவும் வேண்டும். (இவ்வாறு செய்து) ப்ரஸூன்வத:— யாகத்திற்குறிய சோமரசம், சுரா முதலிய மத்தியத்தை (மத்தியம்—கள், சாராய முதலிய குடிவகைகள்) உண்டுபண்ணி யாகஞ்செய்து தங்களைப் புகழ்ந்து பாடுகின்ற எங்களை இரட்சிக்கக் கடவீர்.)

"த்வம் மாயாபிரப மாயினோதம: ஸ்வதாபிர்யே
அதிசப்தாவஜூஹ்வத. த்வம பிபரோர் நருமண:
ப்ராருஜ: புர: ப்ர ருஜிஸ்வானம
தஸ்யுஹத்யேஷ்வாவித". (ரிக் 1–51–5)

(இந்திரனே! தேவரீர் வஞ்சனையினாலேயே வஞ்சகர்களாகிய தஸ்யுக்களை நடுங்கச் செய்யவேண்டும். அவர்கள பலவகை உணவுப் பொருட்களைத் தங்கள் வாய்க்குள்ளேயே இடுகின்றார்கள் (நெருப்பில் கொட்டி யாகஞ்செய்யாமல் தாங்களே உண்கின்றார்கள்) மககளைக் காப்பவரே! துன்பஞ் செய்கின்ற அத்தகையவர்களின் ஊர்களை அழித்துவிடக் கடவீர். தஸ்யுககளைக கொல்லும கொலைகளத்தில் நேர்மையாளர் (ஆரியர்கள்) இருந்தால் அவர்களை இரட்சியும.)

அன்பர்களே! நெருப்பில் உணவுப்பொருள்களைக கொட்டிப் பாழாககாமல் அவைகளை உபயோகிப்பவர்களைக் கொனறு அவர்களின் இருப்பிடங்களையும் அழித்துவிடுமபடி ஆரியர்கள் தஙகள தலைவனிடம முறையிடுகின்றார்கள். இவர்கள "பகையாளி வீட்டை உறவாடிக் கெடுப்பவர்கள்" என்பதற்கு யாகத்தை வெறுக்கும் தஸ்யுக்களோடு நம்மவர்கள் சிலரும் சேர்ந்திருப்பார்கள் இஙஙனம சேர்ந்திருப்பது அவர்களை உறவுகொண்டு அழிப்பதற்காகவே ஆகையால் அத்தகைய ஆரியர்களைத் தீரவிசாரித்து காப்பாற்ற வேண்டுமென்றும் கூறுவதால் இவ்வாரியர்கள் உண்ட வீட்டை இரண்டகம் செய்பவர்

---

* உலகிற்கு வெளியே என்றதனால் இவாகள் பூவுலகத்திலேயே வேண்டாம். அதற்கு முடியாவிட்டால நமது ஆட்சிககுள்பட்ட இடத்தில் இவர்கள் இருக்கவேண்டாம என்று ஆரியாகள் தஙகள் தலைவனை வேண்டிக் கொள்வதாகப் பொருளாகிறது.

கள் என்பது நன்றாக வெளிப்படுகிறது. இத்தகைய கொடுமைகள் வெளிப்பட்டு விட்டால் குடி கெட்டுவிடுமே என்றுதான் வேதத்தைச் சூத்திரன் படிக்கலாகாது, படித்தால் நாக்கையறுக்க வேண்டும் உருவிட்டால் நெஞ்சைப் பிளக்கவேண்டும் என்றும் மற்றும் சட்டம் ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள்.

"அசுரா வா ஆத்மன்யஜுஹுவு ருத்வாதேக்னௌதே பராபவம்" (கௌஷீதகிப்ராஹ்மணம்)

(அசுரர்கள் தங்கள் உடலிலேயே ஹோமம் செய்பவர்கள் இதனால் தோல்வியையும் அடைந்தார்கள்)

அன்பர்களே! அசுரர்கள் அக்கினியில் யாகஞ்செய்யாமல் தாங்கள் உண்டு களித்திருந்ததனால் தோல்வியுற்றனர் என்பது இப்பிராமணவாகக்கியத்தின் கருத்தாகும். ஆனால் அசுரர் சுரர் என்னும் இரு சொற்களும் யார் யாரை உணர்த்துகின்றன வென்றால் * சுரா = கள் இதை உண்பவர்கள் சுரர். இதை வெறுப்பவர்கள் அசுரர், முக்கியமாகப் பௌத்தர்களும் ஜைனவர்களும கள் கொலை, வியபிசாரம் களவு, பொய்சொல்லுதல் முதலிய மாபாதகங்களை வெறுத்து பிரசாரம் செய்பவர்கள். இவர்கள் குடி முதலிய துற்குணங்கள் உள்ளவர்களின் சேர்க்கையை ஒழித்திருந்தனர். ஆனல அத்தகைய துஷ்டர்களுககு நல்லறிவு புகட்டி பாதகங்களினின்றும் விடுவிகக அரும் பாடுபட்டு வந்ததோடுகூடா வொழுக்கங்களை விட்டுவிட்டார்களாயின் அவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொண்டும் வந்தனர். இது அவர்களின் சமய சம்மதம. அத்தகைய உத்தமர்களாகிய பௌத்தர்களையே அசுரர் என்ற சொல் உணர்த்துகின்றதென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தோலவியுற்றார்களென்றால் ஆரியர்கள் அவர்களின் மதத்தில் புகுந்து கல்விகற்றபின் குருதக்ஷிணை கொடுப்பதற்குப்பதில் சூழ்ச்சிசெய்து கொன்றார்கள் என்பதே. பாம்புக்கு பால் வார்த்து வளர்த்தால் அது வளர்த்தவனுக்குச் செய்யும் கைமாறு யாது? தனது விஷத்தினால் அவனது உயிரை வாங்குவதன்றோ! அவ்வாறே துஷ்டர்களும் தங்களுக்கு உபகாரஞ் செய்தவர்களுக்கு

* "சௌதாராமண்யாம் சுராம் பிபேத்" என வேதம்.

அபகாரஞ் செய்யத் தருணம்பார்த்து தங்கள் வேலையைச் செய்து விடுவார்கள் "பிராமணன் நெருப்பிற் கொப்பானவன்" என்கிற வேத வாக்கியமும் இவ்வுண்மையையே நமக்கு உணர்த்துகிறது.

இத் தோல்வியையே "வாஜஸனேயிசம்ஹிதை" யிலும் சொல்லி யிருக்கின்றது. அது வருமாறு:—

"தேவாஸ்சஹவா அஸுராஸ்சாஸ்பர்த்தந்த. ததோஹாஸுரா அபிமானேன கஸ்மைச நஜுஹும இதி ஸ்வேஷ்வேவ ஆஸ்யேஷு ஜுஹ்வதஸ்தே பராபபூவு:"

(தேவர்களுககும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட பகையில அசுரர் கள் அபிமானத்தினல் நாங்கள் யாருககாகவும் நெருப்பில் உணவுப் பொருட்களைப் போடமாட்டோம் என்று தங்கள் வாயிலேயே போட்டதனல் தோல்வியுற்றுர்கள்.) கருத்து முன்போன்றதே.

"த்வம் குத்ஸம் சுஷணஹத்யேஷ் வாவிதாரந்த
யோதிதிக்வாய சம்பரம், மஹாந்தம் சிதர்புதம் நிக்ரமீ:
ஸதா ஸனுதேவ தஸ்யுஹதயாய ஜஜ்ஞிஷே".

(ரிக். 1. 51. 6.)

(இந்திரனே! தேவரீர் கெட்டவர்களாகிய தஸ்யுக்களைக் கொல் லும் கொலைக்களத்தில நல்லவர்களைக் காப்பாற்றுகின்றீர். தேவரீ ருக்கு ஊழியஞ் செய்பவர்களின் நன்மையைக் கருதி 'சம்பரன்' என்கிற அசுரனைக கொன்றீர். அறபுதக் கணக்கான (பெருந தொகை யினரான) தஸ்யுக்களைக் காலினல் மிதித்துக கொன்றிருக்கிறீர். தஸ்யுக்களை அழிககவே அவதரித்தீர். (அற்புதம்—கோடிக்கு மேல் பட்ட ஓர் பெருந்தொகை)

அன்பர்களே! இதனின்றும உணர்ந்துகொள்ளத் தக்கது யாதெ னில், ஆரிய அரசர்கள் தஸ்யுக்களைக் கொன்றழிககும பொருட்டு ஆட்களையும் கொலைககளங்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதே. தென்னுட்டில் ஆலயங்களுக்கு அருகாமையில் 'பாசறை' ஒன்று இருக்கவேண்டுமாம. இது ஜைனர்களையும் பௌத்தர்களையும கொலை

செய்யவே பழைய காலத்தில் ஏற்படுத்தப்படுவது வழககமாம். இக்காலத்தில் இந்துக்களுக்குப் பெரிய பெரிய ஆலயங்களாயிருக்கும் பழனி, திருப்பதி முதலிய இடங்களில் பௌததப் பெரியார்களின் சமாதிகளே இருக்கின்றன. பௌத்தர்களை அழித்தபின் அவை பார்ப்பனர் வசம் அகப்பட்டன. அவ்வாலயங்களில் யாத்திரையாகச் செல்வோர் மஞ்சள், அல்லது காவியுடைதரித்தலும, தலையை மொட்டையடித்தலும் பழையகால வழக்கம்போல் இககாலத்தும நடந்து வருவதே இதற்குச்சான்று. இது வைதீக மதத்திற்கு விரோதமாகும. பூணூலும், குடுமியும் வைதீகர்களின் முக்கிய அடையாளங்கள். ஆனல் அவர்களால் பெரிய இடங்களாக மதிக்கப்பட்டு வருமு ஆலயங்களிலுள்ள தெய்வங்கள் குடுமியை வாங்கி காவியுடையுடுத்தச் சொல்லுகின்றன. இத்தகைய தெய்வங்கள் வேதவிரோதிகள் அன்றோ? வேதவிரோதித்தெய்வங்களைப் பார்ப்பனர் பூஜை செய்யலாமா? நன்ருய்ச் செய்யலாம். சம்ஸ்கிருதத்தைப் படித்துப்பார்த்திருந்தால் நீர் இத்தகைய கேள்விகளைக் கேட்டிருக்க மாட்டீர். ஸர்வேகுணு: காஞ்சனமாஸ்ரயந்தி'' (எல்லாம பணததைப் பொறுத்தது) என்னும பிரமாணம சம்ஸ்கிருதத்தில் இருக்கிறது.

"விஜானீஹ்யார்யான் யேசதஸ்யவோ பர்ஹிஷ்மதே
ரந்தயா சாஸதவ்ரதான் சாகீ சவ யஜமானஸ்ய
சோதிதா விசவேத்தா தே ஸதமாதேஷு சாகன."

(ரிக் 1-51-7.)

(இறைவனே! தேவரீர் யாகஞ்செய்கின்றவர்களான ஆரியரை நன்ருக அறிவீர். அவ்வாறே யாகவிரோதிகளான தஸ்யுக்களையும் நன்ருக அறிவீர். ஆகையால் யாகஞ்செய்கின்றவர்களின் நன்மையின் பொருட்டு அவ்ரதான் = யாகஞ்செய்யாதவர்களான தஸ்யுக்களைக் கொன்றுவிடுவீராக ஓவ்ரதபதியே = யாகங்களுக்கு நாயகரே! சர்வ வல்லமையுமுள்ள தேவரீர் அவ்ரதான் = யாகஞ்செய்யாதவர்களான தஸ்புககளை சாஸத் = தண்டித்து யஜமானஸ்ய = யாகஞ்செய்பவனுக்கு சோதிதா=தூண்டுதல் செய்யககடவீர். விசவா இத=மல்லா வகையான யாககர்மங்களையும நடததுவிக்குமபொருட்டு யாகஞ்செய்யும் இடங்களில் தங்களின் வருகையை விருமபுகின்றேன்.)

"அனுவ்ரதாய ரந்தயன்ன பவ்ரதானு பூபிரிந்தா: ஸ்ன
தயன்னனுபுவ:" (ரிக் 1-51-9)

(இந்திரனே! தேவரீர் யாகஞ்செய்பவர்களின் நன்மையின் பொருட்டு யாகஞ்செய்யாதவர்களைக் கொல்லுகின்றவர்களாயும அவ்வாறே தங்களைப் புகழ்ந்து பாடுபவர்களின் பகைவர்களைத் துன்புறுத்துபவராயுமிருக்கின்றீர்.) அன்பர்களே! இவ்வாறு யாகஞ்செய்வதைக கண்டித்தும் அத்தகைய யாககர்த்தாககளைத் துஷ்டர்களென ஒதுங்கி நின்றிருந்த ஜைனர்களையும், பௌத்தர்களையும கொன்றழிக்க அருள் புரியும்படி "ஞானசம்பந்த"ரும் சிவபெருமானைக குறித்து பாடியிருக்கிறார்.

"வேட்டுவேள்வி செய்யும் பொருளை விளி
மூட்டுச்சிந்தை முரட்டமண் குண்டரை
வைதிகத்தின் வழியொழுகாதவக் கைதவ
முடைக்கார*மண்தேரரை." (ஞானசம்பந்தர் தேவாரம்.)

இவை முதலியன. இம்மாதிரி ஜைன பௌத்தத் துறவிகளைக் கொன்றழிக்கப் பாடியிருப்பவைகளை ஆதாரமாக வைத்து தான்போலும சைவர்கள் தேவாரத்தைத் "தமிழ் வேத" மென்கின்றனர். இதனாலும் கூடச் சில சைவப்பழங்கள் திருப்தியுறாமல் "தேவாரம் வேத சாரம்" எனவும் சொல்லுகின்றனர்.

"திருஞானசம்பந்தர்" தேவாரம ஆலவாய் பதிகம் கடைசி இரண்டு பாட்டுகளில் வைஷ்ணவமதத்தைக குறை கூறியிருக்கின்றார்.

---

* அமண்தேரர்—அமணரும் தேரரும் அமணர்—திகம்பர ஜைனர். தேரா—பௌத்த சன்னியாசிகள் இது பாலிபாஷையாகும். இதற்குச சரியான ஸம்ஸ்க்ருதச்சொல் ஸ்தவிர: என்பதாம். இதற்குத்தமிழில் கிழவன் எனப் பொருளாகும். பாலிப் பாஷையிலுள்ள இச்சொல் வயது முதிர்ந்தவனை உணர்த்துவதன்று; அறிவில் மூத்தவனையே உணர்த்தும் இதற்கு பிரமாணம் "நதேன தேரோ ஹோதி யேனாஸ்ஸ பலிதம் சிரோ" தலை நரைத்தவன் ஸ்தவிரனாகான் அறிவில் முதிர்ந்தவனே ஸ்தவிரன். (தம்மபதம்.)

சுருக்கிக் கூறுவோமானால் சைவசமயம் போல் இழி தன்மையுடைய சமயமும் அச்சமயத்தினரைப்போல் அழுக்காறுடையவர்களும் அரிதினும அரிதே. இவ்வுண்மைகளைப் புராணங்களில் நிரமபக் காண்பதோடு தென்னாட்டுச் சைவர்கள் தங்களுககுக் கீழ்ப்படிந்த ஏழை மக்களை நடத்தும விதத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். தென்னாட்டில் பார்ப்பனரைவிடச் சைவர்கள் கொடுமையாளர்கள்.

புத்தமதத்தைச்சார்ந்த ஆண் பெண் யாவரும் பொதுவாக ஐந்து நல்லொழுக்கங்களைப் பின்பற்றி ஒழுகவேண்டும. இதற்கு பஞ்ச *சீலாசரணம் எனக்கூறுவர். இவர்களுக்கு உபாசகர்கள் என்று பெயர். பிக்ஷுகள் இதைவிட அதிகமான நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும. அந்நியமங்கள் அவர்களின் யோக்கியதைக்குத் தக்கப்படி எட்டு வகையாயும பத்து வகையாயும் அதிகப்பட்டும் இருக்கும.
ஐந்து நல்லொழுக்கங்களாவன:—

1. பாணதிபாதா வேரமணி சிக்காபதம் ஸமாதியாமி
2. அதின்னதானு வேரமணி சிக்காபதம ஸமாதியாமி
3. காமேஸு மிச்சாசாரா வேரமணி சிக்காபதம் ஸமாதியாமி
4. மூஸாவாதா வேரமணி சிக்காபதம் ஸமாதியாமி
5. ஸுராமேரய மத்யபமாதட்டானு வேரமணி சிக்காபதம் ஸமாதியாமி

இவைகளின் சம்ஸ்கிருதம்:—

1. ப்ராணதிபாதாத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்ரியே
2. அதத்தாதானத் விரமாணி சிக்ஷாபதம ஸமாத்ரியே
3. காமேஷு மித்யாசாராத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்ரியே
4. ம்ருஷாவாதாத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்ரியே
5. ஸுராமைரேய மத்ய ப்ரமாதஸ்தானத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்ரியே

---

* சீலம்-நல்லொழுக்கம்.

1. (பொருள்) நான் உயிர்க்கொலையினின்றும் விலகினவனு யிருக்கிறேன் அத்தகைய நன்னடக்கையை ஒப்புகொள்ளுகிறேன்.

2. பிறர்பொருளைக் கவர்வதினின்றும விலகியிருக்கின்றேன் நன்னடக்கையை ஒப்புக்கொள்ளுகின்றேன்.

3. பிறர்மனைவியை விரும்புவதாகிய இழிதொழிலினின்றும் விலகியிருக்கின்றேன் நன்னடக்கையை ஒப்புக்கொள்ளுகின்றேன்.

4. பொய் சொல்லுவதினின்றும் விலகுகின்றேன் நன்னடக் கையை ஒப்புக்கொள்ளுகின்றேன்.

5. அறிவைக் கெடுக்கும் கள் முதலிய மயக்கவஸ்துக்களின் சம்பந்தத்தினின்றும் விலகியிருக்கின்றேன் நன்னடக்கையை ஒப்புக் கொள்ளுகின்றேன்.

சகோதரர்களே! இவ்வைந்து ஒழுக்கங்களை கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் நல்லவர்களா? கெட்டவர்களா? ஆனல் பார்ப்பனர் களுக்குக் கெட்டவர்கள் தான். பார்ப்பன மதம் இவ்வைந்து ஒழுக்கங் களையும் இவைகளுக்கு மாறுபட்ட ஒழுக்கங்களால் மறுக்கின்றது.

1. யாகத்தில் உயிர்க் கொலைசெய்யவேண்டும் * அதிதியாக வேதமறிந்த பிராமணன் வீட்டிற்கு வந்தால் பெரிய எருதையோ அதுகிடைக்காத பக்ஷம் கொழுத்த வெள்ளாட்டையோ அறுத்து சமைத்து அவனுக்குப் போடவேண்டும்.

2 சூத்திரன் கஷ்டப்பட்டு ஏதேனும் பொருள் வைத்திருந் தால அதையும்; யாகத்திற்கு உதவிசெய்யாத வைசியன் பொருளையும் கொள்ளையிடலாம்.

3. பெண்களைப் புணரவும பிராமணனைக் காப்பாற்றவும் மற்றும் பொய்சொல்லலாம்.

4. சோமரசம் சுரா முதலிய மத்தியங்கள் யாகத்தில் குடிக்கலா மென்னும் விதியிருக்கிறது.

---

* அதிதி—விருந்தினன்.

5. "பௌண்டரீக" யாகத்தில் பிரமசாரியைக் கைப்பெண்ணோடு புணரச்செய்தல் "வாமதேவ்யம்" என்னும யாகத்தில் தீக்ஷதர் பல ஜாதிப் பெண்களோடும புணருதல்.

பௌத்தர்கள் பஞ்சசீலங்களால் (ஐந்துவகை நல்லொழுக்கங்கள்) உலகத்தை உய்விக்க எழுந்தது பார்ப்பனரின் சுயநலத்திற்குக் கேடன்றோ. ஆகையினால் தான் புத்தபகவானைத் * திருடன் என்று ராமாயணம முதலிய பார்ப்பன நூல்களில் எழுதிவைத்ததும புத்த பகவானின் கட்டளைப்படி உலகத்தை உய்விக்குந் துறையில்உழைத்து வந்த பௌத்தபிக்ஷுககளையும ஜைனபிக்ஷுககளையும் கழுவேற்றிக் கொன்றதும, இதில் வியப்பு ஒன்றுமில்லை. சுயநலததிற்கு அடிமைப் பட்டவர்கள எதைத்தான் செய்யமாட்டார்கள்.

"சாயணர் தனது பாஷ்யத்தில் தஸ்யு = வேதவிரோதி அசுரன் = புத்தன் எனக் கூறியிருக்கிறார். புராணங்களிலும அசுரர்களை மயக்கி அழிக்கும பொருட்டே விஷ்ணுவானவர் "புத்தன்" என்னும் ஒன்பதாவது அவதாரத்தை எடுத்தார் என்று சொல்லப்பட்டிருக் கிறது.

இன்னும் பாருங்கள்:—

"யவம் வ்ருகேணஸ்விநா வபந்தேஷம் துஹந்தா மனுஷாயதஸ்ரா அபிதஸ்யும வகுரேணாதமந்தோரு ஜ்யோதிஸ் சசக்ரதுராார்யாய" (ரிக் 1—117—21.)

(கொடுமையாளர்களைக் கொலைசெய்கின்ற அரசனே! அரசியே! நிலத்தை உழுது பயிரிட்டுக்கொண்டும வேதமபடிக்கும அறிஞர்களா கிய ஆரியர்களுககு உணவளித்தும தஸ்யுககளை அகநியஸ்திரத்தால் அழித்தும இவ்வாறு மூன்றுவகையாக நீங்கள் இருவரும் ஆரியர் களுககாக மிகுதியும் உழைக்கின்றீர்கள்.

---

* யதாஹிசோர: ஸததாஹிபுத்த: ததாகதம நாஸ்திகமத்ரவித்தி (திருடன் எப்படியோ அப்படியே புத்தனும அவனுடைய மதம் நாஸ்திகமாகும்.)

அன்பர்களே! இவ்வாக்கியமானது பார்ப்பனர் ஒரு வேலையும் செய்யாமல் பிறர் கஷ்டப்பட்டு இடும் உணவை உண்பதோடு கொலை முதலிய துர்க்குணங்கள் இல்லாதவரைக் கொன்றழிக்கும் உபாயத்தைத் தேடுகின்றவர்களென்றும் வெளிப்படுத்துகின்றது.

"இந்தர: ஸமத்ஸு யஜமானமார்யம் ப்ராவத் விஸ்வே
ஷு சதமூதிராஜிஷு ஸ்வமீடேஷ்வாஜிஷு. மனவே
சாஸதவ்ரதான் த்வசம் க்ருஷ்ணமரந்தயத். தக்ஷன்ன
விஸ்வம் தத்ருஷாண மோஷதி ந்யர்சஸான மோஷதி."

(ரிக் 1. 130. 8.)

(பலவகையில் எங்களைக்காக்கும் இந்திரனே! பொதுவாக எல்லாச் சண்டைகளிலும், பொறுமையினால் எழும் சண்டைகளிலும், சுகத்தைவிரும்பி உண்டாகும் சண்டைகளிலும் தேவரீர் யாகஞ்செய்பவர்களாகிய ஆரியரைக் காப்பாற்றவேண்டும். மனுவிற்காக யாகஞ் செய்யாதவர்களைத் தண்டிக்கவேண்டும். கருப்புத் தோலுடைய கொடியோர்களைக் கொன்று கொளுத்திவிடவேண்டும். கொடுமையாளர்களாகிய (அக் கருப்பர்களை) அவர்களைக்கொளுத்தி நீருக்கவேண்டும். துன்பத்தைச் செய்பவர்களான அத் துஷ்டர்களை வேரோடு சுட்டு நீருக்கவேண்டும்.)

ஆரியர்களுக்குத் தமிழர்களிடத்தில் இருக்கும் பொறாமையை இவ்வளவு வெளிப்படையாக இதற்குமுன் எடுத்துக்காட்டிய மேற்கோள்களில் இல்லை. இதைப்போன்ற பலவாக்கியங்கள் வேதத்தில் மலிந்து கிடக்கின்றன. தண்டிக்கவேண்டும், கொல்லவேண்டும், கொளுத்தவேண்டும், சுட்டு நீருக்கவேண்டும் வேரோடு சுட்டு நீருக்க வேண்டும் என்று பின்னும் பின்னும் பலதடவை எடுத்து கூறியிருப்பதைக்கவனியுங்கள். இவ்வாறு தங்கள் தலைவனை வேண்டி அவனது உதவியால் பிறரைக் கொல்லும் படுபாவிகள் பார்ப்பன குலத்தினருக்குச் சமானமாக வேறொருகுலத்தினர் எங்கும் இரார் இது திண்ணம். இவ்வேதவாக்கியத்திற்கு சாயணர் கூறிய பொருளையே தயானந்தரும் ஒப்புக் கொள்ளுகின்றார். கருப்புத்தோலுடையவர் சூத்திரர் என்பதற்கு பிரமாணம்:—

"ப்ராஹ்மணனும் ஸிதோ வர்ண:
க்ஷத்திரியாணும்து லோஹித:.
வைஸ்யானும பீதகோ வர்ண:
*சூத்ராண மஸிதஸ்ததா."

(பிராமணர்களுக்கு வெண்மை நிறமும க்ஷத்திரியர்களுக்கு சிவப்பு நிறமும், வைசியர்களுக்கு மஞ்சள் நிறமும, சூத்திரர்களுக்கு கருப்பு நிறமுமாகும்)

வைதிகமதப்படி பிராமணன் மக்களுக்குள் உயர்ந்தவனும் க்ஷத்திரியன் பிராமணனுக்குத் தாழ்ந்தவனு யிருநதாலும் வைசிய சூத்திரர்களைவிட உயர்நதவனும் வைசியன் பிராமண க்ஷத்திரியர்களுக் குத் தாழ்ந்தவனுயிருப்பினும் சூத்திரனைவிட உயர்ந்தவனும சூத்திரன் முற்றிலும் தாழ்ந்தவனுமாவான். இதனால் சூத்திரன் ஒருவகையி லும முன்னேறலாகா தென்ற வைதிகர்களின் எல்லாப் பிரமாணங் களும் முறையிடுகின்றன. அந்தோ! அந்தோ!! அநியாயம்!!! அநியாயம!!!! ஆரியர்களின் அடக்குமுறையினல் அவதிப்படும் சூத்தி ரர் "கூனனுக்கு முதுகில் பிளவை புறப்பட்டது"போல் தங்களுக் குள்ளேயே பல்லாயிரம பிரிவுகளை உண்டுபண்ணிப் பரிதவிக்கின்ருர் களே. இவர்கள் மதத்தினல் படும் கஷ்டமானது ஆற்றுப்பெருக்கில் அடித்துவரும கரடியைக் கம்பளிமூட்டை யெனறு கட்டிப்பிடித்த நாட்டுப்புறத்தானின் கதை போலன்ருே இருக்கிறது இவர்கள் விட் டாலும் வைதிக மதம் என்கிற கரடி இவர்களை விடமாட்டேன் என்

---

* கருப்புநிறமுடைய பலரை இக்காலத்தில் பார்ப்பனர்களின் கூட்டத்தில் காணலாம். இது வைதிகமதத்திற்கு விரோத மன்ருே. இநநிறம் பார்ப்பனருக்கு எவவாறு வந்தது வர்ணசங்கரத்தினலா? அன்ருே? சங்கரத்தினல் என்ருல் "சங்கரோ நரகாயைவகுலக்கானும் குலஸ்யச" (சங்கரம்= வர்ணக்கலப்பானது குலத்திற்கும் சங்கரத்தினல் குலத்தைக் கெடுத்தவர்களுக்கும் நரகத்தைத் தரும் என்னும் ஸ்மிருதிப் படி நரகத்திற்காளாவார்களே. கருப்புநிறம் சங்கரத்தினல் அன்று இயற்கையினல் என்ருல் நிறத்தினல் உயர்வுதாழ்வு கற்பிக்கிற பார்ப்பனமதத்திற்கு விலையுமில்லை.

கிறது. வைதிக மதப்பழக்கவழக்கங்கள் காடியின் பிடிபோல இவர்களை இறுகப்பிடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாபத்தினின்றும் ஒழிவது எவ்விதமெனின் தைரியத்துடன் வைதிகமதமாகிய காடியை ஒரே உதறலாக உதறித்தள்ளி அதன் பிடியினின்றும் விலகுவதேயாம் இவ்வுடலை நீத்தபின் பரலோகத்தில் சுவர்க்கபோகம அனுபவிக்கலாம் ஒப்புயர்வற்ற பேரின்பத்தையடையலாம் என்றும் மற்றும் புராணங்களும புரோகிதர்களும கூறுகிறார்களென்றால் இத்தகைய கூற்றுகள் ஏமாற்று வித்தைகளாகும் இவ்வுலகத்தில் நியாயமாக மக்களுக்கு அனுபவிக்க உரிமையுள்ள நன்மைகளுள் ஒன்றேனும் பிறப்பினால் தாழ்வு கற்பித்துத் தடைசெய்யும மதமானது இறந்தபின் சுவர்க்காதி போகங்களையும் முத்தியின்பத்தையும் தருமென்று மனுஷத்தன்மை யுடையவன் நம்பமாட்டான். இவ்வுலகத்தில் சூத்திரன் சாமளவும் அடிமையாயிருந்தால செத்தபின் மறுபிறப்பில் சுகமுறுவான் என்றல்லவோ புராணங்களும் ஸ்மிருதிகளும கூறுகின்றன. இவைகளை நம்பி இககாலத்திலகூட இவ்வாபாசமததததை நமபி சூத்திரனாக இருப்பவன் மடையனேயாவன். ஆகையால் சகோதரர்களே! உங்களுக்கு மனுஷத்தன்மையிலும் அதேகாலத்தில் இந்துக்களாகவும் இருகக விருப்பமிருந்தால் வேதமபடித்துப் பிராமணர்களாக ஆகுங்கள். அல்லது புத்தசமயம முதலிய மதாநதரங்களில் சேருங்கள ஒருமதமும் வேண்டாம' என்றிருககலாமென்றால் ஒருசமுதாயத்தை அவ்வாறு திருப்புவது கடினம். ஒரு சிலரைத்தான் திருப்பலாம் ஆனால் அவர்கள பெருந்தொகையினரான பிறரால் ஒதுக்கப்பட்டு வருந்துவார்கள்.

பௌத்தசமயம் அழிந்தபின் இந்துமதமும் அதன் பிரிவுகளும்:—

'சம்பந்தரால்' தென்னாட்டிலும * குமாரில்பட்டர் என்பவரால் வடநாட்டிலும பௌத்தர்கள் கொலைசெய் தழிககப்பட்ட பின்னரும

---

* இக் குமாரிலபட்டர் புததாகளின் காலாசாலையில் சேர்நது கல்வி கற்றுவிட்டுப் பின்னர் அவாகளைக் கொலைசெய்வித்ததாகச் 'சஙகரவிஜயம்' முதலிய நூல்களில் காணலாம். கல்விகற்பித்த குருவையும அவா மதததினரையும கொலை செய்து அழிப்பதே பாாப்பன அறிஞருஙகூடத தஙகளகடமையாகக் கொணடிருந்தால கல்வியறிவறற பார்ப்பனர் 'அன்னமிட்ட வீட்டில் கன்னமிடு' வார்களென்பது சொல்லாமலே விளங்குமன்றோ.

எஞ்சிய பௌத்தர்களைச் 'சங்கராசாரியார்' தனது பார்ப்பன நயத்தால் நாசஞ்செய்துவிட்டு "அத்வைதப்ரதிஷ்டாபனாசாரியர்" என்னும் பட்டம் பெற்றார். இவருக்குப்பின் சில நூற்றாண்டுகள் கழித்து 'இராமானுஜர்' தோன்றினார். இவருடைய குரு 'யாதவப்பிரகாசர்' சங்கரமதத்தைத் தழுவியிருந்தவர். அவரிடத்தில் கல்வி கற்றுக்கொண்ட இராமானுஜர் குருதக்ஷிணையோ என்னவோ அறியேன் "விசிஷ்டாத்வைதம்" என்னும் ஒரு மதத்தை ஸ்தாபித்து சங்கரரின் அத்வைத மதத்தைக் கண்டிக்க முற்பட்டனர். முதன் முதல் தனது மதத்தைப் பார்ப்பனர் பலர் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு சிலரே ஒப்புக்கொண்டனர் இதனால் திருப்தியடையாத இராமானுஜர் தன்னைச்சார்ந்த சிஷ்யப்பிராமணரின் அரைகுறைச் சம்மதியோடு பார்ப்பனரல்லாதாரில் பல வகுப்பினரான பல ஜனங்களுக்கும் பூணூல் கொடுத்து 'காயத்ரி' மந்திரம் உபதேசித்து அவர்களைப் பார்ப்பனராக்கி "ஸ்ரீ வைஷ்ணவப்பிராமணர்கள்" எனப் பெயரும் கொடுத்தனர். இவ்வாறு பல நூற்றுக்கணக்கான பார்பபனரல்லாதாரைப் பார்ப்பனராக்கியபின் முற்கூறிய பிராமண சிஷ்யர்களின் பிடிவாதத்தினால் பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனராக்குதல் நிறுத்தி 'தாஸர்' என்ற பெயருடன் சிஷ்யர்களாகச செய்துவந்ததாகவும உலகத்தார் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதற்கு ஆதாரமான நூல்கள் இருக்கிறதும் இல்லாததும் எனக்குத் தெரியாது. ஆனால் "சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள்" (சாத்தானிகள்) என ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள் இவர்கள் பிராமணருமல்லர் சூத்திரருமல்லர் இதனால் * திரிசங்கு சுவர்க்கம்போல் பார்ப்பன உலகத்திற்கும் பார்ப்பனரல்லாதாரின் உலகத்திற்கும இடையில் இச் சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் இக்காலத்தில் பூணூல்போட்டுப் பிராமணர்களைப்போல் நடித்துக்கொண்டு சிற்சிலசமயங்களில் பந்தியில் பார்ப்பனருடன் இருந்து உண்பதும் உண்டு. இவ்வாறு உண்பதை வெளிப்படையாகப் பார்ப்பனர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

---

* திரிசங்கு சுவர்க்கம் = விசுவாமித்திர முனிவரால் செய்யப்பட்ட சுவர்க்கலோகம் இதைக் குறித்த முழு விவரமும் புராணங்களில் உண்டு.

இவர்களில் சிலரை நான் விசாரித்ததில்; இராமானுஜர் தங்களைப் பூணூல் சாத்திப் பிராமணர்களாக்காவிட்டாலும் "ஸ்ரீ வைஷ்ணவத்" தன்மை யளித்திருப்பதால் முக்காலே அரைக்கால் பங்கு பிராமணத்வம் தங்களுக்கிருக்கிறதென்றும நாளடைவில் ஓர் சிறு குறையிருப்பதும் நீங்கிவிடுமென்றும் அக்குறை நீங்கும் வரையில் விசுவாமித்திரனைப்போன்று முயற்சிப்போமென்றும் கூறியுள்ளார்கள்.

இராமானுஜமதப் பார்ப்பனரைக்குறித்த "ஐதிஹ்யம் (உலக வதந்தி) வருமாறு:—

ஸ்ரீ வைஷ்ணவப் பிராமணர் 'ஆசாரியபுருஷாள்' 'சிஷ்யாள்' என இருவகையினராவர். இவர்களுள் முற்கூறியவர்களின் குலம் இராமானுஜர் மதம் ஸ்தாபிப்பதற்கு முந்தியும் பிராமணகுலம்தான். 'சிஷ்யாள்' என்போரின குலம் பார்ப்பனரல்லாதாரிலிருந்து பார்ப்பனக்குலமாக்கியது அவர்கள் ஏறியிறங்கும் திருமேனி, வெள்ளை வெளுக்கும் திருமேனி, எங்கும் கண்டதிருமேனி, கொட்டித்தட்டும் திருமேனி, பலபட்டரைத்திருமேனி எனப் பல வகுப்பைச்சாரந்தவர்களாம். இத்தகையவர்களைப் பார்ப்பனராக்கிய பின்னும் உடனிருந்துண்ணல் முதலிய சாதாரண விஷயங்களில்கூட ஒற்றுமையில்லாததைக்கண்ட இராமானுஜர்; பெருமாள் பிரசாதத்திற்குத் தோஷமில்லையெனச்சொல்லிக் கோவில் பிரசாதம் உண்பதில் ஒற்றுமையை ஏற்படுத்தினர். பெண் கொண்டால் அவனை "சமப்ரோக்ஷணம்" என்கிற சடங்குசெய்து கிருகத்தில் சேர்த்துக்கொள்ளலா மென்றும் சொல்லித்தன் வழியில் திருப்பினாராம். இவ்வுண்மையை 'வைஷ்ணவப்பந்தி போல்' என்னும் பழமொழியினால் அறியலாம்.

இவ்வாறு பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனராக்கிய பின்னர் அவர்களுக்கு வேதவாக்கியங்களை உச்சரிக்க கஷ்டமாயிருந்ததால் ஒருசமயம் பார்ப்பனத்தன்மையை விட்டு விட்டுப் போய்விட்டால் தனக்கு சங்கபலம் உண்டாகாதே யெனக் கண்ட இராமானுஜர் "பன்னிரு ஆழ்வார்களின் பாக்களைத் தொகுத்த "பிரபந்தம்" என்னும் நூலை வேதத்திற்கு பதில் அத்தியயனம் பண்ணசசொல்லி அதற்குத் 'திராவிடவேத' மென்னும் பெயரிட்டு சாக்ஷாத் வேதத்தைப் பொதுவாகவும் திராவிடவேதத்தைச் சிறப்பாகவும் செய்தனராம்.

இராமானுஜ வைஷ்ணவப் பார்ப்பனரின் குலச்சிறப்பு இப்படியிருக்க சங்கரமதத்தைத்தழுவிய பார்ப்பனரை எடுத்துக்கொள்வோம். இவர்களைப் பொதுவாக "ஸ்மார்த்தர்கள்" என அழைக்கப்பட்டாலும் தமிழ் நாட்டில் 'அஷ்டஸஹஸ்ரம்' பிருஹச்சரணம், வடமன் முதலிய சிறப்புப் பெயர்களால் அவ்வவ்வகுப்பினரை அழைத்துவருவதால் இவர்களின் சரித்திரத்திலும் விசேஷங்கள் இருககின்றன வென்பது வெளிப்படை இப்படியே மலையாளம, கன்னடம், தெலுங்கு முதலிய நாடுகளில் வசிக்கும பார்ப்பனர்களுக்குள்ளும் பல பிரிவுகள் இருக்கின்றன. பொதுவாகத் தென்னாட்டுப் பிராமணரைப் * "பஞ்சத்திராவிடர்" என்றும் வடநாட்டுப பிராமணரை "பஞ்சகௌடர்" என்றும் அழைககின்றனர். பஞ்சத்திராவிடர்களாவன:—

தமிழ், மலையாளம், துளுவம் பாஷைகள் பேசுபவர் 1. தெலுங்கு பாஷை பேசுபவர் 2. கன்னட பாஷையினர் 3. மராட்டிய பாஷையினர் 4. குஜராதி பாஷையினர் 5. இவ்வைவருமாம். இவ்வைவருக்கும் பந்தி போஜனம்உண்டு. இப்பிரிவினை சங்கராசாரியரால் ஏற்படுத்தப்பட்டதாம் அக்காலத்தில் துளுவம் மலையாளம் முதலிய நாடுகள் இருந்தனவே யொழிய அந் நாடுகளிலும் தமிழ் மொழியே வழங்கி வந்ததால் பாஷை வேற்றுமைப்பட்ட இககாலத்தும் மலையாளிகளும் துளுவரும் தமிழர்களுக்குள்ளேயே சேர்ககப்படுகினறனர்.

பிராம்மணனின் தோல் வெண்மை யென்றும சூத்திரனின் தோல் கருமை யென்றும் புராண வாக்கியத்தினால் அறிந்தோம். இதைப் பிராமணர்கள் அவசியம் ஒப்புககொணடு இக்காலத்தில தென்னாட்டில் மிகுதியாகக காணப்பட்டு பார்ப்பனரின் கூட்டத்தில் இருக்கும் கருப்புத்தோலுள்ளவர்களைச் சூத்திரர்களாக ஒதுக்கித்தள்ளுவதோடு வெள்ளைத்தோலையுடைய யூரோபியர்களைப் பிராமணராகக கருதியும இனிமேலில் தங்களுடைய வர்ணத்தில் சங்கரம் வராமலிருககததக்க ஏற்பாடு செய்தும தங்கள குலத்தை முற்றிலும் வெள்ளைமயமாகக் புராணப் பிரமாணத்தை மெய்ப்பிக்கக கடமைப்பட்டுள்ளார்கள்.

---

* பஞ்சத்திராவிடர்=ஐந்துவகைத்தமிழா இதனால் இவர்கள் தமிழர்களாயிருந்து ஆரியர்களால் தஙகள் இனத்தில் சேர்க்கப்பட்டவர்கள் எனக் கருத இடமிருக்கின்றது.

இதற்கு என் சிற்றறிவிற்கெட்டிய ஒரே ஒரு உபாயம் சொல்லுகின்றேன் அதாவது:—

இதற்கு முன் சிற்சில சந்தர்ப்பங்களில் பார்ப்பன மேதாவிகள் தங்கள் பெண் மக்களை யூரோபியர்களுக்கு மணமுடித்துக் கொடுத்திருப்பதுபோல் இனிமேல் தடையில்லாமல் பெண் கொடுக்க முன்வரல் வேண்டும். இவ்வாறு செய்தால் விரைவிலேயே தங்கள் சமுதாயம் வெள்ளைத் தோலுடையதாய்விடும். அன்றியும் இக்காலத்தில் பார்ப்னர்களுக்குள்ளேயே கருப்பர்களிருப்பதால் "த்வசம் க்ருஷ்ணமரந்தயத்" கருப்புத் தோலுள்ளவர்களைக் கொல்லவேண்டும என்ற வேண்டுகோளை நிறைவேற்ற முடியாமல் வேதஞ் சொன்ன கடவுள் வருந்திக்கொண்டிருக்கிறார். இதற்கும் பரிகாரமுண்டாக்கவேண்டியது அவசியமன்றோ. தங்கள் சமுதாயமுழுதும வெள்ளைத் தோலர்களின் மயமானல்; பார்ப்பனர்கள் தங்குதடையின்றி கருப்புத் தோலர்களைத் தொலைத்து எங்களைக் காப்பாற்றுவீராக இந்திரனே! என்று தங்கள் சமுதாய நன்மையைக் கருதிப் பிரார்த்திக்கலாம்.

## ஆரியக் கடவுளின் தொழில்.

"ஸஸானத்யாம் உத ஸூர்யம் ஸஸானேந்த்ர:
ஸஸான புருபோஜஸம்காம். ஹிரண்ய முத
போகம் ஸஸான ஹத்வீ தஸ்யூன் ப்ரார்யம
வர்ணமாவத்" (ரிக் 3-34-9.)

(இந்திரன் பலவகைப் பொருளையும் ஆரியர்களுக்குத் தருகின்றார். எவை எவை யென்றால் உலகத்தை வெளிச்சத்தினல் காப்பாற்றும் சூரியனைத் தருகின்றார். மக்களின் உபயோகத்திற்குரிய உணவுப்பொருள்களால் செழிப்புற்ற பூமியைத் தருகின்றார் பொன்தருகின்றார். தஸ்யுக்களைக் கொன்று ஆரிய வர்ணத்தை நன்கு காப்பாற்றுகின்றார்.)

அன்பர்களே! இவ்வாக்கியத்தையும் கூர்ந்து கவனியுங்கள். இந்திரன் என்கிற ஆரியர்களின் கடவுள் தஸ்யுக்களைக் கொன்று ஆரிய வர்ணத்தைக் காப்பாற்றுகின்றாராம் தஸ்யுக்கள் அனரியர்கள் என்றும் ஆரியர் என்றால் "த்ரைவர்ணிகம்" மூன்று வருணங்களையுடைய

சமுதாயம் என்றும் 'சாயணர்' பொருள் கொள்ளுகிறார். இதனால் இந்திரனாகிய கடவுள் கருப்பர்களை அழித்து வெள்ளைத்தோலுடையவர்களைக் காப்பதிலேயே கவலையுற்றுள்ளார் என அறிந்தோம்.

"அஹம் பூமிமததா மார்யாயாஹம்
வ்ருஷ்டிம தாசுஷே மர்த்யாய.
அஹமபோ அநயம் வாவசாறு
மமதேவாஸோ அநுகேதமாயன்" (ரிக் 4–26–2.)

(கடவுள் கூறுவதாவது:— நான் ஆரியர்களுக்குப் பூமியைக் கொடுக்கிறேன். நான் தானம செய்கிறமக்களுக்கு மழையைக் கொடுக்கிறேன். நான் சுகத்தைச் செய்கின்ற நல்ல தண்ணீரைக் கொண்டுவருகின்றேன் என் கட்டளைக்கிணங்கிச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி முதலிய தேவதைகள் தத்தந்தொழிலைச் செய்கின்றன)

அன்பர்களே! நான் ஆரியர்களுக்காகவே பூமியைக் கொடுக்கிறேன். தானம் செய்யும மனிதர்களுக்காக மழையைக் கொடுக்கிறேன் நல்லஜலத்தைக் கொண்டுவருகிறவன் நானே என ஆரியக்கடவுள் சொல்லுவதால் ஆரியர்களுக்குக் கருணை செய்பவரென்றும் அனாரியர்களைத் தண்டிக்கிறவரென்றும பெறப்படுவதோடு என் ஆணைக்கிணங்கி சூரியன், சந்திரன், வாயு முதலியவைகள் தத்தந் தொழிலைச் செய்கின்றன வென்பதனால் அனாரியர் களாகிய தஸ்யுக்கள் ஆரியர்களுக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பாக அறிவுறுத்துவதாகவும் ஏற்படுகிறது.

## அனாரியன் ஆரியனைப்போல் நடந்தால் ஆரியக்கடவுள் கொன்றுவிடுவார்.

"உத த்யா ஸத்ய ஆர்யா ஸரயோரிந்த்ர!
பாரத: அர்ணசித்ரதா வதீ:." (ரிக் 4—30—28)

(இந்திரனே! சாயூநதிக்கரையில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த ஆரியாபிமானிகளான அர்ணன், சித்ரரதன் என்னும் இரு அரசர்களையும் தேவரீர் கொன்றுவிட்டீர்.

"வித்வக்ஷண: ஸம்ருதௌ சக்ரமாஸ
ஜோஸுன்வதோவிஷுண: ஸுன்வதோ வ்ருத:
இந்த்ரோ விஸ்வஸ்ய தமிதா விபீஷணோயதா
வசம் நயதி தாஸமார்ய:!' (ரிக் 5—34—6)

(யுத்தத்தில் சத்துருககளைப் பொடி பண்ணுபவரும் சக்கரம் அஸ்திரம முதலிய படைகளையுடையவரும் யாகஞ்செய்யாதவர்களுக்கு விரோதியும் உலகத்தை ஆளுபவரும் பயங்கரருமான ஆரிய இநதிரன் தாஸர்களை மெதுவாகத தன்பக்கம் திருப்புகின்றார்.) வீரபுருஷர்களைக கொன்றுவிட்டுப் பேடிகளைத் தனககு அடிமையாக்குதல்இதன்கருத்து

"அஹமத்கம்...நயோரர ஆர்யம் நாம தஸ்யவே (10—49—3)

(நான் தஸ்யுக்களுக்கு ஆரிய நாமத்தைக் கொடுக்கமாட்டேன்.)

தஸ்யுக்கள் எத்தகைய நல்லொழுக்கமுடையவராயிருப்பினுஞ் சரியே ஆரியர்களின் பெருமை அவர்களுக்கு வரலாகாதென்பதே இதன் கருத்து.

"த்வே அஸுர்யம் வஸவோநய்ருண்வன்
க்ரதும் ஹிதே மித்ர மஹோராஜுஷந்த
த்வம் தஸ்யூன் ரோகஸோக்ந ஆஜ
உருஜ்யோதிர்ஜனயன்னார்யாய." (7—5—3)

(நண்பர்களால் உபசரிக்கப்படும் அக்கினியே! தேவரீரின் உதவியைக்கொண்டு வஸுக்கள் என்னும ஆரிய ராஜ்யாதிகாரிகள் அஸுர்யம் = பலவகை உபாயங்களை ஆலோசித்து யாகததைமுடிக்கிறார்கள். இதனால் தேவரீர் அச்சமற்று ஒவ்வொரு இடத்திலும உளள தஸ்யுக்களைத் தூர ஆகற்றுவீராக. ஆரியர்களின் நன்மையின் பொருட்டு மிகப்பிரகாசத்தை உண்டுபண்ணுகின்ற தேவரீர் எப்போதும் தேவரீரின் காரியத்தில் உறுதியுடனிருக்கவேண்டும். அஸுர்யம் = அஸுரனைச்சார்ந்தது அசுரன் வீரன் என்று தயானந்த மதஸ்தர்கள் இங்கு பொருள் கொள்ளுகிறார்கள்.)

சகோதரர்களே! தஸ்யுக்களைச் சுட்டெரிக்க வேண்டும் வேரோடு கொளுத்திச் சாம்பலாக்கவேண்டும் என்றும் மற்றும் இந்திரனிடத்தில்

பிரார்த்தித்ததற்கும் தஸ்யுக்களை எல்லாவிடங்களிலிருந்தும் அகற்றி விடும்படி அக்கினியைப் பிரார்த்திக்கும் இவ்வாக்கியத்திற்கும் ஒற்று மையிருப்பதைக் கவனியுங்கள்.

இவ்வாறே வேதத்தில் சூத்திர அசுர தஸ்யு முதலிய அனாரியர் களைக்குறித்துக் கூறப்பட்ட விடங்கள் நிரம்ப இருககின்றன. அவை இன்னின்ன விடங்களில் இருக்கின்றன வென்பதைககுறித்துச் சுருக் கமாக இங்கு குறிப்பிடுகின்றேன். அவ்வவ்விடங்களைப் பார்த்தால் உண்மை உணர்ந்துகொள்ளலாம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ரிக்வேதம | 5 | 34 | 6 | ரிகவேதம் | 4 | 16 | 10 |
| ,, | 6 | 18 | 3 | ,, | 6 | 24 | 8 |
| ,, | 6 | 22 | 10 | ,, | 4 | 16 | 9 |
| ,, | 6 | 25 | 2 | ,, | 10 | 22 | 8 |
| ,, | 6 | 33 | 3 | ,, | 1 | 103 | 4 |
| ,, | 6 | 60 | 6 | ,, | 1 | 51 | 6 |
| ,, | 7 | 18 | 7 | ,, | 10 | 73 | 5 |
| ,, | 8 | 24 | 27 | ,, | 9 | 41 | 2 |
| ,, | 10 | 38 | 3 | ,, | 8 | 70 | 11 |
| ,, | 10 | 43 | 4 | ,, | 5 | 7 | 10 |
| ,, | 10 | 49 | 3 | ,, | 4 | 28 | 4 |
| ,, | 10 | 69 | 6 | ,, | 4 | 28 | 3 |
| ,, | 10 | 83 | 1 | ,, | 4 | 16 | 12 |
| அதர்வணவேதம் | 5 | 11 | 3 | ,, | 3 | 34 | 9 |
| ,, | 5 | 11 | 4 | ,, | 8 | 50 | 8 |
| ,, | 5 | 11 | 6 | ,, | 7 | 19 | 4 |
| ரிக்வேதம் | 7 | 104 | 12 | ,, | 6 | 14 | 3 |
| ,, | 1 | 51 | 8 | ,, | 5 | 30 | 9 |
| ,, | 8 | 6 | 14 | ,, | 5 | 4 | 6 |
| ,, | 1 | 36 | 18 | ,, | 2 | 15 | 9 |
| ,, | 1 | 103 | 3 | ,, | 1 | 175 | 3 |
| ,, | 8 | 51 | 2 | ,, | 1 | 117 | 21 |
| ,, | 8 | 56 | 2 | ,, | 1 | 59 | 6 |
| ,, | 9 | 92 | 5 | ,, | 1 | 53 | 4 |
| ,, | 10 | 49 | 3 | ,, | 1 | 33 | 9 |
| ,, | 10 | 105 | 7 | ,, | 1 | 33 | 7 |
| ,, | 8 | 55 | 1 | ,, | 1 | 33 | 4 |
| ,, | 8 | 56 | 1 | ,, | 10 | 48 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ,, | 2 | 11 | 18 | ,, | 5 | 38 | 1 |
| ,, | 10 | 99 | 7 | ,, | 9 | 47 | 2 |
| ,, | 10 | 105 | 11 | ,, | 10 | 95 | 7 |
| ,, | 1 | 51 | 5 | ,, | 6 | 45 | 24 |
| ,, | 10 | 47 | 4 | ,, | 5 | 14 | 4 |
| ,, | 6 | 16 | 15 | ,, | 5 | 31 | 5 |
| ,, | 8 | 39 | 8 | ,, | 5 | 29 | 10 |
| ,, | 10 | 160 | 2 | ,, | 5 | 31 | 7 |
| ,, | 1 | 100 | 12 | ,, | 5 | 70 | 3 |
| ,, | 3 | 34 | 6 | ,, | 6 | 18 | 3 |
| ,, | 3 | 29 | 9 | ,, | 6 | 23 | 2 |
| ,, | 2 | 20 | 8 | ,, | 6 | 29 | 6 |
| ,, | 2 | 13 | 9 | ,, | 7 | 5 | 6 |
| ,, | 2 | 11 | 19 | ,, | 7 | 6 | 3 |
| ,, | 1 | 101 | 5 | ,, | 8 | 14 | 14 |
| ,, | 1 | 100 | 18 | ,, | 10 | 55 | 8 |
| ,, | 1 | 78 | 4 | ,, | 10 | 83 | 6 |
| ,, | 1 | 63 | 4 | ,, | 10 | 99 | 8 |
| ,, | 10 | 83 | 3 | ,, | 1 | 104 | 5 |
| ,, | 8 | 77 | 3 | ,, | 1 | 117 | 3 |
| ,, | 8 | 76 | 11 | ,, | 2 | 12 | 10 |
| ,, | 3 | 49 | 2 | ,, | 8 | 98 | 6 |
| ,, | 6 | 31 | 4 | ,, | 9 | 88 | 4 |

அன்பர்களே! அசுர சூத்திரர்களை அழிக்கும்படிக்குள்ள வேத மந்திரங்களின் சிலவற்றின் குறிப்புகள் இதில் காண்பிக்கப்பட்டன. இனி 'இராட்சதர்' என்னும் சொல் எவ்வாறு வந்ததென்பதை அடுத்த அத்தியாயத்தில் ஆராயப்போகின்றேன்.

**மதவிசாரணை முதல் அத்தியாயம் முடிந்தது.**

---

இப்படிக்கு,

M. K. கேலுண்ணி நாயர் என்னும்

**ஸ்வாமி சிவாநந்த ஸரஸ்வதி,**

பொன்னானி தாலூகா, கோலொளம்பு அம்ஸம்

தெற்கு மலையாளம்.

# மத விசாரணை.

## அத்தியாயம் 2.

### இராட்சதர்களைக் குறித்த ஆராய்ச்சி.

" நயாதவ இந்த்ர! ஜுஜுஜுர்நோ நவந்தனசே-
விஷ்டவேத்யாபி: ச்ரத்ததர்த்தோ விஷுணஸ்ய
ஜந்தோர் மா சிசனதேவா அபிகு: ருதம் ந: "

( ரிக்வேதம் மண்டலம் 7. சூக்தம் 21. மந்த்ரம் 5 )

(பொருள்:- இந்திரனே! சிசனதேவா:= ஆண் குறியைத் தெய்வமாகக் கொண்ட யாதவ:= இராட்சதர்கள் எங்களை (ஆரியர்களை) துன்புறுத்தாமலிருக்கவேண்டும். இறைவனே! எங்களை மனித சமூகத்திலிருந்து விலக்காமலிருக்க அருள்புரியவேண்டும் ஆரியர்களின் பகைவர்களை பிரபுவாகிய இந்திரன்கொன்று விடுவார். (அதாவது சிவலிங்க பூசைபண்ணும் இராட்சதர்களை அழித்துவிடுவார்) என்னும் உண்மையை (இராட்சதர்கள்) அறியமாட்டார்கள்.)

சகோதரர்களே! இதனால் ஆரியர்கள் சிவபெருமானை வழிபடுபவர்களல்லர் என்பது பெறப்பட்டது. ஆரியர்கள் முதன்முதலில் நெருப்பு காற்றுமுதலிய படைப்புப் பொருள்களையே வழிபட்டு வந்தவர்கள். அத்தகையவர்கள் நிர்க்குணஸ்வரூபரான சிவபெருமானை வழிபடும் சைவர்களைத் தூற்றாமலிருப்பார்களா? அன்றியும் சைவர்கள் உயிர்க்கொலையாகிய யாகத்தையும் விரும்பார்களே. கடவுள் இத்தகையவர் என்று நிர்ணயிக்கமுடியாதவர் என்பதை உணர்த்தும் பொருட்டன்றோ கேவலம் லிங்காகாரமாகக் கற்பித்து வழிபடுவது (லிங்கம் = ஓர் அடையாளம்) ஆரியர்கள் தங்களுக்குப் பகைவர்களாகச் சொல்லும் இராட்சதர்கள் யாவரும் சிவபக்தர்களேயாவர். உதாகரண

* யாது— இராட்சதன். ரௌர்ருதோ யாது ரட்சஸீ என நிகண்டு.

மாக இராவணனை யெடுத்துக்கொள்ளுவோம். தாடகை என்பவள் ஆரியர்களின் புராண இதிகாசங்களின்படி மஹா பொல்லாதவள். ஆனால் அவள் சிவபக்தி பண்ணுபவரில் சிறப்புவாய்ந்தவள். என்பதற்கு தமிழ் நாட்டில் அவளுக்காகச் சாய்ந்த * சிவலிங்கமொன்றிருந்ததே சான்று. இவ்வாறெல்லாமிருப்பினும் ஆரியரின் பிரார்த்தனை பயன்தராமலிருக்கவில்லை. இக்காலத்தில் சிவாலயங்கள் முதலிய எல்லா ஆலயங்களிலுமே அவர்களே முதன்மை வாய்ந்தவர்கள். பார்ப்பனரல்லாத சைவர்கள் பார்ப்பனருக்குக் கீழ்ப்படிந்தேயிருக்கிறார்கள். சிவாலயங்களில் பார்ப்பனருடைய பின்புறத்தில் நின்றுதான் சைவர்கள் சுவாமியைத் தொழவேண்டும். எவ்வளவு கூடாவொழுக்கமுள்ள பார்ப்பனர் ஆயிருந்தாலும் அவர்களுக்கும் அவர்களின் பெண்களுக்கும் பிரசாதம் முதலில் கொடுத்துவிட்டுப் பிறகுதான் நல்லொழுக்கமுள்ள சைவர்களுக்குக் கொடுப்பார்கள். இந்தகைய அநீதிகளைச் சைவர்கள் பொறுத்துக்கொண்டிருப்பது பார்ப்பனரின் புராணவார்த்தைகளினாலும் நயவஞ்சகங்களினாலு மென்றே எண்ண வேண்டியிருக்கிறது. நான் எனது சைவசகோதரர்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுவதியாதெனில் சிவபெருமான் யாவர்க்கும் பொதுவானவர் அன்பே அவருடைய உருவம் ஆகையால் நீங்கள் உங்கள் சுகதுக்கங்களில் பங்காளிகளான ஏழைப்பார்ப்பனரல்லாதாரின் (முக்கியமாகத் தாழ்த்தப்பட்டவர்களின்) முன்னேற்றவழியில் தடைக்கற்களாயிராமல் உங்களாலியன்ற உதவிசெய்து அவர்களை முன்னேற்றுங்கள்.

" உத்ப்ரஹ ரக்ஷ: ஸஹ மூலமிந்த்ர: வ்ருஸ்ச்சா
மத்யம் ப்ரத்யகரம் ச்ருணீஹி ஆகீவத: ஸலலூகம்
சகர்த்த ப்ரஹ்மத்விஷேதபுஷிம் ஹேதிமஸ்ய. "

( ரிக்வே 3-30-17. )

(எல்லாவகையிலும பெருமை பொருந்திய இந்திரனே! தேவரீர் ரக்ஷ: இராட்சதர்களை வேரோடே அழித்து விடவேண்டும். இராட்

---

* இத்தலம் சோள நாட்டில் இருந்ததாகவும் அறுபத்துமூவரைச் சேர்ந்த அடியாருள் ஒருவர்வேண்டிக் கொண்டதற் கிணங்கி லிங்காகாரமான சிவபெருமான் நிமிர்ந்ததாகவும் சொல்லுகிறார்கள், இடம் ஞாபகமில்லை,

சதர்களின் இடுப்பை வெட்டிவிடவேண்டும். அவர்களின் குடியிருப்புகளை அழித்து விடவேண்டும். ஸலஹூகம்=பாவிகளான இராட்சதர்களை ஆகிவது:=மிககூர்மையான சக்கராயுதத்தால் வெட்டிவிடவேண்டும். அரசனே! ப்ரஹ்மத்விஷே=பிராமணர்களைப் பகைக்கும அத்துஷ்ட ராட்சதர்களைத்தபுஷீம்=நெருப்பில் போட்டு வாட்டி ஹேதிம்=ஆயுதத்தைப பிரயோகம பண்ணவேண்டும். அன்பர்களே! இராட்சதர்களைக் கருவழிக்கும்படியாக வேண்டிக்கொள்ளும் இந்த மந்திரமானது * ஆபிசார மந்திரமாகவும் இருக்கிறது. இந்த மந்திரத்தைப் பதினாறு நாட்கள் ஜபம பண்ணி ஹோமம் செய்தால் சத்துருக்கள் ஒழிந்து போவார்களாம. (இறந்து போவார்கள் என்பது பொருள்) இப்பிரயோகம் முற்காலத்தை காட்டிலும இககாலத்தில் எளிதில் பயன தரும். முற்காலததில் சைவர் களுக்கும பிராமணர்களுக்கும பகையிருநததெனக கண்டோம. அதனால்சைவர்கள் ஜாக்கிரதையாக இருந்திருப்பார்கள். அப்பகை இக்காலத்தில் சைவர்களுக கில்லை. ஆனால் பொதுவாகப் பார்ப்பனரல்லாதாரைக் கெடுப்பதில் முற்காலத்துப் பார்ப்பனரைவிட இக்காலத்திய பார்ப்பனர்கள் குறைந்தவர்கள எனச் சொல்வதற்கில்லை. ஆரிய அரசாங்கத்தின் குறையொன்றுதான் இப்போது இருககிறது. இருப்பினும தங்களால இயன்றவாறு தங்கள் பரம்பரைத்தொழிலைச் செய்துகொண்டுதான் வருகின்றார்கள்.

சைவர்களின் வழிப்பாட்டுக்குரிய †தெய்வங்களில் ஒருவர் சுப்பிரமணியர். இவர் இந்திரனுடைய மகளை மணமுடித்துக் கொண்டார். பின்னர் ஒரு வேடுவச்சியையும் மனைவியாக்கிக கொண்டதால் இவர் ஜாதி வேற்றுமைபற்றவர் எனக் கொள்ளலாம. அன்றியும இவர் தமிழ் நாட்டினருககே தெய்வம. வட இந்தியாவில் இவரைக குறிததுப் பொதுவாகத் தெரியாது.

---

* ஆபிசாரம்—தமிழில் சூனியம் வைதகல். சூனியம்—பாழ், கொலை செய்தல் என்பது பொருள்.

† சுப்பிரமணியன் சித்தர்களுக்குத் தலைவர் என மேதாவிகள் சொல்லுகின்றனர். இவர் அகத்திய முனிவருக்கு ஆசாரியராவர்.

ஆரியர்கள் நான்குவகை உபாயங்களினலும் எதிரியை வசப்படுத்துபவர் என்று முன்னமே கண்டோம. தமிழர்களின் தலைவன சுப்பிரமணியனைக் கன்னிகாதானத்தால் (பெண்ணைக்கொடுத்து வசப்படுத்தி அன்னருடைய உதவியைக் கொண்டும் அனரியர்களை அடிமைப்படுத்தி யிருக்கின்றனர்கள். ஆரியர்களின் தண்ட நீதியில் "ஸ்கந்தேனபி வஹேச சத்ரும் யாவத் காலவி பர்யய" (எதுவரையில் நல்லகாலம் வரவில்லையோ அதுவரைப் பகைவனைத தோளில் கூடச்சுமந்து திரியவேண்டும்) பகைவனை அழிகக அவனுக்கு நண்பனைப்போன்றோ அடிமையைப்போன்றோ இருந்தாவது சமயம் பார்த்து நாசம்பண்ண வேண்டு மென்பது ஆரியரின் கொள்கையாகும்

ஆரியரின் சேர்க்கையால் சைவசமயத்தில் பலமாறுதலும் ஏற்பட்டிருக்கவேண்டும இல்லாவிட்டால் ஜைனர்களுக்கும சைவர்களுக்கும விரோதமுண்டாகக காரணமில்லை. இக்காலத்தும *ஜைனர்கள் யாவரும சிவனை வணங்குகிறார்கள். ஆனல் சைவர்கள் வணங்கும் சிவனுக்கும ஜைனர்கள் வணங்கும் சிவனுக்கும சிலவேற்றுமைகள் உள. அதாவது ராகத்துவேஷ மோஹாதிகள் இல்லாமல் சகல பிராணிகளுக்கும் சுகத்தைதக கொடுப்பவர்யாரோ அத்தகையவரே ஜைனர்களால் வணங்கப்படும் சிவன். இதனல் ஆதிகாலத்தில் தமிழ் நாட்டில் இருந்த சைவர்களும் ஜைனர்களும ஒரே ஆசார முடையவர்களாயிருந்து பார்ப்பனரின் பஞ்சதந்திரததினல் பிளவுபட்டவர்களா யிருக்க வேண்டும. பார்ப்பனமாயையில் மயக்குற்றவர் "சைவர்களென்றும் அங்ஙனம் மயங்காதவர்கள் "ஜைனர்கள் என்றும் பெயர் பெற்றிருக்கவேணடும. ஏனென்றால் இடைக்காலத்தில் ஜைனர்கள் சைவர்களைப் புறம்பாக வைத்திருந்தனர் என்பதற்கு அவர்களுடைய சாத்திரங்களில் பல பிரமாணங்களிருக்கின்றன. உதாரணமாக ஒரு சைவ சன்னியாசியை ஒரு சமணமுனி காணநேர்ந்தால் சைவனைக் கண்ட பாவந்தொலைய சில நாட்கள் உபவாசமிருக்கவேண்டுமாம். அதற்கிடையில் அவ்வாறு பட்டினியிருப்பவனை வேறொருவன் பட்டினிகிடக்கும வரலாற்றைகக்குறித்து வினவினல் அவனும் முந்தியவனுககு விதித்துள்ள நாட்களில் பாதி நாட்கள் பட்டினி கிடந்து தவம்

* ஜைனன்—ஜினனை வழிபடுபவன், ஜினன்—உலகத்தைக் கடந்த முழு முதற் கடவுள்.

பண்ணவேண்டுமாம் அந்தோ! மதப் பொறுமையே!! உனது வன்மை மிகக்கொடிதேயாம். இதனால் இந் நாட்டில் எத்தனை கோடி மக்கள் அழிவுண்டனர்.

ஜைனர்கள் சைவசமயத்தினரை வெறுத்ததற்கு காரணம் அவர்கள் நூல்களில் இவ்வாறு காணக்கிடக்கிறது.

"சைவத்துறவிகள் மயானத்துச் சாம்பலை உடலில் பூசுவார்கள் எலும்பைக் கோத்து மாலையாக அணிவார்கள். மனிதர்களின் மண்டையோட்டில் பிக்ஷையேற்றுண்பார்கள். குடி, வியபிசாரம் கொலை முதலியன குலத்தொழிலாகவே கொண்டவர்கள்" இதை மெய்ப்பிக்க சைவ ஆகமங்களும் புராணங்களும் பல இருப்பதால் ஜைனர்களைக் கண்டிக்க முடியவில்லை. இடைக்காலத்தில் வித்துவான்கள் சிவாகமங்களில் உள்ள முற் கூறிய கொலை முதலிய ஆபாசங்களை அவைதிகமெனத் தள்ளி வைதிக சிவாகமஙகள் எனச் சில எழுதித் தங்களுக்குப் பிரமாணமாகக காட்டுகிறார்கள். இவைகளும் பல வகையில் கொலை முதலியவையை உடன்படுவதால் ஜைனர்களைக் கண்டிககத் திறமை பெற்றவையாயில்லை.

சைவமதத்தில் இருக்கும் முற் கூறிய குறைபாடுகளை இக்காலத்திய சைவர்கள் தங்களுடையவை யல்லவென்றும் பாசுபதம, காபாலிகம் முதலிய அகப்புறச் சமயங்களில் உள்ளவை யென்றும் கூறி ஒழியப் பார்க்கின்றனர். அதோடு இவர்களின் ஆசாரத்திலும் இக்காலத்தில் குறைகூற முடியாது. ஆனால் †அகப்புறச்சமயம் என்று கூறி மற்ற மதங்களைக்காட்டிலும், காபாலிகம் பாசுபதம் முதலிய மதங்களைச சிறப்பித்து வருவதால் இவர்கள் குற்றஞ் செய்பவர்களுக்கு உதவிசெய்யும குற்றவாளிகளாகின்றார்கள். அன்றியும் ஷை ஒழி

* இவவுண்மை மததவிலாஸம் பிரஹஸனத்தில் காணலாம். இப்புத்தகததை இந்துக்கள் தங்கள் நூலாகக்கொண்டு இதை மலையாளத்து சிவாலயஙகளில் "சாக்கையர் கூத்து" என்னும் பெயரால் நடத்திக் காட்டுகிறார்கள். இது மத்தவிலாஸம கூத்து சிவபெருமானுக்கு மிகப் பிரியம் என்பது அந்நாட்டினரின் நம்பிக்கை.

† அகப்புறச்சமயம—உள்ளேபுகுநதிருக்கும் புறச்சமயம், (சைவத்திற்கு உடன்பாடாயிருக்கும் மதாந்தரம்,)

செய்கைகளைத் தேவாரம பின் தாங்குகின்றது. தேவாரத்தைத் தமிழ் வேத மெனறும வேத சாரமென்றும் சைவர்கள் சொல்லவும் செய்கின்றார்கள்.

" சவந்தாங்கும் மயானத்துச் சாம்ப லெலும்புத்
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் றன்னை
பவம்தாங்கும் பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
கவர்ந்தானைக் கசசியே கம்பன் றன்னைக்
கழலடைந்தான் மேல்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

(அப்பர் சுவாமிகள் தேவாரம)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்கதீயதெலாமர நாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே (1)

அரியகாட்சிய ராய்த்தமதங்கை சே
ரெரியரேறுகந் தேறுவர்கண்டமும்
கரியகாடுறை வாழ்கையராயினும்
பெரியாராறிவாரவர் பெற்றியே (2)

வெந்த சாம்பல் விரையனப் பூசியே
தந்தையாரொடு தாயிலர் தன்மையே
சிந்தியாவெழு வார்வினை தீர்ப்பரா
வெந்தையாரவ ரெவ்வகையார்கொலோ (3)

ஆட்பால வர்க்கருளும் வண்ணமுமாதி மாண்புங்
கேட்பான் புகிலளவில்லை கிளைக்க வேண்டாம்
கோட்பாலனவும வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித்தலை நின்றிவை கேட்கத்தக்கார் (4)

ஏதுக்களாலுமெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளனெங்கள்—சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனமபற்றி வாழ்மின்
சாதுக்கன் மிக்கீரிறையே வந்து சார்மின்களே. (5)

(சம்பந்தர் தேவாரம்).

முதற் செய்யுளில் பசுக்களும் பிராமணர்களும் வாழவும் கெட்டவை யொழியவும் அரனுடைய திருநாமம் எங்கும்பரவவும் அதனால் உலகம் துயர்தீர்ந்து சுகமுறவும் பாடினார்.

இரண்டாஞ் செய்யுளில் அரனுடைய விசேஷணங் கூறுகின்றார் அரன் சுடுகாட்டிலுறைபவன் ஆயினும பெரியோனவான்.

மூன்றாஞ் செய்யுளில் சுடுகாட்டுச் சாம்பலை யணிபவர் வினைதீர்ப்பவர் என்கிறார்.

நான்காஞ் செய்யுளில் சம்பந்தரை எதிர்க்காமல் பணிந்து நடக்க வேண்டும் என்கிறார்.

ஐந்தாஞ் செய்யுளில் ஏதுக்களால் தர்க்கயுக்தியினால் தன்னைப் பரீக்ஷை செய்ய வேண்டாம் என்கிறார்.

இவைகளால் பாசுபதம காபாலிகம் முதலியவை சிவசமமதமென்று சமமந்தரும் ஒப்புககொள்ளுகிறார். அதோடு நியாய யுக்திகளால் சைவசமயத்தைக் கண்டிக்கு முறை தனக்கு விருப்பமில்லையென்றும் கூறுவதால் ஜைனர்களைக் கொல்லுவதே பார்ப்பனராகிய சம்பந்தருக்குப் பிரியமென்பது நன்கு பெறப்படுகின்றது. அன்றியும் சமயாசாரியர் நால்வரில் மூவர் பார்ப்பனர் என்பதையும் பார்ப்பனரல்லாதவரான அப்பர் சுவாமிகள் சிவபெருமானுக்குத் தொண்டு செய்தே காலங்கழித்தனரென்றும மற்ற மூவரும புத்ர, மித்ர, நாயக பாவங்களை மேறகொண்டு வாழ்ந்தனரென்றும் நூல்களால் அறிகின்றோம். இதனால் பார்பபனனல்லாதானுக்கு 'தாஸ்யம்' அடிமைத் தன்மையைத்தவிர மேன்மையைச கொடுக்கப் பார்ப்பனர் இசையார் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். "நான் தஸ்யுவுக்கு ஆரியனுக்குரிய மேன்மையைக கொடேன்" (ரிக் 10-49-3) என்னும் ரிக்வேத வாக்கியம் இதற்கு உதாரணமாயிருக்கிறது.

ஓர் ஜைன பக்தன் சைவசமயத்தைக் கண்டிப்பதாவது:—

" தக்தம் யேன புரத்ரயம் சரபுவா தீவ்ரார்ச்சி ஷாவஹ்நிநா
யோவாந்ருத்யதி மத்தவத் பித்ருவனே யஸ்யாத்மஜோ வாகுஹ:
ஸோயம் கிம்மம சங்கரோ ; பயத்ருஷாரோ ஷார்த்திமோஹக்ஷயம்
க்ருத்வாய : ஸது ஸர்வவித் தனுப்ருதாம் க்ஷேமங்கர : சங்கர :

இதன் பொருள் :—எவனொருவன் சுடுகாட்டினின்றும் எழுந்த கொடிய ஜ்வாலைகளையுடைய அக்கினியினால் திரிபுரசம்மாரம் செய்தானோ (தனது பக்தர்களை அவர்கள் விஷ்ணுவினால் மயக்கப் பட்டவர்கள் என்பதை அறியாதவனாய் சுட்டெரித்தான் என்பது கருத்து) எவனொருவன் பைத்தியம பிடித்தவன்போலச் சுடுகாட்டில் ஆடுகினானோ எவனுகரு சுப்பிரமணியன் மகனாவனோ அவன் என்னால் வணங்கற்குரிய சங்கரனாகான். என்னால் வணங்கப்படுவன் யாவன் என்றால் காமம், வெகுளி, மயக்கம முதலிய பதினெட்டு தோஷங்களும இன்றியவனும் எட்டு சத்குணங்களையுடையவனும் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவனும முற்றறிஞனுமான எந்த முழுமுதற்கடவுளுண்டோ அத்தகைய சங்கரனையே நான் வணங்குவேன்.

"ஈச: கிம் சின்னலிங்கோ யதி விகதபய: சூலபாணி: கதம ஸ்யாத்
நாத: கிம் பைக்ஷசாரீ யதிரிதி ஸகதம் ஸாங்கன: ஸாத்மஜஸ்ச-
ஆர்த்ராஜ: கிம்த்வஜன்மா ஸகலவிதிதி கிமவேத்தி நாத்மா நத்ராயம்
ஸம்க்ஷேபாத் ஸம்யகுக்தம பசுபதிமபசு: கோத்ரதீமானு பாஸ்தே.

பொருள்:-முறிந்த லிங்கம (லிங்கம—ஆண்குறி) கடவுளாகுமா? பயமற்றவனால் சூலத்தைக் கையில் தாங்குவானேன். உலகிற்கெல்லாம் இறைவனால் பிக்ஷையெடுப்பானேன். மனைவியைப் பிரியாமல் மகனோடும் கூட இருப்பவன எங்ஙனம் யதி யாவன்? (யதி—துறவி) பிறக்காதவன் திருவாதிரை நாளில் பிறந்தவன் என்றால் அதன் பொருள் யாது? தனக்கு வரப்போகிற * இடையூற்றைத் தெரிந்து கொள்ளும் ஆற்றலில்லாதவனை முற்றறிஞன் என்பது எவ்வாறு? சுருக்கமாகக் கூறினாலும உண்மையை விளக்கினேன். பகுத்தறிவுடைய எவன்தான் பசுபதியை வழிபடுவன்.

---

* பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்துத் துன்புற்ற கதை இங்கு உதாகரணம்.

இவ்வாறு கூறித் தான் சிவபக்தனென்றும் தன்னால் வழிபடப் படும் சிவனுடைய லக்ஷணங்களும் கூறுகிறார்.

"மாயா நாஸ்தி ஜடாக பாலமுகுடம் சந்த்ரோர்ண மூர்த்தாவலி: கட்வாங்கம் நசவாசுகிர் ந ச தனு: சூலம ந சோக்ரம் முகம் காமோ யஸ்ய ந காமினீ ந ச வ்ருஷோ கீதம் நந்ருத்யம்புன: ஸோஸ்மான் பாது நிரஞ்சனோ நிருபம: ஸர்வத்ரஸூக்ஷ்ம: சிவ:.

பொருள்:—எவனுக்கு மாயையில்லையோ ஜடை தலையோட்டினால் ஆக்கிய பிக்ஷபாத்ரம், கிரீடம், இளமபிறை, தண்ணீர், கட்வாங்கம், வாசுகி, வில், சூலம், கொடிய முகம, காமம, இளம்பெண், எருது, பாட்டு, கூத்து முதலியனவும இல்லையோ நிரஞ்சனனும் (நிரஞ்சனன்—களங்கமில்லாதவன்) எங்கும் சூக்ஷ்மமாக நிறைந்துள்ளவனும் ஒப்புயர்வற்றவனுமான சிவபெருமான் எங்களைக் காக்கக்கடவர்.

சர்வசங்கபரித்தியாகம்—எல்லாப்பற்றையுந் துறத்தலே முக்திக்கு வழியென்பது இந்துக்களுக்கும் உடன்பாடேயாம். ஜைனர்களும், பௌத்தர்களும் சர்வசங்க பரித்தியாகி ஒருவன்தான் மோக்ஷத்திற்கு அதிகாரியென்றும் ஆசாரியோபாசனையினாலேயே மோக்ஷம் அடைய முடியுமென்றும சர்வசங்க பரித்தியாகம் பண்ணுதவனை ஙங்ஙனம ஆசாரியனைக் கொள்ளக்கூடும் என்றும் கேட்கிறார்கள். உபதேசத்திற்குத்தக்க நடத்தையில்லாத குருவின் உபதேசம் சிறிதும் பயன்தராது. இதைப் பெரியோர்களும் சொல்லுகிறார்கள்.

"ஆசினோதிச சாஸ்த்ரார்த்தான்
ஆசாரே ஸ்தாபயத்யபி
ஸ்வயமேம வாசரேத்யஸ்து
ஸஆசார்ய இதிஸ்ம்ருத:

சாஸ்திரத்தை ஆராய்ந்து அவைகளிலுள்ள அர்த்தங்களை நடவடிக்கையில் கொண்டுவர உபதேசிப்பவனும் அவைகளைத்தானே அனுஷ்டித்துக் காட்டுபவனும் எவனோ அவனே ஆசாரியனாவன்.

இந்த சுலோகம் "சங்கரதிக்விஜயம" டிண்டிமம் வியாக்கியானத்தில் உதாஹரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் சைவர்களுக்

கும் இது உடன்பாடென்பது பெறப்பட்டது. ஆனால் ஆலயங்களில் கிருகஸ்தாசிரமிக்குரிய எல்லாச் செய்கைகளும் நடைபெறுகின்றன. இது வைதிகர்களின் கூட்டுறவினால் வந்த கேடென்றே நினைக்கிறேன். சிவாலயங்களில் ஆசாரிய மூர்த்தமாக "தக்ஷிணாமூர்த்தி"யின் உருவம் இருக்கிறது இம்மூர்த்தி சர்வசங்க பரித்தியாகியாயினும் பிரதானமில்லை. ஏனென்றால இம்மூர்த்தியைப் பிரதக்ஷிணவழியில சுவர்களில் அடித்து வைத்திருப்பார்கள் பூஜையும் தமிழ் நாட்டில சைவர்கள். சன்னியாசிகளைப் பூஜிக்கும் முறையிலே வேண்டா வெறுப்போடு நடைபெறுவதாகவே தோன்றும் மூலஸ்தானத்தில லிங்கம் இருக்கிறது. இதன் வரலாறு புராணங்களின் படியானால் மிக ஆபாசமும் கைவிடத்தக்கதுமாகும். ஆனால நான் புராணங்களை உடன்படவில்லை. புராணங்களும சிவாகமங்களும் பிராமணர்களின் போலிமேன்மையை நிலைநிறுத்தவே எழுதப்பட்டுள்ளன என்று எனது நம்பிக்கை. புராணங்கள் வியாசரால் எழுதப்பட்டவையென்றும சிவாகமங்கள் பரமேசுவரனால் ஆக்கப்பட்டவையேயென்றும் நியாய வாயிலாக யாரேனும் ஸ்தாபிப்பார்களாயின் புராணிக மகனாகிய நான் அக்கணமே புராணிகம சேவகனாக மாறிவிடவும் தயாராக இருக்கிறேன்.

ஸ்மார்த்தர்களின் ஜகத்குருவாகிய சங்கராசாரியரை எடுத்துக் கொள்வோம். இவரும் பார்ப்பனர்களின் வேதத்தை தெய்வவாக்காக ஸ்தாபித்துப் பார்ப்பனரின் போலிமேன்மையை எவ்வாறேனும் நிலைநிறுத்திப் பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்த அருமபாடுபட்டிருக்கிறார். இவருடைய சிஷ்யர்களில் பெருமபகுதியினரும் பார்ப்பனர்கள் தனது கொள்கையைப் பரவச்செய்வதில் இடையூறாக நின்

* சிவம்—மங்களம் இன்பமே யுருக்கொண்டதென்பது பொருள்.

விஷ்ணு—வியாபகம் எங்கும் நிறைந்தது.

பிர்ஹ்ம—பெரிதினும் பெரிதாயுள்ளது.

கனேசன்—உலகிற்கெல்லாம் இறைவன் இவவாறே பரமேசுவர நாமஙகளுக்குப் பொருள் கண்டுகொள்க. இதை உள்ளவாறு உணர்ந்தால் மதச்சண்டை, ஜாதிச்சண்டைகள் எவவாறு நிகழும்.

றிருந்த மதஸ்தர்களைக் கொலைசெய்தழிக்கும் பொருட்டு ஒன்றிரண்டு அரசர்களையும் சிஷ்யர்களாக்கிக் கொண்டார். பார்ப்பனர்களைக் குருவாக நம்பிக்கொண்டு பார்ப்பனரல்லாதார் இருக்கும் வரையில் உருப்படமாட்டார்கள். "ஜகத்குருக்கள்" என்று பெயர் பெற்றவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள்தான். சங்கரர், இராமானுஜர், மத்வர், வல்லபர், நிம்பார்க்கர், நீலகண்டர், அபிநவகுப்தர் ஏன் அதிகமாகச் சொல்ல வேண்டும்? ஆசாரியஸ்தானத்தில் பார்ப்பனரல்லாதார் யாருமில்லை. பார்ப்பனரல்லாதாரில் பார்ப்பன மஹான்களைவிடப் பதினாயிரம் பங்கு மேன்மையுள்ள மஹான்கள் இருந்திருக்கிறார்கள். பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், தாயுமானார் முதலிய பெரியோர்கள் தமிழ் நாட்டிலும், வேமன்னா, வீரப்ரஹ்மகாரு முதலியோர் தெலுங்கு நாட்டிலும் பிரசித்தி பெற்றிருந்தாலும் முற்கூறிய சங்கரர் முதலியோரைப்போல பொதுவாக இந்துக்கள் இவர்களைப் புகழ்ந்து கூறுவதுமில்லை, வழிபடுவதுமில்லை. இவர்களின் வாழ்நாட்களில் சுயநலத்தின் மணம் ஒரு சிறிதுமில்லாதிருந்தும் இவர்களை ஆசாரியர்களாகக் கொள்ள இந்துக்கள் உடன்படாமலிருப்பது பிற சமயத்தினருக்கு வியப்பாகவே தோன்றும். இந்துக்கள் பார்ப்பனர்களைப் பிறப்பினால் பெரியோர்களாகக் கருதித் தங்களுக்குள்ளேயே பல பிரிவினையே உண்டுபண்ணி ஒருவர்க்கொருவர் பொறாமையோடு அடிமையாள நினைத்துக்கொண்டிருக்கிற வரைக்கும் அவர்களுக்கு நல்லபுத்தி உதயமாகாதாகையால் இதைத் தங்களின் குறையாக எண்ணுவார்களா? வட இந்தியாவை எடுத்துக்கொள்ளுங்கள் அவ்விடத்தில் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரேயே 'தாது' 'கபீர்' 'நானக்' முதலிய சில மஹான்கள் அவதரித்துப் பார்ப்பனரல்லாதாரைப் பிறப்பினால் தாழ்ந்தவரென்றும் பார்ப்பனர் பிறப்பினாலேயே உயர்ந்தவரென்றும் கூறும் வேதங்களையும், புராணங்களையும் கண்டித்து மக்களுக்குச் சமத்துவங்கொடுத்து ஜாதி வேற்றுமை பாராட்டாது சிஷ்யர்களாக்கிக் கொண்டார்கள். இவர்களின் சங்கத்திலுள்ள சர்வசங்கபரித்தியாகிகளான துறவிகளைச் 'சங்கராசாரிய பரம்பரையைச் சார்ந்த' சன்னியாசிகள் 'பந்தாயி' என்று இழிவுபடுத்திக் கூறுவது வழக்கம். காரணம் இவர்களின் மதக்குருக்கள் பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனருக்கெனத் தனி மேன்மையைக் கொடுக்காதவர்களுமாவர் என்கிற குற்றந்தான். இவர்களில் 'தாது'

என்கிற மஹானால் ஏற்படுத்தப்பட்ட சங்கத்தில் சேர்ந்த சிஷ்யர்களில் மார்வாடி வைசியர்களும் க்ஷத்திரியர்களும் உளர், பிராமணர்களும் இருக்கின்றார்கள்.

ஆனால் பிராமணர்கள், சன்னியாசிகள், பிராமணரல்லாதாரும் இருக்கின்றார்கள். கிருகஸ்தர்களில் மார்வாடி, வைசியர்கள் வியாபாரத்தில பெரும் பொருள் சம்பாதிப்பவர்கள். இவர்களின் உதவியினால்தான் இச்சன்னியாசி சங்கம நடந்து வருகிறது. இச்சன்னியாசிகள் பல பாடசாலைகளை ஸ்தாபித்து அவைகளில் ஜாதிபேதமில்லாமல் ஏழை மக்களுககு அன்னவஸ்திரமளித்து கல்விகற்றுக்கொடுக்கிறார்கள். பல வைத்தியசாலைகளும் இவர்களின் மேற்பார்வையில் இருக்கின்றன. அவ்விடங்களில் எல்லாருக்கும் இலவசமாக வைத்திய உதவியும் ஏழை நோயாளிகட்கு படுக்கையும, உணவும அளிககப்பட்டு வருகிறது. இத்தகைய பரோபகாரிகளுககுச் செய்யும் உதவியைக்கெடுகக யார்தான் முறபடுவார்கள? சகோதரர்களே! இத்தகைய பரோபகாரிகளான சாதுக்களுக்குத்தான் உபகாரஞ்செய்யவேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். ஒருசமயம் ஏதேனும இயன்ற உதவியைச் செய்யவும் சித்தமாயிருபபீர்கள் எதனால், நீஙகள் பார்ப்பனரல்லாதாராகையினால்தான். ஆனால் நமது பார்ப்பனர்கள், நமது பார்ப்பனர்கள் என்று பின்னும சொல்லுகின்றேன். நமது தமிழ்நாட்டு இராமானுஜ மதத்து ஸ்ரீவைஷ்ணவப் பிராமணோத்தமர்கள் "இடுவார் பிசசையைக் கெடுவார் கெடுத்தால் விழுவார் நரகத்தில்" என்கிற மூதுரையைத் தமிழனுடைய வார்த்தையென்றோ என்னவோ பொருட்படுத்தாதவராய் முற்கூறிய பரோபகாரிகளான 'தாது' சன்னியாசி சங்கத்திற்கு உதவி செய்யும் பணக்காரரான வைசிய வியாபாரிகளிடம் சென்று நீங்கள் வைசியர்களாகச்சே, வைசியர்கள் வேதாதிகாரிகளும் சூத்திரர்களுக்கு எஜமான்களுமன்றோ, உங்கள் குருக்கள் ஜாதிவேற்றுமை பாராட்டாதவர்கள் அவர்கள் எல்லோரும் சூத்திரர்களேயாவர் அவர்களிடத்தில் உயர் குலத்தினராகிய நீங்கள் உபதேசம் பெறலாமா கஷ்டம் சூத்திரனிடம் உபதேசம வாங்கின *"த்விஜன்" நரகத்தையடைவானென்று பிரமாணமிருக்கிறதே.

---

* த்விஜன்—என்னும் சொல் பிராமண க்ஷத்திரிய வைசியர்களை பொதுவாகவும் பிராமணனை மாத்திரம் சிறப்புவகையிலும் உணர்த்தும்,

போனது போகட்டும் இனிமேல் சூத்திரருக்குச் சிஷ்யர்களாக வேண்டாம் பிராமணர்தான் லோககுரு. அதிலும் ஸ்ரீவைஷ்ணவ மதம் மிகச்சிறந்தது என்றும் மற்றும் சாதுரியமாகப் பேசித் தங்கள் சிஷ்யர்களாக்கிக்கொண்டு "ராமேசுவரம்" போகாதீர்கள் அங்கு அனுமாருடைய மயிர்தான் லிங்கமாயிருக்கிறது. நம்முடைய புண்ணியஸ்தலம் தென்னாட்டில் 'மதுராந்தகம்' பெரும்புதூர் முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்கள்தான். அந்த க்ஷேத்திரங்களைத்தான் சேவிக்கவேண்டும் சூத்திரர்களுக்கு ஏதும் உதவி செய்யலாகாது. செய்தால் நரகத்தை அடையவேண்டும் என்று உபதேசித்து பரோபகாரத்திற்கு இடைஞ்சல் செய்கிறார்கள். மார்வாடி வியாபாரிகள் பெரும்பான்மையோரும் சாஸ்திர ஞானமில்லாதவர்களும் 'வைசியன்' என்கிற ஜாதியபிமானமுடையவர்களுமாகையால் எளிதில் பரோபகாரத்தைத் தடுக்கும் பழிகார வைஷ்ணவப் பார்ப்பனரின் பஞ்சதந்திர வலையில் படுகிறார்கள். அது நான் "கனகல்" என்கிற இடத்தில் தங்கியிருக்கும்போது ஒரு சன்னியாசியினால் தெரிந்துகொண்டேன். அவரோ படித்தவர். அகாரணமாக ஓர் சமூகத்தைப் பழிக்கும் தன்மையினரல்லர். ஆகையால் இதை நம்பவேண்டியதாயிற்று. பிறகு எனது யாத்திரையில் பலவிடங்களிலும் இராமானுஜ வைஷ்ணவர்களைச் சந்தித்தேன். அவர்களும் மார்வாட் தேசத்தில் தங்களுக்குப் புதுச் சிஷ்யர்கள் நாள்தோறும் பெருகி வருகின்றார்களென்று சொன்னார்கள். இதனால் என் நம்பிக்கை உறுதிப்பட்டது. ஆகையால் சகோதரர்களே! பார்ப்பனன் படித்தவனானால் நம்மை அதிகமாக அடக்கியாளப் பார்ப்பான். அவர்கள் பேராசைக்காரர்கள் இவ்வுண்மையை நான் மாத்திரமல்ல இதற்கு முந்தியே தேசபக்த சிரோமணியும் பிராமணோத்தமருமான வரகவி சுப்பிரமணிய பாரதியாரும் சொல்லியுள்ளார்.

"பேராசைக்காரனடா பார்ப்பான்"

இது முதலிய பாரதியாரின் பாடல்களைக் கவனித்தால் உண்மை விளங்கும்.

நமது நாட்டில் தோன்றியுள்ள மதங்கள் பலவற்றுள் பார்ப்பனர்களால் நிலைநிறுத்தப்பட்ட அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம்

இவைகள் நீங்கலாகத் தென்னாட்டில் 'வீரசைவம்' என்னும் ஓர் மதம் இடைக்காலத்தில் தோன்றியது. ஜாதி வேற்றுமையை ஒழிப்பதற்காகவே இம்மதம் முதன்முதல் வேலை செய்ததாயினும் 'மருத்துவம் பார்க்கப்போனவள் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள்' என்ற பழமொழிபோல் அதற்குள்ளும் பிராமணர் புகுந்து தங்களுக்கு அங்கும் அதிகாரத்தைப் பெற்றார்கள். இப்பிராமணர்களுக்கு *"வீரசைவ ஆராத்தியர்கள்" என்று பெயர். இவர் தெலுங்கு நாட்டில் நிரம்ப இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாத வீரசைவர்கள் கன்னட தேசத்திலும், மராட்டி தேசத்திலும், தெலுங்கு நாட்டில் குறைவாகவும் இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் பந்திபோஜனம் முதலியன. இக்காலத்தில் செய்வது மிகக்கடினம் காரணம் ஜாதி வேற்றுமைதான் என்று சொல்லாமலே விளங்கும். இவர்களும் வேதத்தில் சில பாகங்களை தங்களுக்கனுகூலமாக ஒப்புக்கொள்ளுவதோடு 'வீராகமம்' என்கிற சிறப்பு நூல் ஒன்றையும் தங்கள் மதத்திற்கு பிரமாணமாக ஒப்புக்கொள்ளுவார்கள் இவர்களைக் குறித்துக் கூறும்போது ஒரு பெரியாரின் வார்த்தை எனது ஞாபகத்திற்கு வந்தது. அதையும் வாசகர்களுக்குச் சொல்லுகிறேன்.

"பிராமணன் உண்ணும் பொழுது பிறஜாதியானைக் கவனிக்க மாட்டான். வீரசைவன் எக்காலத்திலும் பிறஜாதியானைச் சமமாகக் கருதமாட்டான். நான் மனுஷர்களுக்குள் ஜாதி வேற்றுமை கருதுபவனை மனுஷனென்றே நினைக்கமாட்டேன்" என்று சிறிது காலத்திற்கு முன் சமாதியடைந்த "ஹுப்பள்ளி ஸ்ரீமத் சித்தாரூட சுவாமிகள்" வேடிக்கையாகச் சொல்லுவார்கள்.

கருத்திதுவாம் நமது நாடு விசாலமானது. செழிப்பிற்கும் குறைவில்லை. கல்விச்செல்வம், பொருட்செல்வம் இவைகளால் நிரம்பப் பெற்றவர் பலர் உளர். ஆயினும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அடிமைப்பட்டுக்கொண்டே இருக்கிறது. காரணம் 'பிராமணன்' என்

* வீரசைவ ஆராத்தியர்கள்— வீரசைவர்களால் வணங்கத்தக்கவர் அல்லது வீரசைவர்களாகவும் வணங்கத்தக்கவர்களாகவும் உள்ளவர் என இருவகைப் பொருளைத்தரும்.

கிற ஓர் வகுப்பு தோன்றித் தனக்கு அடிமைகளாகப் பல வகுப்பு களைச் சிருஷ்டித்ததுதான். இவ்வுண்மையை உணர்ந்த பிற்காலத்திய மேதாவிகளால் மக்களுக்குச் சமத்துவத்தைக் கொடுக்கும் வீரசைவ மதம் நிறுவப்பட்டது சுயநலம் இச்சமத்துவ மதத்தை விழுங்கிவிட்ட படியால் இம்மதஸ்தர்களாலும் மக்களுக்குச் சுகமில்லை. ஆகையால் நமது நாட்டில் வேதஸ்மிருதி புராணங்களை நம்பி ஒழுகும் மதங்களி னால் மக்களுக்குச் சமத்துவம் கொடுக்க முடியாது எந்த மதஸ்தனா யிருந்தாலும் மனிதனை மனிதனுக்கக்காணும் சமத்துவமதம் ஒன்றே தான் நம்நாட்டின் அடிமைத் தளையைத் தகர்த்தெறியவல்லது ஆகை யால் அம்மதமே மக்களுக்குச் சமத்துவம் கொடுக்கும் அதுதான் நம நாட்டிற்கு வேண்டும்.

ஆகையால் சகோதரர்களே! நீங்கள் வேதங்களையும், ஸ்மிருதி களையும் அவசியம் படித்துணர்ந்து அவைகளில் தள்ளவேண்டியவை களைப் பயமில்லாமல் தள்ளிக் கொள்ளவேண்டியவைகளைக் கொள்ளுங் கள். வேதம் படித்தால் பாவம் வந்துவிடுமென்றோ பிராமணன் நாக் கைத் துண்டித்துவிடுவான் என்றோ இக்காலத்தில் பயப்படத்தேவை யில்லையே. பாரதநாட்டு மக்களாகிய 'பயிரை' ஜாதிவேற்றுமை என் னும் 'களை' பாதித்துக்கொண்டிருக்கிறது. இக்களையைப் பிடுங்கி எறி யுங்கள். விரைவாக, மிகவிரைவாக இக்களையை நம்முடைய சமூகத்தி னின்றும் களைந்தெறியுங்கள் இவ்வுலகத்தில *ஐந்து வகையான முன் னேற்றங்கள் மக்களின் அபிவிருத்திக்காக இருக்கின்றன. அவைகளை இந்துக்களுக்குள் பார்ப்பனர் மாத்திரமே இதுவரை அனுபவித்துவந் திருக்கிறார்கள். மேலில் இதற்கு இடங்கொடுக்காதீர்கள். பார்ப்பனர் களை ஒதுக்கித்தள்ளும்படி நான் கூறுவதாக நினைக்கவேண்டாம். பார்ப் பனன் பூமி தேவனாகையால் பிறப்பினாலே உயர்ந்தவன் என்றும்

---

* ஐந்துவகை முன்னேற்றங்களாவன:—

1. உயிரின விடுதலைக் கருதிய துறை.
2. வகுப்பின் முன்னேற்றம்.
3. கல்வித் துறை.
4. ஒழுக்கம்.
5. அரசியல்.

'பறையன்' என ஒரு சமுதாயத்தை உண்டுபண்ணி அது பிறப்பினாலேயே தாழ்ந்தது மக்களுக்குரிய நன்மைகளை அனுபவிகக அதிகாரமற்றது என்றும் கருதி ஏழைகளை இனிமேலேனும் புறக்கணிக்காமல் எல்லாரையும் மக்களாகக் கருதிச் சமத்துவத்துடன் வாழ்ந்துவரும் படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது வைதிக மதமானது சமத்துவத்திற்கு விரோதமாயிருப்பதினாலும், பிராமணர்களுக்கு மிகசசலுகைகாட்டி முற்காலத்திய பிராமணர்கள் எழுதிவைத்துள்ள நூல்களை இக்காலத்திய பிராமணர்களும தங்களுக்குச் சாதகமாக்கி மக்களை மாக்களாக மதித்து வருவதைப் பலவகையில் அனுபவப்பட்டதனாலும் நான் எனது வயிற்றெரிச்சலை வெளியிட்டேனேயொழிய வேறில்லை.

ஆகையால் சகோதரர்களே! "இராட்சத" சப்த ஆராய்ச்சி என்கிற இந்த அத்தியாயத்தை இத்துடன் முடித்துவிட்டு "யாகங்களும் அவைகளின் பயனும்" என்பதை விஷயமாகக்கொண்டு மூன்றாவது அத்தியாயத்தை ஆரம்பிக்கின்றேன்.

இரண்டாம் அத்தியாயம் முடிந்தது.

**M. K. கேலுண்ணி நாயர்** என்னும்

சுவாமி சிவானந்த சரஸ்வதி

கோலொளம்பு அம்ஸம, பொன்னானி தாலுக்கா,

தென்மலையாளம்.

# மதவிசாரணை

## 3-ம் அத்தியாயம்.

### யாகங்களும் அவைகளின் பயனும்.

இரண்டாம் அத்தியாயத்தில் "ராட்சஸ" சப்தத்தைக் குறித்து வைதிக மந்த்ரங்களைச சில உதாகரித்துக காட்டினேன். இவைக ளாலும்; புராணங்களில் "ராவணன்" முதலியோர் சிவபக்தனென்று கூறியிருப்பதினின்றும் வேதம், புராணம், இதிஹாஸம் முதலிய பார்ப் பனருக் கனுகூலமான நூல்களில் காணப்படுகின்ற "ராட்சஸ, அசுர, தஸ்யு, தாஸ, அனார்ய ப்ரமஹத்வேஷீ அயஜ்வா, அவ்ரதி முதலிய சொற்கள் யாவும் பழந்தமிழர்களையே யுணர்த்துகின்றன வென்பது கண்டோம. ஆனால் இடைக்காலத்தில் ஆரியர்களின் சேர்க்கையினால் நாம் நமது மூதாதைகளின் உததமோத்தமமான பழைய தெய்வ வழி பாட்டையும் ஆசாரங்களையும் விட்டுவிட்டு வைதிக சம்பந்தமான ஆபாச வழிபாடும அனாசாரங்களும இயற்கைக் கொவ்வாத ஜாதி வேற்றுமையும் கைக்கொள்ளலானோம். இடையில் புகுந்து நம்மைக் கெடுத்துவரும் இவ்வனாசாரங்களைத் தூர அகற்றினால் பிறகு நமக்கு ஒரு குறைவுமில்லை.

நம்மவர்களாகிய 'சைவர்கள்' தஙகள் சமயத்தை "வைதிக சைவ சிததாநதம" என்கின்றனர். இசசமயத்திற்கு எதிரிகளாகிய "வைஷ் ணவர்களும" (இவர்களும் நமமவர்கள் தான்) தஙகள் சித்தாந்தம் வைதிகமென்று பெருமைப்படுத்தியும சைவம் 'அவைதிக'மென்று தாழ்த்தியும கூறுகின்றனர் இவ்விரு கூட்டததினருடையவும மத விரோதம அறியாமையி னின்றே எழுநதது. ஏனென்றால இவர்க ளுடைய ஆசாரியர்கள் பார்ப்பனர்கள. அவர்களால் பெருமைப் படுத்திக் கூறப்பட்ட வேதத்தை இவர்களும் பெரியதாகக் கொள்ளு

கின்றார்கள். பிராமண குலத்தில் பிறக்காத குற்றத்தினால் வேதத்தைத் தாங்களே ஆராய்ந்து பார்க்க அதிகாரம் பெற்றிலர். ஆகையால் "ப்ராஹ்மண வாக்யம ப்ரமாணம" (பிராமணனுடைய வாக்கே பிரமாணம்) என்பதாயிற்று. "மூட: பரப்ரத்யயநேய புத்தி:" என்று ஸமஸ்கிருதத்தில் ஒரு பழமொழியுண்டு. மூடன் பிறனுடைய அறிவினால் ஆகர்ஷிக்கத்தக்க புத்தியை யுடையவன். (பிறருடைய சொற்படி நடப்பவன்) என்று பொருள். பிராமணர்களின் வார்த்தைகளை மட்டும பிரமாணமாகக கருதி (பார்ப்பனரல்லாத இந்துக்கள் நடக்கிறார்கள்.) இது மூடர்களின் செய்கை யாகையால் இச்செய்கையினின்றும் இவர்களைத் திருப்பி தங்கள் சொந்த அறிவினாலேயே ஆராய்ந்து நன்மையைக் கொள்ளவும தீமையைத் தள்ளவும் உபதேசிப்பதே எனது நோக்கமாகும் வேதத்தைப் பிரமாணமாகக கொண்டால் எவ்வித நன்மையை நாம அடைவோம. அதாவது:— பிராமணர்களுக்கு யாகஞ்செய்யப் பணத்தினாலும சரீரத்தினாலும் உபகாரஞ் செய்வதே யாம. ஆகையால் சகோதரர்களே! இவ்வத்தியாயத்தில் "யாகங்களும அவைகளின் பயனும" என்பதைக குறித்து எழுதப்போகிறேன் அவைகளை நீங்கள் நன்றாக வாசித்து "வேதம" என்பது மக்களுக்கு அனுகூலமான பயனை அளிப்பதா? அதைப் பின்பற்றி ஒழுகிய ரிஷிகள் உத்தமர்கள் தானா? வேதத்தைக கொலைநூலெனக் கண்டு அதைப் புறக்கணித்து மக்களுக்கு சமத்துவம, சகோதரத்துவம், ஜீவகாருண்ணியம முதலியன உபதேசித்து வந்த ஜைனர்களுஞ் பௌத்தர்களும் நாஸ்திகர்களா? இவர்களைக குறித்து இழிவாகப் பிரசாரம் செய்து இடைக்காலத்தில் "சமபந்தர், குமாரிலபட்டர், சங்கராசாரியர் முதலியோர் அரசாங்க உதவிபெற்று கொலை செய்தழித்து வைதிக மதத்தை மீண்டும நிலைநிறுத்தினர்களே இது நன்மைக்கா? தீமைகக்கா? நன்மைக்கானால் அது பொதுவகையிலா? சிறப்புவகையிலா? சமபந்தர் முதலியோர் எததகையவர்? இக்காலத்தும வேதத்தைத் தஙகளுக்கே உரித்தானதெனக் கொண்டு அதன்படி ஒழுகும் வகுப்பினரின் போக்கு தங்களை நயபியிருககும பிறவகுப்பினர் விஷயத்தில் எத்தன்மையதா யிருக்கிறது? அனுகூலமா? பிரதிகூலமா? இவைகளை ஆலோசித்து உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளும்படி இந்நூல் உங்களுக்கு உபதேசியா நிற்கும்.

டாக்டர் "ஹோக்" என்னும் பெயருள்ள ஐரோப்பிய பண்டிதர் "ரிக்வேதம் ஐத்ரேய ப்ராஹ்மணம்" என்னும் நூலை பிழையறப் பரிசோதித்து பதிப்பித்துள்ளார். அதினின்றும் யாக சம்பந்தமான விவரங்கள் எடுத்து எழுதுகின்றேன்.

## அக்நிகள் நான்கு:—

1. கார்ஹபத்யம்
2. ஆஹவனீயம்
3. தக்ஷிணாக்நி
4. சாமித்ராக்நி.

---

## யாகப் புரோதிகளின் பிரிவு.

1. அத்வர்யு
2. பிரதிப்ரஸ்தாதா
3. அக்நீத்ர
4. உன்னேதா
5. ஹோதா
6. மைத்ராவருண
7. ப்ராஹ்மணாசசம்ஸீ
8. நேஷ்டா
9. போதா
10. அஷ்டாவாக
11. உத்காதா
12. ப்ரஸ்தோதா
13. ப்ரதிஹர்த்தா
14. சுப்ரஹ்மண்ய
15. க்ராவஸ்தோதா
16. ப்ரஹ்மா
17. ஸதஸ்ய
18. சமிதா
19. ஸோமக்ரயீ.

ஆக புரோகிதர்கள் பத்தொன்பதின்மர்.

---

## யாகத்திற்குரிய பாத்திரங்கள்.

1. இத்மா
2. பர்ஹி
3. த்ருவ்ஷணீ
4. ஸ்ருசா
5. சமஸ
6. க்ராவணா
7. ஸ்வரு
8. உபவர
9. த்ரோணகலச
10. வாய்வ்யகலசை
11. காஹ
12. இடாசூனு
13. ஸ்வதிதி
14. புரோடாச
15. புதப்ருதா.

## யாகசாலைகளின் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 1. | யஜ்ஞசாலா | 2. | மஹாவேதீ |
| 3. | அந்தர்வேதீ | 4. | பஹிர்வேதீ |
| 5. | சமித்ரசாலா | 6. | சத்வால் |
| 7. | ஸஞ்சார | 8. | ப்ராக்வம்ச |
| 9. | ஸத: | 10. | மார்ஜாலியா |
| 11. | அக்நீத்ரியாகார | 12. | பத்நீசாலா |
| 13. | த்வார | 14. | பரதிகவர |
| 15. | யூப | 15. | ஹவிர்தான |
| 17. | சாலாமுகீ | 18. | தர்ம. |

## யாகானுஷ்டானங்களின் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தீக்ஷணீய இஷ்டி | 10. | த்ருதீயஸவன |
| 2. | ப்ராயணீய இஷ்டி | 11. | சோமபான |
| 3. | ஆதித்ய இஷ்டி | 12. | ஆச்வீனபசு |
| 4. | தர்ம | 13. | ஐந்த்ராக்னபசு |
| 5. | அக்நிஷோமீயா | 14. | அவப்ருத |
| 6. | பசு | 15. | வருணேஷ்டி |
| 7. | ஸௌத்யா | 16. | வபாயாக |
| 8. | ப்ராத: ஸவன | 17. | பசுஉபாகரண |
| 9. | மாத்யான்னஸவன | 18 | பசுவாலமபனம |

இவ்வாறு யாகங்களும் அதற்குறிய இடங்களின் பெயர் சாமக்ரி முதலியன ஐத்ரேய ப்ராஹ்மணம் முதல் பஞ்சிகையில் சொல்லப் பட்டது.

"ஐதரேய ப்ராஹ்ணம் இரண்டாம் பஞ்சிகையின் தொடக்கத்தில் சொல்லுவதாவது —

"யஜ்ஞேனவை தேவா: ஊர்த்வம் ஸ்வர்க்கம் லோகமாயம்ஸ்தே பிபயுரஸ்மின் நோத்ருஷ்ட்வா மனுஷ்யாஸ்ச ரிஷ்யஸ்சானுப் ரஜ்ஞாஸ் யந்தீதி." (ஐதரேய ப்ராஹ்மணம் த்விதீய பஞ்சிகா பிரதமகண்டம்.)

இதன் பொருள்:—தேவர்கள் யாகஞ்செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தார். ஆதலால் மனிதர்களும் ரிஷிகளும் யாகம் செய்யக் கடவர். யூபஸ்தம்பங்களையும நாட்டவேண்டும். யூபம்=யாகத்தில் கொல்லப்படும் உயிர்களைப் பிணிக்கும் தூண்.

இதன்பின் யாகத்தில் உயிர்களைக் கொல்லக கட்டளையிடுகிற மந்திரமாவது:—

"தைவ்யா: *சமிதார ஆரபத்வமுத மனுஷ்யா இத்யாஹ. அன்வேனம மாதா மன்யதாமனு பிதா னுப்ராதா ஸகர்ப்யோனு ஸகா ஸயூத்ய இதி ஜனித்ரைரேவைனம தத்ஸமனுமதமால பந்த உதிசீனம் அஸ்ய பதோ நிதத்தாத் ஸூர்யம சக்ஷுர்கமயதாத் வாந்த ப்ராணமன்வஸ்ருஜ தாதந்தரிக்ஷமஸூம திச: ஸ்ரோதரம், ப்ருதிவீ சரீரம்."

(ஐதரேய ப்ராஹ்மணம் பஞ்சிகா 2 கண்டம 6.)

இம்மந்திரத்தினல் பசுவின் தாய் தந்தையரைக் கேட்டுக்கொள்ளுவதாவது. இந்த பசுவை எனக்கு கொடுங்கள்.

இவ்வாறு வேண்டிக்கொண்ட பின்னர் "அத்வர்யு" வென்னும் தலைமைப புரோகிதனுடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு பசுவை "சமித்ரசாலா" என்னு மிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் வடக்கு திசையில் அப்பசுவின் கால்கள் இருக்கும்படியாகச் செய்து "சமிதா" வென்னும பசுவைக கொல்லும புரோகிதன் "முஷ்டி" என்னும் குறுந்தடியால் பசுவினுடைய கழுத்தில் அடித்துக் கொலை செய்வான். அதன்பின் "சுரா" இடா "ஸூனு" "ஸ்வதிதி" என்னும் மரபபலகையில் கொலையுண்ட பசுவின் பிணத்தைக் கிடத்தி தோல உரித்துச் சதையை அரிந்தெடுத்து சிறிது நெருப்பிலிட்டு மீதியுள்ள மாமிசத்தைப் புரோகிதர்கள் யாவரும் பங்குபோட்டு எடுத்துக் கொள்ளுவார்கள்.

---

* சமிதா=யாகத்தில் பசுவைக் கொல்லும் புரோகிதன்.

பசு=யாகத்தில் கொல்லப்படும் ஆடு, மாடு, குதிரை, நாய், பாம்பு, மனிதன் முதலிய எல்லாவுயிர்களுக்கும பொதுப்பெயர்.

(1) சமித்ரசாலா=பசுவைக் கொலைசெய்யும் இடம்.

"அதாத: பசோர் விபக்திஸ்தஸ்யவிபாகம வக்ஷ்யாம:
ஹனுஸஜிஹவே ப்ரஸ்தோது: ... ...
... ... ... ...
... ... ... ...

(ஐதரேய ப்ராஹ்மணம் பஞ்சிகா 7, கண்டம் 1.)

இந்தப் பசுவைப் பங்கிடும முறை "ஞான சூரியன்" முதல் பாகததில் ஷை மந்திரமும அதன் தமிழ் அர்த்தமும எழுதியிருப்ப தால் இதில் எழுதவில்லை.

இமமுறை "கோபத ப்ராஹ்மணம்" என்னும வேத நூலிலும் இருககிறது.

யாகத்தில் கொலையுண்ட பசு ஸ்வர்க்கத்தை 'அடைகிற தென்று கீழ்ககாணும் மந்திரம் கூறுகிறது:—

"பார்வை நீயமான: ஸம்ருத்யும ப்ராபஸ்யத் ஸதேவான் நான்வ காம யதைதும் தம்தேவா அப்ருவன்னேஹி ஸ்வர்ககம் வைத்வா லோகம் கமயிஷ்யாம இதி"

(ஐதரேயப்ராஹ்மணம் பஞ்சிகா 2 கண்டம 6.)

பொருள்:—யாகத்திற்கு கொண்டுவந்த பசு மரணத்தைக காண்கிறது மரணத்தினின்றும் தேவர்களைக காணகின்றது. தேவர்கள பசுவைப பார்த்து நாங்கள் உன்னை ஸ்வர்ககத்திற்கு அழைததுச் செல்லுகின் றோம் என்பார்கள்.

பசு கொல்லப்பட்ட பிறகு அதன் சதையை அறுக்கெடுக்க வேணடிய முறை மந்திரமாவது;—

"அந்தரே வோஷ்மாணம் வாரயத்வாதிதி பசுஷ்வேவதத் ப்ரா ஞன் ததாதி ஸ்யேனமஸ்யவக்ஷ: கருணுதாத்ப்ரசஸா பாஹு சலா தோஷணீ கஸ்யபேவாம் ஸாச்சித்ரே ஸ்ரோணீ கவஷோரு ஸ்ரேக பர்ணஷ்டவந்தாஷட்விமசதி ரஸ்ய வங்காயஸ்தா அனுஷ்டயோச்யா வயதாத்; காத்ரம காத்ரமஸ்யானூனம.

(ஐதரேயப்ராஹ்மணம பஞ்சிகா 2. கண்டம 6

பொருள்:—மார்பிலிருந்து பருந்தின் வடிவத்தில் சதையை அறுத்தெடுக்கவேண்டும். பின் கால்களிலிருந்து இரண்டு துண்டுகளை அறுத்தெடுக்க வேண்டும். முன் கால்களிலிருந்து அபுவடிவாக இரண்டு துண்டுகளை அறுத்தெடுக்க வேண்டும். தோளிலிருந்து ஆமையின வடிவாக இரண்டு துண்டுகளை எடுக்கவேண்டும். இவ்வாறு அந்த அந்த அவயவங்களிலிருந்து இருபத்தாறு துண்டுகளை அறுத்தெடுத்தபின் எல்லாவற்றையும அறுத்தெடுத்துக் கொள்க.

பசுவின் மலமூத்திரம் முதலியவை தரையில் புதைக்கப்பட வேண்டும அதற்குப் பிரமாணம்:—

"உத்யகோஹம் பார்த்திவம்" (ஐதரேய பஞ்சி 2, க. 6)

பசுவைக் கொல்லும்போது "ஹோதா" என்னும் புரோகிதன் சொல்லவேண்டியது:—

"அத்ரிகோ சமீத்வம் ஸுசமீ சமீத்வம் சமீத்வமத்ரிகா அத்ரிகா அத்ரிகா உர் இதித்ரிர்ப்ரூயாத்." (ஐத பஞ்சிகா 2. கண்டம 7)

பொருள்:—* நன்ருக அடித்துக கொல் கொல கொல் அடிப்பதை நிறுத்தாதே.

"அஸ்நாரக்ஷ: ஸமஸ்ருஜதாத இத்யாஹ" (ஐத......கண்டம் 7)

† உதிரத்தை (இரத்தம்) ராட்சதருககுக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிருர்.

அதனபின் "வபாஹோமம்" செய்யசசொல்லுகிற மந்திரம:—

"தஸ்ய வபாமுத்கித்யாஹரந்தி தாமத்வர்யு: ஸ்ருவேணுபிதாரயன்ஜுஹ." (ஐத......கண்டம 12)

---

* இததகைய கன்னெஞ்சர்கள் பிறவகுப்பினரில் ஒருவருமிரார் இவவார்த்தை கேட்கும் கசாப்பு காரன்கூட நடுநடுஙகுவான்.

† ரத்தத்தை ராட்சதர்களுக்குக் கொடுங்கள் என்பது பரிகாச வார்த்தையேயாம். ஏனென்ருல் ராட்சதர் யாகத்தை வெறுப்பார்களன்ரே.

பொருள்:—பசுவின் "வபா" என்னும் கொழுப்பை எடுத்து "அத்வரயு" என்பவன் "ஸ்ருவம" என்னும் பாத்திரத்தில் வைக்கின்றான்.

"ஸர்வமாயுரேதிய ஏவம வேத"

பொருள்:—எவனொருவன இதை இவ்வாறு அறிகின்றானோ (இந்த யாகத்தை நடத்துகிறவன்) அவன் நெடுநாட்கள் உயிரோடிருப்பன்.

"வபாயாமா ஹுதாயாம் ஸ்வரக்கோ லோக: ப்ராக்யாயத."
பொருள்:—கொழுப்பை ஹோமித்தால் ஸ்வர்ககலோகம் கிடைக்கும்.

"ஸோக்னேர் தேவயோன்யாம் ஆஹுதிப்ய: ஸபூய ஹிரண்ய சரீர உனர்தவ: ஸ்வர்க்கம் லோகமேதி"

பொருள்:—அக்கினியில் தேவயோனியில் ஆஹுதி கொடுப்பதால் யாகமசெய்பவன் பொன்னுலாக்கப்பெற்ற சரீரத்தை யுடையவனாய் மேலே சுவர்க்கலோகத்தை அடையா நிற்பன்.

பசுவைக் கொலைசெய்து அதன் சதையை முப்பததாறு பங்குகளாகப் பிரிககவேண்டும. இதை முறைப்படி உணார்ந்தவன் சுவர்க்கத்தை அடைகின்றான். இவ்வித யாகமானது ரிஷிகளால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் இறந்துபோனபின் தேவர்கள் கீழிறங்கி வந்து இநத யாகவிதியை உபதேசித்தார்கள் என்று கீழ்ககுறித்த மந்திரம சொல்லுகிறது.

*"தத் ஸ்வர்ககாஸ்ச லோகானுப்னுவந்தி ப்ராணேஷு சைவதத் ஸ்வர்க்கேஷு ப்ராதிதிஷ்டம தோயித ஏதாம் பசோர் விபக்திம ஸ்ரௌத ரிஷிர்தேவபாகோ விதானுசகார கிரிஜாய பாப்ரவ்யாயா மனுஷ்ய: ப்ரோவாச"

ஐத..........பஞ்சிகா 7 கண்டம 1)

---

* இவவாறு பசுவைப் பஙகிடும முறை கசாப்புகாராகளுக்கு தெரிந்திருந்தால் அவர்சள் இரந்ததும பொன்னிர சரீம் பெற்று ஸ்வர்க்கம் செல்வார்கள் என்பது நிச்சயம ஏனென்றால் இது கடவுளால் செய்யப்பட்ட வேதமந்திரமல்லவா.

* "அரிச்சந்திரன் என்கிற அரசன் புத்திரப் பேறில்லாது வருந்திக்கொண் டிருக்கும்போது வருண தேவனின் கட்டளைக் கிணங்கி "அஜீகர்த்த" முனிவரின் புத்திரனுன "சுன: சேபன்" என்பவனை விலைக்கு வாங்கி அவனைக் கொன்று நரமேத யாகம் பண்ணத் தொடங்கின கதை ரிக்வேதத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

"ஹரிஸ்சந்த்ரோ ஹைவைதஸ ஐக்ஷவா
கோ ராஜாபுத்ர ஆஸ" ... ...

பொருள்:—இக்ஷவாகு வம்சத்தில் அரிச்சந்திரன் என்கிற அரசன் புத்திரனில்லாதவனாக இருந்தான்.

(ஐத...பஞ்சிகா 7 கண்டம் 13, 14, 15, 16)

வேதக் கிரந்தங்களில் 'யாக' என்னும் சொல்லினால் உணர்த்தப் படுஞ் சடங்கின் பிரிவுகள் யாவும் ஆடு, மாடு, குதிரை, பாம்பு, மனிதன் முதலிய எல்லா உயிர்களையும் கொன்று தின்னவே உபதேசிக்கின்றன. இவ்வுண்மையை "ஹிம்ஸா ஸ்வபாவோ யஜ்ஞஸ்ய" (யாகத்தின் சுபாவம் உயிர்வதையேயாம) என்னும் வாக்கியத்தினுல் "மத்ஸ்ய புராணம உணர்த்துகின்றது.

நான்கு வேதங்களில் சிறந்ததான 'ரிக்வேத'த்தினின்றும மேற் குறித்த உதாகரணங்களை எடுத்துக் காட்டினேன். யஜுர்வேதம் இருபிரிவுகளாயுள்ளது கிருஷ்ண யஜுர்வேதம, சுக்ல யஜுர்வேதம். கிருஷ்ண யஜுர்வேதத்தைச சார்ந்த பிராஹ்மணம் தைத்திரீயம்.

* அரிச்சந்திரனை அறியாதார் நம்மவர்களில் ஒருவருமிரார். விசுவாமித்திரருக்கும் இவனுக்கும் நடந்த சபதத்தில் உண்மையைக் காப்பாற்றிய இவனுக்கு சத்தியவாக் அரிச்சந்திரன் என்னும் புகழ்ச்சிப் பெயர் வந்த தாகப் புராணஙகள் கூறுநிற்கும். அவவாறே இச்சத்திய வாக்கு அரிச்சந்திரன் பதினன்கு வயது சிறுவனைக் கொன்று "நரமேத யாகம்" செய்யப் போன கதையும் அப்பிள்ளையின்மீது கருணைகொண்ட விசுவாமித்திர முனி அரசனுக்கு எவ்வளவோ நற்புத்தி புகட்டியும் கேளாததால் தனது தவ வன்மையால் சிறுவனை விடுவித்த கதையும் புராணங்களில் இருக்கின்றன- "சுனச்சேபன்" என்னும் இச்சிறுவன் விசுவாமித்திரரின் சகோதரியின் குமாரன். வறுமையைத் தாஙகமுடியாத தந்தையால் பணத்திற்கு விற்கப்பட்டான். மற்ற விபரங்கள் புராணங்களில் காணலாம்.

சுக்ல யஜுர்வேதத்தின் பிராஹ்மணம் வாஜஸனேயம். இவைகளும் கொலை விஷயத்தில் ரிக்வேத ப்ராஹ்மணத்திற்குப் பின்னணியில் இல்லையென்பதை மெய்ப்பிக்கவேண்டி சில வாக்கியங்களை எடுத்துக் காட்டுகிறேன். முதலில் "தைத்திரீய பிராம்மணம்" வாசிக்கவேண்டும். இதில் யாகத்தைக் குறித்து மிக விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. யாகஞ் செய்யும் வகையில் நாலு வேதங்களின் உதவியும வேண்டு மாயினும் யஜுர்வேதத்தின் உதவி மிகவும அதிகமாகத் தேவையிருக்கிறது. "யஜ" என்னும் பகுதியிலிருந்துதான் யாக சப்தம உண்டாயிற்று. "யஜுர்வேதம்" என்றால் யாக விஷயங்களை உணர்த்தும் நூல் என்றே பொருள். யஜுர்வேதத்தைப் படித்தவன்தான் "அத்வர்யு" என்னும் யாக புரோகிதனாக வரத்தகுந்தவன. இவன் புரோகிதர்களுக்கெல்லாம் தலைவனாவன்.

"தைவ்யா: சமிதார உதமனுஷ்யா ஆரபத்வம்" (தைத்திரீயம் காண்டம 3, அத்தியாயம் 6, அனுவாகம 6) பொருள் ஐதரேயம் போலவே.

"அத்ரிகோ சமீத்வம் ஸுசமீ சமீத்வம சமித்வமத்ரி கோ."
(தைத்திரீயம் காண்டம் 3, அத் 6, அனுவாகம் 6.)

பொருள்:—நன்றாய் அடித்துக்கொல், அடித்துக்கொல் அடிப்பதில் சோர்வடையாதே.

இதற்கு சாயணபாஷ்யம் வருமாறு:—

"க்ரூர கர்மேதி மத்வா ததுபேக்ஷணம் மாபூதிதி புன: புனர் வசனம்.

பொருள்:—(கொலை) கொடுஞ்செயல் என்று நினைத்து விட்டு விடலாகாதென்றே (அத்ரிகோ சமீத்வம் ஸுசமீ சமீத்வம் சமீதவம் அத்ரிகோ) பின்னும் பின்னும் வற்புறுத்திக் கூறலாயிற்று.

எம்மாதிரி ரிக்வேதம் ஐதரேய ப்ராஹ்மணத்தில் கூறப்பட்டுள்ளதோ அதே மாதிரி யஜுர்வேதத்திலும் கூறப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டினேன். யஜுர்வேத ப்ராஹ்மணத்தின் மற்ற பாகங்களையும் கவனியுங்கள்.

1 "த்யாவாப்ருதிவ்யாம் தேனுமாலபந்தே வாயவ்யம் வத்ஸ மாலபந்தே" (காண்டம 1, அத் 2, அனு 5.)

2 "ஏஷ கோஸவ:" (காண்டம் 2, அத் 7, அனு 5.)

3 "ப்ரஜாபதி பசூனஸ்ருஜத ஏதேன வை தேவா ஜத்வானி ஜித்வா யம் காம மகாமயன் தமாப்னுவன்" (காண்டம் 2, அத் 7, அனுவாகம 14.)

4 "ப்ராஜாபத்யோ வா அஸ்வ." யஸ்யா ஏவ தேவதாயா ஆலப்யதே தயைவென ஸமர்தேயதி" (காண்டம் 3, அத் 8, அனு 3)

5 "யதேத ஏகாதசினு: பசவோ ஆலப்யந்தே." (3, 9, 2)

6 "நானு தேவத்யா: பசவோ பவந்தி ஆரண்யான் லோகா தசீன ஆலப்யந்தே. அஸ்மை வை லோகாய க்ராம்யபசவ ஆலப் யந்தே." (3, 9, 3)

7 "க்ராபயாஸ் சாரண்யாஸ்ச உபயான் பசூனுலபதே" (3, 9, 3)

8 "தேஜஸா வா ஏவ ப்ரஹ்மவர்ச்சஸே வ்ருத்ய தே யோ அஸ்வமேதேன யஜதே."

9 "யதஜாவயஸ்சாரண்யாஸ்ச தே வை ஸர்வபசவ: யத்ரவ்யா இதி கவ்யான் பசூனுத்தமேஹுந்ராபதே." (3, 9, 9)

10 "சுன: சதுராக்ஷஸ்ய ப்ரஹந்தி ஸத்ரக முஸலபவதி." (3, 8, 4)

11 "பசுபிர்வா ஏஷ வ்ருத்யதே யோ அஸ்வமேதேன யஜதே ச்சகலம் கல்மாஷம் கிகிதிவம விதிகயமிதி த்வாஷ்ட்ரான் பசூலபதே." (3, 9, 9.)

12 "தானேவோபயான் ப்ரீணுதி." (3, 9, 10)

13 "ப்ரஹ்மணே ப்ராஹ்மண மாலபதே." (3, 4, 1.)

14 "யதஷ்டாதசீன ஆலப்யந்தே." (3, 9, 1.)

பொருள் எண் ஒன்றுமுதல் பதினுன்கு வரையில்:—

1 "த்யாவாப்ருதிவீ" தேவதையின் பொருட்டு பசுமாட்டைக் கொன்று யாகம் நடத்தவேண்டும். வாயுதேவதைககு கன்றுகுட்டியைக் கொல்லவேண்டும்.

2 இந்த யாகத்திற்கு "கோஸவ"மெனப் பெயர்.

3 ப்ராஜாபதி தேவன் பசுக்களைப் படைத்தார். அவைகளை ஏனைய தேவர்கள் யாகஞ் செய்தார்கள். அதனால் அவர்களின் விருப்பம நிறைவேறிற்று.

4 ப்ராஜாபதி தேவனுக்குரிய பசு "குதிரை"யாம. அதனால் குதிரையைக் கொன்று பிரஜாபதிக்கு யாகம் செய்யவேண்டும. இவ்வாறு செய்தால் சமிர்த்தி யுண்டாம். (சமிர்த்தி=தனம், தானியம, சந்ததி முதலியவைகளின் அடைவு)

5 பதினொன்று பசுக்களைக கொன்று நடத்தும யாகம ஒன்றுள்ளது.

6 தேவதைகள் பல வகையினர். ஆகையால் பலவகைப் பசுக்களையும் வதைசெய்து அநதந்த தேவதைகளுக்குரிய யாகம நடத்த வேணடும். காட்டுப் பசுககளானல் பத்து போதும. நாட்டு பசுக்களும் யாகத்தில் கொல்லப்பட்டு தேவர்களுககு கொடுககப்படுகின்றன.

7 காடு, நாடு என இருவிடங்களிலும வசிக்கின்ற பசுக்கள் யாகத்தில் கொல்லத்தக்கவைகளாகும.

8 எவன் *'அஸ்வமேதம' என்னும் யாகம நடத்துவனே அவனுடைய தேஜசு விர்த்தியடையும்.

9 காட்டு பசுககளைப் பிடித்துவந்து யாகம் நடத்தவேண்டும். அதைக் காட்டிலும் பசுமாடு சிறப்பு வகையில் யாகத்திறகு உரித்தானது. ஆகையால் நல்ல நாள் வருமபோது 'கோ' என்னும் பசுமாட்டைக் கொன்று யாகம் நடத்தவேண்டும

10 நாயைக் குறுந்தடியால் அடித்துக் கொன்று அதன் பிணத்தைக் குதிரையின் காலோடு சேர்த்து "அஸ்வமேத யாகம" பண்ணுகிறவன் வீட்டில் பசுக்கள் விருத்தியடையும்.

---

* "அஸ்வமேதம்" இதைக் குறித்து ஞானசூரியன் முதல்பாகத்தில் விவரமாக எழுதியுளளேன். அதைப் பார்த்து இந்த யாகத்தின் மேன்மையை அன்பர்கள் தெரிந்து கொள்ளுஙகள்.

11 வெள்ளாட்டின் குட்டி, தித்திரி என்னும் பறவை, வெள்ளைக் கொக்கு, கருந்தவளை முதலிய பிராணிகள் "த்வஷ்டா" தேவனுக்குரிய யாகத்தில் வதைக்கப்படவேண்டும்.

12 இந்த யாகம் செய்பவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் சுகம் கிடைக்கும்.

13 * "ப்ரஹ்ம" தேவனுக்காக "ப்ராஹ்மண"னையும் யாகம் செய்யவேண்டும்.

14 பதினெட்டு பசுக்களைக் கொன்று நடத்தத்தக்க யாகம் ஒன்றுள்ளது.

அன்பர்களே! பாருங்கள் வேதத்தின் பெருமையை. இதைச் சகிக்க முடியாத அநியாயமெனக் கண்டுதான் "ஜைனர்"களும் "பௌத்தர்"களும் கண்டித்தார்கள். ஆனால் நமது "சைவசமயாசாரியர்கள்" என்ன செய்தார்கள். அவர்களில் முதன்மை வாய்ந்தவரான "சமபந்தர்" செய்தது யாது? ஜைனர்களையும் பௌத்தர்களையும் கழுவிலிட்டுக் கொலை செய்தார். எதன் பொருட்டு? அடங்கியிருந்த கொலை பாதகங்களை மீண்டும் வேத மதஸ்தாபனத்தினால் உறுதிப்படுத்த வைதிக சமயம் இழிவானதெனச் சொன்னால் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாத உயர்ஜாதி இந்துக்களாகிய சைவர்களும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் கோபித்துக் கொள்ளுகிறார்கள். இடம், பொருள், ஏவல் மூன்றும் தங்களுக்கு அனுகூலமெனக் கண்டால் வைதிகத்தின் குற்றத்தைச் சுட்டிக் காட்டும் உத்தமர்களை எத்தகைய துன்பத்திற்குள்ளாக்கவும் அஞ்சுகின்றார்களில்லையே இது எதனால்? அறியாமையினால் தான். ஆயிரத்திலதிகம் ஆண்டுகளாகப் பார்ப்பனராலும் பிறசமயத்தினராலும் பலவகை அவமானத்திற்குள்ளாக்கப்பட்டும் இன்னமும் இவர்கள் உணராத காரணமென்ன? இவ்வுயர்ஜாதிப் பார்ப்பனரல்லா

---

* கஷ்டம்! கஷ்டம்!! ப்ராஹ்மணனைக் கொலைசெய்து பிரஹ்மதேவனுக்கு யாகஞ் செய்யவேண்டுமாம். ஆனால் ஏனைய உயிர்கள் யாவும் கொலையுண்ட பின்னரே இந்த யாகம் செய்ய முற்படுவார்கள் போலும். அந்தோ! அந்தோ!! அநியாயக்காரர்கள் எதைத்தான் செய்ய மனமிசையார். "பெற்ற பூச்சை(பூனை)க்கு தன்குட்டியும் பத்தியம்" என மலையாள பாஷையில் ஒரு பழமொழி யுண்டு.

தாரிலும் பல பிரிவினர் உளர். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சமுதாயத்தை உயர்த்தவும் மற்ற சமுதாயங்களைத் தாழ்த்தவும் மன மொழி மெய்களால் பாடுபட்டு வருவதோடு இவ்வுயர் ஜாதியினருக் கெல்லாம் அடிமைகளாகத் "தாழ்த்தப்பட்டவர்கள்" என்னும் பல கோடிக் கணக்கான மக்கள் இருக்கிறார்களே அவர்களை எக்காலத்தும் தங்களின் கொடுங்கோன்மையில் நிறுத்தவுமே யாகும். ஏன் அதிக மாகச் சொல்லவேண்டும். சுயநல மென்னும் பிசாசு இவர்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது "சுயமரியாதைப் பிரசாரம்" ஒன்று தான் இக்கொடிய பிசாசை "உச்சாடனம்" செய்யத்தக்க மந்திர வாதம். ஆகையால் உலக நன்மையைக் கருதிச் சுயநலப் பற்றறுத்து உண்மைத் தொண்டாற்றும் "சுயமரியாதைப் பிரசாரம்" நீடூழி வாழ்க.

"யஜுர்வேத"த்தின் அட்டவணையில் பலவகை யாகங்களின் பெயர் காணப்படுகின்றன. அவைகளில் சிலவற்றை இங்கெடுத்து எழுதுகிறேன்.

| யாகத்தின் ஸம்ஸ்கிருத பெயர். | யாகத்தின் ஸம்ஸ்கிருதப் பெயருக்குச் சரியான தமிழ்ப் பெயர் |
|---|---|
| 1. ஸௌத்ராமணி | கள், சாராயம் முதலிய குடிக்கும் யாகம். |
| 2. சுராக்ரஹ மந்த்ரம் | ஷை மயக்க வகைகளை அருந்து தற்குரிய மந்திரம். |
| 3. ஐந்த்ர பசு | இந்திரனுக்காக ஆட்டைக் கொல் லும் யாகம். |
| 4. கோஸவம் | பசுமாடு, காளைமாடு இவைகளைக் கொல்லும் யாகம். |
| 5. அத்யுர்யாம | ஒருவகை யாக (கொலை) த்தின் பெயர். |
| 6. வாயுவீய ஸ்வேதபசு | வாயுதேவதைக்காக வெள்ளைப் பசு யாகம். |

| | | |
|---|---|---|
| 7. | காம்யபசு | தனது எண்ணங்களை ஈடேற்றிக் கொள்வதற்குரிய பசுயாகம். |
| 8. | வத்ஸோபகரணம் | கன்றுக் குட்டியைக கொலை செய்து நடத்தும் யாகம். |
| 9. | பௌர்ணமாஸேஷ்டி | பௌர்ணமாஸியன்று நடத்தும் யாகம். |
| 10 | நக்ஷத்ரேஷ்டி | நக்ஷத்திர தேவதைகளுக்குரிய யாகம. |
| 11. | புருஷயஜ்ஞ | மனிதனைக் கொன்று நடத்தும் யாகம். |
| 12. | வைஷ்ணவ பசு | விஷ்ணு தேவனுக்காக ஆட்டைக் கொன்று நடத்தும் யாகம். |
| 13. | ஐந்த்ராக்ந பசு | இந்திரன் அக்நி தேவர்களுக்காக ஆட்டைக் கொலை செய்யும் யாகம். |
| 14. | ஸாவித்ர பசு | சூரிய தேவனுக்காக ஆட்டைக் கொல்லும யாகம். |
| 15. | அஸ்வமேதம் | "அஸ்வமேதம்" என்னும் குதிரையைக் கொல்லும் யாகம். |
| 16. | ரோஹிதாதி பஸ்வாலம்பனம் | சிவந்த நிறமுள்ள ஆடு முதலிய உயிர்களை வதைத்து நடத்தும் யாகம். |
| 17. | அஷ்டதச பசுவிதானம் | பதினெட்டு பசுக்களைக் கொலை செய்து நடத்தும் யாகம். |
| 18. | சாதுர்மாஸ பசு | "சாதுர்மாஸம்" மழை காலத்தில் ஆட்டைக் கொன்று நடத்தும் யாகம். |
| 19. | ஏகாதசின பசுவிதானம் | பதினொன்று பசுக்களைக் கொல்லும் யாகம். |

| | | |
|---|---|---|
| 20. | க்ராமாரண்ய பசு ப்ரசம்ஸா | நாட்டிலும் காட்டிலும் உள்ள பசுக்களைக் கொன்று யாகம் செய்தல். |
| 21. | உபாகரண மந்த்ரம் | யாகத்தில் கொல்லப்படும் பசுவைச் சுத்திசெய்ய மந்திரம். |
| 22. | கவ்ய பசுவிதானம் | பசுமாட்டைக் கொன்று நடத்தும் யாகம். |
| 23. | ஸத்ரம் | *"ஸத்ரம்" பலநாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் யாகம். |
| 24. | ரிஷபாலம்பன விதானம | எருதைக் கொன்று நடத்தும் யாகத்தின் விதி. |
| 25. | அஸ்வாலம்பன மந்த்ரம் | குதிரையைக் கொல்லும் மந்திரம். |
| 26. | அஸ்வ ஸம்ஜ்ஞபனம் | குதிரையைக கொல்லும விதி. |
| 27. | அஸ்வ, மனுஷ்ய அஜ கோ பசுப்ர சம்ஸா | குதிரை, மனிதன், ஆடு, மாடு முதலிய உயிர்களைக் கொல்ல விதி. |
| 28. | ஆதித்ய தேவ தாகபசு | 'சூரிய' தேவதைக்கு பசுயாகம். |
| 29. | ஸோம பசு | 'சோம' தேவதைக்குரிய யாகம். |
| 30. | ப்ருஹஸ்பதி ஸவ: | 'பிருகஸ்பதி' தேவதைக் குரிய யாகம். |

அன்பர்களே! இவ்விதம் மகம், க்ரது, இஷ்டி, யாகம், யஜ்ஞம் முதலிய கொலையை உணர்த்தும் செய்கைகள் வேதத்தில் காணப்படுகின்றன. வேதத்தைச் செய்தவர் கருணையே வடிவங்கொண்ட 'கடவுள்' என்கின்றனர். இககடவுளின் கருணையைக் குறித்து அறிஞர்களின் மனம் கலங்கத்தான் செய்யும்.

---

* "ஸத்ரம்" இது பலநாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் யாகத்தின் பெயர் நாளடைவில் பிராமணர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கும் இடத்தின் பெயராக மாறிற்று. இப்பெயர் மாறுதல் தமிழ் மொழியில் மாத்திரமே உளது.

முற்கூறிய வாக்கியங்களாலும்; வேதத்தையும் அதைப் பின்பற்றியுள்ள ஆரியர்களின் ச்ரௌத, க்ருஹ்ய, தர்ம சூத்ரங்களையும் நன்கு ஆராய்ந்த அறிஞர்களின் சொற்களினின்றும் அறிந்து கொள்ளுவது யாதெனின் 'வேத' மென்பது உயிர்க்கொலைசெய்து ஊனைத்தின்று ஊனைப்பெருக்கும் சில தேகாத்ம வாதிகளின் கூற்றென்பதே யாம். இவர்களின் கூற்றைப் பிரமாணமாகக் கொண்டு கொல்லா விரதத்தை யுடைய உத்தம மதஸ்தர்களை 'நாஸ்திகர்' எனத் தூற்றும் நம்மவர்களிற் சிலரின் மடமைக்கு இரங்கத்தான் வேண்டும்.

வைதிகர்களில் சிலர் இவ்வாறு வினவக்கூடும். வேதத்தில் கொலை செய்யச சொல்லியிருக்கும பாகத்தை விட்டுவிடுகிறோம் அல்லது அதை வேதத்தினின்றே எடுத்துவிடுகிறோம். மிச்சமாயிருக்கும் நன்மையான பாகங்களை ஏன் கொள்ளக்கூடாது என்றால்; அத்தகையவர்களுக்கு எனது விடை எனனவென்றால், உங்கள் வேதத்தில் நல்லபாகம் சிறிதுமில்லை. 'வெண்காய' மென்னும கிழங்கை உரிக்க உரிக்க சதை சிறிதும மிஞ்சாததுபோல் வேதத்தில் நன்மையான பாகத்தைத் தேடப்போனால் அது சூன்யமாகத்தான் முடியுமென்பதேயாம்.

வேதத்தில் உயிரை வாங்குவது என்கிற அர்த்தத்தைத் தரக்கூடிய ஐந்து சப்தங்கள் இருக்கின்றன. 1. ஆலபனம், 2. கரணம், 3. உபாகரணம், 4. சமனம், 5, ஸம்ஜ்ஞபனம.

'சூரத்' என்னும ஊரிலிருந்துவந்த "யஜ்ஞேஸ்வர சாஸ்திரி" என்பவர் "ஆர்ய வித்யா ஸுதாகரம" என்னும நூலை சிறிது காலங்களுக்குமுன் அச்சிற பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அதில் பல வகை யாகங்களின் விதிகள் வரையப்பட்டிருக்கின்றன. பசு யாகம அங்கச்சேதனம் (அவயவங்களை அறுத்தெடுத்தல்) முதலியன நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. அதில் 'ஆலபனம்' என்னும் பொருள் கீழ்க்கூறும் வண்ணம் விளக்கியுள்ளது.

"உபாகரணம்" நாம தேவகர்மோபயோகித் வஸம்பாதக: பசோ: ஸம்ஸ்கார விசேஷ: ஏததாதி ஸம்ஜ்ஞபனபர்யந்தம் க்ரியாகலாப ஆலபனசப்தே ஞபிதீயதே."

(ஆர்ய வித்யா ஸுதாகரம், ப்ரகாசம் 2, பக்கம் 1.)

பொருள்:—தேவதைகளின் உபயோகத்திற்கு பசுக்களை ஸம்ஸ்காரம் செய்து வதை செய்வதுவரை எந்த எந்த சடங்குகள் உண்டோ அவை யாவும "ஆலபனம்" என்னும சொல்லினுல் அறியப்படும.

வேதத்தில் "நரமேதம" (மனிதர்களைக கொலைசெய்து நடத்தும் யாகம) எந்த இடத்தில் விதிக்கப்பட்டிருககிறதோ அதில் பலவகுப்பினரும பல தொழில்களைச் செய்பவருமான மக்கள இருநூறறுப் பதின்மரை (210) யூபங்களில் பிணித்து "புருஷஸூக்தம்" என்னும மந்திரத்தினுல் "ப்ரோக்ஷணம" செய்யச் சொல்லியிருக்கிறது (ப்ரோக்ஷணம் = நீர் தெளித்தல்) சிற்சில இடங்களில் யாக பசுக்களை அவிழ்த்து விடவும் சொன்னதுண்டு. இதற்கு *"உத்ஸர்க்கம" என்று பெயர். ஆனுல் அவிழ்த்து விடுதல் சிறந்ததல்லவென்றும யூபத்தில் கட்டிய பசுக்களை வதைத்தே தீரவேணடுமென்றும் இதுதான் உத்தமமென்றும் பலவிடங்களில் விதிக்கப்பட்டிருககிறது.

"க்ருஷ்ண யஜுர்வேத தைத்திரீய ஆரண்யகம" என்னும நூல் பத்து அத்தியாயங்களை யுடையது. இதில் ஆருவது அத்தியாயம் "பித்ருமேதம்" என்பதைக குறித்ததாகும. பிராமண, க்ஷத்திரிய, வைசியர்கள இறந்து போனுல் அவர்களைத் தகனம பண்ணும விதி இதில் காணக்கிடககின்றது. "போதாயன சூத்ரம்" இப்பிராஹ்மணக் கிரந்தத்தைச் சார்ந்த ஒவ்வொரு மந்திரங்களின் உபயோகத்தை விளக்கிக காட்டும நூலாகும.

அதில் காணும விவரமாவது:—

"முற்கூறியவர்களில் யாரேனும இறந்து போனதும ஒரு பசுமாட்டைககொன்று இறந்து போனவனின் அநத அந்த அவயவங்களோடு பசுமாட்டின் அவயவங்களைப் பொருத்திவைதது சிதையில் கிடத்தி நெருப்பு வைத்துக் கொளுத்தவேண்டும. பிணத்தை வண்டியிலேனும சூத்திரனைக் கொண்டேனும் தூக்கிச செல்லவேண்டும. இறந்துபோனவனுடைய மனைவியை சுடுகாடு வரையில் அழைத்துக்

* இது "வுத்ஸர்க்கம" வேதவிரோதிகளாகிய ஜைன பௌததர்களின் தொந்திரவுள்ள விடத்தில்தான் செய்யவேண்டுமென்று வைதிக மேதாவிகள் சொல்லுகின்ருர்கள்.

கொண்டுபோய் அவளிடத்தில் சொல்லவேண்டியதாவது "ஓ பெண்ணே! உன் கணவன் இறந்துவிட்டான். நீ மறுபடியும் மணந்து கொள்ள விரும்பினால் நன்றாக மணந்து கொள்ளலாம்." இவ்வாறு சொல்லிவிட்டு அவளைத் திரும்ப வீட்டிற்கு அழைத்து வரவேண்டும். இந்த நூலின்மீது "சாயணாசார்யர்" பாஷ்யம் என்னும் விரிவுரை எழுதியிருக்கிறார். அதில் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் வேத மந்திரத்தை மேற்கோள் காட்டி வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. இறந்துபோன பன்னிரண்டாம் நாள் இறந்துபோனவனின் சுற்றத்தார்களுக்கு ஆட்டிறைச்சியோடு கூடிய உணவளிக்கவேண்டும். இந்நூலானது வேத நூற்கள் யாவற்றினும் மேன்மை பொருந்தியதாக மதிக்கப்பட்டு வருகிறது. ஜைனர், பௌத்தர், சூத்திரர் முதலிய யாக விரோதிகளின் காதில் வைதிக மந்திரங்கள் விழக் கூடாதெனக் கண்டிப்பான கட்டளை இருப்பதால் மிகமிக ஜாக்கிரதையாகத்தான் பிராஹ்மணர்கள் வேதத்திலுள்ள "ஆரண்யக"த்தைப் படிப்பார்கள். பெரும்பாலும் யாருமில்லாத காட்டில்தான் இவ்வாரண்யகத்தைப் படிப்பது வழக்கம். பிராமணர்கள் பலர் குழுமியிருந்தாலும் சபையில் 'சம்ஹிதா' மாத்திரந்தான் படிப்பார்கள் "ஆரண்யகம்" சபையில் படிப்பதே இல்லை.

அன்பர்களே! இச்செய்கை பொருத்தமுள்ளது தான். "ஆரண்யகம்" காட்டில் வைத்தே படித்தற் குரியது. ஆரண்யம் = காடு. ஆரண்யகம் = ஆரண்ணியத்திற்குள் என்பதே இதன் தமிழ். பகுத்தறிவுடைய மக்கள் வசிக்கும் இடத்தில் படிக்கத் தகாத நூலென இதன் பெயராலும் உபயோகத்தினாலும் பெறப்பட்டது.

'பித்ருமேத' அத்தியாயத்தில் பிணத்துடன் கொலைசெய்து போடச் சொன்ன பசுமாட்டின் பெயர் இதன்கீழ் சொல்லப்படுகிறது.

1 ராஜகவீ, 2 அனுஸ்தரணீ, 3 ஸயாவரீ, இந்த அத்தியாயத்திலுள்ள சில மந்திரங்களை பாஷ்யத்துடன் எடுத்துக் காட்டுகிறேன்.

1. "பரேயுவா 1 ஸம்ப்ரவதோ."

(தைத்திரீய ஆரண்யகம் அத்தியாயம் 6.)

பாஷ்யம்:—"பித்ருமேதஸ்ய மந்த்ராஸ்து த்ருஸ்யந்தே ஸ்மின் ப்ரபாடகே பித்ருமேத மந்த்ரவினியோகோபரத் வாஜகல்பே பௌதாயனகல்பே சாபிஹித:".

பொருள்:—பித்ருமேதத்திற்குரிய மந்திரங்கள் இவ்வத்தியாயத்தில் காணப்படுகின்றன. இவைகளின் வினியோகம் பரத்வாஜ பௌதாயன சூத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது.

2. "அபைத ஹ்ருதய திஹாவிப:"

(தைத்திரீய ஆரண்யகம் அத் 6.)

"தாஸா: ப்ரவயஸோ வஹேயு: அதைனம அனஸா வஹந்தீத்யே கேஷாம்." (கல்பசூத்திரம்.)

பொருள்:—பிணத்தை சூத்திரன் சுமக்கவேண்டும. வண்டியில் வைத்துக் கொண்டுபோகவேண்டும்.

3. "இமெள யுனஜ்மிதே வஹ்னி அஸுனீ தாய வாடவே."

பாஷ்யம்:—இமெள பலீவர்தென சகடே யோஜயாமி"

பொருள்:—இவ்விரு எருதுகளையும் வண்டியில் பூட்டுகிறேன்.

4. "புருஷஸ்யா ஸயாவரீ விதெ ப்ராணமஸிஸ் ரப்ஸாம் ஆரண்யகே."

"அதாஸ்யா: ப்ராணான் விஸ்ரம்ஸமானு நனுமந்த்ரயதே ஹே புருஷஸ்ய ஸயாவரீ ராஜகவீ தவ ப்ராணம் சிதிலம் க்ருதவானஸ்மி பித்ரூன் உபேஹி அஸ்மின் லோகே ப்ரஜயா புத்ராதிகயா ஸஹ க்ஷேமம் ப்ராபய." (கல்பசூத்திரம்)

பொருள்:—இந்த பசுவைக் கொல்லுங்கால் சொல்லவேண்டியதாவது:—ஓ புருஷனுக்குரிய ஸயாவரியே! ராஜகவீ! (பசுமாடுகளுக்கு தலைவியே!) நான் உனது பிராணன்களை வாங்குகின்றேன். நீ பித்ருக்களை (உனது மூதாதைகளை) அடையக் கடவாய். இவ்வுலகத்தில் நினது சந்ததிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பாயாக.

"ராஜகவீ உபாகரோதி புவனஸ்யபதே இதி ஜரவீம் முக்யாம தஜ்ஜகன்யாம் க்ருஷ்ணும் க்ருஷ்ணுக்ஷீம க்ருஷ்ணவாலாம் க்ருஷ்ண குராமபி வா அஜாம் வாலகுரமேவம் க்ருஷ்ணம ஏவம் ஸ்யாதிதி பாடஸ்து தஸ்யாம் நிஹன்யமானுயாம் ஜானூன்யனு நிக்நந்த:"

(கல்பசூத்ரம்.)

பொருள்:— புவனபதிக்கு ராஜகவியைக் கொடுக்கவேண்டும். அந்த ராஜகவி முக்கியமாகும; * கருநிறமும் கருவிழிகளும் கருமையான குளம்புகளும் கரியவாலும் உடைய பசுமாடாக அது இருக்க வேண்டும். அல்லது இவ்விலக்கணங்களையுடைய பெண்ணாடா யிருந்தாலும போதுமென்று ஒரு பக்ஷமிருககிறது. இதை முழங்காலில் அடித்துக்கொல்லவேண்டும்.

இறந்தவனுடைய மனைவிக்குச் சொல்லவேண்டியதாவது:—

5. உதீர்ஷ்ந நார்யபி ஜீவலோகம்".

"ஹே நாரி! தவம் உத்திஷ்டத்வம் திதிஷோ புனர்விவாஹேச் சோபுத்யு: ஜனித்வம ஜாயாதவம ஸம்யக் ப்ராப்னுஹி" (பாஷ்யம்)

பொருள்:—ஓ பெண்ணே! எழுந்திரு உனக்கு மறுமணத்தில் விருப்பமிருந்தால் சுகமாக மற்றொருவனுக்கு மனைவியாக இருககக் கடவாய்.

6. "அபஸ்யாம யுவதிமாசரந்தீ."

தைத் 6. அனுவாகம் 12.

"ராஜகவ்யா ஹனனமுத்ஸர்ககஸ்சேதி த்வெனபக்ஷேன—தத்ர ஹனனபக்ஷ மந்த்ரா: பூர்வமேவோக்தா: அதோத்ஸர்ககபக்ஷ மந்த்ரா உச்யந்தே".

பொருள்:—ராஜகவியைக் கொல்லவும் விடவும் விதியிருக்கின்றன வன்றோ. கொல்வதற்குரிய மந்திரம ஏற்கனவே சொல்லியிருக்கிறது இப்போது விடுவதற்குரிய மந்திரங்கள் சொல்லப்படுகின்றன.

7. "அஜோஸி ... ... த்வேஷாஸீ.

8. "யவோஸி ... ... த்வேஷாமஸீ.

அன்பர்களே! இவைகள் தவிர இன்னும் பலகொடிய விஷயங்கள் தைத்திரீய ஆரண்யகத்தில் இருக்கின்றன.

---

* ஆரியர்களுக்கு கரிய நிறததில் ஏனோ இவவளவு விரோதம் "த்வசம்க்ருஷ்ண மரந்தயத்." கருப்புத்தோலுடையவர்களைக் கொல்லவேண்டுமென்பதையும இதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

## வியாசர் வேதத்தை மூன்று பிரிவுகளாகச் செய்தார்.

வியாசர் பல ரிஷிகளிடத்திலிருந்தும தெரிந்த வாக்கியங்களைத் தொகுத்து அவைகளை மூன்று பிரிவுகளாகச் செய்து முதற் பகுதிக்கு "ரிக்வேதம்" எனப்பெயரிட்டு அதைப் "பைலன" என்னும் ரிஷிக்கு கொடுத்தார். இரண்டாம பகுதியை "யஜுர்வேதம்" எனப்பெயர் சூட்டி "வைசம்பாயன" ரிஷிக்கு கொடுத்தார். மூன்றும பகுதியை "சாமவேதம்" எனப்பெயரிட்டு வைத்தார் இதை எந்த சிஷ்யனுக்கு கொடுத்தாரோ அறியேன். இதில "யஜுர்வேத"த்தைப் பெற்றுக் கொண்ட "வைசம்பாயன"ரிடம "யாஜ்ஞவல்கிய" ரென்பார் சிஷ்யராக அமர்ந்து வேதத்தைக் கற்றுக்கொண்டிருந்தார். ஒருநாள் குருவுக்கும சீடனுக்கும பெருஞ்சண்டை நேர்ந்தது. அப்போது "யாஜ்ஞவல்கியர்" தான் படித்த வேதம முழுதையும வாந்தி பண்ணிவிட்டார். அதை "தித்திரி" என்னும் பறவை உட்கொண்டு விட்டுபாட ஆரம்பித்ததாம. அது முதற்கொண்டு அதற்கு "தைத்திரீயம" "கிருஷ்ண யஜுர்வேதம்" எனப்பெயர் உண்டாயிற்று. பிறகு யாஜ்ஞவல்கியர் "சூரிய"னிடம சென்று வணங்கி புதிய ஒரு வேதத்தைக கற்றுக கொண்டார். இப்புதிய வேதத்திற்கு "சுக்லயஜுர்வேதம்" அல்லது வாஜஸனேயீ எனப்பெயர். இதைககுறித்த வரலாறு வருமாறு:—

1. "ஆதித்யா னீமானி சுக்லானி யஜுமஷி வாஜஸனேயேன யாஜ்ஞவல்கியேனாக யாயந்தே."

(சதபதம் அத்யாயம 14)

சுக்லயஜுர்வேத ஸம்ஹிதை நாற்பது அத்தியாயங்களையுடையது கொலைத்தொழிலை உபதேசிப்பதில் இது கிருஷ்ணயஜுர்வேதம போலவேயாம் இதன் பொருளட்டவணையைக் கவனியுங்கள்.

தர்ச பௌர்மாஸ 1. 2. அத்தியாயங்கள்.
அக்நிஷ்டோம 4ம அத்தியாயம.
உபாம சுக்ரஹமந்த்ர 7ம அத்தியாயம.
ராஜஸூய ஸௌத்ராமணியாகம பத்தாம் அத்தியாயம்.
சிதி. 12-13-14-15 அத்தியாயங்கள
ஆதானம. அத்தியாயம் 3

ஆதித்யேஷ்டி 5—6
ஆதித்யகரஹமந்த்ரம். 8.
சயனா 11
சதருத்ரீயமந்த்ரம் 16
சிதிவஸோர்தாரா 17—18
அஸ்வமேதம 22
பசுப்ரகரணம், 24
புருஷமேதம். 30–31.
பித்ருமேதம, 34—35
ப்ராயஸ்சித்தம, 37-38-39.
ஸௌத்ராமணி, 19—20—21.
* அஸ்லீல பாஷணம, 23.
அஸ்வமேதம், 25–26–27–28–29.
ஸர்வமேதம், 32—33
சாந்திபாடம், 36
ஜ்ஞானகாண்டம். 40

இதன்மேல் பலர் பாஷியம் செய்திருக்கிறார்கள் மஹீதரன். யம்மடன், ஸாயணன், கர்கன், முதலியவர்கள் பாஷ்யம செய்தோராவர்.

இவ்வேதத்தின் வாக்கியங்களிற் சில கூறுகின்றேன்

"ருதஸ்யவா தேவஹவி: பாசேனப்ரதி முருகாமி தர்ஷா மானுஷ:" (அத்தியாயம 6)

ஹேதேவ ! ஹவி : தேவானும் ஹவிரூபயஜ்சூஸ்ய பாசேனத்வாம ப்ரதி முஞ்சாமி ஏவம் பசும் ஸபபோத்ய மித்ரே ஸமர்ப்பயதி. வ்யாபத்யெபரிமிதயா ருசாருதயா ரஜவா நாகபாசம க்ருத்வா ஸ்ருங்கயோரந்தராலே பசும் சாகமபதநாதி பாசம் ப்ரதி முஞ்சேதிதி

(மஹிதரபாஷியம் அத்தியாயம 6)

---

* அஸ்லீலபாஷணம் = அருவருப்பானபேச்சு. இது அஸ்வமேத யாகததில் புரோகிதர்களுக்கும் பெண்களுக்கும் நடப்பது "ஞானசூரியன்" முதல் பாகத்தில் பார்க்கவும்.

கருத்துரை:—இரண்டு மாறு நீளமுடைய கயிற்றிருல் பசுவை யூபத்தில் கட்டி சமிதா (யாகத்தில் பசுவைக் கொல்லுபவன்)என்னும புரோகிதனிடம் கொடுக்கவேண்டும். பின்னர் "நீ தைவத்துககு உணவாகக்கடவாய்" எனப் பசுவுக்குச் சொல்லவேண்டும்.

2. "தேவஸ்யத்வா ஸவிது:...." (அத்தியாயம் 6)

3. 'அக்நீஷோஷ்மாப்யாம் ஜுஷ்டம் நியுனஜ்மி" (அத்—6)

பொருள்:—அக்நீஷோம தேவதைகளுக்குப் பிரியமான பசுவை யூபஸ்தம்பததில் கட்டுகிறேன்.

4. "அத்ப்யோ ஸ்வௌஷதீப்யோ அனுவாமாதா......"

பொருள்:—பசுவின் மீது நீர் தெளிக்க வேண்டும்.

5. "ப்ராணமதே சுந்தாமி வாசமதே சுந்தாமி..."

பொருள்:—பசு இறந்தபின் யாகஞ்செய்பவனுடைய மனைவி யானவள் "ப்ராணம் தேசுந்தாமி" இது முதலிய மந்திரங்களைச சொல்லி முகம் முதலிய எட்டு இடங்களில் கையில நீர் தொட்டு தடவவேண்டும்.

6. "க்ருதேன த்யாவாப்ருதிவீ......"

பொருள்:—பசுவின வயிற்றைக் கிழித்து "வபா" என்னும் கொழுப்பை எடுத்து அதன்மீது நெய்விட்டு ஹோமம்செய்யவேண்டும்

7. "அஸ்வஸ்து பரோமகோ மருகஸ்தே ப்ராஜாபத்யா:" (அத்தியாயம 24)

"அஸ்வமேதிகானும் பசூனும தேவதா ஸம்பந்தவிதாயிஞேத்யா யேஞேசயந்தே தத்ராஸ்வமேதே ஏகவிம்சதிர்யூபா: ஸந்தி தத்ர மத்யமே யூபே ஸப்ததசபசவோ நியோஜனீயா: சதத்ரயஸங்க்யாகா னும பசூனும் மத்யே பஞ்சதசபஞ்சதச பசூனே கைகஸ்மின் யூபே யுனக்தி" (பாஷ்யம்)

பொருள்:—இந்த அத்தியாயத்தில் அஸ்வமேதத்திற்குரிய பசுக களைக் குறித்த விதிகள் சொல்லப்படுகின்றன. அஸ்வமேதயாகத் திற்கு யூபங்கள் இருபத்தொன்று. அவைகளின் நடுமத்தியிலுள்ள

ஒரு யூபத்தில் பதினேழு பசுக்களைக் கட்டவேண்டும். மற்ற யூபங்களில் யூபம் ஒன்றுக்கு பதினைந்து பசுககள் வீதம் முன்னூறு பசுக்களைக் கட்டவேண்டும்.

8. "ரோஹிதோ தூம்ரரோஹித: கற்கந்து ரோஹிதஸ்தே ரோஹித: ஸர்வாக்த:"

பொருள்:—சிவந்த பசு, கருமை கலந்த சிவபபு, இலந்தைப்பழச் சிவப்பு முதலிய பசுக்கள்.

9. "சுத்தவால: ஸர்வசுத்தவாலோ......"

பொருள்:—சுத்தமான மயிருடைய பசுக்கள் முழுதும சுத்தமான மயிருடைய பசுக்கள்.

10. "ப்ரஸ்னிஸ்திரஸ்வனி."

11. "க்ருஷ்ணக்ரீவா: ஆக்நேயா:"

12. உன்னத ருஷபோ வாமனஸ்த........."

13. "க்ருஷ்ண பெளமா:......."

14. "தூம்ரான் வஸந்தாயாலபதே"

15. "அக்நயேணிகவதே பரதமஜாலபதே"

16. "தூம்ரா பப்ருநிகாசா: பித்ருணாம்"

17. "* வஸந்தாய கபிலாநாலபதே"

"அதாரண்யா: பசவ உச்யந்தே கபிஞ்சலாதிஸ்த்ரயோதச."

பொருள்:—(இதுவரையில் நாட்டுப் பசுக்களைச் சொன்னோம) காட்டுப்பசுக்கள் இனிமேல் சொல்லப்படுகின்றன.

18. "ஸோமாய ஹம்ஸாநாலபதே." (ஹம்ஸம் = அன்னம்)

19. "அக்நயே குக்குடாநாலபதே" (குக்குடம் = கோழி)

---

* அஸ்வமேதயாகத்திற்கு முக்கியம் குதிரை. அது ப்ரஜாபதி தேவதைக்குரியது. மற்றதேவதைகளுக்கு, காட்டிலும் நாட்டிலும் உள்ள பலவகை மிருகங்களும் பறவைகளும் வேண்டும் 7 முதல் 27 வரையிலுள்ள மந்திரங்களால் அவைகள் இன்னின்னவை யெனக் கூறப்படுகின்றன.

20. "ஸோமாய லபானுலபதே."
21. பூம்யா ஆகூனுலபதே (ஆகு = எலி)
22. "வஸூப்ய ருஸ்யானுலபதே" (ருஸ்யம் = ஒருவகை மான்.)
23. "ஈநூனுய பரஸ்வத ஆலபதே"
24. "ப்ரஜாபதயே புருஷான் ஹஸ்தினுலபதே"(ஹஸ்தி = யானை)
25. "ஐன்யஹ்னே மண்டூகோ" (மண்டூகம = தவளை)
26 ஸ்வித்ர ஆதித்யா முஷ்ட்ரோ (உஷ்ட்ரம் = ஒட்டை)
27. "கட்கோ வைஸ்வதேவ"

"ஏவம் ஷஷ்ட்யதிகம் சதத்வயமாரண்யா: ஸர்வேமிலித்வா ஷ்ட்சதானி நவாதிகானி பசவோ பவந்தி தேஷ்வாரண்யா: ஸர்வே உத்ஸ்ரஷ்டவ்யா ந துஹிம்ஸ்யா." (பாஷ்யம்)

பொருள்:—இவ்வாறு காட்டுப்பசுக்கள் இருநூற்றறுபதும் சேர்த்து அறுநூற்றொன்பது பசுக்கள் ஆகின்றன. அவைகளில் காட்டுப்பசுக்கள் யாவும் அவிழ்த்துவிடப்படவேண்டும. கொல்லலாகாது. அன்பர்களே! இந்த யாகமந்திரங்களில் பலவகைப்பட்ட தேவதைகளுக்கு பலதிறப்பட்ட மிருகங்களையும், பறவைகளையும் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை விவரமாக இதில் எழுதவில்லை. காட்டிலும நாட்டிலும் வாழுகின்ற உயிர்கள்யாவும் யாகத்திற்கு தேவையானவை.

யஜுர்வேதம் வாஜஸனேயம முப்பதாம அத்தியாயத்தில் "நரமேதம்" சொல்லப்பட்டிருக்கிறது. நரமேதம சைத்ர சுக்ல தசமியன்று ஆரம்பிக்கவேண்டும். இதற்கு யூபஸ்தம்பங்கள பதினொன்று அவைகளில் பதினொரு ஆடுகளையும் இருநூறு மனிதர்களையும கட்டவேண்டும். அவைகளில் கட்டியிருக்கும உயிர்களுககு புருஷஸூக்தப்படி ஜலந்தெளிதது மனிதர்களை அவிழ்தது விட்டுவிட்டு ஆடுகளை மாத்திரம் அறுதது யாகம் செய்யவேணடும என்று மஹீதார் தனது பாஷியத்தில் சொல்லியிருக்கிறார். யஜ்ஞேஸ்வசாஸ்திரியால் எழுதப்பட்ட "ஆர்யவித்யாஸுதாரக" மென்னும நூலில் இவ்வாறு காணக்கிடக்கின்றது.

"யத்ர பசுஸாமான்யோக்தஸ்தத்ர சாக: பசுர் க்ராஹ்யோபவதி"

பொருள்:—எவ்விடத்தில் பொதுவாகப் 'பசு' என்று விதியிருக்கிறதோ அவ்விடத்தில் ஆடாகிய பசுவைக் கொள்ள வேண்டும்.

இதனால் கோ, தேனு, முதலிய சிறப்புப் பெயர் காணுமிடத்து அவைகளையே கொள்ள வேண்டுமென்று பொருளாய்விட்டது.

யஜுர்வேத மந்திரங்கள் அறிவிலிகளுக்கு கூட வெட்கந் தரக் கூடியவை. மரியாதை ஒரு சிறிதுமில்லாத குடிகாரர்கள் கூடச் சொல்லியறியாத அருவருப்பான பல வார்த்தைகளை யஜுர்வேதம் இருபத்தி மூன்றும் அத்தியாயத்தில் காணலாம்.

அஸ்வமேத யாகம் பண்ணினால் அளவிறந்த புண்ணியம் கிடைக்கும். பல அரசர்கள் இந்த யாகத்தைச் செய்து சிரஞ்சீவிகளாய் வாழ்ந்தார்கள். பலர் மோட்சமடைந்தார்கள். பலர் இந்திரப்பட்டம் பெற்றார்கள். நம்மவர்களில் ஒருவர் பண்டைக்காலத்தில் ஏதோ ஒரு காட்டில் *தவஞ் செய்து கொண்டிருந்ததைப் பொறாது அவரைக் கொலைசெய்த புண்ணியவானும் பிராமணருக்கு அன்பனும் விஷ்ணுவின் அவதாரமுமான "ஸ்ரீ இராமபிரான்" தசரத சக்ரவர்த்தியின் அஸ்வமேத யாகத்தின் முடிவிலுள்ள "புத்ரகாமேஷ்டி"யின் பயனாகப் பிறந்தவரன்றோ? இதைக் குறித்த கதை வால்மீகி ராமாயணத்தில் காண்க.

என்னால் எழுதப்பட்ட ஞான சூரியன் முதற்பாகத்தில் புத்திர காமேஷ்டியின் விவரம் வேதத்தினின்றும் எடுத்து எழுதியிருக்கிறேன். அன்பர்கள் அதை நன்றாக வாசித்து பார்த்து தெளிவார்களாக.

"அஸ்வமேத"த்தைக் குறித்த விவரம் ரிக்வேத ஸம்ஹிதா இரண்டாம் அஷ்டகம் மூன்றும் அத்தியாயம் ஏழு முதல் பதின்மூன்று வரையிலுள்ள வர்க்கங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அவையில் சில கீழ் எழுதுகின்றேன்.

‡"அஸ்வமேத தீர்க்கதமா ஔசத்ய: த்ரிஷ்டுப்".

---

* ராமாயணம் உத்தரகாண்டம் "சம்பூகன்" கதை.

‡ மஹா மஹா பெருமை பொருந்திய இந்த யாகத்தைக் கண்டு பிடித்தவர் " தீர்க்கதமா " என்னும் ரிஷியாவர்.

* வேத மந்திரத்திற்கு சரியான தமிழ்:—

அஸ்வமேதக் குதிரைக்கு முன் நிறுத்தியிருக்கிற 'ஆடு' பூஷா என்னும் தேவனுககாகக் கொண்டுவரப்பட்டது. இந்த குதிரையின் இறைச்சியில் சிறிது ஈக்கள் தின்றுவிடும். சிறிது கத்தியில ஒட்டும். சிறிது குதிரையைக் கொன்று மாமிசத்தை எடுப்பவனுடைய கை நகங்களுக் கிடையில் புகுந்துவிடும். ஆதலால் ஈக்களும் கத்தியும் குதிரையைக் கொல்பவனும ஸ்வர்க்கத்தை அடைவார்கள். குதிரையும் ஸ்வர்க்கத்தை அடையும். குதிரையின் வயிற்றைக் கீறி குடலுக்குள் ஜீரணமாகாது கிடக்கும் பச்சைப்புல்லை எடுத்து மாமிசத்தை நன்ருகக் கழுவி சுத்தமாய் சமைக்கவேண்டும். குதிரையின் உடம்பில் முப்பத்து நான்கு மாமிசப் பகுதிகள் இருக்கின்றன. அவைகள் கேடுருவண்ணம் கத்தியினுல் சுததமாக எடுககவேண்டும். உறுப்புக்கள் தனித்தனியாக எடுத்து வைக்கவேண்டும். இந்த அஸ்வமேத யாகத்தினுல் நமககு ஆடு, மாடு, குதிரை, நல்ல மனைவி, புத்திரர்கள் சரீரவன்மை முதலியன உண்டாகும்.

முன் ஒருகாலத்தில் துஷ்யந்தனுடைய புத்திரனுன ‡ பாதன் கங்கையாற்றின் கரையில் ஐம்பத்தைந்து அஸ்வமேத யாகங்களைச் செய்தான். அவனைப்போல் அதற்கு முன்னும் பின்னும் எந்த அரசனும் செய்யவில்லை.

(ஐதரேய ப்ராஹ்மணம் பஞ்சிகா 8.
காண்டம் 23.)

இவ்வாறே இராமபிரான் ராவணனைக் கொன்ற பாவத்தைத் தீர்ப்பதற்கு அஸ்வமேதம் பண்ணினதாகவும் பாண்டவர்கள் யுத்தத்தில் பந்துககளைக் கொன்ற பாவந்தீர்க்க அஸ்வமேதம் செய்ததாகவும் புராணங்களில் காணலாம்.

---

* வேதமந்திரங்கள் தமிழில் எழுதுவதே மிகக்கஷ்டம் வாசிப்பவர்களுக்கு அதைவிடக் கஷ்டம். ஆகையால் மந்திரத்திற்கு சரியான தமிழ் எழுதலாயிற்று.

‡ இப் "பாதன்" துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறநதவன் நமது நாட்டிற்கு 'பாரதம்' என்ற பெயர் இவனுடைய ஆட்சியின் பின் ஏற்பட்டதெனப் புராணங்கள் கூறுகிற்கும்.

அன்பர்களே! ரிக வேதத்தையும் யஜுர் வேதத்தையும் எடுத்து காண்பித்தேன். ஸாமவேதமும் இதற்கு குறைந்த தல்ல. ஸாம வேதத்தைச்சார்ந்த "தாண்டமஹாப்ராஹ்மண" த்தில் யாகக்கொலை களைக் குறித்து விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு "ஸாயணர்" பாஷியம் செய்திருக்கிறார். இவர் கர்னாடக தேசத்தில் "விஜய நகரம்" புக்க அரசனுக்கு மந்திரியா யிருந்தவர். சன்னியாசம பெற்றுக் கொண்டபின் "வித்தியாரண்ய சுவாமிகள்" என தீக்ஷா நாமம் பெற்றார். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார்.

அன்பர்களே! ரிக்வேதம், க்ருஷ்ண சுக்ல யஜுர் வேதம் இவைகளின் ஸ்வரூபத்தை நீங்கள் கண்டுகொண்டீர்கள். சாமவே தத்தையும் சிறிது கவனியுங்கள்.

சாமவேதத்தில் சொல்லப்பட்ட யாகங்களின் பெயர் :—

1. அக்நிஷ்டோமாதி ஸப்தக்ரது.
2. ஔபஸதக்ரது.
3. சதுஷ்டோமக்ரது.
4. உத்பாத்வலபிதக்ரது.
5. இந்த்ராஸ்தோமக்ரது.
6. நிதனக்ரது.
7. வசிஷ்டக்ரது.
8. சதுராத்ர.
9. விஸ்வாமித்ர ஸஞ்சய சதுராத்ர.
10. பஞ்ச சாரதிய பஞ்ச ராத்ர.
11. *விச்வஜித் ஏகாதச ராத்ர.
12. ப்ரக்ஷ்யாக்யக்ரது.
13. சைத்ராதக்ரது.
14. கர்க்கக்ரது.
15. அங்கிரஸாமயனக்ரது.
16. சதராத்ரக்ரது.
17. த்வாதசஸம்வத்ஸரஸத்ர.
18. ஷட்த்ரிம்சத்ஸம் வத்ஸர
19. ஸாரஸ்வதஸத்ர.. (ஸத்ர.
20. ராடக்ரது
21. ஜ்யோதிக்ரது.
22. ரிஷபாக்யக்ரது
23. குடாயாக்யக்ரது
24. த்ரிகத்ருக ஷட்ராத்ர.
25. ப்ராஜாபதி ஸப்தராத்ர
26. ஐந்த்ரஸப்த ராத்ர
27. ஜனகஸப்தராத்ர
28. தேவ நவராத்ர

---

* "விச்வஜித்" என்னும் யாகத்தில் தனக்கிருக்கிற பொருள் யாவும் பிராமணர்களுக்கு தானம் பண்ண வேணும். ரகுவம்ஸத்தில் 'ரகு' மஹாராஜா இந்தயாகம் பண்ணினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

29. விம்சதி ராத்ர.
30 த்ரயஸ்த்ரிம்ச சதி ராத்ர
31. சத்வாரிம்ச சத் ராத்ர
32. ஏகஷஷ்டி ராத்ரகரது
33 ஸஹஸ்ரஸம வத்ஸரஸத்ர
34. * ஸர்ப்பஸத்ர
35. விஸ்வஸ்ருஜ மயனக்ரது.
36. ஆதித்யப்ருஷ்டயமனக
37. ஸிமவதஸாஸத்ர. (ரது

இவை முதலியன. இந்த யாகங்களிற் பல, பலவருஷங்கள் தொடர்ந்து செய்யத்தக்கன "த்வாத சஸம வக்ஸரஸத்ர" "ஸஹஸ்ர ஸம வத்ஸரஸத்ர" முதலியவைகளைக் கவனியுங்கள். யாகங்களைச் செய்வதற்கு பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களே அதிகாரிகளாவர் செய்வித்தல் பிராமணனுக்கு மாத்திரமே உரியது. இம்மூவர்களின் உபனயன, விவாக அநேதேஷ்டி (ஈமசசடங்கு) முதலிய சடங்குகளிலும் சிற்சில மாறுதல்களை காணபபடுகின்றன. ரிக்வேதயஜுர் வேதங்களில் உள்ள யாகக் கொலைகளைக் காட்டிலும் ஸாமவேத "தாண்ட மஹாப்ராஹ்மண" த்தில் அநேக வருஷங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். அநியாய யாகங்கள் பல காணக் கிடைப்பதால இந்த தாண்டமஹாப்ராஹ்மணம் நமது நாடு முற்றிலும் பிராமணர்களுககு அடிமையான பின் அவர்கள் மகிழ்சசிப் பெருக்கால் மதி மறந்து தாண்டவமாடிய காலத்தில் எழுதப் பெற்றிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

இப்பிராஹ்மணத்தின் சில வசனங்களை மொழி பெயர்த்து கீழே எழுதுகிறேன்.

1 பூமில்லாவிட்டால் பசுககளைப் பரிதியில் கட்டவேண்டும் தாண்டமஹாப்ராஹ்மணம் 17-13-4.

2. வைசியனை யாகம் செய்விககவேண்டும. 18-4-5.

3. இதனல் வைசியனுக்கு பசுவும் பொருளும அதிகப்படும். 18-4-6.

4. அக்நிஷ்டோம யாகத்தைச் செய்பவன் புண்ணியலோகத்தை அடைவன். 19-11-11.

---

* "சர்ப்பஸத்ரம்" ஜனமேஜெய மகாராஜன் செய்ததாக 'பாரத' மென்னும் இதிகாசத்தில் காணலாம்.

5. இதை இவ்வாறு உணர்ந்தவன் ஸ்வர்க்கத்தை அடைவன். 19-13-1.

6. இதை இவ்வாறு உணர்ந்தவன் "பரமேஷ்டி" த்தன்மையை அடைவன். (பரமேஷ்டி = ப்ரஹ்மா.) 19-13-4.

7. "விகன்" யஜ்ஞமாவது. 19-18-1.

8. பண்டு தனது பகைவர்களை எவ்விதம் கொல்லலாமென எண்ணிய இந்திரன் இந்த "விகன" யஜ்ஞத்தை உணர்ந்து முறைப்படி நடத்தினன் 19-18-2.

9. பதினேரு பசுக்களை பதினேரு கயிறுகளால் பதினேரு யூபங்களில் கட்டவேண்டும். 20-2.4.

10. இந்தயாகம் செய்தால் எண்ணிய எண்ணம் ஈடேறும். 20-2-5.

11. "அக்னீஷோம" தேவனுகசு ஆட்டைக் கொடுக்க வேண்டும் 21-14-11.

12. "இந்திர"னுக்கும "மருத்" என்னும் தேவனுக்கும் பசுமாட்டைக் கொடுக்கவேண்டும. அன்றியும் "மருத்" தேவனுக்கு கன்றுகுட்டியையும் கொடுக்க வேண்டும். 23-14-11.

13. பசுக்களின் பெருக்கை விரும்புபவனுல் யஜ்ஞம் செய்யப் படவேணடும். 22-6-2.

14. "சோம" "பூஷா" தேவதைகளின் பொருட்டு பசுவைக் கொல்லவேண்டும. 23-16-4

அன்பர்களே, இவ்வாறு ஸாமவேதம் "தாண்டமஹாப்ராஹ்மண" த்தின்படிக்குள்ள யாகக் கொலைகளையும உங்களுக்கு விளக்கிககாட்டினேன். இததகைய யாகஙகளினுல செல்வம, பசு, சநததி இவைகள விர்த்தியாவதோடு சுவர்க்கலோகப், பிரமபதவி முதலியனவும அடையப்பெறமாம.

நான்காவது வேதம "அதர்வணம்" இதைச்சார்ந்த ப்ராஹ

---

* "பரிஇ" என்பது யாககுண்டத்தின் சுற்றிலுமென நினைக்கிறேன்,

மணம் "கோபத" மெனப்படும். இவ்வதர்வண வேதம் * கொலை நூலென்பதற்கு உலக வதந்தியே போதுமான சாட்சியாயிருக்கிறது ஆயினும் ஒன்றிரண்டு வாக்கியங்களை மொழிபெயர்த்து எழுதிகிறேன்

"ஆஹிதாக்நி"யின் அக்நிகள் மாமிசத்தையே விரும்பிக் கொண்டிருப்பதால் இந்திர அக்நி தேவதையின் பிரியத்தின் பொருட்டு யஜமானன் ஆறுமாதங்களுக்கொருதடவை பசுவைக் கொல்ல வேண்டும.

(கோபதப்ராஹ்மணம ப்ரபாடகம். 2.)

"ப்ரதிஸம்வத்ஸரம ஸோம: பசும் ப்ரத்யயனம் ததா" வருஷத்திற் கொருதடவை ஸோமயாகமும் ஆறுமாதங்களுக் கொருதடவை பசுயாகமும் செய்யவேண்டும என்கிற ஸ்மிருதிவசனம் இதை உறுதிப்படுத்துகிறது.

"யாகத்தில் பசுவைப் பங்கிடும முறை கோபதப்ராஹமணம் பிரபாடகம் 3. கண்டம் 10ல் கூறப்பட்டுள்ளது. 'இது ரிக்யஜுஸ் முதலிய வேதங்களில் எப்படியோ அப்படியே இருக்கிறது. இம்முறையை வேதமந்திரங்களுடன் ஞானசூரியன் முதற் பாகத்தில் எடுத்துக்கூறியிருப்பதால் இந்நூலில் கூறாது விடுத்தேன். வேதங்கள் நான்கும் கொலையை வற்புறுத்திச் செய்விப்பதில் ஒன்றிற்கொன்று பின்னணியில் நிற்பதைக்காணும். சடங்குகளிற் சிற்சில இடங்களில் சிறு சிறு மாறுதல்கள் காணப்படுகின்றன. ஒரு வேதத்தில் யாகத்திற்கு ஹோதாவிகள் இடது பககம் நெய் வைக்கவேண்டுமெனச்" சொல்லியிருக்கும் மற்றொரு வேதத்தில் வலது பக்கத்தில் வைக்க வேண்டுமென்றிருககும் இவ்வாறே மந்திரத்தை நின்றுகொண்டும், உட்கார்ந்து கொண்டும் படிக்கும்படி விதிகள் காணப்படுகின்றன. இம் மாறுதல்கள் புரோகிதர்களின் சௌகரியத்திற்கேற்ப மாற்றப்பட்டவையாகும்.

வேதம் கடவுளால் ஆக்கப்பட்டது என்றல்லவோ பிராமணர்கள் சொல்லுகிறார்கள். பிராமணரல்லாதாராகிய இந்துக்களும் நம்பு

---

* நமது நாட்டில் "மந்திரவாதியை" அதர்வணவேதம் தெரிந்தவன் என்பார்கள். இவ்வேதத்தில் பலவகை மாரணம் முதலிய சூனியப் பிரயோகங்கள் அடஙகியிருப்பதாகப் பண்டைக்கால முதற்கொண்டே ஜனங்கள் நம்பியிருக்கிறார்கள்.

கிறார்கள். இக்கூற்றும் நம்பிக்கையும் முறையே பிராமணரின் ஜாதிச் செருக்கையும் பிராமணரல்லாதாரின் அறியாமையையுமே உணர்த்துகின்றன. "வேதங்களைச் செய்தவர்கள் ரிஷிகளே யாவர். அவர்களால் சொல்லப்படுவது யாதோ அதுவே தேவதை" இதற்குப் பிரமாணம்:-

"யஸ்யவாக்யம் ஸரிஷி: யாதேனோச்யதேஸா தேவதா. யதக்ஷர பரிமாணம் தச சந்த:................" யஜுர்வேதம் தைத்திரீய ஆரண்யகம் ப்ரபாடகம்1 அனுவாகம்1.

இவ்வாறே ரிக்வேதத்திலும் பலவிடங்களில் காணலாம். உதாரணம்:—

"ரிஷேர் மந்த்ர க்ருதாஸ் தோமை: கஸ்ய
போத்தர்த்தயன் கிர:"

கீதையிலும இவ்வுண்மை காணக்கிடக்கின்றது.

"ரிஷிபிர் பகுதாகீதம் சந்தோபிர் விவிதை: ப்ருதக்."

(கீதா அத் 13. சு. 4.)

(பொருள்:— பலரிஷிகள் பல யாப்புகளில் பலவாறு பாடினதே வேதம.

இவ்வாறிருக்கப் பிராமணர்கள் சொல்வது பொய்தானோ என்றால் ஒருவகையில் பொய்யும் மற்றொருவகையில் உண்மையுமாகும். எப்படியென்றால் நிகண்டில் பிராமணனை உணர்த்தும் சொற்களில் "ப்ரஹ்மா" என்னும் சொல்லும இருக்கிறது, "யம் "ப்ரஹ்மா" ணமியம் தேவீ வாக்வஸ்யே வான்வவர்த்தத. உத்தரம் ராமசரிதம் தத்ப்ரணீதம் ப்ரசக்ஷதே. என்னும் சுலோகத்தால் "பவபூதி" என்னும் கவி தன்னை "ப்ரஹ்மா" வென்று சொல்லிக்கொள்கின்றார். ரிஷிகளாகிய ப்ரஹ்மாக்களின் முகத்திலிருந்து வெளிப்பட்டதே வேதம். இக்காரணத்தினால் பிராமணர்களின் வாக்கு உண்மையாகும இதை ஆராய்ந்துபார்க்காமல் "ப்ரஹ்மா" வென்றால்கடவுள்; அவரால் சொல்லப்பட்டது வேதம் என்று நம்பினார்கள் பார்ப்பனரல்லாதார். இவர்களின் அறியாமையை நீக்க முயற்சிஎடுத்தால் தங்களின் சூதுவெளிப்பட்டுவிடுமென்று நீங்கள் வேதம்படிக்கலாகாது நாங்கள் சொல்வதைத்தான் கேட்கவேண்டும் என்று பலவித கட்டுதிட்டங்கள் ஏற்படுத்தி தங்கள் அக்கிரமங்களை வெளிவாராதவண்ணம் செய்த காரணத்தினால் பிராமணர்கள் பொய்யர்களுமானார்கள்.

இதன்கீழ் சிரௌளதசூத்ரங்களினின்றும் க்ருஹ்யசூத்ரங்களினின்றும் சில எடுத்து எழுதுகிறேன். சிரௌதஸூத்ரங்கள் யாகம் செய்யும் விதிகளைத்தெரிவிப்பன. கிருஹ்யசூத்திரங்கள் கிருஹஸ்தனுடைய தர்மங்களை உணர்த்துவன. சூத்திரங்கள்யாவும வேதத்தின் அர்த்தத்தை விளக்கிக் கூறுவன வாகையால் வேதத்தைப்போலவே நினைக்க வேண்டுமென்று "யாஸ்காசார்யர்" சொல்லியிருக்கிறார். ஆகையால் அவைகளின் ஸ்வரூபத்தையும் சிறிது கவனியுங்கள்.

1. *பசுவைக் கொல்லவேண்டும.
(ஆஸ்வலாயனஸ் ரௌத சூத்ரம் சுத. 3. கண்டிகை. 3)

2. தேவதைகளுககு வேறு வேறு பசுவேண்டும.
(அத்தியாயம 3. கண்டிகை 7.)

3. ‡ஆறுமாதங்கட்கொருமுறையும் வருஷத்திற்கொருமுறையும் "நிரூட பசு" என்னும் யாகம் செய்யவேண்டும்.
(அத்தியாயம். 3. கண்டிகை. 8.)

4. ஸௌத்ராமணி (கள்குடிக்கும் யாகம்) செய்யவேண்டும்.
(3. 9.)

5. அஸ்வின' ஸாரஸ்வத, இந்தர, இம்மூன்று தேவதைகளின் பொருட்டும் பசுவைப்பலியிடவேண்டும். நான்காவது பிரகஸ்பதிக்கும் பசுவேண்டும இந்திரன், சவிதா, வருணன் இவர்களுக்கும பசுவைக் கொடுக்கவேண்டும். (3. 9)

6. பூர்ணிமா (பருவம) அமாவாசி, சாதுர்மாஸம் இவைகளில் பசு அவசியம் கொல்லப்படவேண்டும். (4. 1.)

7. "ஸவனீய" த்திலும் பசு வேண்டும. (5. 3.)

8, அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்தம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம். அப்தோர்யாமம என யாகத்தின் ஸம்ஸ்தைகள் ஏழு. (6. 11.)

---

* ஸம்ஸ்கிருத சூத்திரங்களின் தமிழ்.

‡ இந்த சூத்திரத்திற்கு "நாராயணவருத்தி" என்னும் உரையில் இந்த நிரூட பசுயாகம் ஆறுமாதத்திற்கொருதடவை செய்தாக வேண்டும். ஆண்டுதோறுமாவது என்று எழுதியிருக்கிறது.

9. அக்கினிக்கும் இந்திராக்கினிக்கும் பதினொன்று பசுக்கள் தேவை. (உத்தராஷ்டகம். 3. 2.)

10. வாயுதேவதைக்கும் பசுவேண்டும் (உத்தராஷ்டகம். 3. 2)

11. யாகத்தில் இறந்த குதிரையையும யாகம் செய்பவனின் மனைவியையும் சேர்த்து துணியினால் மூடவேண்டும்.

(உத்தராஷ்டகம். 4. 8.)

12. யாகத்தில் கொல்லப்பட்ட பசுவின் இறைச்சியைப் பங்கிடும முறை. (உத்தராஷ்டகம. 6. 9.)

இவை "ஆஸ்வலாயன" ரால் செய்யப்பட்ட சிரௌத சூத்திரங்களாகும இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களையுடையது. முதல் ஆறத்தியாயங்களில் பூர்வக்ரது வின்ஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. பின் ஆறத்தியாயங்களில் உத்தரகதுவின் ஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவருமாறு:—

1. இராஜசூயம்.
2. கவாமயனம்.
3. கோஸவம.
4. அஸ்வமேதம்.
5. அங்கிரஸக்ரது
6. சாகமேதம்
7. பஞ்சசாரதீய
8. விஸ்வஜித்.
9. பௌண்டரீகம்.
10. பாதத்வாதசாஹம்.
11. ஸம்வத்ஸரஸத்ரம்.
12. மஹாவ்ரதம்.
13. ராத்ரிஸித்ரம.
14. சதராத்ரம்.
15. ஸ்தோமம்.
16. த்வாதசஸீமவத்ஸரம்.
17. ஸஹஸ்ரஸம்வத்ஸரம்.

ஆஸ்வலாயன சிரௌதஸூத்ரம் உத்தரஷட்கம் (பின் ஆறத்தியாயங்கள்) ஏழாவது கண்டிகையில் இவ்வாறு காணக்கிடக்கின்றது.

மஹாவ்ரதயாகத்திற்கு எருதைக்கொல்லவேண்டும்.

"ஏகாதசி" என்னும யாகத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பசுவீதம் வேண்டும்.

"சூரியஸ்துதா" என்னும் யாகத்தினால் புகழ் விர்த்தியாகும்.

பசுவை விரும்புபவன் "கோஸவம" செய்யவேண்டும்.

அதிகாரத்தை விரும்புவோன் "வாஜபேயம்" செய்யவேண்டும்.

"ஜ்யோதி" என்னும்யாகத்தினால் சமிர்த்தியுண்டாம். (சமிர்த்தி-தனம் தானியம முதலிய செல்வம்.)

"நவஸப்ததச" யாகத்தினுல் சந்ததியுண்டாம்.

"ஆங்கிரஸ" யாகத்தினுல் ஸ்வர்க்கம கிடைக்கும்.

"சைத்ரரதம" என்னும யாகத்தினுல் தானியவிருத்திபுண்டாம்.

"அத்ரைஸ்சதுர்வீர" யாகத்தினுல் தைரியம அதிகப்படும்.

"ஜாமதக்நம்" என்னும யாகத்தினுல் புஷ்டியுண்டாம.

"ஷடஹபஜ்ஞ" த்தால் பிரதிஷ்டை கிடைககும

"ஸம்பார்ய" யாகத்தால் ஆயுள் அதிகரிககும்.

"ஸமவத்ஸர ப்ரவல்ஹ ம" என்னு ம யாகத்தினுல் லக்ஷ்மீ பிராப்தி யுண்டாம.

"கவாமபனம்" என்னும் யாகத்தால் எல்லாம் கிடைக்கும்.

இத்தகைய யாகங்களைச் செய்வதற்கு "அக்நிஹோத்ரி" யே அதிகாரியாவன். அவனுடைய கர்மம் சிரௌத சூக்திரங்களில் சொல்லபட்டுள்ளது. கிருகஸ்தனுடைய தர்மங்களைக்கூறும் நூலுக்கு கிருஹ்ய சூத்திரமெனப்படும ஆஸ்வலாயனரால் செய்யப்பட்ட கிருஹ்ய சூத்திரம் நான்கு அததியாயங்களையுடையது. தினந்தோறும் அக்கினியை வழிபடவேண்டும். மூன்று நாட்கள்வரை அக்கினியை வழிபடாத கிருகஸ்தன் சூத்திரனுய்விடுவான். ஆகையால் அக்கினியை வழிபட்டாகவேண்டும். அககினிவழிபாடு கலியாணமான நாள்முதல் ஆரமபமாகிறது. இத்தகைய அக்கினி வழிபாடுடைய கிருகஸ்தனுக்குப்பிறக்கும் பிள்ளைகளுக்குப் பிராமணத்தன்மையை உண்டுபண்ணுவதற்கு "கர்ப்பாதான பும்ஸவன ஜாதகர்ம அன்னபராசன சூடா உபநயன, அந்த்யேஷ்டிமுதலிய பதினறு ஸம்ஸ்காரங்கள் கிருஹ்ப சூத்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. "ஆஸ்வலாயனர்" ரிக்வேதததின் கருத்தை சூத்திரங்களாகச்செய்தார். * அக்கினிஹோத்திரம் செய்யாத கிருகஸ்தர்களுடைய தர்மம் தர்ம சூத்திரங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

அவையிற் சிலவருமாறு:—

1. பசுயாகத்தின் விதி. (1-11-1)

2. அககினிகுணடத்தின் வடக்குமூலையில பசுவைக்கொல்வதற்கு இடம அமைக்கவேண்டும அன்றியும் பசுவைக்குளிப்பாட்டி

---

* காரஹபத்தியம். ஆஹவனீயம். தக்ஷிணுக்நி என்கிற மூன்று அக்கினிகளையும் வழிபடுபவன் அக்கினிஹோத்திரி.

"பலாசமர"த்தின் பச்சைசுள்ளியைக்கொண்டு பசுவின்உடலைத்தொட வேண்டும். பின்னர் நீ தேவனுக்கு உணவாவாய்" என்று பசுவிற்குச் சொல்லவேண்டும. (1-11-1)

3. குறுவைநெல், வாற்கோதுமை இவைகளை போட்டுவைத்த ஜலத்தினால் பசுவைத் தெளிக்கவேண்டும. (1-11-1)

4. புல் எரித்துப்பிடித்துக்கொண்டு பசுவை வலமவரவேண் டும. (1-11-5)

5. பசுவின் முன்னால் எரிகின்ற புல்கற்றையைப் பிடித்துச் செல்லவேண்டும. (1-21-6)

6. பசுவைக்கொலைசெய்யும் இடத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும.

7. "வபா" என்னும கொழுப்பிற்குரிய மந்திரததைச சொல்ல வேண்டும்

8. பசுவைக்கொன்று அதன்நாபியினின்றும் "வபா" என்னும் கொழுப்பை அறுத்தெடுக்கவேண்டும்.

"நாராயணவ்ருத்தி" யென்னும உரையில் கூறுவதாவது. பசு வைக கொலைசெய்யுமிடத்தில் புல் விரித்திருககவேண்டும். அதன் மீது பசுவைக் கொலை செய்யவேண்டுமென்பதே வேதவிதி. கொலை செய்த பசுவின் "வபை" இருக்கிறயிடம தெரிந்து அவ்விடத்தைக் குறுக்காக அறுத்து வபையை எடுதது ஹோமம் செய்யவேண்டும்.

"ஆஸ்வலாயன கிருஹ்யசூத்திரம்" இரண்டாவது அத்தியாயத் தில் "அன்னப்ராசனம்" என்னும ஸம்ஸ்காரவிதி எழுதப்பட்டுளளது (அன்னப்ராசனம-குழநதைக்கு முதன் முதல் சோறூட்டுதல்)

1. ஆறுவது மாதத்தில் அன்னப்ராசனம் செய்யவேண்டும். (1-16-1)

2. ஆட்டை அறுத்து சமைத்து அன்னத்தையூட்டினால் தன தானியங்கள் பெருகும்.

---

* "மதுபாக்கம்" பசுமாடு, அல்லது எருது இவைகளின் இறைச்சி யை நெய்யில் வறுத்து தேன்விட்டுப்பிசைந்து உண்டைசெய்து விருந்தினனுக்கு படைப்பதே மதுபர்க்கம்.

3. "தித்திரி" என்னும் பறவையைக் கொன்று சமைத்து அன்னமூட்டினால் பிரமதேஜசுண்டாம்

க்ருஹயஸூத்ரம் முதல் அத்தியாயம இருபத்து நான்காவது கண்டிகையில் "மதுபர்ககம" கொடுக்கும்முறை சொல்லப்பட்டிருக கிறது.

1. யாகம் செய்வதற்கு "ரித்விக்" வீட்டிற்கு வந்தால் அவனுக்கு "மதுபர்க்கம" கொடுக்கவேண்டும். (1-24-1)

2. மணமகன் வீட்டிற்கு வந்தபோதும் மதுபர்க்கம் கொடுக்க வேண்டும். (1-24-1)

3. அரசனுக்கும மதுபர்க்கம் கொடுக்கவேண்டும். (1-3)

4. குரு, பெண்கொடுத்தமாமனார் சிற்றப்பன், தாய்கூடப் பிறந்த மாமன் (அம்மான்) முதலியோர்வீட்டிற்கு வந்தகாலத்தும் மதுபர்க்கம் கொடுக்கவேண்டும. (4)

5. குருமுதலிய முற்கூறியவர்களுக்கு முதலில் முகம் கழுவ ஜலத்தைக்கொடுத்துவிட்டு பின் *பசுமாட்டை நிவேதனம் பண்ண வேண்டும் (அவர்களுக்கு முனனால் நிறுத்தவேணடும) (சூ. 23)

6. "பின்னர் ஹோதாமே பாப்மா பாப்மா மேஹத" என்னும் மந்திரத்தைப்படித்து வீட்டிற்குடையவன் அந்தமாட்டைக் கொல்ல வேண்டும. (சூ 24)

7. மாம்ஸமில்லாமல் "மதுபர்க்கம்" முடியாது (சூ 26)

இரண்டாம் அத்தியாயம நானகாங்கண்டிகையில் "அஷ்டகா" விதானம் சொல்லப்பட்டுள்ளது. அப்போது பசுவைக் கொல்ல வேண்டும். அதற்குரிய சூத்திரங்களாவன:—

* "மதுபர்க்க"ம் கொடுத்த கதைகள் புராணங்களில் பலவிடங்களில் இருக்கின்றன "த்ருஷ்டவாராமோ முனீன் சீக்ரம் ப்ரத்யுத்தாயக்ருதாஞ்சலி பாத்யார்க்யாதி பிராபூஞ்ய காம் நிவேத்ய யதாவிதி இராமன் முனிகளைக்கண்டதும் விரைந்தெழுந்து கைகூப்பி வணங்கி பாத்யம் அர்க்கியம் முதலியவைகளால் பூஜித்து விதிப்படி பசுமாட்டை நிவேதித்தான் (அதயாத்ம ராமாயணம் உத்தர காண்டம்.)

பசுவைக்கொன்று வபையை எடுத்து ஹோமம் செய்யவேண்டும். (2-4-13)

நவமியன்று "அன்வஷ்டகா" செய்யவேண்டும்.

எந்தபசு கொல்லப்பட்டதோ அதன் இறைச்சியைச்சமைத்துப் பிராமணர்களுக்கு படைக்கவேண்டும. (2-5-2)

நான்காம் அததியாயததில் "அகநிஹோத்திரி" இறநதபின் அப்பிணத்தைக் கொளுத்துவதற்கு விதிசொலலப்பட்டுள்ளது.

"அகநிஹோத்ரி" நோயினுல் வருந்தியிருக்கும்போது அவனை அவன் வழிபடும் அக்கினியோடு ஊருக்குவெளியே எங்கேனும் கொண்டுபோய்விடவேண்டும (4-1-1)

நோய் நீங்கியவுடன் அவனை வீட்டிற்கழைத்துவரும்போது ஒரு பசுவைக்கொலைசெய்து அதையும வீட்டிற்கு கொண்டுவரவேண்டும் (4-1-4)

ஒருசமயம் அவன இறந்துபோனுல் (4-1-5) வண்டியில பிணத்தைப்போட்டு சுடுகாட்டிற்கு கொண்டுபோகவேண்டும. (4-2-3)

5. *"அனுஸ்தரணீ" அதாவது ஒரு விலங்கையும் பிணத்துடன் கொண்டுபோகவேண்டும் (4-2-4)

6. விலங்கினத்தைச்சார்ந்த இப்பிராணி பசுமாடாக இருக்க வேண்டும். (4-2-5)

7. அல்லது ஒரேநிறமுடைய ஆடாயிருக்கவேண்டும (4-2-6)

8. ஆனுல் அந்த ஆடு கருமை நிறமுடையதாயிருக்கவேண்டும். (4-2.7)

9. அந்த விலங்கின் கழுத்தில் கயிறிட்டு அக்கயிற்றைப் பிணத்தின் வலதுகையில் பிணைத்து அதைப்பிணத்துடன் அழைத்துச் செல்லவேண்டும. (4-1-8)

10. "அனுஸ்தரணி" யைக்கொன்று அதன் வபையை எடுத்து அதனுல் பிணத்தின் தலை முகம இவைமூடவேண்டும். (4-3-19)

---

* "அனுஸ்தரணி" அக்நிஹோத்திரியின் பிணத்தைக்கொளுத்தும் போது கொல்லப்படும் பசு.

11. "அனுஸ்தரணி,, யின் "யக்ருத்" அதாவது விலாப்புறத்தி லுள்ள ஒருவகை இறைச்சித்துண்டை எடுத்து பிணத்தின் கைகளில் வைக்கவேண்டும். (4-3-20)

12. விலங்கின் ஈரல் பிணத்தின் நெஞ்சில் வைக்கவேண்டும். (4-3-21)

13. இவ்வாறு பசுவின் அந்தந்த உறுப்புகளை பிணத்தின் உறுப்புகளோடு சேர்த்துவைத்து பசுவின் தோலை உரித்து பிணத்தை மூடவேண்டும. (4-3-24)

14. இறந்தவனுடைய மனைவியை மறுமணம் செய்துகொள் ளும்படி சொல்லவேண்டும. (4-2-18)

15. *இவ்வாறு கொளுத்தப்பட்டால் இறந்தவனது உயிர் ஸ்வர்ககலோகத்தை அடையும். (4-4-7)

கிருஹ்யஸூத்ரம் நான்காம் அத்தியாயம் ஒன்பதாம்கண்டிகை யில் "சூலகவம" என்னும் யாகத்தின் விதி கூறப்பட்டுள்ளது.

1. சூலகவம் செய்யவேண்டிய முறை. (4-9-1)

2. "சரத்ருது" அதாவது மழைநீங்கியகாலம் "ஆஸ்விஸ் மாதத்தில் "திருவாதிரை" நக்ஷத்திரத்தன்று சூலகவயஜ்ஞம் செய்ய வேண்டும் (4-9-2)

3. உடல் வன்மையுள்ள எருது ஒன்று கொண்டுவரவேணடும். (4-9-3)

4. எருது நோயின்றியதாயிருக்கவேண்டும். (4-9-4)

5. அவ்வெருது பலவித நிறங்களுடையதாயிருத்தல் வேண் டும். (4-9-5)

6. கருமை நிறத்தையுடைய எருது நல்லது. (4-9-6)

7. குறுவை, யவம் (வாற்கோதுமை) இவைகளைப்போட்டு வைத்த ஜலத்தினுல் எருதைக் குளிப்பாட்டவேண்டும். (4-9-7)

8. தலையிலிருந்து வாலறுதி தண்ணீர் விடவேண்டும். (4-9-8)

---

* பண்டைக்காலத்திய ரிஷிகள் சுவர்க்கலோகம் போவதற்கு ஏற் படுத்திய பாதையைப் பாருங்கள்.

9. *"ருத்ராயமஹா தேவாய ஜுஷ்டோ வர்தஸ்வ" என்னும் மந்திரம் படிககவேண்டும். (4-9-9)

10. ஏணையயாகத்தில் கொலைசெய்வதற்குரிய இடத்தைப் போன்ற இடமும் அதைப்போல் கொலைச்சடங்கும் நடத்தவேண்டும். (4-9-15)

11. பலாசமரத்தினல் செய்யப்பட்ட பாத்திரத்தில் எருதின் வபையை எடுத்து ஹோமிககவேண்டும். (4-9-16)

12. "ஹராய, ம்ருடாய, சர்வாய, சிவாய, பவாய, மஹாதேவாயோ, க்ராய, பீமாய, பசுபதயே, ருத்ராய, சங்கராயே சானயஸ்வாஹா" என்னும் சிவனுடைய பன்னிரெண்டு நாமங்களாகிய மந்திரத்தைச்சொல்லி ஹோமிககவேணடும். (4-9-17)

13. இவ்வாறு "சூலகவ" யஜ்ஞம் செய்பவனுககு தானியம், புகழ், புண்ணியம், புத்ரன், பசு, செல்வம், ஆயுள் முதலியன உண்டாகும். (4-9-36)

14. இவ்வாறு யாகஞ்செய்து முடித்தபின் அடுத்தயாகத்திற்காக மற்ருெரு எருதை நியமித்து விட்டு வைக்கவேண்டும. (4-9-37)

சகோதரர்களே! "ஆபஸ்தமபீயதர்மசூத்ரம" என்கிறநூல் ஒன்றிருக்கிறது. இது ஆபஸ்தம்பரிஷியால் தனது சாகையைச்சார்ந்த பிராமணர்களுக்காக எழுதப்பட்டது. அதில் (1)"தேன்வனடுஹௌ" பக்ஷ்யம் (2) "மேத்யமானடுஹம்" கோமது பர்கார்ஹோ வேதாத்யாய: முதலிய சூத்திரங்களால் பசு மாடு, எருது இவைகளின் இறைச்சி

---

* இம்மந்திரத்தின் பொருள்:— "பசுவே! நீ மஹாதேவனுக்கு உணவுகுத்தக்கதாகுக" என்பதேயாம்.

(1) "தேன்வனடுஹௌ" பசுமாடும் எருதும். பக்ஷ்யம் உணவுக்குரியவையாம்.

(2) மேத்யம்-புத்திக்கு நல்லது, ஆனடுஹம்-எருதின் இறைச்சி இரண்டு பதங்களும்சேர்ந்தால் எருதின் இறைச்சி புத்தியை வளர்க்கும் எனப் பொருளாகும்.

மிக நல்லதென்றும் ஆசாரியர் ரித்விக் அரசன் முதலியோர் வீட்டுக்கு வந்தால் மதுபர்க்கம் கொடுக்கவேண்டுமென்றும் மற்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஸாமவேத லாட்யாயனீய சிரௌதஸூத்ரங்களிலும் பலவகையாகக் கொலைகளைக்காணலாம். யாகத்திற்கு தீக்ஷை எடுத்துக்கொண்டபின் சூத்திரனிடம் வார்த்தையாடக்கூடாதென்றும் விதி லாட்யாயன சிரௌத ஸூத்ரம் 2—2—16-ல் காணக் கிடக்கின்றது. காத்யாயன கல்பஸூத்ரத்திலும் எருது, பசு இவைகளைக்கொன்று மதுபர்க்கம் கொடுக்கவேண்டுமென்றும் மற்றும் பல கொலைச்சடங்குகளும் உள. நவகாண்டி காசிராத்த சூத்திரத்தில் பலவகைப் பறவைகள், மீன்கள், விலங்குகள், இவைகளைக்கொன்று சிராத்தத்தில் பிராமணர்களை ஊட்டவேண்டுமென்னும் விதியிருக்கிறது. இவ்வாறே மனு முதலிய தர்ம சாஸ்திரங்களிலும் கொலை விதிகள் மலிந்து கிடக்கின்றன. அவைகள்யாவும் இங்கு எடுத்தெழுதுவதாயிருந்தால் முடியாதகாரியமென்று சுருக்கமாகக்காட்டினேன்.

வேதம் ஆபாச நூலென்பதற்கும் அதைப்பிரமாணமாகக்கொண்டு ஒழுகுபவர்கள் உயிர்வதைமுதலிய மாபாதகங்களனைத்தும் செய்தே தீரவேண்டுமென்பதற்கும் போதுமான பிரமாணங்கள் என்னால் எடுத்துக் காட்டப்பட்டன. இவை யாவும் வைதீகப் பிராமணங்களேயாம். பழைய ஆசாரியர்களின் பாஷியங்களையும் விருத்தியுரைகளையும் ஹிந்தி பாஷையிலும் மற்றும் பல அறிஞர்கள் கையாண்ட உதாரணங்களையும் பார்த்தே எழுதியுள்ளேன்.

இக்காலத்தில் தோன்றிய "ஆர்யசமாஜிகள்" வேதம் கடவுள் வாக்கு அதில் உயிர்க்கொலை விதிக்கப்படவே இல்லை ஆனால் கொலை பரமாக "ஜைனர்களும" "பௌத்தர்களும்" வாமமார்க்கிகளாகிய "சாக்தேயர்களும் வேதத்திற்கு பாஷியமெழுதி உலகத்தைக்கெடுத்தார்கள். இக்காலத்தில் அத்தகைய உரைகளே கிடைக்கின்றன ஆகையால் அவ்வுரைகளை நம்பாமல் "தயானந்தஸரஸ்வதி" யால் காணப்பட்ட பாஷியத்தையே நம்பவேண்டும். அதுவே வேதத்தின் மெய்ப்பொருளை உணர்த்தவல்லது என்கிறார்கள். இவர்களின கண்டனத்திற்கு இலக்காகாதவர்கள் இப்பூவுலகில் இதுவரையில் பிறந்த பெரியோர்களில் ஒருவர்கூட இல்லை. சங்கராசாரியர் முதலிய பெரிய பெரிய மேதாவி

களும் இவர்களுக்கு ஜைனர்களோபௌத்தர்களோ *வாமமார்க்கிகளோ ஆகத்தான் இருக்கிறார்கள். நான் இவ்வாரிய சமாஜிகளை வினவுவது யாதெனில் வேதத்திற்கு பௌத்தர் முதலியோர் உரையெழுதிக் கெடுத்தார்கள என்று சொல்லுகிறீர்களே ஆனால் அதைநம்பி அதன் படி பிராமணர்கள் கொலைமுதலிய பாதகசெயல்களை நடத்திவந்தார் களை உங்கள் சமாஜம் எவ்வளவோ சக்தியோடு வேலைசெய்தும் வைதீகப பிராமணர்கள் அதைப்பொருட்படுத்தாமல் பலயாகங்கள் இக்காலத்தும் நடத்திவருகின்றார்களே இவர்களில் ஒருவருக்குங்கூட உண்மையைக கண்டுபிடிக்கும் ஆற்றலில்லாமலா போயிற்று? அன்றியும் வேதத்தின் மெய்யுரை தயானந்தருககுமுன் எக்காலத்தில் யாரால் எழுதப்பட்டு எந்தகாலம முதல் எந்தகாலம் வரையில் நடப்பிலிருந்து வந்தது. பிற்காலத்தில் அவ்வுண்மையுரையும் உண்மை யனுஸ்டானமும மாய்ந்துபோகக்காரணமென்ன? "அஸ்வமேதம் என்பதை எடுத்துக்கொள்வோம் "அஸ்வம"-குதிரை இது சம்ஸ்கிருத மொழியிலிருப்பதானாலும் நம் நாட்டிலுள்ள ஏனைய மொழிகளிலும் இடம் பெற்றிருக்கிறது. மேதம்-சேர்க்கை. குதிரையுடன் சேர்தல் எனப் பொருளாகிறது "அஸ்வமேத" மென்னும யாகத்தில் யாகபசுவாகிய குதிரையை யஜமானனுடைய மனைவியாகிய மஹிஷியோடு இயற்கைக்கு மாறுபட்டவழியில் புணரச்சி செய்விக்கும்படியும மற்றும் அருவருப்பான முறைகள் இருக்கின்றனவே, இதையும இதைப் போன்ற "பௌண்டரீகம்" முதலிய அருவருப்பான பல யாகங்களையும் வேதத்தில் கூறப்பட்டுள்ளவையை சூத்திரகாரர்களும் ஒப்புக் கொண்டு நடத்தும்படி விதித்திருக்கிறார்களே இத்தகைய யாகங்கள் பரிசுத்தமானவையென நினைத்து பன்னூற்றாண்டுகளுக்கு முந்தியே நடத்தப்பட்டு வந்தகதைகள் இராமாயணம் பாரதம், மற்ற புராணங்கள் இவைகளில் காணக்கிடக்கின்றனவே. ஆகையால் இவைகளுக்கு என்னசமாதானம் கூறுவீர்கள்.

---

* வாமமார்க்கிகள்-சக்தியை வழிபடுபவர் வைதிகயாகக் கொலைகள் ஜைனபௌத்தாகளின் மதப்பிரசாரத்தினால் நிறுத்தப்பட்டபோது ஆரியர் ரகசியமாக இம்மதத்தை ஸ்தாபித்தனரென ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். இம்மதத்தில் குடி, கொலை, விபசாரம் முதலியன நிறையக்காணலாம்.

வேதத்தைப்பற்றிய உங்கள் ஆசாரியரின் உரை எப்படியிருக் கிறதென்றால் புட்டி நிறையக் கள் வைத்திருக்கும் ஒருவனை மற்றொரு வன் என்னடா உன்கையில் புட்டிக்குள் வெள்ளையாய் இருக்கிறது? துர்நாற்றமும் வீசுகிறதே எனக்கேட்க கள்ளுவைத்திருப்பவன் களிப் பாக்கு இந்தபுட்டிக்குள் அடைத்து வைத்திருக்கிறேன் என விடை யிறுத்த கதைபோன்றிருக்கிறது.

அன்றியும ஆங்கில ஆட்சியால் சிறிது விழிப்படைந்தவர்களும் விழிப்படையப் போகின்றவர்களுமான பார்ப்பனரல்லாத மக்களைப் பழையபடி பார்ப்பன மதப்படுகுழில் வீழ்த்தவே உங்கள் சமாஜம் முயற்சி எடுக்கிறது. இனியும இதற்கு ஏமாறும்படியான நிலையில் மாக்களைப் போன்ற மககள் தற்காலத்தில் இல்லை யென்பதை உங்க ளுக்கு அறிவுறுத்துகின்றேன்.

வாசகர்களே! "ஆரியஸமாஜ்" ஸ்தாபகராகிய சுவாமி 'தயானந்த ஸரஸ்வதி" தனது மனம் போனபோக்கில் வேதத்திற்கு பொருள் கூறியிருக்கிறார் அதை நாளதுவரையில் அறிஜர் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை வேதத்திற்கு சாயணர், மம்மடர், மஹீதரர்" முதலிய முற்காலத்திய பிராமண ஆசாரியர்களின் உரைகளையும் வேதத்தின் மீது எழுந்த சிரௌத சூத்திரங்களையும் வைத்துக்கொண்டு தயானந்த ரின் உரையை ஆராய்ச்சி செய்யுங்கள். தயானந்தரின் கூற்றுமக்களை ஏமாற்றுவதற்கே யென உங்களுக்குப் புலப்படும்.

இவ்வத்தியாயத்தை இத்துடன் நிறுத்தி "ஸ்மிருதிஸமாலோ சனை" என்னும் நான்காம் அத்தியாயததை ஆரம்பிககின்றேன்.

மதவிசாரனை மூன்றும் அத்தியாயம் முடிந்தது.

---

இப்படிக்கு,

**M. K. கேலுண்ணி நாயர்** என்னும்

ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி

கோலொளப்பு அம்ஸம், பொன்னானி தாலுக்கா,

தென்மலையாளம்.

# மதவிசாரணை.

## நான்காம் அத்தியாயம்.

### ஸ்மிருதி ஸமாலோசனை.

சகோதரர்களே!

வைதிக மதத்தில் ஸ்மிருதிகள் பலவுள. அவைகளில் மனுஸ்மிருதியே சிறந்தது. மற்ற ஸ்மிருதிகளில் ஏதேனும் ஒரு விதி மனுஸ்மிருதிவிதிக்கு முரணாயிருந்தால் அதை ஒபபுக்கொள்ளலாகாது. "மன்வர்தத விபரீதா து யா ஸ்ம்ருதி: ஸா ந சஸ்யதே." என்பதே இதற்குப்பிரமாணம். ஆகையால் மனுஸ்மிருதி வசனங்களை முக்கியமாகவும் அதற்கனுகூலமான மற்ற ஸ்மிருதி வசனங்களிற் சில்வற்றையும் இங்கு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்.

மனுஸ்மிருதி அத்தியாயம் 8.
சாட்சிப் பிரகரணம்
வியவஹார பரிபாஷை.

"க்ருஹிண: புத்ரிணோ மௌலா:
க்ஷத்ரவிட் சூத்ரயோனய:
அர்த்தயுக்தா: ஸாக்ஷ்யமர்ஹந்தி
நயே கேசிதனுபதி. (மனு அ. 8. சு. 62.)

ஆப்தா: ஸர்வேஷு வர்ணேஷு
கார்யாகார்யேஷு ஸாக்ஷிண:
ஸர்வதர்மவிதோ லுப்தா
விபரீதாம்ஸ்து வர்ஜயேத்.

(மனு அத் 8. சு. 63.)

பொருள்:— இல்லறத்தினராயும் ஸந்ததியுள்ளவர்களாயும் அவ்வூரிலேயே பிறந்தவர்களாயும் நான்கு வருணங்களில் உள்பட்டவர்க

ளாயும் உண்மையே பேசுபவர்களாயும் * எல்லாவகைத் தருமங்களை யும் அறிந்தவர்களாயும் ஆசையற்றவர்களாயும் இருக்கிறவர்களை வாதி யின் பக்கம் சாட்சிகளாகக் கோரவேண்டியது. இவைகளுக்கு மாறு பட்டவர்களைத் தள்ளவேண்டியது.

## நியாயாதிபதி சாட்சிகளை விசாரிக்கவேண்டிய முறை.

---

"சபாந்த: ஸாக்ஷிண: ப்ராப்தான்
அர்த்தி ப்ரத்யர்த்தி ஸன்னிதௌ.
ப்ராட்விவாகோனு யுஞ்ஜீத
விதினனேன ஸாந்த்வயன்." (சு. 79)

நியாயாதிபதி; கச்சேரியில் வந்த சாட்சிகளை வாதிப் பிரதிவாதி களுக்கெதிரில் கீழ்க்குறித்த முறைப்படி இனியமொழிகளால் கேள்வி களைக்கேட்கவேண்டியது.

"யத் த்வயோரனயோர் வேத்த
கார்யேஸ்மின் சேஷ்டிதம் மித:
தத் ப்ரூத ஸர்வம் ஸத்யேன
யுஷ்மாகம் ஹ்யத்ர ஸாக்ஷிதா." (சு. 80.)

சாக்ஷிகளே! இக்காரியத்தில் உங்களைச் சாட்சிகளாகக் கோறியிருப்ப தால் இவ்விருவருக்கும் நடந்த காரியத்தில் உங்களுக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லுங்கள்,

"ஸத்யம் ஸாக்ஷ்யே ப்ருவன் ஸாக்ஷீ
லோகானுப்நோதி புஷ்கலான்
இஹ சானுத்தமாம் கீர்த்திம்
வாகேஷா ப்ரஹ்மபூஜிதா." (சு. 81)

---

* சூத்திரன் எல்லாத்தர்மங்களையும் உணர்ந்திருக்கமாட்டான் அவ் வாறிருந்தும் "சர்வதர்மவித." என்னும் சாக்ஷிகளின் விசேஷணங் கூறி யிருப்பது சூத்திரசாக்ஷிக்கும் பொருந்தும் இது வேதஸ்மிருதிகளுக்கு முரண்பாடேயாம். "ஸ்திரீ சூத்ரௌநாதீயீதாம" சூத்திரனுக்கும் ஸ்திரீக் கும் கல்விகற்பித்தலாகாது என்பது இதன் பொருள். கல்வியறிவற்ற வன் தர்மத்தையறிவது எவ்வாறு.

சத்தியத்தைச் சொல்பவன் மேலான உலகங்களை அடைவான். இவ்வுலகத்தில் ஒப்பற்ற புகழையும் அடையா நிற்பன். இந்த சத்திய வசனமானது பிரமதேவனால் கொண்டாடப்பட்டிருக்கிறது.

"சாக்ஷீயேன்ருதம் வதன் பாசையர்
பத்யதே வாருணைர் ப்ருசம்.
விவச: சத்மாஜாதீ:
தஸ்மாத் ஸாக்ஷ்யம வதேத் ருதம்." (சு. 82.)

பொய்ச்சாட்சி சொல்பவன் வருணனுடைய சர்ப்பபாசத்தால் கட்டுண்டு நூறு ஜன்மங்கள் வரையில் தன்வசமிழந்து தவிப்பன். ஆகையால் உண்மையைச் சொல்லவேண்டும்.

"ஸத்யேன பூயதே ஸாக்ஷீ
தர்மம் ஸத்யேன வர்த்ததே.
தஸ்மாத் ஸத்யம ஹி வகதவ்யம்
ஸர்வவர்ணேஷு ஸாக்ஷிபி;" (சு. 83)

உண்மையைச்சொன்னால் சாட்சி பரிசுத்தனாகின்றான் தருமம் பெருகும். ஆதலால் எல்லா வர்ணங்களின் விஷயத்திலும் சாக்ஷிகளால் உண்மை சொல்லப்படவேண்டும்.

"ஆத்மைவ ஹ்யாத்மன: ஸாக்ஷீ
கதிராத்மா ததாத்மன:
மாவமம்ஸ்தா: ஸ்வமாத்மானம்
ந்ருணாம் சாக்ஷிணமுத்தமம்." (சு. 84)

மக்களுக்கெல்லாம் தனது ஆத்மாவே சாக்ஷியாயும் பற்றுககோடாயுமிருக்கிறது. ஆகையால் ஒப்புயர்வற்ற தனது ஆத்மாவாகிய சாக்ஷியை (பொய்ச்சாட்சி கூறுவதன் நிமித்தம்) அவமானம செய்யாதே.

"மன்யந்தே வை பாபக்ருதோ
ந கன்சித் பஸ்யதீதி ந:
தாம்ஸ்து தேவா: ப்ரபஸ்யந்தி
ஸ்வஸ்யைவாந்தர பூருஷ:." (சு. 85)

பாவிகள் தங்களை (தங்கள் இழி தொழிலை) யாரும் பார்க்கின்றார்களில்லையென எண்ணுகின்றார்கள் ஆனால் அவர்களைத் தேவர்களும்

பார்க்கின்றார்கள். தனக்கு உள்ளே சாட்சியாய் தனது ஆத்மாவாய் இருக்கிற பரமேசுவரனும பார்த்துக்கொண்டிருக்கிறான்.

"த்யெளர் பூமி ராபோ ஹ்ருதயம்
சந்த்ரார்ககாக்நி யமானியா,
ராத்ரி: ஸந்த்யேச த்ர்மஸ்ச
வ்ருத்தஜ்ஞா: ஸர்வதேஹிநாம்." (சு. 86)

ஆகாயம், பூமி, வாயு, ஜலம், மனது, சந்திரன், சூரியன், அக்கினி, யமன், இரவு, காலை, மாலை, என்னும் இருசந்தியைகள் தருமதேவதை இவைகள் எல்லா உயிர்களுடையவும் செய்கையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

சகோதரர்களே! சாட்சிகளைத் தெரிந்தெடுக்கும் முறையும் அவர்களை வாதிப் பிரதிவாதிகளுக்கெதிரில் நிறுத்தி சாட்சி சொல்பவன் ஆசரிக்கவேண்டிய முறையை உபதேசித்ததும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளத்தககதேயாம்.

இதன் பின் விசாரணை செய்யவேண்டிய முறையை மனு கூறுகின்றார்.

"தேவப்ராஹ்மண ஸான்னித்யே
ஸாக்ஷ்யம் ப்ருச்சேத் ருதம் த்விஜான்.
உதங்முகான் ப்ராங்முகான் வா
பூர்வாஹ்னே வை சுசி: சுசீன்." (சு. 87.)

நியாயாதிபதியானவர் கச்சேரியில் பகல் பதினைந்து நாழிகைகளுக்கு மேல் தேவதைகளின் விககிரகம், பிராமணர் இவர்களுககருகாமையில் சாட்சிகளை (ஸ்நானம் முதலியவைகளால்) பரிசுத்தர்களாக்கி கிழக்கு முகமாகவோ வடககு முகமாகவே நிறுததித்தாலும் பரிசுத்தனைப் ஸத்தியஞ் செய்வித்து விசாரணை செய்யவேண்டும்.

"ப்ரூஹீதி ப்ராஹ்மணம் ப்ருச்சேத்
ஸத்யம் ப்ரூஹீதி பார்த்திவம்.
கோபீஜகாஞ்சனைர் வைஸ்யம்
சூத்ரம் ஸர்வைஸ்து பாதகை:." (சு. 88)

சாட்சிக்காரன் பிராமணனானால் அவனைச் 'சொல்' என்றும க்ஷத்திரியனை 'உண்மையைச் சொல்' என்றும்

வைசியனை நீ பொய்சொன்னால் உன் பசு, விதை, பொன் இவை பயனற்றவையாய் விடுமென்றும சூத்திரனை நீ பொய்சொன்னால் எல்லாவித மஹா பாபங்களும் உன்னைச் சாருமென்றும் எடுத்துக்கூறி உண்மையைப் பெறவேண்டும.

வாசகர்களே! சாட்சிககாரர்கள் எல்லாத் தர்மங்களையும் உணர்ந்தவர்களாக வன்றோ இருக்கவேண்டும். அவ்வாறிருக்க அவர்கள் எல்லோரையும் ஒரேவிதமாக நடத்தவேண்டியிருககப் பிராமணனுக்கு மிகச சலுகையும் க்ஷத்திரிய வைசியர்களைப் பயமுறுத்தலும் சூத்திரனை அவமதித்தலுமே இசசுலோகத்தின் கருத்தாகும்.

இவ்வாறு சொல்லிவிட்டு பொய்ச்சாட்சி கூறுபவர்களைப் பல வகையான பாவங்கள் சூழ்ந்துகொள்ளுமென்றும் ஆகையால் சாட்சி பொய் சொல்லலாகாதென்று பல சுலோகங்களால ஸ்திரப்படுத்துகின்றார்.

“ஹந்தி ஜாதான ஜாதாம்ஸ்ச
ஹிரண் யார்த்தேன் ருதம் வதன்
ஸர்வம் பூமயன்ருதே ஹந்தி
மாஸ்ம பூம்யன்ருதம் வதீ:” (சு. 99)

பொன்னைக் குறித்த விஷயத்தில் பொய்ச்சாட்சி கூறியவன் தனக்குப் பிறந்தவர்களும மேலில் பிறக்கப்போகிறவர்களுமான எல்லாப் பிள்ளைகளையும் கொன்ற பாவத்தை அனுபவிப்பன். பூமியைக் குறித்த விஷயத்தில் பொய்சொன்னவன் எல்லா உயிர்களையும் கொன்ற பாவத்தை அனுபவிப்பன்.

இவ்வாறெல்லாம நயத்தினாலும் பயமுறுத்தியும் பொய்ச்சாட்சி சொல்லலாகாதென்று உபதேசித்துவிட்டு பிறகு சொல்வதைக் கவனியுங்கள்.

“சூத்ரவிட் க்ஷத்ர விப்ராணாம்
யத்ரர் தோக்தென பவேத் வத:
தத்ர வக்தவ்ய மன்ருதம்
தத்தி ஸத்யாத் விசிஷ்யதே.” (சு. 104)

எந்த விஷயத்தில் உண்மையைச் சொன்னால் சூத்திரன், வைசியன், க்ஷத்திரியன், பிராமணன் இவர்களுக்கு மரணமுண்டாகுமோ அக்காரியத்தில் பொய் சொல்லலாம். அது பொய்யானாலும் மெய்யைக் காட்டிலும் விசேஷமானது.

"தத்வதன் தர்மதோர்த்தேஷு
ஜானன்னபயன்யதா நர:
நஸ்வர்க்காச் ச்யவதே லோகாத்
தைவீம வாசம வதந்தி தாம்." (சு. 103)

எவன் உண்மையை யறிந்திருந்தும் ஒருவனுக்குத் தீங்குவரக் கூடாதெனக் கருதிப் பொய்ச்சாட்சி சொன்னால் அவன் புணயலோக ப்ராப்தியினின்றும் நழுவமாட்டான். இது தேவர்களுக்குச் சம்மதம்.

சகோதரர்களே! 103, 104 இச்சுலோகங்களின் கருத்து என்ன? இதற்குமுன் பல சுலோகங்களினால் பொய்ச்சாட்சி சொல்லலாகாதெனக் கண்டித்துவிட்டு இப்போது பிராமணன் முதலியவர்களின் நன்மைக்காகப் பொய் சொல்வது குற்றமாகாதென்று சொலவது ஆச்சரியமாகவன்றோ இருக்கிறது. இதனால் ஏற்படுவது யாதெனில் ஒருவன் பெரிய தப்பிதம் ஏதோ செய்தானென்று வைத்துககொள்ளுவோம். அவனை நியாய சபையில் விசாரணைசெய்து தண்டிககும் காலத்தில் அவனுடைய குற்றத்தைப் பார்த்திருந்த ஒருவனை யன்றோ சாக்ஷியாகக கொள்ளவேண்டும். அவன் சத்திய வாக்காகவும் ஆசையற்றவனாகவும் எல்லாத் தர்மங்களையும் உணர்ந்தவனாகவும இருக்க வேண்டும. எல்லாத் தர்மங்களையும அறிந்த அசசாட்சி மனுவின் அத். 8-103, 104 சுலோகங்களையும் உணர்ந்திருப்பான் என்று சொல்லாமலே விளங்கும். ஆகையால் அவன் குற்றவாளியின் நன்மையைக் கருதியும் தனது புகழைக் கருதியும் மெய்யைக் காட்டிலும் விசேஷமான இத்தகைய பொய்ச்சாட்சியைக் கூறக கடமைப்பட்டுள்ளான். அன்றியும் சாட்சி சத்தியவாக்கா யிருக்கவேண்டும். ஆனால் பொய் சொல்லலாம என்பது ஒருக்காலும பொருந்தாது. இது மத்தியானமாகவும் மப்பு மந்தாரமில்லாமலும் ஆகாசம மிகத் தெளிவாகச் சூரியப்பிரகாசத்துடன் இருக்கவேண்டும். ஆனால் அதேசமயம் மஹாலயபக்ஷ அமாவாஸி இரவு நடுச்சாமம்போலும் இருந்தால் மிகச்

சிறப்பாயிருக்கும் என்று சொன்னால் எவ்வாறிருக்குமோ இச்சொல்லும் அவ்வளவு பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. மனுஸ்மிருதியில் ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய இத்தகைய பல வாக்கியங்கள் இருக்கின்றன. ஆகையால் இதை எழுதியவன் குடிகாரனாயிருப்பானோவென்று சந்தேகப்பட்டேன். அப்படியிருந்தால் பிராமணர்களுக்கு மாத்திரம மேன்மை வேண்டும் என்று சொலலியிருக்க இடமிலலை. ஆகையால இது மனுவின் பெயரைச் சொல்லிச் சில சுயநலக்காரர்கள் எழுதிவைத்ததா யிருக்கவேண்டும். சுயநலக்காரர்களுடைய அறிவு கெட்டுப்போகும், அறிவு கெட்டவன் முன்பின் முரண்படக் கூறுவது இயல்புதானே.

இதற்கு உதாகரணம் பகவத்கீதை.

"த்யாயதோ விஷயான் பும்ஸ:
ஸங்கஸ்தேஷூ பஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோபி ஜாயதே
க்ரோதாத் பவதிஸம மோஹ:
ஸம்மோஹாத் ஸ்மிருதி விப்ரம:
ஸ்மருதிப்ரம்சாத் புத்தி நாசோ
புத்தி நாசாத் ப்ரணஸ்யதி."

* விஷயங்களைத் தியானித்துக் கொண்டிருப்பவனுக்கு அவ்விஷயங்களில் பற்றேற்படும், பற்றினால் காமம்=ஆசையுண்டாகும் அவ்வாசை நிறைவேறாவிடத்துக கோபமுண்டாகும. கோபத்தால் மயககுறுவான். மயக்குற்றவனுடைய அறிவு கெடும். அறிவு கெட்டவன் அழிந்தே போவான்.

முற்காலத்தில் உடலுழைப்பின்றி பிறரால் இடப்பட்ட உணவையுண்டு காலங் கழித்துவந்த சிலர் தங்களுடைய சந்ததியாரும் அவ்வாறே சோம்பேறிகளாக இருநது காலங கழிக்கும்படியான நிலைமை எதனால் வருமென்று ஆலோசித்தார்கள். அவ்வாலோசனையின் பய

* சுயநல விஷயங்கள் என்று இஙகு பொருள் கொள்ளவேண்டும். இதனால் குற்றமொன்றுமில்லை.

ளுக வேதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் இவை உண்டாயின. இவை களில் எல்லாம் சுயநலமே சித்தாந்தமாகக் காணலாம். தங்கள் சுய நலத்திற்கு எதிரிகளாக வியவசாயிகளான பலரையுங்கண்டு கோபங் கொண்டதனுல் அவர்களே மேன்மைககு வரவொட்டாமல் தடுக்க க்ஷத்திரியர்கள் என்கிற சில அறிவிலிகளேச் சிருஷ்டித்தார்கள். அவர்க ளிடம் அரசை ஒப்புவிதது அவர்களுககு மந்திரிகளாகத் தாங்களே யிருந்து வந்தார்கள். தங்களுக்கும விவசாயிகளுக்கும் இடையில் க்ஷத்திரியர்கள்மட்டு மிருந்தால் பலம் போதாதென்று கண்டு வைசியர் என்ற சிலரையும சிருஷ்டிதது அவர்களேயும விவசாயிகளுக்கு எஜ மான்களாகச் செய்தனர். நாளடைவில் இந்த வியவசாயிகளிலும் பல பிரிவுகளே உண்டுபண்ணி ஒருவர்க்கொருவர் ஒற்றுமைப்படாத வாறு சூழ்ச்சிகளேச்செய்து கடைசியில் நமது நாட்டை இந்நிலேக்குக் கொண்டு வந்தனர். இது அறிவு வளர்ச்சியினுல் வந்ததா? அறிவு முதிர்ச்சியினுலா? ஜாதி ஒற்றுமையிருந்தால் நம் நாடு அடிமை நாடாக யிருககுமா? ஒருபோது மிராது. ஆகையால் சுயநலக்காரராகிய ஒரு சிலரின் அறிவு கேடே இந்நாசத்திற் கெல்லாம் காரணம்.

ஆகையால் சகோதரர்களே! நீங்கள் சுகமுற விரும்பினுல் ஒன்று சேருங்கள் பிறப்பினுல் ஜாதி வேற்றுமை காட்டுவது பெரும்பாவம் ஆகையால் அதையொழியுங்கள். மனுஸ்மிருதியில் பார்ப்பனரல்லா தாருக்கு இழைத்துள்ள தீங்குகளிற் பல ஞானசூரியன், மனுநீதி மருமம் இவைகளில் வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதில் கூருது விட்டேன். தயவுசெய்து வாசகர்கள் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டுகிறேன்.

---

## குலகோத்திரங்களின் விதி.

"க்ஷத்திரிய வைசிய சூத்திர வர்ண சங்கர ஜாதியினரின் கோத் திரம அவர்களின் புரோகிதனுடையதே யாம்" (அக்நி புராணம்)

அன்பர்களே! பிராமணனேத் தவிர மற்ற வருணத்தினர் எல் லோருக்கும் அவர்களின் புரோகிதனுடைய கோத்திரம் தான் என் ருல் இவ்வசனத்தின் கருத்துதான் என்ன? இதைப் பொருளற்ற

வார்த்தையென நினைக்கவேண்டாம். இதன் உட்கருத்தை அறிஞர்களே உணர்ந்து கொள்ளட்டும். நான் சொன்னால அதிகப்பட்டாலும் படும்.

"ராஜா ஸர்வஸ்ரேஷ்ட: ப்ராஹ்மணவர்ஜம்."

(கௌதஸ்ம்ருதி அ. 21)

அன்பர்களே! அரசன் பிராமணனைத் தவிர மற்ற எல்லோருக்கும் பெரியவன் என்பதே இதன்பொருள். "ஏஷவோமீ ராஜா ஸோமோஸ்மாகம் ப்ராஹ்மணானாம ராஜா." குடிகளே! இவன் உங்களுக்கு அரசன். ப்ராஹ்மணர்களாகிய எங்களுக்கு ஸோமன் அதாவது சந்திரனே அரசனாவன். (யஜுர் 9-40) என்கிற வேதமந்திரத்தையும் இந்த ஸ்மிருதி வசனத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

---

## சூத்திரன் கெட்டுப் போவதற்குரிய காரணங்கள் பலவற்றுள் சில.

காராம்பசுவின் பாலைக்குடித்தல், பிராம்மணப் பெண்ணைப் புணர்தல், வேதத்தைப் படித்து அதன்பொருளை யுணர்தல் இத்தகைய செய்கைகளால் சூத்திரன் கெட்டுப்போவான். (பராசரஸ்மிருதி அத். 1-72)

சகோதரர்களே! பசுவின்பால் ஆயுள்விர்த்தியை யளிப்பது. அதிலும் காராம்பசுவின்பால் விசேஷமுடையதெனப் புராணங்களும் வைத்திய சாஸ்திரங்களும் அனுபவசாலிகளான அறிஞர்களும் கூறுகின்றார்கள். ஆனால் காராமபசுவின் பாலைப் பருகும் சூத்திரன் நரகத்தை அடைவது அல்லது கெட்டுப்போவது என்றால் அது எக்காரணத்தினாலெனத் தெரியவில்லை. எனது சிற்றறிவிற் கெட்டிய வரையில் ஒரே ஒரு காரணந்தான் உளது. பால் நல்லது ஆகையால் அதைக் குடிக்கப் பிராமணனுக்கு மாத்திரம் தான் அதிகாரம். சூத்திரன் எச்சில் தின்னவேண்டியவ னன்றோ? "உச்சிஷ்டமன்னம தாதவ்யம்" எச்சி லன்னத்தை சூத்திரனுக்குக் கொடுக்கவேண்டும் என்றல்லவோ மனு சொன்னார். ஆகையால் சூத்திர ஜாதியினர் மனிதர்களுக்குரிய சுகம் யாதொன்றும் அடையக்கூடாதென்பதே யாம். மற்ற இருகாரணங்களில்; ஒன்று பிராமணப் பெண்ணைப்

புணர்தல். இப்பெண் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவளாயிருந்தால் அவளைப் புணருவது குற்றமேதான். அங்ஙனம் செய்பவன் எந்த வருணத்தினனாயினும் அவன் கெட்டவன்தான். அவ்வாறிருக்க சூத்திரனைமட்டும் பிரித்து கூறுவானேன். அன்றியும் சூத்திரன் மனைவியைப் பிராமணன் புணர்ச்சி செய்யலாமென்றும் விதியிருக்கிறது. இதனாலும் இக்கூற்று சுயநலத்தைச் சாதிககவே எழுந்ததெனத் தெரியும். மூன்றாங் காரணம வேதம்படித்துப் பொருளுணர்தல். சூத்திரர் இக்காரியத்தில ஈடுபட்டால் பிராமணர்களின் * பூஜ்யதை அன்றோடு பூச்சியம தானே. ஆதலால் சூத்திரர்களை எவ்விதத்திலும் முன்னேற விடக்கூடாதென்பதே இதன் கருத்தென்பது தெளிவாகத் தெரிகின்றது.

"ஜபம், தபம், தீர்த்தயாத்திரை போதல், சன்னியாசம், மந்திர சாதனம் பண்ணுதல், தேவபூஜை இவ்வாறும் சூத்திரர்களையும் பெண்களையும் கெடுக்கும." (அத்திரிஸ்மிருதி 233, 234)

அன்பர்களே! இங்கு ஜபம், மந்திரசாதனம் என இருவகையாகச் சொல்லப்பட்டுள்ளவையில் ஒன்று நாம ஜபத்தையும் மநதிர சாதனம் என்னும் இரண்டாவது பஞ்சாக்ஷரம் முதலிய மஹாமநதிரங்களின் புரஸ்சரணத்தையும உணர்த்துகின்றன. இந்நற்காரியங்கள் மாத்திரமல்ல இவைபோன்ற உத்தமமான காரியங்கள் யாவும் சூத்திரனால் அனுஷ்டிக்கத் தகாதனவென ஸ்மிருதிகளை ஏற்படுத்தி மீறி நடந்தவர்களைக் கொலைசெய்து ஒடுக்கியிருக்கின்றார்கள். இராமாயணம உத்தரகாண்டத்தில் தவம செய்துகொண்டிருந்த சூத்திரத் துறவியை இராமனைக்கொண்டு கொல்வித்த கதையை இங்கு உதாகரணமாக எடுத்துக கொள்ளுங்கள். பிராமணர்கள இராமராச்சியம் வேண்டுமென்பது அவர்கள் சுயநலத்தைச் சாதிப்பதற்காகையால் அது அவர்களுக்கு நியாயமாகவே தோன்றும ஆனால் பார்ப்பனரல்லாதாரிற் சிலரும இராமராச்சியத்தைப் புகழ்ந்து கூறுகின்றனர். இதன் காரணம அறியாமை யென்றுதான் என்றால் சொல்ல இயலும்.

"பிராமணன் இழிதொழிலினனாகவே இருககட்டும். அப்போதும் வழிபடத்தககவனே யாவன். சூத்திரன் உயரிய நற்குணங்களை

---

* பூஜ்யதை = வழிபாட்டிற்குரிய தன்மை.

யுருவெடுத்தவ னாயினுஞ்சரி அவனை வழிபடலாகாது. ஏனென்றால் கன்றுபோட்ட பசுவொன்று துஷ்டத்தனம பண்ணிக கொண்டிருக் கிறது. குட்டிபோட்ட கழுதையொன்று சாதுவாகவும வீட்டிலிருக கிறது. இவ்விரு மிருகங்களில் அறிஞன் பசுவை விட்டுவிட்டு கழுதை யைக் கறந்து பாலைக் கிரகிப்பனா?" (பராசரஸ்மிருதி 8-33)

அன்பர்களே! பிராமணனைப் பசுவிற்கும் சூத்திரனைக் கழுதைக் கும் ஒப்பிட்டுக கூறியிருப்பதைக கவனியுங்கள். பராசர ரிஷியின் இக்கூற்றை நியாயமெனப் பகதசிரோமணியாகிய "துளசிதாஸ"ரும் தனது ராமாயணத்தில கூறியிருக்கிறார்:—

"பூஜிய விப்ர குணகண ஹீனா
சூத்ர ந குணகண ஞானப்ரவீனா
சாஸத தாடத பருஷக ஹந்தா
விப்ர பூஜ்ய காவஹி அஸஸந்தா."

பொருள்:—பராசரரின ஸ்மிருதியைப் போன்றதே. இதனால் பார்ப்பனர்கள் பரம பாகவதர்களாயிருநதாலும் பார்ப்பனரல்லாதா ரைக குறை கூறுவதிலும் அடக்கியாளப் பார்ப்பதிலும் ஒரே தன்மை யினர். "புலி ஏகாதசி நோற்றாலும பார்ப்பானுக்கு பசுமாடு" என்னும பழமொழி இங்கு ஞாபகத்திற்கு வருகிறது.

"சூத்திரன் பிராமணனுக்குப் பணி செய்வதைவிட்டு வேறே தேனும தொழிலைச் செய்வனேல் நரகத்தை அடைவன்."
(பராசரஸ்மிருதி அ. 2-19, 20)

"பரிசர்யாத்மகம் கர்ம சூதரஸ்யாபி ஸ்வபாவஜம." பணிவிடை சூதிரனோடே பிறந்தது என்று இக்கீதைச் சுலோகத்திற்கு சிலர் பொருள் கூறுகின்றனர். இவ்வாறானால் கீதை பராசரரைப் பின் பற்றுகிறதென்று சொல்லத் தேவையில்லை. அன்றியும் கீதையில் மற்றொரிடத்தில் இவ்வாறிருக்கின்றது.

"சரேயான் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வனுஷ் டிதாத்
ஸ்வதர்மே நிதனம் சரேய:
பரதர்மோ பயாவஹ:" (கீதை அத். 3-35,

தனது வருணத்திற்கேற்ற ஒழுக்கம் குணமற்றதாயிருந்தாலும் அதைப் பின்பற்றி ஒழுகுதல் பிறவருணத்தினரின் ஒழுககத்தைப் பின்பற்றி நன்முக ஒழுகி நற்பயனை அடைவதைவிடச சிறந்ததாகும். தனது தர்மத்திஞல் (தனது வருணத்திற்கேற்ற ஒழுககத்தின்படி ஒழுகுவதால்) மரணம் வரினும் அது சிறப்புடைத்து: பிறவருணத்தினரின் தருமமானது பயத்தை உண்டுபண்ணுவதாம்.

அன்பர்களே! கீதையிலுள்ள இவ்வாக்கியத்திற்கு "லோகமான்ய பாலகங்காதர திலகர்" தனது "கீதாரகசியம்" என்னும் புஸ்தகத்தில் பிராமணர்களுக்குச சாதகமாகவும் பிராமணரல்லாதாருக்கு மிகமிகப் பாதகமாகவும வியாக்கியானிததிருககிருர். முன்னைய ஆசாரியர்க ளெல்லாம அவ்வாறே பொருள் கூறியிருக்கத் திலகரைமட்டும இங்கு குறிப்பாகக் கூறியதேனென்ருல் திலகர் என்பார் பாரத நாட்டின் சுவதந்திரத்திற்காக மரண பரியந்தம் பெரும்பாடு பட்டவர். ஆனல் அவர் விரும்பிய 'சுவாதந்திரியம்' அல்லது 'சுவராச்சியம்' பார்ப்பன ருக்கு மாத்திரநதா னென்பதை உங்களுககு உணர்த்தத்தான் இங்கு அவரை உதாகரிததேன்.

"துஷ்டர்கள், பொன், பெரும்பறை முதலிய வாத்தியக் கருவி கள், கெட்ட குதிரை, கெட்ட பெண், கரும்புத்துண்டு, எள்ளு, சூத் திரர்கள் இவைகளை அடிக்குந்தோறும நற்பயனும் அதிகரிக்கும்."

(சாணக்ய நீதிதர்ப்பணம் 9-23)

சகோதரர்களே! ஏன் அதிகமாகச சொல்லவேண்டும். பானைச் சோற்றில் பதம் பார்ப்பதுபோல் மிகக் குறைவான இந்த உதாகரணங் களிஞல் உண்மையை உங்களுக்கு எடுத்துக் காட்டினேன். ஆகை யால் அன்பர்கள் எல்லா ஸ்மிருதிகளும பார்ப்பனரல்லாதாருககு கெடு தியை உண்டுபண்ணுவதற்கே எழுந்தனவென்பதை அறிந்துகொள் ளுங்கள்.

இந்த அத்தியாயத்தை இத்துடன் நிறுத்தி "புராண ஸமாலோ சனை" என்னும் அடுத்த அத்தியாயத்தைத் தொடங்குகின்றேன்.

மதவிசாரனை நான்காம் அத்தியாயம் முடிந்தது.

---

இப்படிக்கு,

**M. K. கேலுண்ணி நாயர்** என்னும்

ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி

கோலொளம்பு அம்ஸம், பொன்னனி தாலுக்கா,

தென்மலேயாளம்.

# மதவிசாரணை.

## ஐந்தாம் அத்தியாயம்.

---

### புராண ஸமாலோசனை.

சகோதரர்களே! புராணங்கள் பல இருக்கின்றன. அவைகள் வியாசரால எழுதப்பட்டனவென்று புராண பக்தர்கள் சொல்லுகிறார்கள். அவைகள் மஹாபுராணங்கள், உபபுராணங்கள் என இருவகைப்படும். இவ்விருவகைப் புராணங்களுள் மஹாபுராணங்கள் * பதினெட்டு.

இதற்குப் பிரமாணம்:—

''ஏவம் லப்தவரோ வ்யாசோ
மஹேசாத் மத்ய மேஸ்வராத்
அஷ்டாதச புராணானி
ப்ராணாய ஸ்வலீலயா. (சு. 119)

ப்ராஹ்மம் பாத்மம் வைஷ்ணவம் ச
சைவம் பாகவதம் ததா
நாரதீயம் பவிஷ்யம் ச
மார்க்கண்டேய மத: பரம். (சு. 120)

ஆக்நேயம் ப்ரஹ்மவை வர்த்தம்
லிங்கம் வராஹமேவ ச
ஸ்காந்தம் ததைவ ப்ரஹ்மாண்டம்
புராணம் ச ப்ரகீர்த்திதம். (சு. 121)

யசஸ்யம் புண்யதம் ந்ருணாம்
ஸ்ரோத்ரூணாம் சாங்கரம் யச: (சு. 122)

---

* பதினெட்டு புராணங்கள் என்று ஓரிடத்திலும் இருபத்தாறு புராணங்கள் என மற்றோரிடத்திலும் இதுவே புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இவைகளில் எதும் நம்பத்தக்கதன்று.

பகவத்யாஸ்ச துர்க்காயாஸ்
சரிதம் யத்ர வித்யதே
தத்து பாகவதம் ப்ரோக்தம்
நனு தேவீ புராணகம், (சு. 129)

(சிவபுராணம் உமாசங்கிதை அத்தியாயம் 5.
சுலோகம் 119, 120, 121, 122, 129.)

வியாச முனிவர் மத்யமேசுவர மஹேசுவரனிடத்தில் வரத்தைப் பெற்றுக்கொண்டு விளையாட்டாகவே பதினென் புராணங்களை இயற்றினர். அவையாவன:—

1 ப்ராஹ்மம், 2 பாத்மம், 3 வைஷ்ணவம், 4 சைவம், 5 பாகவதம், 6 பவிஷ்யம், 7 நாரதீயம், 8 மார்க்கண்டேயம், 9 ஆக்நேயம், 10 ப்ரஹ்மவைவர்த்தம், 11 லிங்கம், 12 வாராஹம், 13 வாமனம், 14 கௌர்மம், 15 மாத்ஸ்யம், 16 காருடம், 17 ஸ்காந்தம், 18 ப்ரஹ்மாண்டம் இவைகளாம். இப்புராணங்கள் சிவனுடைய புகழைக் கூறுபவை யாகையால் கேட்பவர்கள் புண்ணியத்தையும் புகழையும் அடைவார்கள். இவைகளில் துர்க்கா பகவதியின் சரித்திரம் எதில் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த * தேவீபுராணம்தான் இங்கு 'பாகவதம்' என்னும் பெயரால் சொல்லப்பட்டது.

இவைகளில் சில சிவனுக்குப பரத்துவத்தையும்; சில விஷ்ணுவைப் பெருமைப்படுத்தியும் கூறுநிற்கும். ஆனல் சிவபரத்துவங் கூறுவனவே அதிகம். அவற்றுள் "சைவம்" என்கிற சிவபுராணமே சிறப்புடையதென்பது பெயரினாலேயே பெறப்படுவதால் அதில் சில இங்கு உதாகரிகக உத்தேசித்திருக்கிறேன்.

---

* தேவீபுராணம்தான் பாகவதமென்பது, வியாசருடைய வாக்காகவே பௌராணிகர் பொதுவாக ஒப்புக்கொண்டாலும் வைஷ்ணவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், அவர்கள் தேவீ பாகவத புராணத்தை உப புராணங்களுள் ஒன்ருக எடுக்கிருர்கள். உண்மை எப்படியிருந்தாலும் தேவீ பாகவதமே பழக்கமுடையதென்பது ஆராய்ச்சியாளருக்கு விளங்கும்.

சிவபுராணம் இருபத்து நாலாயிரம் கிரந்தங்களையுடையது. இதற்குப் பிரமாணம்:—

யதிதம் சைவ மாக்யாதம்
புராணம் வேத சம்மதம்
தஸ்ய பேதான் ஸமாஸேன
ப்ருவதோ மே நிபோதத. (49)

வித்யேசுவரம் ததா ரௌத்ரம்
வைநாயக மனுத்தமம்
ஔமம மாத்ருபுராணம் ச
ருத்ரைகாதசகம் ததா. (50)

கைலாசம் சதருத்ரம் ச
கோடிருத்ராக்ய மேவ ச
ஸஹஸ்ர கோடி ருத்ராக்யம்
வாயவீயம் தத: பரம். (51)

தர்மஸம்ஜ்ஞம் புராணம் சே
த்யேவம் த்வாதச ஸம்ஹிதா:
வித்யேசம் தச ஸாஹஸ்ர
முதிதம் கரந்த ஸங்கியயா. (52)

ரௌத்ரம் விநாயகம் சௌமம்
மாத்ருகாக்யம் தத: பரம்
ப்ரத்யேக மஷ்ட ஸாஹஸ்ரம்;
த்ரயோதச ஸஹஸ்ரகம். (53)

ருத்ரை காத சகாக்யம் யத்;
கைலாசம் ஷட் ஸஹஸ்ரகம்
சதருத்ரம் த்ரி ஸாஹஸ்ரம்
கோடிருத்ரம் தத: பரம். (54)

ஸஹஸ்ரைர் நவபிர் யுக்தம்
சர்வார்த்தஜ் ஞான ஸம்யுதம்
ஸஹஸ்ர கோடி ருத்ராக்ய
மேகா தச ஸஹஸ்ரகம். (55)

சது: ஸஹஸ்ர ஸங்க்யாகம்
வாயவீய மனுத்தமம்
தர்மஸம்ஜ்ஞம் புராணம் தத்
தத் த்வாதச ஸஹஸ்ரகம். (56)

ததேவம் லக்ஷ முத்திஷ்டம்
சைவம சாகாவி பேதத:
புராணம் வேதஸாரம் தத்
புக்தி முக்தி பலப்ரதம். (57)

வ்யாஸேன தத்து ஸம்க்ஷிப்தம்
சதுர்விம் சத் ஸஹஸ்ரகம
சைவம் தத்ர புராணம் வை
சதுர்த்தம் ஸப்த ஸம்ஹிதம். (58)

வித்யே ச்வராக்யா த்ராத்யா
த்விதீயா ருத்ர ஸம்ஹிதா
த்ருதீயா சத ருத்ராக்யா
கோடி ருத்ரா சதுர்த்திகா. (59)

பஞ்சமீ கதிதா சோமா
ஷஷ்டீ கைலாஸ ஸம்ஹிதா
ஸப்தமீ வாய வீயாக்யா
ஸப்தைவம் ஸம்ஹிதா இஹ. (60)

வித்யேச்வரம் த்வி ஸாஹஸ்ரம்
ரௌத்ரம் பஞ்ச சதாயுதம்
த்ரிம்சத் ததாத்வி ஸாஹஸ்ரம்
ஸார்த்தை கசத மீரிதம். (61)

சதருத்ரம் ததா கோடி
ருத்ரம் வ்யோம யுகாதிகம்
த்வி ஸஹஸ்ரம் சத்விசதம்
ததௌளமம் பூஸ ஹஸ்ரகம். (62)

சத்வாரிம் சத் ஸாஷ்டசதம்
கைலாஸம் பூஸ ஹஸ்ரகம்
சத்வாரிம் சச்ச த்விசதம்
வாயவீய மத: பரம். (63)

சது: ஸஹஸ்ர ஸங்க்யாகூ
மேவம் ஸங்க்யா விபேதத:
ஸ்ருதம் து பரமம் புண்யம்
புராணம் சிவ ஸம்ஜ்ஞகம். (64)

வேத சம்மதமான சிவபுராணமானது முதலில் பன்னிரண்டு சம்ஹிதைகளுடன் லக்ஷம் கிரந்தங்களையுடையதா யிருந்தது. அதை வியாசர் இருபத்து நாலாயிரம் சுலோகங்களையுடைய ஏழு சம்ஹிதைக ளாகச் சுருக்கினர். இவ்வேழு சம்ஹிதைகளைக் கொண்டதே சிவ புராணமென்னும் மஹாபுராணமாகும். இதன் பிரிவுகளாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | வித்யேசுவர சம்ஹிதா | (சுலோகம்) | 2000 |
| 2. | ருத்ர சம்ஹிதா | ,, | 10500 |
| 3. | சதருத்ர சம்ஹிதா | ,, | 2180 |
| 4. | கோடிருத்ர சம்ஹிதா | ,, | 2240 |
| 5. | உமா சம்ஹிதா | ,, | 1840 |
| 6. | கைலாஸ சம்ஹிதா | ,, | 1240 |
| 7. | வாயு சம்ஹிதா | ,, | 4000 |
| | ஆக சம்ஹிதைகள் 7-க்கு சுலோகங்கள் | | *24000 |

* தற்சமயம் தேவநாகர எழுத்தில் அச்சிட்டு வந்திருக்கும் புஸ்தகத்தில் 24178 இருபத்து நாலாயிரத்து நூற்றெழுபத்தெட்டு சுலோகங்கள் காணப் படுகின்றன. அவைகளை விவரமாகக் கூறுகின்றேன்.

| | | | | அச்சுப் புஸ்தகப்படி சுலோகங்கள். | புராணப்படி குறைவு. | அதிகம். |
|---|---|---|---|---|---|---|
| 1. | வித்யேசுவர சம்ஹிதா சுலோகங்கள் | | 2000-க்கு | 1540 | 460 | ... |
| 2. | ருத்ர சம்ஹிதா | ,, | 10500-க்கு | 10275 | 225 | ... |
| 3. | சதருத்ர சம்ஹிதா | ,, | 2180-க்கு | 2188 | ... | 8 |
| 4. | கோடிருத்ர சம்ஹிதா | ,, | 2240-க்கு | 2086 | 154 | ... |
| 5. | உமா சம்ஹிதா | ,, | 1840-க்கு | 2676 | ... | 836 |
| 6. | கைலாச சம்ஹிதா | ,, | 1240-க்கு | 1285 | ... | 45 |
| 7. | வாயு சம்ஹிதா | ,, | 4000-க்கு | 4128 | ... | 128 |
| | ஆக சிவபுராணம் 24000க்கு அச்சுப் புஸ்தகத்தின்படி | | | 24178 | 839 | 1017 |

# சிவனுக்குப் பரத்துவம் உணர்த்துதல்

## பிரம்னுக்கும் விஷ்ணுவுக்கும்

## யுத்தம்.

பிரமதேவனுடைய புத்திரனுகிய சனத்குமாரனுக்கு நந்திகேசுவரர் சொல்லுகின்றுர் :—

* யோகிந்திரனே ! பாம்பைப் படுக்கையாகவுடைய விஷ்ணுவானவர் ; தனது ஏவலாட்களாலும் நிறைந்தசெல்வத்தாலும் சூழப்பெற்று ஒருநாள் உறங்கிக்கொண்டிருந்தார். (சு.1)

வேதமறிந்தவர்களுள் சிறந்தவரான பிரமதேவன் திடீரென அங்கு வந்து உறங்கிக்கொண்டிருக்கிறவரும் மிக அழகுடையவராயும் இருக்கிற புண்டரீகாக்ஷனைக் கேட்கத் தொடங்கினுர். (சு.2)

என்னைக் கண்டும் (எழுந்திராமல்) செருக்குற்ற புருஷனைப்போல் படுத்துக்கொண்டிருக்கிறுயே நீ யாவன்? ஓ குழந்தாய்! எழுந்திரு இங்கு வந்திருககிற உன் நாதனுகிய என்னைப்பார். (சு:3)

எவனொருவன் தன்னுல் வழிபடத்தக்க குருவின் வருகையை உணர்ந்தும் கர்வத்துடன் இருப்பனே துரோகியாகிய அவ்வறிவிலிக்கு (சாஸ்திரங்களில்) பிராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது (4)

இவ்வார்த்தையைக் கேட்ட விஷ்ணுவானவர் கோபமுற்றுர். ஆயினும் பொறுமையுள்ளவன்போல் வெளிக்குக் காட்டிக்கொண்டு' ஓ குழந்தாய் ! உனக்கு மங்களமுண்டாகுக, உன் வருகை நல்வரவாகுக, இதோ இவ்வாசனத்தில் உட்கார். (சு.5)

பிரமதேவன் சொல்லுகிறுா :—

ஓ குழந்தாய் விஷ்ணுவே ! உனது முகம் வெறுப்பையும் உன் கண்கள் கோபக் குறியையும் காட்டுகின்றனவே காலத்தின் வலியால்

---

* மூல சுலோகங்களை எழுதுவதால் புத்தகம் விரிவதோடு தமிழில் எழுதுவதும் வாசிப்பதும் கஷ்டமாகவிருப்பதால் சம்ஸ்கிருத மூலத்தின் பிரதி பதப் பொருள் தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பெரும் அபிமானம் உன்னை அடைந்துள்ளது. நான் உலகிற்கு தந்தையும் உனக்கு இரட்சகனுமாவேன். (சு.6)

விஷ்ணு சொல்லுகிறார் :—

ஓ குழந்தாய்! நான் உலகிற்குப் பாட்டனும் (உலகைப் படைத்த) உன்னைககாப்பவனுமாவேன். இவ்வுலகனைத்தும் என்னிடத்தில் நிலைபெற்றிலங்குகின்றன. நீயோ மக்களுள் திருடனைப்போன்றிருக்கின்றாய். (சு 7)

எனது நாபியின் கண்ணுள்ள தாமரைப் பூவினின்றும் பிறந்த நீ பயனற்ற சொற்களைச் சொல்லுகின்றாய்.

நந்திகேசுவரன் சொல்லுகின்றார் :—

பிரமனும் விஷ்ணுவும் அறிவுகெட்டு இவ்வாறு ஒருவர்க்கொருவர் நான் பெரியவன், நான் பெரியவன், எனத் தர்க்கித்துக் கொலை செய்ய விருப்பமுள்ளவர்களாய் யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். (8.9)

பின்னர் வீரபுருஷர்களும் ஒருவர்க்கொருவரைக் கொன்றழிப்பதில் விருப்பமுள்ளவர்களுமான அவ்விருவரும் மாஹேஸ்வரம், பாசுபதம், முதலிய அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். அவைகளின் சுவாலைகளால் மூவுலகங்களும் எரியத் தொடங்கின. பின்னர் பின்னர் பரமேசுவரன் இந்த அகாலப் பிரளயத்தைப் பார்த்து :— (சு 10)

## சிவபெருமான் அக்கினிஸ்தம்பமாக ஆவிர்ப்பாவம்.

அவ்விருவருக்கும் நடுவில் பயங்கரமான வடிவத்தையுடைய பெரும் * நெருப்புத்தூணகத் தோன்றினார்: (சு.11)

நெருப்பைக் கக்கிக்கொண்டிருக்கிறவையும் உலகை அழிக்க வல்லவையுமான அவ்விருவர்களின் அஸ்திரங்களும் அந்த நெருப்புக் கம்பத்திற்தருகாமையில் செயலற்றுக் கீழ் விழுந்தன. (12)

---

* திருவண்ணமலை மலையானது இவவாறு அக்கினி யுருவாய்வந்த சிவன் என்றே அத்தல மான்மியம் கூறும்.

(பிரம விஷ்ணுக்களாகிய) அவ்விருவரும் ஆச்சரியகரமான அந் நெருப்புத்தூணையும் தங்களுடைய ஆயுதங்கள் செயலற்றுப்போன தையும் கண்டு இதென்ன விந்தை! என ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டார்கள். (13)

நெருப்புமயமான இந்த தூணனது நமது புலன்களால் உணரக் கூடாதவிதமாய் எவ்விதமோ எழுந்ததே இதன் அடியும் முடியும் நம்மிருவராலும் காணப்படவேண்டும். (14)

இவ்வாறு முடிவு கட்டிக்கொண்டு அந்நெருப்புத்தூணின் அடி முடிகளைக் க்ண்டறிய விரைந்து புறப்பட்டார்கள். (15)

நம்மிருவரும் ஒரே வழிக்குப் போனால் காரியம் முடியாது எனச சொல்லி விஷ்ணு பன்றியுருவெடுத்து அத்தூணின் அடியைக் காணப் புறப்பட்டார். (16)

அவ்வாறே பிரமதேவனும் அன்னப்பறவையின் உருவைத் தாங்கி முடியைக் காணவும் சென்றார். (17)

ஹரியானவர் பாதாளத்தை வெகுதூரம் வரையில் குடைந்து சென்றும் நெருப்புத்தூணின் அடியைக் காணவில்லை. (18)

* "சூகர" ரூபியான அரியானவர் களைத்துப்போய் முன்ன தாகவே படைக்களைத்லை அடைந்தார். (19)

குழந்தாய் சனத்குமாரனே! ஆகாயமார்க்கமாகச் செல்லும் உனது தந்தையானவர் மிக நறுமணமுடையதும் வாடாததுமான ஒரு தாழைப்பூவைக் கண்ணுற்றார். பிரம விஷ்ணுக்களின் அறியா மையைக்கண்டு நகைத்து பரமசிவன் சிரத்தைச் சிறிது அசைத்ததால் அப்புஷ்பம் விழ நேர்ந்தது. அது எத்தனையோ ஆண்டுகளாகக் கீழ் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. (20, 21)

அதைப் பார்த்த பிரமன் புஷ்பங்களுக்கு அரசனே! ஏன் கீழ்ச் செல்லுகின்றாய். உன்னைக் கீழே வீழ்த்தினவன் யாவன்? என வினவ நான் இத்தூணின் மத்தியில் இருந்து, வெகு நாட்களாகக் கீழ்நோக்கி வந்து கொண்டிருக்கின்றேன். இதன் ஆதியை நான் பார்க்கவில்லை.

---

* சூகரம் = பன்றி.

நீயும் இதன் முடியைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை விட்டுவிடு என விடையிறுக்கப் பிரமன்; அப்படியானால் நண்பனே! நீ எனக்கு ஒரே ஒரு உதவி செய்யவேண்டும். இந்த தூணின் முடிவானது பிரமதேவனால் பார்க்கப்பட்டது. இக்காரியத்தில் நான் சாட்சியாக இருக்கிறேன் என்று விஷ்ணுவுககுச சொல்லவேண்டும். என்று வேண்டிக்கொண்டு அப்பூவைப பன்முறை நமஸ்கரித்தான். ஆபத்து காலத்தில் சொல்லுகிற * அசத்தியம சத்தியம் போன்றதே யாகுமென்று பெரியோர்களின் ஆஜ்ஞையுமிருக்கிறது. (சு. 21 முதல் 25 வரை)

பின்னர் தாழம்பூவோடு கூடவே பிரமதேவனும் கீழே வந்தான். அங்கு மிகக் களைப்புற்று மகிழ்ச்சியற்றிருக்கிற ‡ அசயுதனைப் பார்த்து சந்தோஷத்தால் கூத்தாடினான். அச்யுதன் இந்த பிரமதேவனிடம் (நான் இந்த நெருப்புத்தூணின் அடியைக்காணப் பிரயத்தனப்பட்டும் கைகூடவில்லை) உண்மையைச் சொன்னான். பிறகு பிரமதேவன் அச்யுதனிடம் சொன்னதாவது:—இந்தத் தூணின் உச்சி என்னால் பார்க்கப்பட்டது. இந்தக் கேதகி புஷ்பம் அக்காரியத்தில் சாட்சியாகும். பிறகு பிரமதேவன் சொன்னவண்ணமே தாழம்பூவும் அந்த விஷ்ணுவிற் கருகாமையில் பொய்யுரைத்தது. விஷ்ணு வானவர் தாழம்பூவின் வார்த்தையை உண்மையென்றெண்ணி பிரதேவனை நமஸ்கரித்து ஷோடசோபசாரத்தோடு பூசை செய்தார்.

(சு. 26, 27, 28.)

## மஹாதேவனுடைய ஆவிரப்பாவம்.

இவ்வாறு பிரமதேவனின் பொய்க்கூற்றை நம்பி விஷ்ணு அவனைப்பூஜித்ததும் கெட்டவனாகிய அந்தப் பிரமதேவனைத் தண்டிக்கும் பொருட்டு பரமசிவன் அந்நெருப்பு லிங்கத்தினின்றும் உருவோடு தோன்றினார். அப்போது பிரமதேவன் தனது தலைவனான பரமேசுவரனைப் பார்த்து நடுங்கின கைகளையுடையவனாய் பரமேசுவரனுடைய திருவடிகளை இறுகப்பிடித்துககொண்டான். (சு-29)

---

* மனுஸ்மிருதி எட்டாம் அத்தியாயம் சுலோகம் 103, 104.

‡ அச்யுதன்=விஷ்ணு.

17

ஈசுவரன் சொல்லுகிறார் :—

குழந்தாய் விஷ்ணுவே! நான் உனக்குப் பிரசன்னனாயிருக்கிறேன் ஏனென்றால் நீ பரத்துவத்தை விரும்பினை; ஆனாலும் உண்மையை யுரைத்தாய் ஆதலால் உனக்கு என்னோடு சாம்யம் கிடைத்தது ஜனசமூகத்தில் பூஜையையும் அடையாவாயாக. இதுமுதல் உனக்கு ஆயலயம் உத்ஸவம் முதலிய சிறப்புகள் நடைபெறுவதாக (சு.30.31.32)

## சிவபுராணம் வித்யேசுவர சம்ஹிதா

### அத்தியாயம் 7.

பின்னர் பரமேசுவரன் பிரமதேவனுடைய செருக்கை யொழிக்கும்பொருட்டு தனது புருவமத்தியினின்றும் பைரவன் என்கிற வியக்கத்தக்க வடிவுடைய ஒரு புருஷனைத் தோற்றுவித்தார். (சு.1)

அப்பைரவன் உடனே இறைவனைப் பணிந்து அடியேன் செய்யவேண்டுவது யாது? விரைவில் கட்டளையிடவேண்டும் என வினவப் பரமேசுவரன், ஓ குழந்தாய்! இப்பிரமன் உலகத்திற்கு முதற்கடவுள். ஆகையால் கூர்மையான வாளாயுதத்தினால் விரைவில் இவனுக்குப் பூஜையைச் செய் என ஆஞ்ஞாபிக்கப் பைரவமூர்த்தியானவர் பொய் வார்த்தையைச் சொன்ன பிரமனுடைய தலைமயிரை ஒரு கையினால் பற்றிக்கொண்டு ஐந்தாவது சிரசை அறுத்தெறிந்தார். பிறகு மற்ற சிரங்களையும் அறுத்தெறிய முயற்சிக்கவே ஓ சனதகுமாரனே! உன் தந்தையான பிரமதேவர் கொடுங்காற்றடிக்கும்போதில் வாழை போலவும் மெல்லிய கொடிபோலவும் நடுநடுங்கிப பைரவமூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்தார். அச்சமயத்தில் விஷ்ணுவும் பிரமனைக்காப்பாற்றவேண்டி பரமேசுவரனுடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு மழலைச் சொற்களையுடைய குழந்தை தன் தந்தையைக் கேட்டுக்கொள்ளும் வண்ணம் பிரமதேவனைக் காக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். இவ்வாறு விஷ்ணுவின் வேண்டுகோளுக்கிணங்கிப் பரமேசுவரனானவர் பிரமதேவனை விட்டுவிடும்படி பைரவமூர்த்திக்கு கட்டளையிட்டுப் பிறகு தலையற்ற அப்பிரமனை நோக்கிச் சொல்லுகிறார் அடே பிரமதேவா! நீ பெருமையை விரும்பிப் பொய்

யர்களுக்குத் தலைவனானாய். இதனால் உனக்கு உலகத்தில் உபசாரம் ஆலயம உதஸவம் முதலியன இல்லாமல்போகட்டும. பின்னர் கேதகீ புஷ்பத்தைப்பார்த்து அடே பொய்யனே!இதைவிட்டு தூரத்தில் எங்கேனும போய்விடு. நான் இனிமேல் உன்னைவிரும்பேன். எனது பூஜைக்கு நீ உதவமாட்டாய்.

(சிவபுராணம வித்யே சுவரசம் ஹிதா
சுலோகம் 2-முதல் 15-வரை.

அன்பர்களே! பரமசிவனுக்குப் பரத்துவங் கூறவந்த புராணத்தைப் பாருங்கள். பிரமதேவனுடைய செய்கை எத்தகையது. இவன் உலகத்தைப் படைத்தவன் அன்றோ! இவனே இம்மாதிரி தனக்கில்லாத பெருமையைப் பெறவேண்டிப் பொய்ச்சான்று தயாரித்தான் என்றால் ஏனையோரைக குறைகூறுவானேன் * "தாழம்பூ" பிரமதேவனுடைய வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டே பொய்ச்சாட்சி கூறத் தலைப்பட்டது. இது மனுஸ்மிருதிக்குச் சம்மதமாகையால் சாட்சிக்காரனான தாழம்பூவை சிவபெருமான் தண்டித்தது சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றே 'அம்மன்' முதலிய தேவதைகள் தங்கள் பூஜைக்கு தாழம்பூவை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். அச்சமயம் பொய்யுரையாவிடில் விஷ்ணுவின் பூஜையைப் பிரமன் பெற்றிருப்பனோ? இம்மாதிரி ஒரு சாட்சியை விஷ்ணுவும் தயாரித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாதிருக்கப் பலகாரணங்கள் என் மனதில் உதயமாகின்றன. பொய்யுரை விருப்பத்தைத் தடைப்படுத்தியது. அவையுள் ஏதேனுமொன்றாகத்தானிருக்கவேண்டும். அவைகளை நான் சொல்லுகின்றேன். வாசகர்கள் ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும எனக்குச் சமமதமேதான்.

காரணம் ஒன்று :—விஷ்ணு உறங்கிகொண்டிருக்கும்போது பிரமன் வந்தெழுப்பித் தன்னைப் பணியும்படி வற்புறுத்தினான்

---

* 'தாழம்பூ' சாட்சி சொன்ன கதை வியப்பாகவன்றோ இருக்கிறது. ஆனால் பரமசிவனுடைய சிரசிலிருந்த பூவாகையால் பேசும் திறமைபெற்றிருக்கலாம்.

இதைப்பொறுத விஷ்ணு தூக்கந்தெளியாமலிருக்கும்போதே சண்டைக்கு ஆரம்பித்திருக்கவேண்டும். தூக்கக்கலக்கம ஒருபுறம அவமானம் ஒருபுறம இரண்டும் சேர்ந்து விஷ்ணுவின மனதைக் குழப்பிக்கொண்டிருக்கும். இத்தருணத்தில் "போதாக்குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்னும பழமொழிக்கிணங்கச் சிவபெருமானும் இருப்புத்தூண்வடிவுடன் இடையில் புகுந்து தொந்தரைகொடுக்கப் பிரமன் விஷ்ணு இருவரும பந்தயம் வைத்துககொண்டு மேலும் கீழுமாகச் சென்றார்கள், முன் யோசனையுடன் வந்த பிரமா; பொய்ச சாட்சியை ஏற்படுத்தினான். அவன் மனுஸ்மிருதியை உணர்ந்தவனன்றோ. அறிவு கலங்கிய விஷ்ணுவானவர் அவ்வாறு பொய்ச் சாட்சி தயாரிக்கவில்லை.

மற்றொரு காரணம்; விஷ்ணு மிகுந்த யோசனையுள்ளவர் ஆகையால்தான் பிரமதேவன் தன்னைத்தூக்கத்தினின்றும எழுப்பி வணங்கச் சொன்னபோது சினமடைந்தும் வெளிக்குக் காட்டாமல் பொறுமையாளனைப்போல் நடந்தும் ; வழிக்கு வராத பிரமதேவனின் செருக்கை அடக்க எண்ணிச் சண்டைக்குத் துணிந்தார். திடீரென நெருப்புத்தூண் தோன்றின. இதைப் பார்தததினாலும் அறிவு பெருகி ஆர அமர்ந்தே எக்காரியமும் செய்யவேண்டும் திடீரெனச் செய்யலாகாது. செய்தால் கேடுவரும் என்று நினைத்தே உண்மையைப் பேசியிருக்கலாம்.

மூன்றாவது காரணம:—பொய்ச்சான்று பகரலாகாது மீறுபவன் நரகத்தையடைவான் என்கிற சட்டம் ஏற்கனவே ஏற்பட்டுள்ளது. ஆனால் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களின் நன்மையைக் கருதிச் சாட்சிக்காரன் பொய்யுரைத்தால் குற்றவாளியாகமாட்டான் என்ற சிறப்புவிதி பின்னரே ஏற்பட்டிருக்கவேண்டும். இச் சட்டம் செய்யுமுன் விஷ்ணுவானவர் நித்திரைககுச் சென்றிருப்பார். சட்டம் அமுலுக்கு வந்து வெகுநாட்களாகியும் எழுநதிருக்கவுமில்லை. இத்தருணத்தைத் தனக்கு அனுகூலமாய் பயன்படுத்திக் கொள்ளப் பிரமதேவன் முன்னதாகவே ஆலோசித்து விஷ்ணு

விடம் சென்று விஷ்ணுவைத் தொந்தரை செய்தெழுப்பியிருக்கக் கூடும. சண்டை நேர்ந்தவுடன் சிவபெருமானும் நெருப்புத்தூண் வடிவாகத் தோன்றினர். பொய்ச்சான்று தயாரித்தால் சட்டப்படி தண்டனை கிடைக்குமே என நினைத்து அவ்வாறு செய்யவுமில்லை

மனுஸ்மிருதியை சிவபெருமான் பொருட்படுத்தவில்லையென்று பிரமதேவனையும தாழம்பூவையும் தண்டித்ததனுலேயே விளங்குகின்றது மனுஸ்மிருதி பிராமணர்களுக்குச் சாதகமும் தன்னை வணங்கும் இராட்சதர் (தமிழர்) களுக்குப் பாதகமுமாகையினுற் போலும் அவர் அதை மீறினர். ஆனுல் பின்னர் சிவபெருமானையும் பிராமணர்கள் வசப்படுததிக்கொண்டார்கள். இவ்வுண்மை " திரிபுர சம்ஹார " சரித்திரத்தின்போது விளக்குவேன்.

## விஷ்ணுவின் சதி.

ஒருகாலத்தில் 'நாரதமுனிவர் இமயமலையில் கடுந்தவமியற்றிக் கொண்டிருந்தார். இந்திரன் இதைப்பார்த்து பயங்கொண்டு தவத்தைக்கெடுத்துவருமபடி காமனைப் பலதரம ஏவியும் கோரிய பலன் கைகூடவில்லை ஆனுல் நாரதருக்குத்தான் " தபஸ்வி " என்கிற செருக்கு ஏற்பட்டது. பின்னர் இதைக்குறித்த முழு விவரத்தையும் சிவபெருமானிடம் தெரிவித்தார். சிவபெருமான் இதற்குச் 'செவிசாய்த்து பின் நாரதரே !என்னிடம் கூறிய மாதிரி விஷ்ணுவினிடம் கூறவேண்டாம என்று உபதேசித்தார். பிறகு நாரதர் பிரமலோகம் சென்று பிரமனிடமும் தெரிவித்தார். பிறகு விஷ்ணுவினிடம் சென்று கதை முழுதும் தெரிவித்துவிட்டு விஷ்ணுவை வணங்கி விடைபெற்றுப் பிரயாணமானுர். நாரதர் சென்றுகொண்டிருககும்வழியில் பெண்களாலும் ஆண்களாலும நிறையபபெற்ற இரு நகரங்கள் விஷ்ணுவினுல் உண்டாக்கப் பெற்றன. அந்நகரங்களுக்கு அரசனுன 'சீலநிதி' என்பானின் மகள் ஸ்ரீமதி என்பவளுக்கு 'சுயம் வரம்' ஏற்பாடாயிருந்தது. இதற்காகப் பலதேசத்து மன்னர்களும் வந்திருந்தார்கள். நாரதர் இக்கன்னிகைமீது காதல்கொண்டு அவள் தன்னை விருப்புதற்கேற்ற அழகைப்பெற

எண்ணி விஷ்ணுவினிடம் திரும்பிவந்து விஷயத்தைத் தெரிவித்து தங்களின் உருவத்தை அடியேனுக்கு அளிததருளவேண்டும எனப் பிரார்த்திகக விஷ்ணு செய்த சதியாவது:—

நாரதமுனிவரின் இத்தகைய வார்த்தையைக்கேட்டு மதுசூதனன் (விஷ்ணு) நகைத்தவராய் பரமசிவனுடைய பிரபுத்தன்மையையும் நினைத்து தயவுடன் மறுமொழி பகர்ந்தார். (சு-30)

"முனிவரே; உமது விருப்பத்திற்குரிய இடம் எதுவோ அங்கு செலவீராக. உமது விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன். ஏனென்றால் நோயுற்றவனுக்கு வைத்தியன்போன்று நீர் எனக்கு மிகவும் பிரியமுடையவர் (சு-32)

இவ்வாறுகூறி அந்நாரதருக்கு குரங்கின் முகத்தையும் தனது ஸ்வரூபத்தையும் (சதுர்புஜம் முதலியன) அளித்து மறைந்தருளினார். (சு-32)

## சிவபுராணம் ருத்ரஸம்ஹிதா சிருஷ்டி கண்டம்.

அத்தியாயம் 3, சுலோகம் 30 31.32).

சகோதரர்களே! விஷ்ணுவின் சதியைப்பார்த்தீர்களா இவ்வஞ்சகனான விஷ்ணுவின் இனிய மொழிகளில் மயங்கிய "நாரதர் அவசரக்கோலம் அள்ளித்தெளி" என்னும பழமொழிக்கிணங்க ஸ்ரீமதியின் சுயம்வரமண்டபத்தை அடைந்தார் பாவம்! கண்ணாடியில் தனது முகத்தை முதலில் பார்த்துவிட்டுப் பின்னர் சுயம்வரத்திற்குச் சென்றிருக்கலாகாதா ஓய் நாரதரே! "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்னும் பழமொழி உமமைப்பற்றி தான் எழுந்தது போலும்.

வாசகர்களே! பின்னர் நடந்ததையும் கேளுங்கள்.

'அழகிய இலக்கணங்களையுடைய அவள் (ஸ்ரீமதி) அச்சுயம்வர மண்டபத்தின் நடுவில பொன்னினாலாக்கப்பெற்ற மாலை ஒன்றைக் கையிலேந்தி இலக்ஷ்மிதேவியைப்போல தோன்றினாள். (சு-45)

விஷ்ணுவின் சரீரமும் குரங்கின் முகமும் உடைய நாரதமுனி யைக் கண்ணுற்றுக் கோபங்கொண்டாள். (சு-46)

தன் பார்வையை அந்நாரதனிடத்திலிருந்து திருப்பி சந்தோ ஷத்தோடு (மற்றொருவனிடம) சென்றாள் (சு-47)

அச்சமயம அரசவுருவோடு விஷ்ணுவானவர் ஆங்கு வந்தார், ஆனால் அவளால்மட்டும விஷ்ணு காணப்பட்டார் வேறு யாரும பார்க்கவில்லை (சு-49)

பின்னர் விஷ்ணுவைகக்கண்டு மனமகிழ்ந்து அக்கட்டழகி அம்மா லையை அவன் கழுத்தில் சாற்றினாள் (சு-50)

## (சிவபுராணம் ருத்ரஸம்ஹிதா சிருஷ்டி கண்டம்·
## (அத்தியாயம் 3.)

வாசகர்களே ! விஷ்ணுவானவர் தன்னை நம்பிண பக்தசிரோ மணியான நாரதமுனியையே இவ்வாறு சதியால் ஏமாற்றினாரென்றால் அத்தகையார் அசுரர்களை ஏமாற்றிக் கொலை செய்தது ஆச்சரியமல்ல. இவ்வாறு ஜனங்களை ஏமாற்றித் துன்புறுத்துவதனாற்போலும் விஷ் ணுவிற்கு " ஜனார்த்தனன் என்னும பெயர் வந்தது. (ஜனார்த்தனன் ஜனங்களைத் துன்புறுத்துகிறவன்).

பிறகு அப்பெண்ணைத் தூக்கிச் செல்லத் தலைப்பட்டார் அச்சம யம நாரதர் மிகவும் துக்கித்து தன்னைச் சதிசெய்த அவ்விஷ்ணுவைப் பலவாறு தூற்றி சாபங்கொடுத்தார்.

"அரியே ! நீ மிகக்கொடியவன் உலகத்தை வஞ்சிப்பவன் பிற னுடைய ஆனந்தத்தைப் பொறாதவன்,' துற்புத்தி அழுக்கு படிந்த மனத்தினன் (சு-6)

பண்டு மோகினி வடிவெடுத்து அசுரர்களை ஏமாற்றி வாருணி யைப் பருகும்படி செய்தாய் அமிர்தத்தை அவர்களுக்கு கொடுக்க வில்லை (வாருணி-கள்) (சு-7)

ஏமாற்றுவித்தையில் உனக்குப் பிரியம் அதிகம். நீ நன்னடக்கை யுடையவனல்லாதிருந்தும் பிரபுவினால் சுவதந்திரனாகச் செய்யப்பட் டிருக்கிறாய் (பிரபு-பரமசிவன்) (சு-9)

அரியே)! அதை (உன் வஞ்சனையை) அறிந்த நான் இப்போது உன்னைச் சிக்ஷிக்கின்றேன். ஏனென்றால் இனிமேல் நீ இத்தகைய குற்றத்தைச் செய்யலாகாது, (சு-12)

மாயையால் மயக்குற்ற முனியானவர் இவ்வாறு மொழிந்து சினத்தினால் வெறுப்புற்று தனது பிரமதேஜஸை வெளிப்படுத்திக் கொண்டு விஷ்ணுவைச் சபித்தார். (சு-14)

பெண்ணின்பொருட்டு என்னைத் துன்புறச் செய்தாய். எந்த வுருவுடன் என்னை வஞ்சித்தனையோ அவ்வுருவோடு துக்கத்தை அனுபவிக்கும் மனுஷனாகக் கடவாய். அன்றியும் எந்தப் பிராணி யினுடைய முகத்தை எனக்குக் கொடுத்தாயோ அவை அப்போது உனக்கு உதவி செய்யட்டும். (சு-16)

பிறருக்குத் துன்பத்தைத் தரும் நீ பெண்ணைப் பிரிந்து துன் புறுவாயாக, அறியாமையினால் மயங்கிய மனுஷனைப்போன்று திரிவாயாக. (சு-17)

## (ருத்ரஸம்ஹிதா சிருஷ்டி கண்டம்.)

### அத்தியாயம் 4.

வாசகர்களே ! இத்தகைய இழிதன்மையையுடைய விஷ்ணுவை இறைவனாக ஏற்றிப் போற்றுவதனால் அடையும் பயன் யாது? "யதா ராஜா ததா ப்ரஜா" இம்முதுரையின் அர்த்தப்படிக்குள்ள பிரயோஜனம் தான்.

பிரமதேவனின் மற்றொரு விளையாட்டும்
காமதேவனுடைய பிறப்பும,

பிரமதேவர் தனது புத்திரனை நாரதமுனிவரிடம் கூறு கின்றார்:—

ஓ முனியே பிரமதேவனாகிய நான் எப்போது எனது மனதிலிருந்து மரீசி, அத்ரி, புலஹன், புலஸ்தியன், அங்கிரஸ் க்ரது, வஸிஷ்டன், நாரதன், தக்ஷன் பிருகு என்னும் புத்திரர்களைத் தோற்றுவித்தேனோ அப்போது என் மனதினின்றும் அழகிய பெண் ஒருத்தியும் தோன்றினாள் (சு. 18.19)

அவள் சந்த்யா, திவக்ஷாந்தா சாயம்சந்த்யா, ஜபந்திகா முதலிய பெயர்களால் அறியப்படுபவள். முனிகளின் மனதையும் மயக்குபவள். (சு. 20)

அவளுக்கொப்பாக மற்றொரு அழகி சுவர்க்கம், பூமி, பாதாளம் என்னும் மூவுலகங்களிலும் மூன்று காலங்களிலும் இல்லை. எல்லாக் குணங்களும் நிறைந்தவள். [சு.21)

அவளைக்கண்டதும் எழுந்து நான் என் மனதில் ஏதோ எண்ணினேன். தக்ஷன் முதலிய எனது புத்திரர்களும் யோசனை செய்யத் தொடங்கினார்கள். (சு.22)

ஓ முனிசிரேஷ்டரே ! இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்த பிரமதேவனாகிய என் மனதினின்றும் "காமதேவன்" என்னும் கட்டழகன் பிறந்தான். (சு.23

நான் அவனுக்கு கட்டளை யிட்டதாவது :—ஓ மகனே ! நீ உன் உருவத்துடன் ஐந்து வகைப் பூக்களால் ஆக்கப்பெற்ற அம்புகளைத் தாங்கியவனாய் ஆண்களையும் பெண்களையும் மயக்கி "சனாதன சிருஷ்டி" யைச் செய்யவேண்டும். (சு.37)

நான், வாசுதேவன், புருஷோத்தமனான தானு இம்மூவரும் உன் வயப்படுவார்கள் என்றால் மற்ற உயிர்களைக் குறித்துக் கூறுவானேன். (சு.39)

வாசுதேவன் = விஷ்ணு. தானு = பரமசிவன்,

(சிவபுராணம் ருத்ரஸம்ஹிதா ஸதீகண்டம் அத்தியாயம் 2).

வாசகர்களே ! இக்கதையைக் கவனியுங்கள். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவன் தான் பெற்ற பெண்ணின்மீது தனக்குற்ற மிருக விருபபத்தைத் தனது புத்திரனுக்குக் கூறுகிறார். அப்புத்திரன் யாரென்றால் அச்சமயம் தன்னுடன் இருந்தவர்களும தன்னைப் போன்ற படிற்றொழுக்கத்தினர்களுமான பல பிள்ளைகளுள ஒருவன். ஆனால் பல்லாண்டுகளுக்குமுன் நடந்த இவ்வற்புதம் தமது அரும புதல்வன் மறந்துபோயிருந்தால் என்செய்வது. மூவுலகங்களுக்கும "வார்த்தாவிதரணம் செய்பவரல்லவோ தனது புதல்வரான நாரதர் ஆகையால் நினைப்பூட்டுகிறார்போலும். இப்பிரமதேவனின் அறிவே அறிவு. இவரைக்கடவுளாகக்கூறும் புராணங்களின் பெருமைக்கும் அவைகளைப்படித்து ஆனந்தமுறும பக்தசிரோமணிகளின் பாக்கியத்திற்கும் ஒப்பும் இணையும் உண்டோ.

## 'சந்த்யா' என்னும் பெண்ணை அவள் தந்தையும் சகோதரர்களும் காமுறுதலும் பரமசிவனது உபதேசமும்.

பிரமன் நாரதருக்குச் சொல்லுகிறார் :—

நான் எப்போது காமனுக்கு இவ்வாறு கட்டளையிட்டேனோ அப்போது அவன் முதன் முதல் என்மீதே தனது அதிகாரத்தைச் செலுத்தினான்.

முனியே ! பிறகு நானும மற்ற முனிகளும் (வசிஷ்டர் நாரதர் முதலிய பிரமதேவனின் மாசைபுத்திரர்கள்) காமனால் மயக்கப்பட்டவர்களாய் மனதில் விகாரத்தை அடைந்தோம். (சு.20.

அடிக்கடி அச் 'சந்த்யா' என்பவளை விகாரத்துடன் பார்த்துப்

---

* 'சனாதன சிருஷ்டி என்பதன் கருத்து எனக்கு விளங்கவில்லை. சமஸ்கிருதத்தில் சனாதனம் என்றால் பழையது. சிருஷ்டி என்றால் படைப்பு இதன்படி பார்த்தால் பழமையான படைப்பு' என்று பொருள் படுகிறது.

பார்த்து காம இச்சையைப் பெருக்கிக்கொண்டோம் ஏனென்றால் பெண் காமத்தை வளர்ப்பவளன்றோ. (சு.21)

எங்களால் மீண்டும மீண்டும் பார்க்கப்பட்ட அவளும் காமனின் அம்பிற்கிலக்கானவளாய் கடாக்ஷம் ஆவரணம் (கடாக்ஷம்-நேராகப் பார்க்காமல் கோணலாகப் பார்த்தல். ஆவரணம்-தன்னைப்பார்த்ததும் தலை குனிதல்) முதலிய காமக் குறிப்புகளை அடிக்கடி காண்பித்தாள். (சு.24)

பின் இத்தகைய செய்கைகளையுடைய 'சந்தியாவைக்கண்டநான்; பிரஜாபதியும தர்மத்தால் நிறைந்த சரீரத்தையும் உடையவனாயிருந்தும அவள்மீது இச்சைகொண்டேன். (சு.26(

இவ்வாறு தந்தையினுடையவும் சகோதரர்களுடையவும் இழிநடத்தையைகண்ணுற்ற தருமம (ஓர் தேவன்) தருமரக்ஷகனும தலைவனுமான சமபுவை மனதில் நினைத்தது. (சு.30)

மஹாதேவனே! கடக்கமுடியாத பாவத்தினின்றும் என்னைக் காத்தருள்வீராக. என் பிதாவும் சகோதரர்களும் பாபபுத்திகளானார்கள். (சு.35)

ஆகம்பூ (சிவன்) தருமத்தைக காக்கும்பொருட்டு விரைவில் அங்கு வந்து சேர்ந்தார். (சு.36)

(கூடாவொழுக்கத்தினரான) அவ்வெல்லோரையும் பார்த்து மீண்டும மீண்டும் நகைத்து 'ஸாது ஸாது' (நன்று செய்தீர்கள் நன்று செய்தீர்கள்) என்று கூறி நாணமுறும்படி செய்து பினவருமாறு சொல்லலுற்றார். :— (சு 38)

சிவன் சொன்னார் :—

பிரமனே! பெற்ற பெணணைப் பார்த்து எங்ஙனம் காமத்தை அடைந்தாய் இது வேதானுசாரிகளுக்குத் தக்கதன்றே. (சு.39)

தாய், சகோதரி, சகோதரன் மனைவி, மகள் இவர்களை அறிஞன் ஒருபோதும் இழிநோக்குடன் நோக்கமாட்டான். (சு.40)

வேதமார்க்கத்தின் நிச்சயமான இந்நெறியானது உன் முகத்தில் இருக்கிறது. காமம் ஒன்றினால் அது எவ்விதம் மறக்கும்படிச் செய்யப்பட்டது, (சு 41)

பிரமன் சொன்னார்:—

இவ்வாறு அந்த சிவனுடைய வார்த்தையைக்கேட்ட நான் மிகவும் வெட்கி கணப்பொழுதில் வியர்வையால் நனைக்கப்பெற்றவனானேன். (சு.46)

எனது உடம்பினின்றும் வெளிப்பட்ட வியர்வையினின்று 'அக்னிஷ்வாத்த'' பித்ரு கணங்களும் வேறு பித்ருக்களும் தோன்றினார்கள். (சு.48)

முனிவே ! அக்னிஷ்வாத்தர்கள் அறுபத்துநாலாயிரம் பேர்களும் ''பர்ஹிஷத்'' பித்ருககள் எண்பத்தாறாயிரம் பேர்களுமாவார்கள். (சு.50)

அப்போது தக்ஷனுடைய சரீரத்தினின்றும் வியர்வை பூமியில் விழ்ந்தது. —அதினின்று சகல குணங்களும் பொருந்திய ரதி என்பவள் உண்டானாள். முனிகளின் மனதையும மயக்கும்படியானவள். (சு.53)

புலனடக்கமுள்ள மரீசி முதலிய அறுவர்களைத் தவிர்த்து வசிஷ்டன், புலஸ்தியன், அங்கிரஸ்க்ரது இவர்களின் வீரியம் பூமியில் வீழ்நதது. அதினின்று வேறு பித்ருக்கள தோன்றினார்கள். சோமபர், ஆஜ்பபர், சுகாலிகள், ஹவிஷ்மான்கள் ஆகியவர்கள் அப்பித்ருக்களேயாவர். (சு.54-56)

---

* 'ரதி' தக்ஷனுடைய பெண்ணாகையால் முறைப்படி காமன் அவளுக்கு சிறிய தந்தையாகவேணும். அங்ஙனமிருக்க காமன் அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டான். இதைத தேவர்களெல்லாம சம்மதித்திருக்கிறார்கள். தமையன் மகளை மனமுடித்துக்கொள்ளுவது முறையல்லவாயினும் முறை பிறழ்ந்த புராணத் தேவாகளுக்கு ''மனம் போல மாங்கல்யம்'' ஆதலால் முறையாம்.

## சிவபுராணம் ருத்ரஸம்ஹிதா சிருஷ்டி கண்டம்,

## அத்தியாயம் 3.

ஆஹா! எவ்வளவு அழகிய கதை!! இக்கதாபாத்திரங்களுள் தான் ஒருவனுயிருந்தும சிறுபிள்ளை விளையாட்டில் மறந்துபோயிருந்ததை தனது தந்தையான பிரமதேவரால் மறுபடியும் நினைவுறுத்தப் பட்டு நாரதர் பூலோகத்திற்குக் கொண்டுவந்திராவிட்டால் அது புராணபக்தர்களுக்கு பெரும குறைபாகவன்றே முடிந்திருக்கும. இத்தகைய குறை வராமல செய்த பிரமதேவனுடையவும நாரதருடையவும உதவிகருத்தக்க பிரத்தியுபகாரம் யாதொன்றுமில்லையாயினும் "யதாசக்தி மஹாபலம்" "பொன்வைக்கவேண்டிய இடத்தில் பூவைத்தல்" என்னும மூதுரைகளை அனுசரித்து இனிமேலேனும் பிரமதேவனுக்கு கோவில்கட்டி நித்திய நைமித்திக உத்ஸவங்களைக் குறைவற நடத்திவரவேண்டும. பழைய கோயில்கள் பல இடிந்து விழுந்து பாழாய்க்கிடக்கும இததருணத்தில் புதுப் புதுக் கோயில்களைக் கட்டிப் புண்ணிய மூட்டைகளைக் சேர்த்து வைக்கின்ற புராண பக்தர்களாகிய பேரறிவாளப் பிரபுக்கள் பலர் இவ்வொப்பற்ற தரும கைங்கரியத்திற்கு வேண்டிய உதவி செய்யககாத்துககொண்டிருககிறார்கள். அவர்களுக்கு இவ்வரும் பணியைக் குறித்து நினைவுறுதது வதே பணமில்லாத பகதர்களின் கடமையாகும். நாரதரை மறந்து விட்டேனென்று அன்பர்கள் நினைக்கவேண்டாம். அவரை ஓரிடத்திலும் தங்கச் செய்யாத உத்தியோகமன்றோ அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் ஆகையால் கோவில் கட்டி அவரைக் குடிவைப்பது முடியாத காரியம். எவ்விதமேனும அவருக்கு நாம கைம்மாறு செய்தேயாகவேண்டும. அதற்கேற்ற சுலபமான ஒரு வழியைச் சொல்லுகிறேன். அதாவது :—

ஒவ்வொரு ஆலயத்திலும் அது விஷ்ணுவினுடையதோ சிவனுடையதோ, அமமனுடையதோ, முனியாண்டியினுடையதோ, மதுரைவீரனுடையதோ, மாடனுடையதோ, கருப்பனுடையதோ, குட்டிச் சாத்தனுடையதோ இவர்களைத் தவிர இன்னும் எத்தனை தெய்வங்கள் நமது நாட்டில் குடி வைத்து வழிபடப்படுகின்றனவோ அவைகளின்

ஆலயங்கள்தோறும் குறைந்தது பத்துப்பேர்வழிகளுக்காவது பிராமணர்களுக்கு நாள்தோறும் அவர்களின் விருப்பத்திற்கேற்ற பொருள்களை யுதவி பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட இன்னின்ன பொருள்களால்; மூவுலகச் சமாச்சாரங்களையும் பிரசாரம் பண்ணுபவரும, பகவானும, சிறந்த ரிஷியுமான நாரதர் திருப்தியடையட்டும் என்று பொருள் படும்படியான ஸமஸ்கிருத மந்திரம் சொல்லி நமஸ்கரிககவேண்டும. இத்தகைய தானமானது பொதுஜனங்களுடையதாகையால் அதைக காலந்தவறாமல பிராமணர்களுக்கு கொடுக்குமபடிககு கோவிலில் ஒரு அதிகாரியையும நியமிககவேண்டும அவ்வதிகாரியும பிராமணனாகவே இருக்கவேண்டும. ஏனென்றால் மந்திரம் வைதிகமாகையால் அதைப்படிக்கப் பிறவகுப்பினருககு மனு முதலிய ரிஷிகளும கடவுளுங் கூட அதிகாரம கொடுக்கவில்லையே. தானம் பெற்றுககொண்டு பிராமணர் வெளியே வருங்கால் பிராமணரல்லாதார் நமஸ்காரம் மாத்திரம் செய்யலாம. இதுவேமுறை.

மந்திரம் வருமாறு:—

"அமுகை: ப்ராஹ்மணேப்ய: ப்ரதிபாதி தைரர்த்தை ஸ்த்ரிலோகி வ்ருத்தாந்த விதரணசில: ஸததைவஸஞ்சாரீ பகவானபரமர்ஷிர் ப்ரஹ்ம மானஸபுத்ரோ நாரதஸத்ருப்யதாம்; அத்ராப்ராஹ்மணா ஏவ வ்ரியந்தே யத: ஸர்வஞுபாமுகஜா: பூஜனீயசரணாவிந்தாஸ்தே."

அன்பர்களே! வேதத்தில் காணும் ஒவ்வொரு வாக்கியமும் மந்திரமாகும் அவை பலரால் காணபபடடன அவைகளின் கர்த்தாக்களுககு "ரிஷி"கள் எனப்பெயர். இமமந்திரம இச சிறு புத்தகத்தை எழுதிய என்னால் காணப்படடதாதலால் இதற்கு நானே ரிஷி: புராணப்படிக்குள்ள புணணியங்களை விருமபுவோர் இதன்படி நடந்து கொள்ளட்டும். ஏனையோர் நாஸ்திகர்கள் அவர்கள் புராணபுண்ணிய மூட்டையை விருமபார்களாகையால் அவர்கள் இப்புண்ணியச செயலையும ஒப்புக்கொள்ள மாட்டார்கள. நாரதரின அன்பைச சமபாதிக்கப் பிராமணர்களுககு அவர்கள் விருமபும பொருட்களைக் கொடுத்தால் போதுமாவெனச் சில பக்தர்கள் சந்தேகப்படககூடும அவர்

களின் சந்தேக நிவர்த்தி செய்வதும் எனது கடமையாகையால் அதற் குரிய நியாயங்களையும் இதன் கீழ் எழுதுகிறேன்.

'பித்ருலோகம்" என இதுவரையில் யாரும் போயறியாத எங் கேயோ இருக்கிற அல்லது ஏமாற்று மனதகினரின் குறுகிய உள்ளத் தில் இருக்கிற உலகத்தில் நமது மூதாதைகள் வசித்து வருகின்றார் களன்றோ? அவர்களின் நித்தியச் செலவுக்காக அரிசி, பருப்பு, காய் கறி தினுசுகள், பணம, துணி முதலியவைகளை அமாவாசை, ஆண்டு சிராத்தம, கிரகணம, முதலிய சில குறிபபிட்ட நாட்களில் மொத்த மாகப் பிராமணர்களிடம் கொடுத்துவிடுகின்றோம். அன்றியும் கை லாஸம், வைகுண்டம முதலிய மேலுலகங்களில் (இவைகளில் போய் வந்தவர்கள் ஒருவரையும இதுவரையில் ஒருவரும் கண்டதில்லை) வசிக்கும் நமது தெய்வங்களின் அருளைப் பெறவும் நாம பிராமண ரிடம் பொருளைச் செலுத்தி விடுகின்றோம். இததகைய தானங்களைப் பித்ருக்கள் என்கின்ற நமது மூதாதைகளும தெய்வங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள் என்பது நமபவேண்டியதாயிருக்கிறது. இல் லாவிட்டால் தங்களுக்குச் சேரவேண்டியவை சேரவில்லையென்று நமது மூதாதைகளிடமிருந்தும தெய்வங்களிடமிருந்தும் பல புகார் களும் இதுவரையில் பலருக்கும் வந்து சேர்ந்திருக்கும. ஆனால் அப் படியொன்றும் வரககாணமையால் முற்கூறியவர்களுக்கு நாம் பிரா மணர்கள் மூலம அனுப்பிவைத்த பொருட்கள் போய்ச சேர்ந்திருக்கு மென்று நம்புவதில் உங்களுககு ஆக்ஷேபணையில்லை யென்பதைத் தெரிந்துகொண்டுதான் "அதிகஸ்ய அதிகம் பலம" பத்தோடு பதி னென்று என்னும் பழமொழிகளுக்கிணங்க இப்புண்ணியச் செய்கை யையும் உபதேசிக்கத்துணிவு கொண்டேன்

ப்ராஹ்மண: ஸந்து நிர்ப்பயா:—

## 'சந்த்யா' என்னும் பெண்
## நெருப்பில் மூழ்கி இறத்தல்.

பின்னர் "சந்தியா" என்பவள் இவ்வாறு தீர்மானித்தாள்:—

"என் தந்தையும் தமையன்மார்களும் வெளிப்படையாக என்

மீது காம இச்சை கொண்டதால் என்னைப்போல் பாவி ஒருவருமில்லை.', —சு. 26.

"அவ்வாறே எனக்கு என் தந்தையினிடத்தும தமையன்மார்களிடத்தும் கணவனிடத்தில் எவ்வாறு மனஞ் செல்லுமோ அவ்வாறு சென்றது." —சு. 27.

"ஆகையால் இப் பாவத்திற்கு தக்க பிராயச்சித்தம் நானே செய்வேன். வேதவிதிப்படி உடலை அக்கினிக்கு இரையாக்குவேன்." —சு. 28.

(சிவபுராணம் ருத்திரஸம்ஹிதை.)

பிரமன் சொன்னார்:—

"எனது மனதினின்றும் பிறந்த மகளான அந்த 'ஸந்த்யா' என்பவள்* தபம் பண்ணி உடலை விடுத்து "அருந்ததி" என்னும் பெண்ணாகப் பிறந்தாள்". —சு. 8.

"மேதாதிதி" என்னும் முனிவருக்குப் பெண்ணாகப் பிறந்த புத்திமதியான அவள் பிரமவிஷ்ணுமஹேசுவரர்களின் உபதேசப்படி நோன்பு நோற்றுக்கொண்டுவந்தாள்". —சு. 9.

தபம் = சூடு. நெருப்பில் வேகுதல் என்பதும் பொருந்தும்.

"மஹாத்மாவான வஸிஷ்டரைக கணவனாக அடைந்தாள்". —சு. 10.

## (சிவபுராணம், ருத்ரஸம்ஹிதா ஸதீகண்டம்.)

## அத்தியாயம் 5.

வாசகர்களே! மக்களுக்கு மாதா, பிதா, சகோதரர் முதலியவர்களோடுள்ள சம்பந்தம உயிரைப பற்றியதா? உடலைப்பற்றியதா? உயிரைப்பற்றியதானால் 'சந்தியா' வென்பவள் நெருப்பில தன் உடலை விடுத்து மறுபடியும் அருந்ததியாகப் பிறந்காள். அவளை வஸிடர் விவாசம் பண்ணிக்கொண்டது முறையாகுமா? முற்கூறிய சம்பந்தம்

சரீரத்தைப் பொறுத்ததுதான் என்றால் இந்துக்களாகிய நம்மவர்கள் இறந்து போனவர்களின் உணவு முதலிய செலவுகளுக்காகச் "சிராத்தம்" என்னும் பெயரால் பிராமணனிடம் அரிசி, பருப்பு, காய்கறி தினுசுகள், பணம் முதலியன அனுப்புகின்றார்களே. இக்கொடை நம்மைச் சார்ந்தவர்களுக்குப் போய்ச் சேருமென நம்பிக்கையோடல்லவா கொடுத்து வருகின்றோம். நமக்கும் அவர்களுக்கும் உள்ள சம்பந்தம் உடலோடே தொலைந்து போன பின்னும் இவ்வாறு சிராத்தம் என்னும் வீண் செலவு செய்யும்படிக்கு நூல் எழுதிவைத்தது பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றி பார்ப்பனர்கள் வயிறு வளர்த்துக் கொள்ளட்டும் என்றே எழுதிவைத்ததா? அன்று? வைதிகர்கள் எனது ஐயப்பாட்டை அகற்ற முன் வருவார்களென்று நம்புகிறேன்.

---

## பிரமன் விஷ்ணுவிடம் முறையிடுதலும் விஷ்ணுவின் உபதேசமும்.

பிறகு பிரமதேவன் தனது புத்திரனை காமனைப் பார்த்து பரமசிவனைப் பெண்மாயையில் வீழத்தும்படிக்குச் சொல்லியனுப்பினார். தந்தைக்குகந்த மைந்தனாகிய காமனும் தனது படைகளுடன் இருமுறை சென்று தன்னாலியன்ற வரையில் முயன்று பார்த்தும் காரியம் பலிககாமற் போகவே திரும்பி வந்துவிட்டான். அதன்பின் பிரமதேவன் விஷ்ணுவிடம சென்று பரமசிவனால் தனக்கேற்பட்ட மானநஷ்டத்தைச் சொல்லி எவ்வாறேனும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற தன் விருப்பத்தையும தெரிவித்து அதற்கு விஷ்ணுவின் உதவியை நாடிய கதையிற் சில சுலோகங்களை மொழிபெயர்த்தெழுதுகிறேன்.

(பிரமன் சொல்லுகிறார்.)

"(சிவன்) எனக்கு புத்திரனாயிருந்தும் என்னைச் சபையில் அவமதித்தான். இது எனக்குப் பெரிய துக்கமாகையால் உம்மிடம் தெரிவித்தேன்." சு. 26.

"அவன் பெண்ணை மணந்து கொண்டால்தான் நான் சுகமுறுவேன்." சு. 27.

(விஷ்ணுவின் மறுமொழி.)

அறிவிலியாகிய பிரமனே! நீ வேதத்திற்கு கர்த்தாவாயிருந்தும் முழுமூடனாயிருக்கின்றாய். நீ பெரிய கெடுமதியினன். இனிமேல் இத்தகைய எண்ணத்தைக் கொள்ளாதே. நீ பரமசிவனை உனது புதல்வன் என்கிறாய். இக்கெட்ட எண்ணத்தை விட்டுவிடு. பரம சிவன் ஸர்வாத்மா. அவரை வழிபடு. அவர் உனககு நன்மையைச செய்வார். பண்டு பரமசிவனுடைய இச்சையினால் நாமிருவரும பிறந் தோம். நாம் அவரிடத்தில் கேட்டுக்கொண்டதற் கிணங்கி அவர் நமக்கு கொடுத்த வாக்குறுதியை நினைத்துக கொள். (அதாவது)

"விஷ்ணுவுக்கு லக்ஷ்மியும் பிரமனுக்கு சரஸ்வதியும் மனைவிகளாக வாய்ப்பார்கள். பூர்ண வடிவினளான "ஸதீ தேவியார்" பரமேசுவர னான ருத்திரனுக்குப் பத்தினியாவர்."

(சிவபுராணம் ருத்ரஸம்ஹிதா ஸதீகண்டம் அத்தியாயம் 10. சுலோகம் 26 முதல் 57 வரையில்)

சகோதரர்களே! பிரமதேவன் படும்பாடு பாருங்கள் சென்ற விடமெல்லாம் அவமதிப்பு. அவனுக்கு கோயிலுமில்லை. வழிபடுவாரு மில்லை. "அடாது செய்பவன் படாது படுவன்."

---

## பேத்தியைக் கண்டு காமுற்ற பிரமனின் வீரியம் வெளிப்பட்டு அதனின்றும் மேகங்கள் தோன்றிய வரலாறு:—

விஷ்ணுவினால் இவ்வாறு நல்லுபதேசம் செய்யப்பட்ட பின்ன ரும் பிரமன் தனது பொறாமையை அடக்கமுடியாதவனாய் விஷ்ணுவை விட்டு விட்டு "துர்க்கை" அம்மனைப் புகழ்ந்து பாடத்தொடங்கினான். அப்போது அம்மன் பிரமனுக் கெதிரில் தோன்றி உன் விருப்பம் யாது? என வினவ; சிவன் கைலாசத்தில் தவம்பண்ணுகிறார் தேவரீர் அவரை மயக்கவேண்டும். வேறு யாராலும் இக்காரியம முடியாது. இதற்காகத் தேவரீர் தக்ஷனுககு மகளாய்ப் பிறந்து சிவனுக்கு மனைவி யாக வேண்டுமென வேண்டிக்கொள்ளவே அம்மனும அவ்வாறே

யாகுக; என அனுகூலமான மறுமொழி யளித்து மறைந்தனள். பின்னர் பிரமன் தக்ஷனைத் தவம் புரியும்படி ஏவினன். அவனும் துர்க்கையை நோக்கித் தவங்கிடக்கவே அம்மன் பிரத்தியக்ஷமாய் என்ன வேண்டுமெனக் கேட்க பிரமன் வேண்டிக்கொண்டபடியே தக்ஷனுடைய வேண்டுகோளுமிருந்ததால் அதற்குடன்பட்டனள். அதன்பின் தக்ஷனுடைய மனைவி "வீரிணி" என்பவள் கருத்தரித்து ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தாள். அக்குழந்தைக்கு "ஸதீ" எனப் பெயரிட்டு வளர்த்துவந்து பருவத்தை அடைந்ததும் அவள் சிவபெருமானைத் தனக்கு கணவனாகக் கோரித் தவமியற்றத் தொடங்கினள். பிரமன், விஷ்ணு முதலிய தேவர்கள் யாவரும் அவளுடைய தவத்தைதக கண்டு களித்து பரமசிமனை யணுகி விவாகம் பண்ணிக் கொள்ளுமபடி விருமபி வேண்டிக்கொள்ள அவரும் தனக்குகந்த ஒரு கன்னிகையைத் தயார் பண்ணச் சொன்னார். அச்சமயம் பிரமன் அகமகிழ்ந்து தக்ஷனுடைய மகள் 'ஸதி' யென்பாள் தங்களுக்குத் தக்கவள் எனப் பகர எல்லோருமசிவனை விட்டுச் சென்றனர். சிவ பெருமானும தன்னைக் குறித்துத் தவமபண்ணும் 'ஸதி'யைக் காணச் சென்றார். சென்றதும் பெண்ணே! உனக்குத் தேவையான வரத்தைப் பெற்றுக்கொள் எனக்கூற அவள் நாணத்தினல் மறுமொழி பகராமலிருக்கவே "நீ என் மனைவியாயிரு" எனத் தானே வரங் கொடுததார். இதைக் கேட்ட ஸதி மிகக களிப்புற்றாள். ஸதியின் தோழிகளால் தக்ஷனும் இதை அறிந்து கொண்டான். பிரமதேவனும் விவரத்தை அறிந்து அக்கணமே தக்ஷனிடம் வந்து மிக மிகச் சந்தோஷத்துடன் மகனே! நானும் நீயும் காமன் முதலியவர்களும் எதை விருமபிக்கொண்டிருந்தோமோ அது இப்போது நிறைவேறிற்று. சிவனை உன் மகள் மயக்கிவிட்டாள். அவனும் அவளை மணந்து கொள்ள இசைந்துள்ளான் எனச சொன்னார். விவாக முகூர்த்தமும் குறிப்பிட்டாய் விட்டது. அன்று நடக்கப் போகும் மணச்சடங்கிற்கு புரோகிதனயிருந்து நடத்திவைக்கும்படிக்கு தக்ஷன் தன் தந்தையாகிய பிரமனை வேண்டிககொண்டதும் பிரமன் அதற்கிசைந்து புரோகிதத் தொழில் நடத்தும்போது நடத்தின நாடகத்தைக் குறித்த புராணச் சுலோகங்களின் தமிழ் இதன்கீழ் எழுதுகிறேன்.

பிரமன் தனது பிள்ளையாகிய நாரதருக்குச் சொல்லுவது:—

"பின்னர் என் பிள்ளையாகிய தக்ஷன் என்னைப்பார்த்து பணிந்து மகிழ்ச்சியுடன் ஒ பிரபுவே! மணச்சடங்குகளைத் தாங்களே நடத்தி வைகக வேண்டுமென வேண்டிக் கொண்டான்." சுலோகம் 11.

"நானும் ஆகட்டும் என ஒப்புக் கொண்டு சந்தோஷத்துடன் எழுந்து அவ்வாறே மணத்திற்குரிய சடங்குகளைச்செய்தேன்." சு. 12

"அத்தருணத்தில் வியக்கத்தக்க ஒரு காரியம நிகழ்ந்தது. ஓ குழந்தாய்! அதை நான் உனக்குச் சொல்லுகிறேஸ். கேட்பாயாக." சுலோகம்:13.

"பரமசிவனுடைய மாயையாராலும் அறியவொண்ணுதது. அத னல் உலகனைத்தும் மயக்க மடைந்திருக்கிறது." சுலோகம் .14.

"பண்டு நான் சங்கரனைச் சதிசெய்து மயக்கவேண்டுமென நினைத் தேன். ஆனால் அவர் விளையாட்டாகவே என்னை மயக்கி விட்டார்." சுலோகம். 15.

"எவனொருவன் பிறரைக் கெடுக்க விரும்புகின்றனோ அவ்வி ருப்பம் அவனையே துன்புறுத்தும், இதை யுணர்ந்து மனிதன் அன்னியனுக்குக் கெடுதி செய்யலாகாது" சுலோகம் 16.

"(மணச்சடங்கின்போது) ஸதி அக்கினியைச்சுற்றி வலம் வந்து கொண்டிருந்தாள். அச்சமயம் அவளுடைய ஆடையினின்றும் இரு கால்களும் வெளிக்கு காணப்பட்டன. முனியே! நான அதை கண் ணுற்றேன்." சுலோகம். 17.

"சிவனுடைய மாயைக்கு அடிமையாகிய நான் காமனுல் கவரப் பட்ட மனதையுடையவனுய் 'ஸதி' யின் அங்கங்களை உற்றுப்பார்த் தேன்." சுலோகம் 18.

"நான் மனக் கிளர்ச்சியினுல் எப்படி எப்படி ஸதியின் அவய வங்களைப் பார்த்தேனே அப்படி அப்படி காமனுல் துன்புறுத்தப் பட்டவனுகவுமானேன்." சுலோகம். 19.

"பதிவிரதையும் தக்ஷனுடைய மகளுமான அவளை நான் இவ் வாறு பார்த்து காமத்தினுல் அவளுடைய முகத்தைப் பாரக்கவும் ஆசை கொண்டேன்." சுலோகம். 20.

"பரமசிவன்நிமித்தம் லஜ்ஜையினால் முகத்தை வெளிப்படையாக நான் பார்க்கவில்லை. அவளும் நாணத்தினால் தன் முகத்தை வெளிக்கு காட்டாமலிருந்தாள்." சுலோகம் 21.

"காமத்தினால் கவரப்பட்ட மனதையுடையவனாகிய நான் பின்னர் அதை (முகத்தை)ப் பார்க்கும்படிக்குள்ள உபாயத்தை ஆராய்ந்து கொடிய புகையை யுண்டுபண்ணி அவ்வாறு செய்தேன்; (ஸதியின் முகத்தைப் பார்த்தேன்.") சுலோகம் 22.

"பெருவாரியாகப் பச்சைச் சுள்ளிகளை நெருப்பில் போட்டு சிறிதளவு நெய் விட்டுப் புகையும்படிச் செய்யவே பரமசிவன் புகைச் சலைத்தாங்க முடியாமல் பெரிய வேடிக்கைக் காரராகிய அப்பிரபு தன் கணகளை இருகைகளாலும் மூடிக்கொண்டார்." சுலோகம 23, 24, 25.

'காமத்தினால் வருத்தப்பட்ட நான் பின்னர் ஸதியின் துணியை நீக்கி முகத்தை மிக மகிழ்ச்சியோடு பார்த்தேன்." சுலோகம் 26.

"ஸதியின் முகத்தைப் பலதரம் பார்த்ததனால் வசமிழந்த நான் இந்திரிய விகாரத்தையும அடைந்தேன்." சுலோகம் 27.

"அவளைப் பார்த்த காரணத்தினால் எனது வீரியத்தின் நாலு துளிகள் பனித்துளிகள் போன்று தரையில் விரைவாக வீழ்ந்தன.
சுலோகம் 28.

"அதனால் அச்சமுற்ற நான் பேசாமல் அதை யாரும உணரா வண்ணம் மறைத்து விட்டேன்." சுலோகம் 29.

"பின்னர் பகவானாகிய சம்பு திவ்விய திருஷ்டியால் அதைக் கண்டு வீரியம் வெளிப்பட்டதைக் குறித்து கோபத்துடன் சொல்லலுற்றார்." சுலோகம் 30,

சிவன் சொன்னார்.

"அடபாவியே! உன்னால் செய்யப்பட்ட வெறுக்கத்தக்க இச்செயல் எத்தகையது? மணவினையின் போது எனது மனைவியின் முகம் உன்னால் காம இச்சையோடு பார்க்கப்பட வில்லையா?"

சுலோகம் 31.

பிரமன் சொன்னார்:—

"பிரமதேவனைக் கொல்ல விரும்பி சிவன் சூலத்தை எடுத்தார்" சுலோகம 34.

"ஓ பிராமண சிரேஷ்டனே! என்னைக் கொல்வதற்கு சம்பு சூலத்தை எடுத்தபோது மரீசி முதலியவர்கள் ஹா! ஹா!! என்று கூசச விட்டார்கள்." சுலோகம் 35.

"தக்ஷன் பயந்தவனாய் வேண்டாம வேண்டாம் என்று கூவி சிவனுக் கெதிரில் சென்று தடுத்தான்." சுலோகம் 41

மஹேஸ்வரன் சொன்னார்:—

"பிரமன் ஸதியைப்பார்த்து எப்படி இச்சைப் பட்டான் வீரியத்தையும விட்டு விட்டான். ஆகையினால் குற்றஞ் செய்த அவனைக் கொன்றே தீருவேன்." சுலோகம் 45.

விஷ்ணு சொன்னார்:—

"பூத நாதனே! உலகத்தைப் படைக்குந் தொழிலையுடைய பிரமனை விட்டு விடும் இப் பிரமன் உம்மை சரணமாக அடைந்திருக்கிறான். நீர் அடியவரைக காப்பவரன்றோ." சுலோகம 50,

"பிரமன் உமமிடத்தினின்றும வேறுபட்டவனல்லன் நீரும் அவனுக்கு அன்னியனல்ல. நானும உமககு அன்னியனல்ல, நீர் எனக்கும அவ்வாறே." சுலோகம், 68.

பிரமன சொன்னார்:—

"ஓ முனீசுவரனே! இவ்வார்தைதை கேட்டு மகிழ்ந்த மஹாதேவன் என்னைககொல்லாமல் விட்டான்." சுலோகம். 76.

ருத்ரஸம்ஹிதா ஸதீகண்டம் அத்தியாயம். 19.

சிவன் சொன்னார்.

"வேதியின் நடுவில் உனது வீரியம் விழுந்தது என்னால் பார்க்கப்பட்டது. இது தாங்க முடியாததாம்." சுலோகம. 21.

"நான்கு துளிகளைக் கொண்டதும் பூமியில் வீழ்ந்ததுமான உனது வீரியத்தினின்றும் உலகிற்கு அழிவைச் செய்யும் நான்கு மேகங்கள் தோன்றும்." சுலோகம். 22.

•"சிவன் இவ்வாறு சொன்னதும் தேவர்களுக்கும் முனிகளுக்கும் எதிரில் விரைவாக அதே எனது வீரியத்தினின்றும, நான்கு மேகங்கள் தோன்றின" சுலோகம். 23.

"உலகத்தை அழிக்கும அப்பெரிய மேகங்கள்; சம்வர்த்தகம், ஆவர்த்தம், புஷ்கரம, தரோணம என நான்கு. சுலோகம. 24.

"பின் நான் அச்சநதெளிந்தவனாய் மணவினையின் மற்ற சடங்குகளையும் நடத்தி முடித்தேன்." சுலோகம். 27.

ருத்ரஸம்ஹிதா ஸதீகண்டம் அத்தியாயம். 20.

வாசகர்களே! பிரமதேவன் நடத்திய நாடகத்தை நேரில் கண்டு களிக்கும் பாககிய மில்லாவிட்டாலும் புராணத்தின் வழியாகவேனும கண்டு பக்தர்கள் களிப்படைகிறார்கள். அருவருக்கத் தக்க அழுக்கு மூட்டைகளென்று அறிஞர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கும இத்தகைய புராணங்களைப் பார்ப்பனப் பௌராணிகர்களைக் கொண்டு படிககச் செய்து பணக்காரப் பக்த சிரோமணிகள் சிரவணம் பண்ணுகிறார்கள். இதனால் அடையும் பயன் பார்ப்பன ரல்லாதாருக்கு அவமதிப்பேயானாலும் இதன் பொருட்டுச் செலவழிக்கும பணம் அபரிமிதமானது. இவ்வாறு இவ்விழிய காரியத்தில் பணம் செலவிடும் பக்தர்களின் தலைவாசலில் இவர்களின் அறிவின்மையாலும் அகங்காரத்தினாலும் பார்ப்பன மதத்தின்படி தாழ்த்தப்பட்ட ஏழை மகன் ஒருவன் * பல நாட்கள் பட்டினியால் வாடி வருந்தும போதும அவனை ஆதரிக்க முன்வர மாட்டார்கள். புராணங்கள் உயரிய தத்துவங்களை உணர்த்துவனவா யிருந்தால் அவைகளை ஏன் அறிஞர்கள் புறக்கணிக்கின்றார்கள்? என இவ்வறிவிலிப் பிரபுக்களை யாரேனும் ஒருவன்

---

* அன்பர்களே! பார்ப்பனன் வீட்டிற் கெதிரில் பார்ப்பன னல்லாதொருவன் பசியினால் வருந்தி இறந்து போகுந் தருவாயிலும் கூட பார்ப்பனன் அவ்வேழையின் பால் இரக்கங்காட்ட மாட்டான். ஆனால் தன் வகுப்பினனுக்கு எக்காலத்தும் பக்கத்துணையாகவே இருப்பான். "காபூல்" எல்லையிலிருக்கும் பார்ப்பனனும் "கன்னியாகுமரி"யில இருக்கும் பார்ப்பனனும் ஒன்று சேர்ந்து பார்ப்பன ரல்லாதாரைத் தாழ்த்தி வைக்கும் வகையில் வேலை செய்கின்றார்கள். இது பலதரம் அனுபவத்தில் வந்தும் பார்ப்பன ரல்லாதார் அறிகின்றார்களில்லையே.

கேட்டால், புண்ணியவான்களே புராணச் சிரவணத்தை விரும்புவார்கள். நாஸ்திகர்களும் மிலேச்சர்களும் விரும்பார்கள். "நாய்க்கு நறு நெய் பிடிக்குமா? என மறுமொழி பகருகின்றார்கள். பார்ப்பன ரல்லாதார் யாவரையும் படுகுழியில் தள்ளி மிதித்துத் தங்களுக்குச் சுகத்தைச் சம்பாதிக்கும் வழியில் முற்காலத்திய அரசாங்க உதவியைக் கொண்டு பார்ப்பனரால் எழுதிவைக்கப்பட்ட மனு நீதியையும புராணங்களையும ஆஸ்திக நூல்களாகவும் மதத்தின்பெயரால் மக்களை மாக்களாக்கி அவமதித்து வரும பார்ப்பனர்களைக் குருமூர்த்தங்களாகவும் இவர்கள் மதித்து வருகின்றார்கள், பார்ப்பனப் பணிவிடை யென்னும் விஷப்புகை பன்னூற்றாண்டுகளாகப் படிந்து வந்ததால் இவர்களின் "பகுத்தறிவு" என்னும் கண் ஒளி மங்கிப்போ யிருக்கிறது. இத்துடன் "ஜாதித்திமிர்" என்னும் பேயும் இவர்களைப் பிடித்திருக்கிறது. அன்னிய மதத்தினரின் சவுக்கடி இன்னும் பல்லாண்டுகள் பட்டால் தான் இவர்களுக்கு நல்ல புத்தி உதயமாகும்.

"சிவனுக்கும் பார்வதிக்கும் விவாகம் நடந்தபோது புரோகிதனாகிய பிரமதேவன் நடத்திய இழி செயல் அல்லது பழைய ஆட்டம்."

பிரமன் சொன்னார்.

"பிறகு என் ஆணையின்படி சிவன் அக்கினியை மூட்டி பார்வதியை அருகிலிருத்தி ஹோமம் செய்ய ஆரம்பித்தார்." சுலோகம் 1.

"ரிக், யஜுஸ், ஸாம வேதங்களிலுள்ள மந்திரங்களினால் சிவன் ஆஹுதியைச் செய்தார். பார்வதியின் தமையனான மைனாக மென்பவன் லாஜாஞ்சலி செய்தான். சுலோகம் 2.

"பின்னர் காளியும் சிவனும் முறைப்படி நெருப்பை வலம் வந்தார்கள்" சுலோகம் 3. (காளி=கரிய நிறத்தினள் பார்வதி.)

"அச்சமயம் சிவபெருமான் செய்த மாயையைக் கேள் தேவ முனியே! அதை நான் உன்மீது வைத்துள்ள அன்பினால் உனக்குச் சொல்லுகிறேன்." சுலோகம் 4.

"அப்போது சிவனுடைய மாயையினால் மயங்கிய நான் தேவியின் கால்களில் சந்திரன்போல் பிரகாசிக்கும நகங்களைக் கண்டேன்." சுலோகம் 5.

"அக்கணமே காமனுல் துன்புறுத்தப்பட்டு கலங்கிய கருத்தினனேன்." சுலோகம் 6.

"காம விருப்பத்துடன் மறுபடியும் மறுபடியும் பார்வதியின் அவயவங்களைப் பார்த்தேன். அதனுல் வீரியம் வெளிப்பட்டு தரையில் வீழ்ந்தது." சுலோகம் 7.

"அதனுல் வெட்கத்தை யடைந்த நான் அந்த வீரியத்தைத் தேய்த்து சிச்னத்தையும் கால்களால் மறைத்துக்கொண்டேன்." சுலோகம் 8. (சிச்னம்=ஆண் குறி.)

"பலதரம் தேய்த்ததனுல் எனது வீரியம் பல துளிகளாகச சிதறிப் பிரகாசித்தன." சுலோகம் 34.

"அவ்வாறு சிதறிய என் வீரியத்தின் துளிகளினின்றும் ஆயிரக் கணக்காக "வாலகில்யர்" என்னும் ரிஷிகள் தோன்றினர்கள். சுலோகம் 35.

"பின்னர் அந்த ரிஷிகள் யாவரும் என்னைத் தாத! தாத!(அப்பா! அபபா!) என அழைத்துக்கொண்டு என் அருகில் உட்கார்ந்தார்கள்." சுலோகம் 36.

(சிவபுராணம் ருத்ரஸம்ஹிதை பார்வதீ கண்டம் அத்தியாயம் 4.)

சகோதரர்களே! ஸதீதேவி இறந்தபின் இமயமலையின் மகள் பார்வதியைப் பரமசிவன் விவாகம் செய்து கொண்டார். அதற்குரிய சடங்குகளைப் பிரமதேவனே நடத்தி வைத்தான். அச்சமயம் புரோகிதனுகிய அப்பிரமதேவன் நடத்திக் காட்டிய நாடகக் கதையைத் தான் முற்கூறிய சுலோகங்களினுல் விளக்கிக்கூறப்பட்டது. விட புருஷர்களுக்குத் தலைவனுன இப்பிரமன் பெண்களைக் காணும்போதெல்லாம் வீரியத்தை வெளிப்படுத்திக் களியாட்டம் ஆடுகிருன். இவனுடைய ஆட்டத்தை விஷ்ணு முதலிய தேவர்கள் பொறுத்துக் கொண்டிருந்ததைப் போன்று சிவபெருமானும் பொறுத்திருந்தார் என்பதுதான் வியககத்தக்க காரியம். ஏனென்ருல் இதைப் பொறுத்ததனுல் அவமானமடைநதவர் சிவனே யாவர். சிவபெருமான் ஸதியை விவாகம் பண்ணின காலத்தும் புரோகிதனுயிருந்த இப்பிரமன் இதே இழி செய்கையைச் செய்தான். அப்போதே இப்பிர

ணைக் கொன்றிருக்க வேண்டும். மனைவியின் பாட்டனென்றோ கிழவனென்றோ மற்றோ கருதி அச்சமயம் மன்னிக்கப்பட்டிருந்தாலும் மறுபடியும் இவனைப் புரோகிதனாக வைத்துக் கொண்டது பெரும் பிசகு. பார்வதியின் பெற்றோர்களும் மற்றும் முன் நடந்த காரியத்தை அறியாதிருந்ததனாலோ மறதியினாலோ இவனை அழைத்து புரோகிதம் நடத்தச் சொன்னாலும் இவனுடைய இழி நடத்தையைப் பலதரம் அனுபவத்தில் அறிந்த சிவபெருமான் இப்புரோகிதத் தன்மையை ஒப்புக்கொண்டது எக்காரணத்தைப் பற்றியோ. அன்றியும் இப்பிரமன் தான் குற்றம் புரியும்போதெல்லாம் நான் சிவனுடைய மாயையில் மயங்கியே இவ்வாறு செய்தேன் என்று கூறி தப்பித்துக் கொள்ளுகிறான். (மாயை = வஞ்சனை). ஒருவன் குற்றம் புரியும் போது அதை உணர்ந்தவனுக்கு அவனைக் கண்டிக்குந் திறமையிருந்தும் அவ்வாறு செய்யாமலிருத்தல் குற்றமேயன்றோ? எனது அபிப்பிராயம் யாதெனின் சிவபெருமான்; பண்டைக் காலந்தொட்டு தமிழர்களின் வழிபடு கடவுளாகும். ஆரியர்கள் இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாக வழிபட்டு வந்தவர்கள். * நிர்க்குண மூர்த்தியான சிவபெருமானை "சிச்ன தேவன்" என்று தங்கள் வேதத்தில் கண்டித்துள்ளார்கள். இவ்வுண்மையை இப்புத்தகத்தின் இரண்டாம அத்தியாயத்தில் "ரிக்வேத வசன"த்தையே மேற்கோள்காட்டி விளக்கியிருக்கிறேன். நம் நாடு ஆரியர்களுக்கு வசப்பட்டபின் சுயநலக்காரர்களாகிய அவர்கள் சிவபெருமானைக் கடவுளாக வெளிக்கு ஒப்புக்கொண்டாலும் தங்கள் அகத்தில் இருக்கும் அருவருப்பு மூட்டைகளைச் சிவன்பால் ஏற்றி புராணங்களாக எழுதி வைத்தார்கள். இவ்வாரியர்களிற் சிலர் விஷ்ணு பக்தர்களென்று வேஷமபோட்டு சைவர்களான தமிழர்களுக்கு சிவநிந்தைகளஞ்சியமாகிய சிவபுராணத்தையே படித்துக்காட்டி சிவ வழிபாட்டை வெறுக்கச் செய்தனர். பிற மதத்தினரும் புராண ஆபாசங்களை எடுத்துக் காட்டி மக்களைத் தத்தம் மதங்களுக்கு இழுத்துவரும் செயலும் இப்புராணங்களினாலேயே ஏற்பட்டது. இவ்வாபாசப் புராணங்கள் யாவும் சம்ஸ்கிருத மொழியி

---

* நிர்க்குணன் = குணங்களைக் கடந்தவன். சத்துவம், ரஜஸ், தமஸ் இம்மூன்று குணங்களையுடையவர்கள் ஜீவர்கள். இவர்களால் வழிபடத் தக்கவன் குணாதீதனாகவே இருக்கவேண்டும்.

லேயே இருப்பதால் தமிழர்கள் தாங்களே படித்துத் தெளிய இட மில்லை. பிராமணப் பண்டிதர் படித்துப் பொருள் கூறுவதை இவர் கள் நம்பத்தான் வேண்டும். இத்தகைய ஆபாசங்களை யெல்லாம் புராணம் படித்துப் பொருள் கூறுவோர் மறைத்து விடுவார்கள். அல் லது தேவலீலை, சிவபெருமானுடைய "திருவிளையாடல்கள்" என்று சொல்லுவார்கள். விஷ்ணுவின் "வாமனாவதாரம்" எதற்காக ஏற் பட்டது? நேர்மையாகச் செங்கோல் செலுத்தி யதன்மூலம் குடிகள் யாவருக்கும் க்ஷேமத்தை யுண்டுபண்ணி வந்த "மஹாபலிச் சக்கிர வர்த்தி"யின் அரசுரிமையைச் சதியினால் பறித்துப் பஞ்சமா பாதகி யாகிய இந்திரனுக்குக் கொடுத்து குடிகளைக் கெடுக்கத்தானே. இதைக் குறித்து யாரேனும் கேள்வி கேட்டால் அது தேவ லீலை, அதன் இர கசியம் நமக்குத் தெரியாது என்பார்கள். விஷ்ணுவின் இச்செய்கை மிக மிக அநியாயந்தான் எனப் பிரமாணத்தினாலும் யுக்தியினாலும் ஸ்தாபிப்பவர்களை "நாஸ்திகர்" என்றும் சொல்லி விடுவார்கள். என் செய்வது தமிழர்களே! நீங்கள் எப்போது தான் பார்ப்பன மதமயக் கத்தினின்றும் விழிப்படைந்து உங்களின் உரிமையைக்காக்க முன் வருவீர்களோ அறியேன். கருணாகரனாகிய பரமேசுவரன் உங்களுக்கு நல்லறிவு தந்து அனுக்கிரகிக்கட்டும்.

பார்ப்பன மதத்தைத் தழுவிய இந்துக்களின் கடவுளர் மூவர். அவர்களில் பிரமனுக்கும் சிவனுக்கும் இடையில் புகுந்து பார்ப்பன ரல்லாதாராகிய அசுரர்களுக்கும் இராட்சதர்களுக்கும் இடைஞ்சல் செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிற விஷ்ணுவின் பல வஞ்சனை களில் அல்லது பௌராணிக "பாகவத சிகாமணி"களின் பரிபாஷைப் படிக்கு பல லீலைகளில் ஒரே ஒரு லீலையை மட்டும் எடுத்துக் காட்டு கிறேன்.

## சைவர்களை அழிக்கவே விஷ்ணுவானவர் ஜைனதருமத்தை உண்டாக்கினர்:—

தேவர்களின் பகைவனான "தாரகாசுரன்" சுப்பிரமணியரால் கொல்லப்பட்ட பின் அவனுடைய மக்களாகிய தாரகாக்ஷன், வித்யுன் மாலி, கமலாக்ஷன் என்னும் மூவரும் தவம் செய்து பிரமனிடம் இறா வாவரத்தைக் கோரினர். பிரமதேவன் அதைக் கொடுக்க மறுக்கவே

சிவபெருமானால்! மரணம் நேர வேண்டுமென்றும் பொன், வெள்ளி இரும்பு என்னும் மூன்று லோஹங்களால் ஆக்கப்பட்ட மூன்று பட்டணங்களையும் தங்களுக்கு வேண்டுமென்றும வேண்டிக்கொண்டதற்குப் பிரமனும் அவ்வாறே வரங்கொடுத்தான். ஷை மூவரும் தங்கள் கோரிக்கை ஈடேறப் பெற்றவர்களாய் ஷை முப்புரங்களில் வசித்துக கொண்டு சிவ வழிபாட்டைக குறைவற நடத்தி வந்தார்கள். அசுரர்களாகிய இவர்களை எவ்வாறேனும அழிக்க வேணடுமெனக் கருதிய தேவர்கள்; தங்கள் கருத்தை விஷ்ணுவுக்குத் தெரிவிக்க விஷ்ணுவும் அவ்வசுரர்கள் சைவர்களாகையால் நமமால் கொல்வது அசாத்தியம. ஆனால் ஏதேனும் சூது செய்து சிவபூஜையி னின்றும் அவர்களை விலக்கி விட்டால் பிறகு சிவபெருமானே கோபத்தினால் அவர்களை நீறாக்கி விடுவார் எனக்கூறி வைதிகதர்மத்திற்கு விரோதமான "ஜைன தர்ம"த்தை உண்டாககினார். இதற்குப் புராணம் வருமாறு:—

"விஷ்ணுவானவர் அசுரர்களின் வைதிக தர்மத்தைக் கெடுக்கும் பொருட்டு ஒரு புருஷனை மாயையினால் உண்டாக்கினார்." சுலோகம் 1

"தலை மொட்டை, அழுக்குத்துணி, மரப்பாத்திரம் இவைகளையுடையவனும் கையில் வைத்துக கொண்டிருக்கும துணியினால முகத்தைமூடிக் கொண்டும் அவன் தர்மம், தர்மம் என்று சொல்லிக்கொண்டும் இருந்தான்." சுலோகம். 2, 3.

"அவன் விஷ்ணுவைப் பணிந்து எதிரில் உட்கார்ந்து கை குவித்துக் கொண்டு கூறத் தொடஙகினான்." சுலோகம் 4.

"அரிஹன், அச்யுத, பூஜ்ய, நான் செய்ய வேண்டுவது யாது? என் பெயர், இருப்பிடம் முதலியவை எவை? இறைவனே! இவைகளைத் தெரிவிக்க வேண்டும்." சுலோகம் 5.

"விஷ்ணுவானவர் அவ்வார்த்தையினால் மகிழ்ந்து பதில் சொன்னதாவது." சுலோகம் 6.

"பேரறிஞனே? நீ என் சரீரத்தினின்றும் தோன்றியவனாகையால் நானேயன்றோ? உன்னைத் தோற்றுவித்த காரணத்தையும் கேட்பாயாக." சுலோகம் 7.

"நீ எக்காலத்தும் வழிபடத்தக்கவனாவாய். உனக்கு "அரிஹன்" என்னும் நாமத்தோடு வேறு பல அழகிய நாமங்களும் உண்டாகும்." சுலோகம் 8, 9.

"மாயையையுடையவனே! வேதத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் முரண்பாடாக மாயா மயமான் சாஸ்திரம் பதினாறாயிரம் எண்ணுடையது * "சுபப்ரம்ச" மொழியில் இயற்றக் கடவாய்." சுலோகம் 10, 11.

"அஃடி சாஸ்திரத்தைச் செய்யும் ஆற்றல் உனக்கு உண்டாகுக." மாயைகள் யாவும் உன் கட்டளைக்குக் கட்டுப்படும்." சுலோகம் 12.

"விஷ்ணுவானவர் சிவபெருமானுடைய திருவடித் தாமரையை மனதிலுன்னிப் பின்னும் அரிஹனிடம் சொல்லத் தொடங்கினர். த்ரிபுரவாசிகளாகிய அசுரர்கள் யாவரையும் மயக்கி உன்னுடைய சாஸ்திரத்தை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். உனக்கு இதனால் ஒரு கெடுதியும் வராது." சுலோகம் 13, 17.

"த்ரிபுர அசுரர்களிடத்தில் வேதம், ஸ்மிருதிகள் இவைகளின் படிகளுள்ள தர்மம் விளங்குகின்றது. உன் வித்தையினால் அவர்களின் வைதிக நெறியை அழிக்க வேண்டும்."

"ஓ மொட்டையனே! திரிபுரவாசிகளின் அழிவின் பொருட்டு நீ விரைந்து செல், உனது அஞ்ஞானதர்மத்தை அவர்களுக்குக் கற்பித்து அவர்களை அழியச் செய்." சுலோகம் 18, 19.

பின்னர் † கலியுகம் பிறக்கும் வரையில் (1) மருஸ்தலியில் வாசம் பண்ணக் கடவாய். கலியுகத்தில் உன் மதம் வளர்ச்சி யடையும்." சுலோகம் 22.

சிவபுராணம் ருத்ரஸம்ஹிதை யுத்தகாண்டம் அத்தியாயம் 4.

---

* சுபப்ரம்சம் = சம்ஸ்கிருதத்தின் தாய்மொழிகளாகிய ஆறு வகை "ப்ராகிருத" பாஷைகளுக்கும் பொதுப்பெயர. ஜைனர்களும் பௌத்தர்களும் ப்ராகிருத மொழியிலேயே தங்கள் நூல்களை அதிகமாக இயற்றினர். காரணம்; சம்ஸ்கிருதத்தை விட மிகவும் எளிதில் அம்மொழி மக்களால் கற்றுணரக்கூடியதென்பதே யாம்.

† கலியுகம் கெட்டவர்களின் ஆட்சிக்காலம். "சதாம்ஸத்யயுகம் ஸாக்ஷாத் ஸர்வதைவாஸதாம்கலி: என்பது பிரமாணம்.

(1) மருஸ்தலி மார்வாடிகளின் தேசம், பாலைவன மென்றும் பொருளுண்டு. ஆனால் மார்வாட் என்பதே பொருத்த முடையது. ஏனெனில் மார்வாட் தேசத்தில் இக்காலத்தும ஜைனதர்மம் மிகுதியா யிருப்பதால் அங்கு யாகக்கொலைகளை நடத்தப் பார்ப்பனர்களுக்கு இடமளிப்பதில்லை.

"பிறகு அரிஹன் நான்கு சிஷ்யர்களைச் சேர்த்துக் கொண்டு த்ரி புராசுரர்களின் இருப்பிடத்திற்குச் சென்றான். சைவர்களாகிய அவ்வசுரர்கள் அரிஹனைப் பொருட்படுத்தவே இல்லை. இதை யறிந்த நாரதர் அரிஹனிடம் சென்று ஜைனவத தீக்ஷையைப் பெற்றுக் கொண்டு திரிபுர அசுரர்களை யணுகி ஜைனமதத்தைப் பெருமைப் படுத்தியும் சைவ மதத்தை இகழ்ந்தும் கூறியதால் அசுரர்களும் சைவநெறியை விடுத்து ஜைன நெறியை மேற்கொண்டார்கள். இக்காரணத்தால் கோபமுற்ற சிவபெருமான் திரிபுரர்களை அழித்து விட்டார். தேவர்களும் மகிழ்ச்சி யுற்று மொட்டயணுகிய அரிஹனை ஆசீர்வதித்து மருஸ்தலிக்குப் போகும்படி விடை கொடுத்தனுப்பினார்கள்."

ருத்ரஸம்ஹிதா யுத்தகாண்டம் அத்தியாயம் 22.

அன்பர்களே! இப்புராணக் கதையானது சிவ சமயத்தை இகழ்வதா? புகழ்வதா? முற்றறிஞனான சிவபெருமான் திரிபுர அசுரர்களை அழித்ததாகச் சொல்லுவது சைவ சமயத்தை இகழ்வதாகவே எனக்குத் தோன்றுகிறது. அன்றியும் ஜைனர்களின் நெறியை அஞ்ஞான நெறி யென்றும் கூறியிருப்பதைக் கவனியுங்கள். பார்ப்பனர்களின் ஞானநெறியைவிடச் சிறந்த நெறியைப் பிறமதத்தினர் யாவரும் பின் பற்றுகின்றார்கள். ஏனென்றால் மற்ற எந்த மதத்திலும் மக்களைத் தாழ்த்தும் வழக்கம் சமயநூல்களினால் சாதிக்க முடியாது.

யாகத்தில் மாமிச உணவு.

"தக்ஷனுடைய பெருமை பொருந்திய யாகத்தின் போது பல வகை மாமிச உணவுகள், நறுமணமுடைய பலவகைப் பக்ஷயங்கள் இவைகள் மலைகள் போன்று குவிந்து கிடந்தன. பால் ஆறு போல் பெருக்கெடுத்து ஓடிற்று. அமிர்த ஊற்றுகளும் இருந்தன. கட்டித் தயிர் சேறு போன்று காணப்பட்டது. இனிய சுவையைத் தாங்கிய பானகங்கள், பாயசம் முதலிய லேகியங்கள். (மாம்பழம் முதலிய) சோஷிய வஸ்துக்களும் இருந்தன."

சிவ புராணம் வாயு சம்ஹிதா பூர்வகண்டம் அத்யாயம் 20.

அன்பர்களே! வேதத்தைப் போலவே புராணங்களும் கொலை நூல்களென்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைக் காட்டினேன்,

இதைப்போன்ற பல யாகக்கொலைகளைக் குறித்த சரித்திரங்கள் இதே புராணத்தில் காணக்கிடக்கின்றன. நான் இதுகாறும் விளக்கியவற்றை விட அருவருப்பான கதைகள் பல இதே புராணத்தில் காணலாம். அவற்றை இதில் உதாகரிக்க இடமில்லை. "புராணபாச தர்ப்பணம்" எனத்தனி நூல் ஒன்று எழுத நினைத்துள்ளேன் மற்றவை அதில் விளக்குவேன்.

* சிலா லிங்க பூஜைக்கு சூத்திரனே அதிகாரி.

"ரஸலிங்கம் ப்ராஹ்மணானாம ஸர்வாபீஷ்டப்ரதம் பவேத்-
பாணலிங்கம் க்ஷத்ரியாணாம் மஹாராஜ்யப்ரதம் சுபம்.
ஸ்வர்ணலிங்கந்து வைஸ்யாணாம் மஹாதனபதித்வதம்
சிலாலிங்கந்து சூத்ராணாம் மஹா சுத்திகரம் பரம்."

சிவபுராணம், வித்யேசுதர ஸம்ஹிதா அத்தியாயம் 10.

பொருள்:—|| ரசத்தினால் ஆக்கபெற்ற சிவலிங்கம் பிராமணர்களுடையது எல்லா விருப்பங்களையும் கொடுக்கும் (1) † பாணலிங்கம் க்ஷத்திரியர்களுடையது. பெரிய ராச்சியத்தைக் கொடுக்கும்.

ஸ்வர்ணலிங்கம் வைசியர்களுடையது. குபேரத் தன்மையை யளிக்கும்.

சிலாலிங்கம் சூத்திரர்களுடையது, தூய்மையைத்தர வல்லது.

சிவபுராணம் வித்யேசுவர சங்கிதை பத்தாம் அத்தியாயம்.

அன்பர்களே! இப் பிரமாணப்படி கல்லினாலாக்கப் பெற்ற லிங்கத்தைச் சூத்திரர்களே பூஜிக்கத் தக்கவர்கள். அவ்வாறிருந்தும் பிராமணர்களே பூஜித்து வருகின்றார்கள். புராணத்தின்படி தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையையும் இவ்வறிவிலிச் சூத்திரர்கள் கேட்டு வாங்குகின்றார்களில்லையே. பிராமணர்கள் இக்காலத்தில் ஆலயங்கள் யாவற்றினும் பூஜை பண்ணி வருகிறார்கள். அவைகளில் நடக்கும்

---

* சிலா கல். சிலாலிங்கம், கல்லினாலாக்கப் பெற்ற சிவலிங்கம்.

|| ரசலிங்கம் பாதரசத்தைக் கட்டி சிவலிங்கமாகப் பண்ணுவது.

(1) † பாணலிங்கம் நர்மதை நதியில் உண்டாகும் லிங்கம்.

ஊழல்களைச் சரிவர உணரவோ உணர்ந்தவற்றையேனும் நிறுத்தவோ முடியாத நிலைமையில் பிராமணரல்லாதாரும் இருக்கின்றார்கள். சிவநேசச் செல்வர்களாகிய பார்ப்பன ரல்லாதார்; ஆலயங்களில் நடக்கும் அட்டூழியங்களை அடக்குவதற்கேனும் தங்கள் உரிமையைப் பார்ப்பனரிடத்தி லிருந்து பெற்றுக் கொண்டு ஏன் நியாயமான வழியில் பூஜை செய்யலாகாது? எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம். என்ன செய்வது நமக்குள் ஒற்றுமை யில்லை.

'புராணசமாலோசனை'யென்னும் இவ்வத்தியாயத்தை இத்துடன் நிறுத்தி அடுத்த அத்தியாயத்தைத் தொடங்குகின்றேன்.

ஐந்தாம் அத்தியாயம் சமாப்தம்.

---

**M. K. கேலுண்ணி நாயர்** என்னும்

சுவாமி சிவானந்த சரஸ்வதி

கோலொளம்பு அம்ஸம், பொன்னானித் தாலுக்கா,

தென்மலையாளம்.

# மதவிசாரணை.

## ஆறும் அத்தியாயம்.

---

### பலவகை,

*சம்பந்தர் முதலிய ஆசாரியர்கள் அரசாங்க உதவியினுலேயே ஜைனர்களையும், பௌத்தர்களையும் வென்றூர்கள்.*

தென்னுட்டில் சம்பந்தர் ஜைனர்களையும் பௌத்தர்களையும் தனது சூழ்ச்சியால் கழுவிலேற்றிக் கொன்று சைவசமயாசாரிய சிரோமணியாய் விளங்கினுர். அவர் அக்காலத்தில் செய்த கொடு வினையின் அறிகுறியாகத் தமிழ்நாடு முழுதும் ஆலயங்கள்தோறும் கழுவேற்றுந் திருவிழாக கொண்டாடப்பெற்றுவருகிறது. சம்பந்தர் ஜைனர்களையும் பௌத்தர்களையும ஜயித்தது நியாய யுக்திகளால் அல்ல வென்பதற்கு "ஏதுககளாலு மெடுத்த மொழியாலுமிகச் சோதிக்க வேண்டா" எனத் தொடங்கிய அவர் பாசுரங்களே போதிய சான் ருகும். சம்பந்தர் மனுஸ்மிருதியை அனுசரித்தே நடந்துகொண் டிருக்கிறுர். * "வேதம், ஸ்மிருதி இவ்விரண்டும் தர்மத்தை வெளிப் படுத்துவன வாகையால் நியாய யுக்திகளால் ஒருபோதும் மறுகக லாகாது." (மனு அத்தியாயம் 2. சுலோகம் 10)

"எவன் தருமத்திற்கு காரணமான வேதத்தையும் ஸ்மிருதியை யும் சாஸ்திர யுகதியினுல் அவமானம பண்ணுகின்றுனே அவன் பெரி யோர்களால் பஹிஷ்கரிக்கத்தக்கவன். வேத நிந்தகனுன அவன் நாஸ்திகனுவான். (மனு அத்- 2. சுலோகம், 11)

---

* "ஸ்ருதிஸது வேதோ விஜ்ஞேயோ தர்ம சாஸ்த்ரந்துவை ஸ்மிருதி:. தேஸர்வாாத்தே ஷ்வமீமாமஸ்யே தாப்யாம் தர்மோ ஹி நிர்ப்பபௌ." யோவமன்யேத தேமூலே ஹேது சாஸ்த்ரா ஸ்ரயாத் த்விஜ:. ஸஸாதுபீர் பஹிஷ்கார்யோ நாஸ்திகோ வேத நிந்தக:." மனுஸ்மிருதி அ. 2. சு. 10–11

பஹிஷ்கரித்தல்= வெளியிற் றள்ளுதல், இது ஊரிற்கு வெளியிலுமோ உலகிற்கு வெளியிலோ ஆகலாம்.) வேதஸ்மிருதிகளை சகஸ்திர யுக்தியினால் அவமதித்தல் = அவைகளின்படி ஒழுகாதிருத்தல், அல்லது கண்டித்தல் இரண்டையுமோ செய்தலுமாம். மனுஸ்மிருதியிலுள்ள இந்த சுலோகங்களுககும் சமபந்தருடைய ஷை தேவாரப் பாட்டிற்கும் ஒற்றுமையிருப்பதைக் கவனியுங்கள். "வைதிகர்கள் வேதஸ்மிருதிகளின்படி ஒழுகுவார்கள். ஜைனர்களும், பௌத்தர்களும் ஒப்புக்கொள்ளார்களே. அப்படியிருக்கச் சம்பந்த மூர்த்தி ஜைனர்களையும், பௌத்தர்களையும் கழுவேற்றிக் கருவழித்தது கடவுளின் கருணைவிசேஷத்தினாலேயேயொழிய அக்காலத்தில் ஆட்சிபண்ணிக்கொண்டிருந்த அரசனை வேதஸ்மிருதி வசனங்களினால் சுவாதீனம்பண்ணி அவனுடைய சகாயத்தினால் ஷை ஜைன பௌத்தர்களைக் கொன்றொழித்தார் என்பது பொருந்தாது" என்று சிலர் சொல்லுகிறார்கள். உண்மை யெவ்வாறெனின்; அரசன் ஜைனனாயிருந்தாலும் அவனுடைய மந்திரி (1) சைவன் அறுபததுமூவர்களில் ஒருவன். (2) அரசியும் சைவசமயத்தில் அழுத்தமான நம்பிக்கையுடையவள். இவ்விருவரும் சம்பந்தருககுத் துணையாயிருந்தபடியால் அரசனும் துணைபுரிந்தான். பிறகு ஜைனர்களைக்கழுவேற்றுவதில் தடையென்ன இருக்கிறது. ஏடு ஆற்றுப்பெருக்கை எதிர்த்துக் கரையில் ஒதுங்கிற்று. அவ்விடம்தான் "திருவேடகம்" என்பதெல்லாம் வெறும் சூழ்ச்சி. இத்தகைய கட்டுக் கதைகளை அறிஞர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

இனிக் "குமாரில"ரை எடுத்துக்கொள்ளுவோம். இவர் வட இந்தியாவில் பௌத்தர்களைக் கருவழித்த பெரியார்களுள் முதல்வர். சுப்பிரமணியரின் அவதாரமென இவரைக்குறித்து புகழ்ந்து கூறுகிறார்கள். இவர் "பகையாளி வீட்டை உறவாடிக்கெடுத்தல்" என்னும் உபாயத்தை யனுசரித்து பௌத்தர்களிடத்தில் போய் துறவு பெற்றுக்கொண்டு சமய நூல்களை நன்றாகப் படித்தார். பிறகு பழய படியே பிராமணனாய்ப் பௌத்தர்களை வாதிற்கழைததார். அரச

(1) குலச்சிறை நாயனார்.

(2) மங்கையர்க் கரசியார். அறுபத்துமூவர்களில் இவ்வரசியும்ஒருவர்.

சபையில் இரு கக்ஷியினருக்கும் பல நாட்கள்வரையில் வாதம்நடந்து கொண்டிருந்தது. இப்படியிருக்கும்போது இவ்விரு சமயங்களில் எது உயரியதெனத் தெரிய அரசன் ஒரு யுக்திசெய்தான். அதாவது "ஒரு குடத்தில் பாம்பொன்றைப் பிடித்தடைத்து குடத்தின் வாயை பத்திரமாய் இறுக்கிக்கட்டி சபையில் கொண்டுவந்து இரு கக்ஷியின ரையும்பார்த்து இவ்வாறு சொல்லலுற்றான். "இக்குடத்திலிருக்கும் பொருள் இன்னதென உண்மையை கூறுகிறவர்கள் யாரோ அவர் களின் தர்மமே சிறந்தது. மாறுபாடாகக் கூறுபவர்கள் கொல்லப் படுவார்கள்." இதைக்கேட்ட இரு கக்ஷியினரும் அரசனிடத்தில் ஒரு குறித்த காலம்வரையில் தவணைகேட்டுப் போய்விட்டார்கள். பின்னர் குறித்த நாளன்றுவந்து பௌத்தர்கள்; குடத்திற்குள்ளிருப் பது பாமபென்றும் குமாரிலர்; பாமபைப் படுக்கையாகக்கொண்ட பத்மநாபனென்றும் சொல்ல அரசன் குமாரில பட்டரின் இளம்பிரா யத்தையும் புததி சாதுர்யத்தையும் கண்டு அவருடைய கக்ஷியே ஜய மடையவேண்டுமென விரும்பியிருந்தவனாகையால் திகைத்துப்போய் வந்தது வரட்டும் என்று குடத்தை அவிழ்த்துப் பார்க்க பாம்பிருந்த விடத்தில் விஷ்ணுவின் அழகிய விககிரகமிருக்கக் கண்டு கடவுளின் கருணைக்கு பாத்திரம் குமாரிலரே யாதலால் அவருடைய வைதிக மதமே சிறந்ததெனக்கொண்டு குமாரிலரின் விருப்பப்படி பௌத்தர் களைக் கொலைசெய்ய உத்திரவளித்தான். இக்கதை சங்கரவிஜயத்தில் இருக்கிறது.

சகோதர சகோதரிகளே! கவனியுங்கள். கொல்லா விரதிக ளாகிய மதத்தினரைக் கொலைசெய்தழித்துக் கொலைமதத்தை நிலை நிறுத்த விரும்பிக் கடவுள் ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாற்றினாரென்னும் வைதிகர்களின் இக்கூற்று கருணாகரனை கட வுளைக் கொலைகாரனும் சதியனுமாக்கிக் கல்பிக்கும் கட்டுக்கதையே யொழிய வேறல்ல. இத்தகைய சூழ்ச்சிகள் அறிவிலிகளின் ஆட்சி யில் நடப்பது ஆசசரியமுமல்ல. இத்தகைய இழி செயல்களைக் கல்வி அறிவற்றவர்கள் கடவுளின் செயலென்பர். அறிஞர்கள் சூதென உணர்ந்தாலும் காலத்துக்கும் இடத்திற்கும் தக்கபடி மௌனமா கவோ மற்றோ நடந்துகொள்ளுவார்கள்.

இனிச் சங்கராசாரியாரின் பௌத்தஜயமும் அநியாயமானதெ னப் பிரமாணத்துடன் விளக்குகின்றேன்.

“ இதம் ஆஹ ஸர்வப்ராண்யஹிம்ஸா பரமோதர்ம: பரமகுருபி ரிதமுச்யதே. ரே ரே ஸௌகத? நீசதர? கிம் கிம் ஜல்பஸி. அஹிம் ஸாகதம் தர்மோ பவிது மர்ஹதி, யாகீயஹிம்ஸாயா தர்மரூபத்வாத்; ததாஹி அக்நிஷ்டோமாதிக்ரது: சாகாதி பசுமான் யாகஸ்ய பரமதர் மத்வாத்; ஸர்வதேவத்ருப்தி மூலத்வாச்ச தத் த்வாரா ஸ்வர்க்காதி பலதர்சனச்ச பசுஹிம்ஸா ஸ்ருத்யா சாரதத்பரைரபி கரணீயா தத்வ. யதி ரிகதஸ்யைவ பாகண்டதவாத் ததாசார ரதா நரகமேவ யாந்தி. “ வேதநிந்தா பராயேது ததாசார விவர்ஜிதா: தே ஸர்வே நரகம் யாந்தி யத்யபி ப்ரஹ்ம பீஜஜா:” இதி மனு வசனாத் ஹிம்ஸா கர்த்தவ் யேத்யத்ர வேதா: ஸஹஸ்ரம் ப்ரமாணம வர்ததமேதே ப்ரஹ்ம க்ஷத்ர வைஸ்ய சூத்ராணம வேதேதிஹாஸ புராணசார: ப்ரமாணமேவ ததன்ய: பதிதோ நரககாமீசேதி ஸம்யகுபதிஷ்ட: ஸௌகத: பரம குரும நத்வாநி ரஸ்த ஸமஸ்தாபிமான: பத்மபாதாதி குருசிஷ்யாணம் * பாதரக்ஷாதாரணதி குசல: ஸததம ததுச்சிஷ்டான்ன பக்ஷண புஷ்ட தனுரபவத்.”

இத்யனந்தானந்த கிரிக்ருதௌ சங்கரவிஜயே ஷட்விம்சப்ர கரணம.

பொருள்:—பௌத்தன் சொல்லுகிறான். எவ்வுயிரையும் துன் புறுத்தாதிருப்பதே சிறந்த தருமம. பரமகுரு (சங்கரர்) சொல்லு கிறார். அட அட பௌத்தனே! கடையர்களுககும் கடையனே? என் னென்னவோ பிதற்றுகின்றாயே. அஹிமசையானது எவ்விதம் தரு மமாகும். யாகத்தில் கொலையைத் தருமமெனறு சொல்லப்பட்டிருக் கிறதே. ஆடு முதலிய பசுககளையுடைத்தான அக்நிஷ்டோமம முத லிய யாகங்களை நடத்துதல் தருமமும் அதனால் சுவர்க்க முதலிய நற் பயனையடைதலும் (சாஸ்த்ரத்வாரா) அறிதலால் பசுக்கொலை யானது செய்யத்தக்கது. அங்ஙனம் செய்யாதவர்கள் பாஷண்டிகளாவார்கள். பாஷண்டிகள் நரகத்தையே அடைவார்கள். வேதத்தின்படி ஒழுகா தவர்களும் அதை நிந்தனை செய்கின்றவர்களுமான எல்லோரும்

---

* இச்சங்கராசாரியார் பிறப்பினல் உயாவு தாழ்வுகளை விரும்பும் அநியாயக்காரர் என்பது இதனலேயே பெறப்படவில்லையா?

நரகத்தையே அடைவார்கள். அவர்கள் பிராமணராயிருப்பினும் சரியே என மனுவும் சொல்லியிருக்கிறார். அன்றியும் கொலைசெய்ய லாமென வேதத்தில் ஆயிரககணக்கான பிரமாணங்கள் இருக்கின்றன. ஆகையால் பிராமண க்ஷத்திரிய வைசிய சூததிரர்களுக்கு வேதம் இதி ஹாஸம புராணம் இவைகளின் படிக்குள்ள ஆசாரங்களே பிராமா ணங்களாகும, ஏனையோர் நரகத்தை யடையத்தக்கவர்களே. என்றிவ் வாறு நன்கு அறிவுறுத்தப்பட்ட பௌத்தனைவன் சங்கராச்சாரி யாரை நமஸ்கரித்து எல்லாச செருக்குகளையும் களைந்தவனாய் பத்ம பாதர் முதலிய சங்கர சிஷ்யர்களின் * பாதரக்ஷைகளைச் சுமப்பதில் திறமை பெற்றவனாய் அவர்களின் எச்சில் சோற்றைத் தின்று உடல் பருத்துத் திரிந்தான்.

(அனந்தானந்த கிரியின் சங்கரவிஜயம் இருபத்தாறும் பிரகரணம்.)

அன்பர்களே! இது "ஆனந்தகிரி" என்பவரால் எழுதப்பட்ட "சங்கரவிஜயம" என்னும் நூலின் சமஸ்கிருதமூலமும் தமிழ் அர்த் தமுமாகும். சங்கராசாரியர் பௌத்தர்களை வென்ற விஷயத்தில எள்ளளவுகூட நியாயமும மரியாதையும் இல்லையென இவரின் செயலி னாலேயே தெரிந்து கொள்ளலாம், தன்னைப் போன்ற ஒரு வித்து வான் அன்றோ தன்னிடம வாதிற்குவந்தவன் அவனை "ரே ரேசௌ கத! நீசதர!" அட அட பௌத்தனே! நீசர்களுக்கும் நீசனே என அழைக்கின்றார். அன்றியும் வேதத்தில் விதிக்கப்கட்டுள்ளதால் கொலை தருமம் கொல்லாமை அதருமமுமாகுமென்று சிறிதுகூட மனம் கூசாமல் கூறுகின்றார் நமது நற்காலத்தினால் பார்ப்பனக் கொடுங்கோ லாட்சி மாய்ந்து ஆங்கில ஆட்சி நடக்கும் இக்காலத்தில் ஒழுக்கத்தி லும் கல்வியிலுந் பின்னணியில் நிற்கும் ஒருவன்கூட இவ்வாறு கூறத் துணியான். ஒரு வேளை ஜீவகாருண்ணிய சீலர்கள் யாரேனும் தங்கள் நற்கோரிக்கையை நடவடிக்கையில் கொண்டுவர எண்ணின

---

* சகோதரர்களே! தன்னிடம் வாதத்திற்கு வந்த பௌத்தமத வித்துவானை வாதில் வெனறு தன் மததினனுக்கிச் செருப்புத் தூக்கும் உத்தியோகத்தையும் அதற்கு கூலியாக எச்சில் அன்னத் தையும் அனுகிரகித்தாராம் சங்கராச்சாரிய சுவாமிகள். இவரே ஜகத்குரு. இவரின் பரம்பரையை வணங்கிக் காணிக்கைபோட்டு சூத்திரப்பட்டம் பெறும் நம்மவர்களின் பாக்கியமே பாக்கியம்,

வர்களாய் சட்டதிட்டங்களை மறந்து கசாப்புகாரனைத் தொந்தரை செய்தால் அவன் இவ்வாறு சொன்னாலும் சொல்லுவான். குடிவெறியர் கள் குடியினால் மதிமறந்து இவ்வாறு பயனற்ற வார்த்தைகள் கூறிச் சண்டையிட்டுக் கொள்வதும் அரசாங்கத்திற்கு பயந்து அதிகமாக நடப்பதில்லை. மற்றொரு சமாச்சாரத்தையும கவனியுங்கள். பயனற்ற இத்தகைய வார்த்தைகளால் கொல்லாவிரதியாகிய பௌத்தனைச் சங் கரர் ஜயித்து வைதிக மதத்தில் சேர்த்தபின் நடத்தினவிதம் எத்தகை யது? பத்மபாதர் முதலிய தனது சிஷ்யர்களின் செருப்புகளைத்தூக் கும் சேவகத்தையும் சம்பளமாக எச்சில் உணவையும் அவனுக்கு கொடுத்தாராம். இவைகளை நினைக்குங்கால் "உச்சிஷ்ட மன்னம் தாதவ்யம் ஜீர்ணானி சபரிசசதா." சூத்திரனுக்கு எச்சில் அன்னம், கிழிந்துபோன பழையதுணி, தானியங்களில் உதவியற்றபதர், உடை ந்த பாத்திரம் முதலிய உபயோகமற்ற பொருட்களைத்தான் கொடுக்க வேண்டுமென்னும் மனுவின் நீதியான அநியாய அதர்ம நீதியை ஓரெழுத்து கூட விடாமல் சங்கரர் தனது காலத்தில் அமுலுககு கொண்டு வந்தாரென்பது விசிதமாகவில்லையா? கொடுங்கோலாட்சியின ரான அநியாய அரசரின் அனுகூலமின்றி இவ்வாறு நடத்தியிருக்க முடியுமென்று நினைககின்றீர்களா? ஒருபோதும் முடியாது. * "மாத வாசாரியர்" எழுதிய சங்கரவிஜயத்தில் சங்கரரின் பௌத்தஜயத்தினால் ஏற்பட்டபயன்; அதாவது சங்கரருடைய ஆணைக்கு கட்டுப்பட்ட அரசர்கள் பௌத்தமதத்தை அழித்த வரலாறு இவ்வாறு கூறப்பட் டுள்ளது:—

" ஆஸேது தோராது ஷாராத்ரி பௌத்தானும் வ்ருத்த பாலகம் நஹந்திய: ஸஹந்தவ்ய:—

(சங்கர திக்விஜயம்.)

பொருள்:— இமய முதல் சேதுவரையிலுள்ள பாரதநாட்டில் வசிக் கும் பௌத்தர்கள் சிறு குழந்தைகள்முதல் பெருங் கிழவர்களீறாக யாவரையும் கொன்றொடுக்கவேண்டும். பௌத்தனைக் கண்டும் கொல் லாமல் விடுகிறவன் யாவனோ அவனும் கொல்லத்தக்கவனாவான் என அதிகாரிகள் அரசர்களால் ஆணையிடப்பட்டனர்." (சங்கர திக்விஜயம்.)

* இவரே வித்தியாரண்யர்.

வாசகர்களே! இதனால் சங்கராசாரியரின் சூழ்ச்சிக் கிணங்கி சிஷ்யர்களான அரசர்கள் நியாயா நியாய விசாரணையைச் செய்யாமலே பௌத்தர்களில் பழுத்த கிழவர் முதல் பால் குடிக்கும் பாலர்வரை யிலுமுள்ள யாவரையும் கொன்றழித்துள்ளார்களெனப் பார்ப்பன நூல்களே மேற்கோள்காட்டியே விளக்கினேன். சம்பந்தர், குமாரிலர், சங்கரர் முதலிய பார்ப்பன ஆசாரியர்களின் இக் கொலைத்தொழில் பார்ப்பன மதமாகிய வர்ணாச்சிரம அதருமத்தையும் யாகக் கொலை களையும் நிலைநாட்டி பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்தவா? அன்று? நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

பார்ப்பனத்தியின் கருவிலுதித்தவனே பார்ப்பனன். நல்லொழுக் கத்தினால் பார்ப்பனத்தன்மையை யடைவது ஏடளவில்.

சிலர் இவ்வாறு சொல்லுகின்றார்கள். "வேதம், ஸ்மிருதிகள், புராணங்கள் முதலிய பிரமாணங்களில் பிரமாணத்தன்மையும் சூத் திரத் தன்மையும் விதிக்கப்பட்டிருப்பது ஒழுக்கத்தைப் பொருத்ததே யன்றி பிறப்பைப் பொறுத்ததன்று. இதை மெய்ப்பிக்க கணக்கற்ற பிரமாணங்கள் சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கிடக்கின்றன. ஆகையால் ஒரே மனிதன் நல் லொழுக்கத்தால் பிராமணனாகவும் ஒழுக்கந் தவறினால் சூத்திரனும் ஆய்விடுவான் என்பது நிச்சயம்."

வாசகர்களே! இத்தகையவர்கள் இருபுறமும் எழுதியிருக்கும் ஏட்டின் ஒருபுறத்தில் சில வரிகளேயோ எழுத்துக்களேயோ மாததிரம் வாசித்து திருப்தியடைந்தவர்களாதலால் இவர்களைச் சமாதானம் பண்ண என்னால் இயலாது. இவர்களைப் படைத்த பிரமதேவனாலும் இயலாது. "ஆனால் ஆத்திரக்காரர்களாகிய இவர்களின் வார்த்தையி னால் மயங்கி சுவதந்திர தாகமுடைய நமது சகோதரர்கள் சும்மா இரா மல் தங்கள் பிறப்புரிமையைப் பெறுமளவும் நியாயமான முறையில் கிளர்ச்சிசெய்து அதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறு த்தி முற்கூறிய ஆத்திரக்காரர்களின் பிரமாணங்களை எடுத்துக்காட்டி கண்டிக்கத் துணிகின்றேன.

இந்துமதம் அல்லது வைதிகமதம் என்னும் பேய்மதம் இறந்து படும்வரையில் ஷை பிரமாணங்களினால் பாப்பனரல்லாதாருக்கு எள்

ளளவும் நன்மை யுண்டாகாதென்றும் பார்ப்பனத்தியின் கருவிற் றோன்றியதனுல் மாத்திரம் மக்களால் பார்ப்பனனென்றழைக்கப்படும் ஒருவன் தீயவொழுக்கங்களின் சமுத்திரமானுலும் அவனுக்குச்சாதக மாகவே இருக்குமென்பதும் கீழ்வரும் பிரமாணங்களால் உங்களுக்கு விசதமாகும்.

## கர்மத்திஞல் பிராமணத்தன்மை.

1. "ஜன்மனு ஜாயதே சூத்ர: ஸம்ஸ்காராத் த்விஜ உச்யதே.
வித்யயா யாதி விப்ரதவம். * ப்ரஹ்ம ஜாஞுதி ப்ராஹ்மண:"

பொருள்:— பிறப்பினுல் சூத்திரராகப் பிறக்கிறுன். உபநயன ஸம்ஸ்காரத்தால் த்விஜன் என்றழைக்கப்படுகின்றுன். வித்தையினுல் விப்ரத்தன்மையை அடைகிறுன். பிரமத்தை அறிந்து பிராமணனு மாகின்றுன்.

வாசகர்களே! இந்தப் பிரமானப்படி நடவடிக்கை உங்களுடைய அறிவில் எங்கேனும் இருக்கிறதா? இல்லையென்றே பதில் கூறுவீர்கள். ஏன? இல்லாதினுல்; அன்றியும் இது எந்தஸ்மிருதியிலுள்ளதென்று எனக்குத் தெரியாது. நான் பலரையும் விசாரித்தேன் அவர்களும் தங்களுக்குத் தெரியாதென்றே பதிலிறுத்தார்கள். இதனுல் பார்ப்பனரல்லாதார் சாதகத்தை யடையாவிட்டாலும் சில சமயங்களில் பாதகத்தையும் அமுன் வழியாகப் பார்ப்பனர் ஸ்பெஷல் ஆதாயத்தையும் அடைகின்றுர்கள்- அதெப்படியென்றுல் தற்புகழ்ச்சியில் பிரியம்வைத்துள்ள பார்ப்பனனல்லாத ஒரு மடாதிபதியையோ ஒரு † பணக்கார இல்லற ஞானியையோ காணநேரும்போது

---

* பிரஹ்ம = வேதம். அதை அறிந்தவனே பிராமணன் என்றும் இதற்குப் பொருள் உண்டு. இங்ஙனம் பொருள் கொண்டால் பார்ப்பனரல்லாதார் பாடு அம்பலம்தான். வேதம்படிக்க பார்ப்பனரல்லாதாருக்கு உரிமையுண்டா? மீறினுல் தண்டனை எத்தகையது?

† இவர்களைத் தென்னுட்டில் நிரம்பக்காணலாம். இவர்களின் வாய் வேதாந்தம் வீரத் தமிழர்களைப் பேடிகளாக்கிவிட்டது இவர்களுக்கு இல்லற ஞானிகள், அகத்துறவிகள் முதலிய பல விசித்திரப் பட்டப் பெயர்களும் உண்டு.

சமத்தர்களான சில பார்ப்பனர்கள் இந்த சுலோகத்தினுல் ஷெ மடாதிபதி இல்லற ஞானிவகைராக்களைப் புகழுறுகிறுர்கள். வெகு எளிதில்பார்ப்பனர்களுக்கு ஆதாயமும் கிடைக்கிறது. இது சாதாரணமாக அனுபவம.

2. "ருத்ராக்ஷம் யஸ்ய காத்ரேஷு லலாடேஷு த்ரிபுண்ட்ரகம்,
ஸசாண்டாலோபி ஸமபூஜ்ய:" வித்யே சுவரஸம்ஹிதா.

பொருள்:—எவனுடைய உடலில் ருத்ராக்ஷமும் நெற்றியில் விபூதியும் விளங்குகின்றதோ அவன் சண்டாள குலத்தினனுயினும் வழிபடத் தக்கவன்."

இதும் ஏட்டிலேயே இருக்கிறது. 'சர்க்கரை' என்று எழுதிய ஏட்டை நக்கி இன்சுவையை யனுபவிப்போர் யாரேனுமிருந்தால் அத்தகையவர்களுக்கு இப் பிரமாணமும் பயனைத்தரும். ஏனையோருக்கு தள்ளுபடி.

3. "ச்ருணுயக்ஷ! குலம்தாத! நஸ்வாத்யாயோ நசஸ்ருதம்,
காரணம ஹிதவிஜத் வஸ்ய வ்ருத்தமேவ நஸமசய:,"
மகாபாரதம, வனபர்வம், யக்ஷயுதிஷ்டிர சம்வாதம். அத்தியாயம 312. சுலோகம் 106.

பொருள்:—யக்ஷனே! பிராமணத்தன்மைக்கு பிறப்போ, கல்வி கேள்விகளோ காரணமன்று; நல்லொழுககமொன்றே காரணம். இது பாண்டவர்களில் மூத்தவராகிய தருமபுத்திரருடைய வாககு. நல்லொழுககமுளளவன் பிராமணத்தனமையை யடைவது உண்மையானுல் தருமபுத்திரனைப்போன்ற நல்லொழுக்கமுள்ளவர்கள் அவர் காலத்தில் மற்றொருவர் இல்லாமலிருந்தும் அககாலத்திலும அவர் க்ஷத்திரியராகவே இருந்தார், க்ஷத்திரியராகவே இறந்தார். இறந்து வெகு காலமாகியும் இப்போதும் க்ஷத்திரியப் பட்டம் அவரைவிட்டு மறையவில்லை, எதிர்மறையாகச் சதியர்கள் பலர் பிறப்பை மாத்திரம் கருதி அக்காலத்தும் பிராமணராயிருந்தார்கள். ஆகையால் தர்மபுத்திரரின் இக்கூற்று செல்லாக்காசெனமதிததுத் தள்ளிவிடுங்கள்.

4. "நான்ருதம் ப்ராஹ்மணே ப்ருதே நஹநதி ப்ராணினம் த்விஜ:,
நஸேவாம் குருதே விப்ரோ நத்விஜ: பாபக்ருத்ப வேத."
ஸனத் குமார ஸம்ஹிதா.

பொருள்:—பிராமணன் பொய்சொல்லமாட்டான். (2) த்விஜன் உயிர்வதையைச் செய்யான். (3) விப்ரன் ஊழியத் தொழிலில் ஈடுபடான். (4) த்விஜன் பாபத்தைப் புரியமாட்டான்.

சகோதரர்களே! மனுஸ்மிருதிகளும் வேதத்திற்கும முரண்பாடாயிருத்தலால் முதல் ஐட்டம் தள்ளப்பட்டது. முரண்பாடு வருமாறு:— சாக்ஷிக்காரன் பொய்சொல்லலாம். பெண்ணைப் புணரும் விஷயத்தில் பொய் சொல்லலாம். (2) யாகத்தில் கொலைசெய்யலாம். "சமிதா" என்னும் யாக புரோகிதன் யாவன்? த்விஜனேயன்றோ. ஆகையால் வேதத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் முரணுன இரண்டாவது ஐட்டமும் தள்ளுபடி. (3) ஸ்மிருதிகளின்படி அரசர்களுக்கு ஆலோசனை சொல்லுபவர்கள் யாவர்? பிராமணரன்றோ? இந்த மூன்ருவது ஐட்டமும * தளளுபடி செய்யப்பட்டது. (4) நடவடிக்கையில் பார்த்துக்கொள்ளுங்கள். முற்காலத்திலும பலவகைப் பாவங்கள் புரிந்திருப்பது புராணத்தைப் பார்த்தால் விசதமாகும். ஆகையால் நாலாவது ஐட்டம்உள்பட இப்பிரமாணம முழுதும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

5. "ஸர்வபக்ஷரதிர் நித்யம ஸர்வகர்மபரோசுசி:.
த்யக்த வேதஸ்த்வனுசார: ஸவை சூத்ர இதிஸ்ம்ருத:."

எல்லாப் பக்ஷணங்களையும் விரும்புபவனும்; அல்லது எல்லோருடைய உணவையும உண்கிறவனும், எல்லாக் கர்மங்களையும் செய்கிறவனும், அசுசியானவனும், வேதத்தை விட்டவனும் ஒழுக்கமின்றியவனும் யாவனே? அவனே சூத்திரன்-

மகாபாரதம் பிருகு பரத்வாஜ சம்வாதம்.

இதும் அமுலில் இல்லை. "பஞ்சாப்தேசத்தில் பிராமணர்கள் எல்லா எஜமானர்களின் வீட்டிலிருந்தும் சோறு, ரொட்டி, சமைத்த காய்கறி வகைகளை வாங்கி உண்பார்கள்." ஜாதி நிர்யணயம் ஹிந்து பாஷைபுஸ்தகம் பக்கம் 477 ஐப் பாருங்கள்.

---

* இந்த தள்ளுபடி என்னுலும் உங்களாலும் செய்யப்பட்டதல்ல. பிராமணராலேயே செய்யப்பட்டுள்ளது. ஏன்? சுயநலத்தைப் பாதிப்பதால்.

5. "ஆர்யாதிஷ்டிதா: சூத்ரா: ஸம்ஸ்கர்த்தார: ஸ்யு:."

ஆபஸ்தம்பதர்ம சூத்திரம்.

பொருள்:—ஆரியர்களை அடுத்திருக்கும் சூத்திரர்கள் சமையல் வேலையைச செய்பவர்கள்.

இக்காலத்தில் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள்; பார்ப்பனரல்லாதார் காய் கறி திருத்திக் கொடுப்பதைக்கூட வெளிப்படையாக விரும்புகின்றார்களில்லை. ஆகையால் ஆபஸ்தம்பரின் இப்பிரமாணம் ஆபத்து காலத்திற் கேற்றதே யொழிய சம்பத்துக் காலத்திற் கேற்றதல்லவாகையால் பழைய கட்டுகளுடன் கட்டி வையுங்கள்.

6. "அக்ஷமாலா வஸிஷ்டேன ஸம்யுக்தாதம யோனிஜா
ஸாரங்கீ மந்தபாலேன ஜகாமாப்யர் ஹணீயதாம்
ஏதாஸ் சான்யாஸ்ச லோகேஸ்மின்னப க்ருஷ்டப்ரசூதய:
உத்கர்ஷம் யோஷித: ப்ராப்தா ஸ்வை: ஸ்வைர்பத்ருகுணை:ஸஹ"

(மனு அத். 9, சுலோகம் 23, 24.)

பொருள்:—"அக்ஷமாலை" யென்பவள் தாழ்ந்த குலத்திற் பிறந்தவளாயிருந்தும் வசிஷ்டரை மணந்து கொண்டதனால் வழிபடத்தக்க நிலைமையை அடைந்தாள். அவ்வாறே "மந்தபால" முனியைச் சேர்ந்த "சாரங்கி" என்பவளும் பூஜிக்கத் தக்கவளானாள். இவ்வாறே வேறு பல பெண்களும் தாழ்ந்த குலத்தினராயிருந்தும் நாயகர்களின் நற்குணங்களினால் மேன்மையை யடைந்துள்ளார்கள்.

வாசகர்களே! இதற்கு எதிர்மறையாகவே இக்காலத்தில் நடக்கிறது. திருஷ்டாந்தமாக மலைநாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். மலையாளத்து வேளாள பிரபுக்கள் தங்கள் குலத்துப் பெண்களைப் பிராமணருக்குக் கொடுத்துவரும் வழக்கம் பல காலமாக நடந்து வருகிறது. ஆதியில இந்த மனுஸ்மிருதியையும் மற்றும் நம்பித்தான் பெண் கொடுக்க இசைந்தார்களென நினைக்கிறேன். ஆனால் மனுவின் இப்பிரமாணத்திற்கு மாறான பலன்தான் அவர்கள் அடைந்தார்கள். மகாத்மாவாகிய சுவாமி விவேகானந்தர் மலையாளத்தை "பைத்தியக் காரர்களின் உறைவிடம்" எனக் கூறியிருக்கிறார். காரணம் என்ன? பார்ப்பனருக்குத் தங்கள் அருமைப் பெண் குழந்தைகளைச் சம்பந்தமின்றிய "சம்பந்தம்" என்னும் வியபிசாரத்திற்காக விட்டுக்கொடுத்து

"மருமாகத்தாயம்" என்னும் நாடெங்குமில்லாத தாயக்கிரமத்தை ஸ்வீகரித்ததனுல் தான். ஆகையால் இந்த மனுவின் பிரமாணத்தை ஊரைவிட்டுத் துரத்துவதன் மூலம் அதனுல் வரக்கூடும உலக இகழ்ச்சியை மலையாளிகள் யாவருமே தடுக்கவேண்டியது அவர்களின் கடமையாகும். அன்றியும மனுஸ்மிருதியில் இதற்கு நேர் விரோதமான பிரமாணங்களும் இருக்கின்றன. மனுஸ்மிருதி அத்தியாயம் 6. சுலோகம் 244, 245 இவைகளைக் கவனியுங்கள்.

"வியாகரண சூத்திர கர்த்தாவாகிய பாணினி" "விப்ரதிஷேதே *பரம் காரியம்" என ஒரு சூத்திரம் செய்திருக்கிறுர். இரண்டு அபிப்பிராயங்கள் ஒன்றிற்கொன்று முரண்பட்டும் ஒரே காரியத்தில் சமான பலமு முள்ளவைகளாகக் காணப்பட்டால் சவுகரியம்போல் முன்னதையோ பின்னதையோ கொள்ளலாமென்பது இதன் பொருள். நாமும் இச்சூத்திரத்தின் துணையினுல் மனுவின் பிரமாணங்களும் பயனற்றவையென ஒதுக்கிவிடுவோம்.

7. "தபோபீஜ ப்ரபாவைஸ்து தே கச்சந்தி யுகே யுகே
உத்கர்ஷம் சாபகர்ஷஞ்ச மனுஷ்யேஷ்விஹ ஜன்மத:"

மனு அத். 10, சுலோகம் 42.

பொருள்:—இந்த ஜன்மத்திலேயே தலைமுறை தலைமுறையாகத் தவத்திஞலும் பீஜத்தின் பெருமையிஞலும் (தாழ்விஞலும்) மக்கள் உயர்வையும் தாழ்வையும் அடைகின்றுர்கள்.

பீஜம் = வித்து. மக்களின் விஷயத்தில் தந்தையென்பது பொருள். இதன்படிக்குள்ள உயர்வு நடவடிக்கையில் இல்லை. மனுஸ்மிருதியைத் தமிழில் மொழி பெயர்த்த "இராமானுஜாசாரியர்" என்பவர் இதே சுலோகத்தின் தமிழ் கீழ்க்குறித்த வண்ணம் எழுதியுள்ளார்:—

"தன் ஜாதியிற் பிறந்தவர்களும் அனுலோம ஜாதிகளும் தவம் பீஜம் இவைகளின் பிரபாவத்திஞல் கிருதயுக திரேதா யுகங்களில் உயர்வையும் பின்பு அந்த பிரபாவமில்லாததால் தாழ்வையும் அடைகின்றுர்கள்." தமிழ் மனுதர்ம சாஸ்திரம் அத். 10, சு. 42.

---

* விப்ரதிஷேதே அபரம் காரியம் என்னும இச்சொல்லைப் பிரிக்கலாம். அபரம் = முன்னது. பரம் = பின்னது.

இவ்வாறு மொழிபெயர்த்தவர் பிறப்பினாலேயே அதாவது "பார்ப்பனத்தி"யின் வயிற்றிலிருந்து பூமியில் விழுந்ததனால் மாத்திரமே "பார்ப்பனனாவான்" என்பதை நிலைபெறுத்தத் துணிந்தவரா? அன்று? சம்ஸ்க்கிருதம் தேவபாஷையாகையால் அது பூதேவர்களின் விருப்பத்திற்கேற்ற பொருளைத் தருவதென்பது இதைப்போன்ற பல மொழிபெயர்ப்புகளினாலும், உரைகளாலும் அறியக்கிடக்கின்றது. அன்றியும இந்த இராமானுஜாசாரியாரின் தமிழ் மனு தர்மசாஸ்திரத்தைப் பிரமாணமாகக்கொண்டு பார்த்தால் கிருதயுக திரேதயுகங்களில் பார்ப்பனரல்லாதார் தவத்தினால் நன்மையை யடைந்திருக்கவேண்டு மன்றோ? அவ்வாறில்லை. தீமையே அடைந்திருக்கின்றார்கள். பூமியின் பாரம் தீர்க்க விஷ்ணுவே தசரதருக்குப் பிள்ளையாய் அவதரித்தாரே ராமச்சந்திரமூர்த்தி; அவர் நீதிவழுவாமல் செங்கோல் செலுத்திக்கொண்டுவரும்போது பிராமணச்சிறுவன் இறந்துபோக அது சூத்திரனொருவன் தவம்பண்ணியதனாலெனத் தெரிந்து என்ன செய்தார்? தவசியாகிய சூத்திரனை இரக்கமில்லாமல் கழுத்தறுத்துக் கொன்றதாகவும் சூத்திரனைக்கொன்ற மாத்திரையில் பிராமணச்சிறுவன் உயிர்த்தெழுந்ததாகவும் இக்காலத்தில் எத்தனை இராமாயணங்கள் வெளிவந்துலாவுகின்றனவோ அவைகளில் யாவற்றிலும் காணலாம். இந்துக்களின் பிரமாணப்படி இராமர் திரேதாயுகத்திலன்றோ அவதரித்தார். ஆகையால் பார்ப்பனருக்குச் சாதகமானவை பிரமாணமானாலும் அப்பிரமாணமானாலும் நடவடிக்கையில் காணலாமென்றும் எதிர்மறையானவை ஏட்டுச் சுரைக்காய்களாகவே இருந்து பார்ப்பனரல்லாதாரை ஏய்த்து பணத்தைப் பறிக்கும் பார்ப்பனருக்குத் துணை புரிந்துவருகின்றனவென்பதும் அறிந்துகொள்ளுங்கள்.

இம்மாதிரி பயனற்ற பிரமாணங்கள் பல ஏடுகளில் இருக்கின்றன அவை இது வரையில் நடப்பில் வரவில்லை. எக்காலத்தும் நடப்பில் வரப்போவது மில்லை. இந்துமத மென்பது பிறப்பைப் பொறுத்து உயர்வையும தாழ்வையும் கொண்டுள்ளதும் மக்களைத் தாழ்த்தி அடிமைப் படுத்தும் வகையில் அதற்கிணையாக அதுவே இருப்பதாலும் கூடிய சீக்கிரம் அதை வீழ்த்தும்படியான முயற்சியில் நாட்டின் நலனைக்கருதுவோர் யாவரும் ஈடுபட்டுழைக்க வேண்டும். "ஒன்றுபட்டா

னுண்டு வாழ்வே ஒற்றுமை யின்றேல் அனைவர்க்குந் தாழ்வே” என்னும் பொன் மொழியைக் கடைப்பிடித்து சமுதாய முன்னேற்றத் திருப்பணியைச் செய்ய முன் வாருங்கள்.

*இதுவரையில் எடுத்துக் காட்டிய பிரமாணங்களுக்கு முரண்பட்டவைகளும் ஆனால் அமுலில் இருந்து வருவனவுமான சில பிரமாணங்களையும் இதன் கீழ் எழுதுகிறேன்.

1. “ஜன்மனு ப்ராஹ்மணோ ஜ்ஞேய:
ஸம்ஸ்கானரர் த்விஜ உச்யதே.
வித்யயா யாதி விப்ரத்வம்
ஸ்ரோத்ரிய ஸ்த்ரிபிரேவச.” (அத்ரிஸ்ம்ருதி:)

பொருள்:—பிறக்கும் போதே (பார்ப்பனியின் கருவிற்றோன்றிய வன்) பிராமணன் என்று அறியத்தக்கவன். உபநயன ஸம்ஸ்காரத்தினால் த்விஜனெனச் சொல்லப்படுகின்றான். கல்வியினால் விப்ரத்தன்மையை அடையா நிற்பன். இம்மூன்றினாலும்; (பிறப்பு, உபநயன ஸம்ஸ்காரம், கல்வி ஆக மூன்று) ஸ்ரோத்திரியன் எனக்கொள்ளப்படுகின்றான்.

பார்த்தீர்களா சகோதரர்களே! “ஜன்மனு ஜாயதே சூத்ர:” என்னும் பிரமாணம் இதனால் அடிபட்டு போயிற்று. இது பன்னூற்றாண்டுகளாக அனுஷ்டானத்திலும் இருந்து வருகிறது. இப்பிரமாணத்தைப் பிறப்பித்தவர் “அத்திரி” என்பவராவர். “அச்சனுக்கு இச்சையும் பால், வைத்தியனுர் சொன்னதும பால், என்று மலையாளத்தில் ஒரு பழமொழி யிருக்கிறது. அதைப்போல் பார்ப்பனர்கள் விரும்பியதையே தரும சாஸ்திர கர்த்தாவாகிய அத்திரியும் சொன்னார். க்ஷத்திரியர்களைக் கொலை செய்த “பரசுராமர்” என்பவரை விஷ்ணுவின் ஆறுவது அவதாரமாக வழிபடும் இந்துககள் இவரை அவதாரப்பொட்டகத்திற்குள் அடைத்து வழிபட மறந்து விட்டது எதனாலோ அறியேன். ஆனால் ஏதோ ஒரு “அத்திரி”கரு பிரமன், விஷ்ணு, சிவன் இம்மூவரும சேர்ந்து ஒரே உடலும் மூன்று தலைகளும் உள்ள ஒரே பிள்ளையின் உருவத்தோடு தோன்றியதாகப் புராணங்களிலும் உப

* ஒழுக்கத்தினால் உயர்வு எட்டிலேயே ஒழிய அமுலில் இல்லை யெனக் கண்டோம்.

நிஷததுக்களிலும் மற்றும் எழுதி வைக்கப்பெற்று வழிபடப் பட்டும் வருகிறது இவ்வவதாரத்திற்கு "தத்தாத்திரேயர்" எனப் பெயர். தத்தாத்திரேயரின் தந்தையாகிய அத்திரியே நமது ஸ்மிருதி கர்த்தாவாகிய அத்திரியா யிருந்தால்; நன்றியறிதலுள்ள பார்ப்பனப் புராணகர்த்தர்களுக்கு அரகரோ அரகர.

2. "ப்ராஹ்மணோ ஜாயமானோ ஹி ப்ருதிவ்யா மபிஜாயதே
ஈஸ்வர: ஸர்வபூதானும் தர்மகோசஸ்ய குப்தயே."

மனு அத—1 சுலோகம் 99.

பொருள்:—பூமியில் எல்லா உயிர்களுககும் இறைவனும் "தரும" மென்னும் பொக்கிஷத்தைக் காப்பாற்றவும பிராமணன் பிறந்திருககிறன்.

3. "ஸர்வஸ்வம் ப்ராஹ்மண ஸ்யேதம் யத் கிஞ்சிஜ்ஜகதீகதம்
ஸ்ரைஷ்ட்யேனபி ஜனேனேதம் ஸர்வம் வை ப்ராஹ்மணோர்ஹதி."

மனு அத—1 சுலோகம் 100.

பொருள்:—உலகிலிருக்கிற பொருள் யாவும் பிராமணனுடையது அவன் உயர்ந்த பிறப்பினனகையால் எல்லாம் பிராமணனைச் சார்ந்ததேயாம்.

4. "அவித்வாம்ஸ்சைவ வித்வாம்ஸ்ச ப்ராஹ்மணோ தைவதம்மஹத்.
ப்ரணீதஸ் சாப்ரணீதஸ்ச யதாக்நிர்தைவதம் மஹத்." 317

5. ஸ்மசானேஷ்வபி தேஜஸ்வீ பாவகோ நைவ துஷ்யதி.
ஹூயமானஸ்ச யஜ்ஞேஷு பூய ஏவாபிவர்த்த." 318.
ஏவம யத்யப்ய னிஷ்டேஷு வர்த்தந்தே ஸர்வகர்மஸு
ஸர்வதா ப்ராஹ்மண: பூஜ்யா: பரமம்தைவதம் ஹிதத்." 319

(மனு அத்தியாயம் 9)

பொருள்:— அறிஞன யிருப்பினும் அறிவிலியா யிருப்பினும் பிராமணன் மேலான தெய்வமாம். அக்கினியானது வைதிகமாயினும் லௌகிகமாயினும் அதுமேலான தெய்வமன்றே? (317)

ஒளி பொருந்திய அக்கினியானது மயானத்தில் பிணத்தை எரித்தாலும் நிந்தனையில்லாமல் யாகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஹோமத்தினல் வளர்க்கப்படுவது எவ்வாறே அவ்வாறே பிராமணர்கள் எல்லா

இழிதொழிலையும் செய்பவரா யிருந்தாலும் எல்லா வகை நற்காரியங்களிலும பிராமணர்கள் வழிபடத்தக்கவர்கள். ஏனென்றால் அவர்கள் மேலான தெய்வங்களல்லவா. (318. 319.)

6. "ப்ராஹ்மணு: க்ஷத்ரியா வைஸ்யா மத்யே சூத்ராஸ்ச பூயச:
இஜ்யா யுத்தபணு ஸேவா வர்த்தயந்தோ வ்யவஸ்திதா:."
(உமாஸம்ஹிதா அத்யாயம் 8.)

பொருள்:—பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய வருணத்தினர் முறையே யாகம், யுத்தம், வியாபாரம், அடிமைத்தொழில் இவைகளில் நியமிக்கப்பட்டு நடததப்படுகின்றார்கள்.

இவை ஓரெழுத்தும் கூட விடாமல் பார்ப்பனர் அமுல் நடத்தியிருக்கிறார்கள் தங்களுககுச் சாதகமான வகையில் அதிகமாகவும் நடத்த எண்ணமும் கொண்டுள்ளார்கள். ஒழுக்கத்தினால் உயர்வையும் தாழ்வையும் அடைவது உண்மையெனப் பிடிவாதம செய்யும் புத்திமான்களுக்கு எனது விண்ணப்பமாவது:—

"பரசுராமர்" இருபத்தொரு தடவைகள் க்ஷத்திரியர்களை யுத்தத்தில் கொலை செய்தழித்து அவர்களின் இரத்தத்தில் தன் தந்தைக்கு தர்ப்பணம செய்தார். அவ்வாறிருந்தும் பிறப்பைப்பற்றிய பிராமணத் தன்மை அவரைவிட்டு நீங்கவில்லை. "துரோணர், க்ருபர், அஸ்வத்தாமா" முதலியோர் மகாவீரர்களா யிருந்து க்ஷத்திரியர்களுககுரிய போர்த்தொழிலிலேயே ஈடுபட்டிருந்தும் பிராமணர்களாகவே கருதப்பட்டு வந்தார்கள். "ஸ்ரீராமர், கிருஷ்ண பரமாத்மா, முதலியோர் அவதாரபுருஷர்களாகப் புராணங்களில் புகழப்பட்டிருந்தும பிறப்பைப் பற்றி க்ஷத்திரியர்களாகக் கருதப்பட்டார்களே யொழிய ஒழுக்கத்தினால் பிராமணத்தன்மையை யடைந்தார்களில்லை. "பீஷ்மாசார்யர்" நைஷ்டிகப்பிரம்மசாரியும் யோகியும் பெரும் வித்துவானுமாயிருந்தும் க்ஷத்திரியராகவே கருதபபட்டார். இவரின் நல்லொழுக்கம் பிராமணத் தன்மையை யளிக்கச் சாதனமா யிருக்கவில்லை. "தருமராஜா"வைப் போன்ற நீதிமான், ஸத்தியவாதி, அக்காலத்தில் மற்றொருவர் இல்லாதிருந்தும் அவர் பிராமணராகவில்லை. பிறப்பைப்பொறுத்த க்ஷத்திரியத்தன்மை அவரை விட்டு நீங்கவே இல்லை. "கர்ண"னைப் போன்ற

கொடை வள்ளல் இல்லை யென்பது உலகப்பிரசித்தம். அப்படி யிருந்தும் பிறப்பைப்பற்றிய இழிவு நீங்கப் பெறுமலே காலங்கழித்தான். "விதுரர்" பெரிய பண்டிதரா யிருந்தார். படிப்புக்குத் தககபடியே நல்லொழுக்கமும நிறைந்திருந்தது. திருதராஷ்டிரருக்கு புத்திமதி கூறும் குருவாகவும் அவர் விளங்கினர். அவ்வாறெல்லா மிருந்தும் "தாஸியின்பிள்ளை" யென்றே இந்துமதம் அவரைக கூறுகின்றது. "சம்பூகன்" என்பவன் பெரிய தவசி. அவ்வாறிருந்தும் பிறப்பினுல் சூத்திரனுகையால் பிராமணர்கள் பொறுமை கொண்டார்கள். பிராமணர்களின் உபதேசத்தினுல் அறிவிழந்த இராமனுல் சம்பூகன் அடைந்த கதி யாது? அநியாயக் கொலையன்றோ. இராமனுடைய தந்தையாகிய தசரதருக்குநண்பனும் இராமனுக்குப் பெரியஉபகாரியுமான "குகன்" அரசனுயிருந்தும் பிறபபைப்பற்றி "நிஷாத" (வேடன்) னுகவே கருதப்பட்டான். "ஏகலவ்யன்" அர்ஜுனனைவிடப் பெரிய போர்வீரன். அவ்வாறிருந்தும் க்ஷத்திரியத் தன்மையை யடைந்தானில்லை. பிறப்பைப்பற்றி நிஷாதனுகவே உயிர் துறந்தான். இவைபோன்ற பழங்கதைகள் பல இருக்கின்றன. அவையாவும் மூட்டையிலேயே கிடக்கட்டும். தற்கால நடவடிக்கையில் கவனம் செலுத்துவோம்.

"மகாத்மா காந்தி" உலகப் பெரியாரன்றோ. அவ்வாறிருந்தும் இந்து சமூகத்தில் பிறப்பைக்குறித்த வைசிய குலத்தினராகவே அவர் கருதப்படுகிறுர். பாஞ்சால சிஙகம் காலஞ்சென்ற "லாலா லஜபத்ராய் காசியில் வசித்து வருமு பெருமு வித்துவான் பாபு "பகவான்தாஸ்" இவர்களும் வைசியர்களாகவே இருக்கின்றுர்கள். காலஞ்சென்ற ராஜா "ராஜேந்திரலால் மித்ர" சரித்திர ஆசிரியரும் ரிக்வேதமொழி பெயர்ப்பாளருமாகிய ஸர் "ரமேசசந்திரதத்" இவர்களும் பிராமணத் தன்மையையடையவில்லை. உலக திக்விஜயத்தினுலும் மதப்பிரசாரத்தினுலும் சங்கராசாரியரைக் காட்டிலும் பிரக்கியாதி பெற்ற "சுவாமி" விவேகானந்தரும் பிறப்பைக் குறித்து காயஸ்த "ஜாதியினராகவே கருதப்பட்டார், தபஸ், யோகம், கல்வி இம்மூன்றும அமையப்பெற்று விளங்கி வரும் மகான் அரவிந்த கோஷரையும் இந்து சமூகத்தில் ஒழுககத்தினுல் பிராமணராகக் கருதுவதில்லை. இத்தகைய காரணங்களினுல் முற்காலத்தைப் போலவே தற்காலத்திலும் பார்ப்பனரல்லாதார் நல்லொ

ழுக்கத்தினல் பார்ப்பனத்தன்மையை யடைவது பகற்கனவென்ப பெறப்பட்டது எதிர்மறையாக, கொள்ளை, கொலை முதலிய இழி தொழில்களில் இறந்துபடும்வரையில் ஈடுபடுபவராயிருந்து பலர் முன் காலங்களில் பிறப்பொன்றினலேயே பிராமணராகக் கருதப்பட்டு வந்தார்கள். தற்காலத்திலும் கருதப்பட்டு வருகிருர்கள்.

ஆகையால் மக்கள் ஒழுக்கத்தினல் உயர்வடைவது இந்து மதம் இருக்கிற வரையில் இல்லையென்பது வெளிப்படையாய்விட்டபடியால் பார்ப்பனரல்லாத இந்துக்கள் உயர்வடைய விரும்பினலும் பாரதநாடு அடிமைத்தன்மையினின்று விடுதலையடைய வேண்டுமானலும பிறப்பினலேனும் தொழிலினலேனும் உயர்வோ, தாழ்வோ மக்களிடத்தில் ஏற்றிவைகக வேணடாம. வர்ணம் தான் நம் நாட்டைக கெடுத்தது. நம் நாட்டு மக்கள் யாவரும் அவர் எமமதத்தினராயினுஞ் சரி சகோதரத்தன்மையோடு ஒழுகும் நற்காலம் என்றைககேனும் வருமானல அன்று தான் நம நாடு விடுதலையடையு மென்பது எனது துணிபு. இதை மறுத்து பிறப்பினலோ ஒழுக்கத்தினலோ வர்ணச்சிரம விய வஸ்தையை ஸ்தாபித்து நாட்டைச சீர்திருத்த முடியுமானல் அவ்விதம் செய்யுங்கள்.

## ஆரிய ராச்சியத்தின் கொடுமைகள் பல ஆங்கில ஆட்சியில் தொலைந்தன.

யாகக் கொலையையும் வர்ணச்சிரம அதருமத்தையும் ஒழிக்கவே துறவுபூண்ட சக்கிரவர்த்தித் திருமகனராகிய புத்தர்பெருமானல் தோற்றுவிக்கப்பெற்ற "ஸத்தருமம்" என்னும் "சமத்துவ தர்ம"த்தைப் பின்பற்றி மக்கள் ஒழுக ஆரம்பிக்கவே நம நாடு பொன்னுடாகத் திகழ ஆரமபித்தது. ஆகவே பார்ப்பனர்களால் பொறுக்க முடியவில்லை. பஞ்சதந்திரத்தினல் பௌத்த தருமத்தை அழித்து முன்னிலும பன்மடங்கதிகமாக யாககொலைகளையும அடககு முறைகளையும் நடத்தத் தொடங்கினர்கள். பௌததராசசியம மாய்ந்ததோடு மக்களுககிருந்த இன்பமும மறைந்துபோய் அதன் ஸ்தானத்தில் துன்பம் தனது அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்தது துலுக்கர்களின் படையெடுப்பினல் கொள்ளை கொல்லை பெணகளின் கற்புக்கு அழிவு

முதலிய அக்கிரமப்பேய்கள் பாரதம் முழுதும் தலைவிரித்தாடின. "பௌத்தர்களைக் கொலை செய்தழித்த அநியாயக்காரர்களுக்குச் செய லுக்குத்தக்க பிரதிபலன் கொடுக்கவே துலுக்கர்களைக் கடவுள் பாரத நாட்டிற்கு அனுப்பிவைத்திருப்பதாகப் பலர் சொல்லியிருக்கிறார்கள். அன்றியும் பௌத்தர்களைக் கொன்றழித்த பார்ப்பனச் சூழ்ச்சியா னது வேறு பல புது புது அக்கிரமங்களையும் உண்டுபண்ணி அவை கடவுளின் பெயராலும் அக்காலத்தில் அரசு பண்ணியிருந்த அறி விலிகளின் ஆயுத வன்மையினாலும் மக்களை வற்புறுத்திப் பின்பற்றச் செய்தனர். அவையிற் சில வருமாறு:—

| | |
|---|---|
| 1. சரகபூஜா | 7. காசிகரவட் |
| 2. ஹரிபோல் | 8. ப்ருகூத்பன்னம் |
| 3. * ஸதீதகனம் | 9. தரூ |
| 4. புத்ரீவதம் | 10. மஹாப்ரஸ்தானம் |
| 5. நரமேதம் | 11. துஷானலம் |
| 6. கங்காப்ரவாஹபாதனம் | 12. ரதயாத்திரை. |

இவை முதலியன இவைகளின் விவரத்தை இதன்கீழ் எழுது கிறேன்.

## 1. "சரகபூஜா".

இது வட இந்தியாவில் அதிகமாகப் பரவியிருந்தது. தென் னாட்டிலும் இவ்வழக்கம் இராமற் போகவில்லை. அம்மனுக்கு "பூந் தேர் குத்துதல்" முதலிய திருவிழாக்கள் இக்கொடுவினையின் ஒரு வகை மாறுதலேயாம. இச்செய்கையை அமமனுடைய உபாசகர்கள். அனுக்கிரகம் பெற்றவர்களா? அன்றா வென்பதைப் பரீக்ஷிப்பதற்கே நடத்திவந்ததாகச் சொல்லப்படுகிறது.

இருபத்தைந்து அல்லது முப்பதடி நீளமுள்ள ஒரு மரக்கம்பத் தில் கூர்த்த முனையுள்ள ஊசியொன்றைச் சொருகி அக்கம்பத்தைத் தரையில் நாட்டியிருக்கும் அத்தூணின் பேரில் கயிறுகட்டிச் சககரம் போல் சுழலக்கூடிய சௌகரியங்களும் செய்திருக்கும் கயிற்றின்

---

* ஸதீதகனம்=உடன்கட்டை யேறுதல். இதை உடன்கட்டை யேற்றுதல் என்றே சொல்லவேண்டும்.

தலைப்பில் இரண்டு கொக்கிகள் கட்டியிருக்கும், அக்கயிறு பூமிவரையில் நீண்டுகிடக்கும். முதலில் அம்மனை உபாசிப்பவன் கம்பத்தடியில் வந்து அம்மனை நமஸ்காரம்பண்ணிப் பின்னர் கம்பத்தின் நுனியிற் கட்டிப் பூமியில் தொங்கிசகிடக்கும் கயிற்றின் தலைப்பிலுள்ள கொக்கிகளைத் தனது முதுகில் அல்லது கக்கத்தில் சதையோடு சேர்த்து நன்கு மாட்டிவிடுவான். அதன்பின் இவ்வுபாசகனைக் கயிற்றோடுகூட மேலே கொண்டுபோய் கயிற்றைப்பிடித்து கிறு கிறென்று சுழற்றுவார்கள். எவ்வளவுநேரம் அதிகமாக இவ்வேதனையைச் சகித்துக்கொண்டிருக்கிறானோ அவனே அம்மனுக்கு அதிக பிரியமானவன். இக்கஷ்டத்தைப் பொறுககமுடியாத சிலர் அப்போதோ, சிலர் சில நாட்கள் கழித்தோ இறந்துவிடுவார்கள். அவ்வாறு இறந்தவர்களை மோக்ஷமடைந்தவர்களாகக் கருதிவந்தார்கள். இவ்வநியாயச் செய்கையை அரசாங்கத்தார் 1863-ம் ஆண்டில் இதற்கென்றே சட்டத்தை உண்டுபண்ணி நிறுத்திவிட்டார்கள்.

## 2. "ஹரிபோல்."

இவ்வக்கிரமச் செய்கையும் வங்கநாட்டில் நடந்துவந்தது. வேறு சில இடங்களிலும சிறிது மாறுதலுடன் நடந்துவந்திருக்கிறது. ஒருவன் நோயினால் இறக்குந்தருணத்தில் இருக்கும்போது அவனைக் கங்கையாற்றிற்குக் கொண்டுபோய் "ஹரிபோல், ஹரிபோல், போல் ஹரி" (அரி யென்றுசொல், அரி யென்றுசொல், அரி யென்றுசொல்.) என வற்புறுத்திச சொல்லச்செய்து கங்கையில் குளிப்பாட்டுவார்கள் சிலருககுத் தண்ணீரிலேயே உயிர் நீங்கிவிடும. மற்றுஞ் சிலர் கரையில்வந்து சிறிது நேரத்திற்கெல்லாம இறந்துவிடுவார்கள். அப்படியும் இறக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டு யாரேனுமிருந்தால் அவர்களை மறுபடியும் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோகும் வழக்கமில்லாததால் அங்கேயே கிடந்து சாகவேண்டியதுதான். இக் கொடுஞ்செயலை 1831-ம் வருஷத்தில் சட்டமூலமாக அரசாங்கம் நிறுத்தியது.

## 3. ஸதீ தகனம். (உடன்கட்டைஏறுதல்.)

இது பாரதநாடு முழுதும் தொத்துவியாதிபோல் பரவி பல இளம் பெண்களைக் கொன்றழித்துள்ளது. வேதத்திலோ மநு முத

வியவர்களின் ஸ்மிருதிகளிலோ காணுததால் இவ்வநியாயம் பௌத்தர்களை அழித்தபின்னரே பார்ப்பனர்கள் கண்டுபிடித்தார்களெனத் தெளியலாம். ஒருவன் இறந்தால் அவனுடைய மனைவியை உயிருடனே புருஷனது பிணத்துடன் கொளுத்திவிடுவதற்கே "ஸதீ தகனம" (உடன்கட்டை) எனப்பெயர். இவ்வாறு கொளுத்தப்பட்ட பெண் புருஷனுடன் சொர்க்கம்போவாள் என்னும் கட்டுக்கதையையும் கட்டிவிட்டுப் பார்ப்பனர்கள் ஏழைப்பெண்களை அநியாயமாய் உயிருடன் எரிக்கும் கொடுஞ்செயலை விளையாட்டாகநடத்திவந்தார்கள். பெண்களைப் பலவந்தமாகவே எரித்துவந்தார்களென்பது பிரசித்தம். நெருப்பில் தள்ளப்பட்டப்பெண் பொறுக்கமுடியாத வெப்பத்தினுல் வருந்திக் கூவும்போது கூர்மையான தடிகளால் அப்பெண்ணைக் குத்திக் குத்தி எரிகிற கட்டைகளுககிடையில் தள்ளுவார்களாம். இவ்விராட்சதச் செயலைக் கண்டதனுல்தான் இராஜா ராம மோஹனராய்" என்னும்பெரியார் அநியாயப்பார்ப்பனமதத்தை விடுத்து "பிரமஸமாஜம்" என்னும் ஒரு தனிமதத்தை ஸ்தாபித்தார். அவர் தனது சகோதரன் மனைவிக்கேற்பட்ட இத்தகைய அநியாயமரணத்தைக்குறித்து கீழ்வருமாறு கூறியுள்ளார்:—

"என் சகோதரன் இறந்துபோனுர். இந்துக்களின் மத வழக்கப்படி உடன்கட்டை ஏறுவதற்கு இளமபெண்ணுன அவர் மனைவி முதன்முதல் ஒப்புக்கொள்ளவேயில்லை. புரோகிதர்களின் பிடிவாதத்தினுல் ஒருவகையில் அவள் ஒப்புக்கொண்டு சுடுகாட்டிற்குச் சென்ருள். எரிகிற நெருப்பைப பார்த்ததும் அவ்வேழை இளம்பெண் தன் உயிர் போய்விடுமே யென அஞ்சி அழத்தொடங்கினுள். ஆனுல் புரோகிதக் கூட்டத்திற்கு அவள் பின்னும் கீழ்படிந்து நெருப்பில் குதித்தாள். அங்கு அவள் பட்டபாடு என்ருல் சொல்ல இயலாது. பொறுக்கமுடியாத சூடினுல் அவ்வேழைப் பெண் எரிகிற நெருப்பில் புரண்டு கூவும்போது புரோகிதர்களின் கட்டளைக்கேற்ப யம கிங்கரர்களைப்போன்ற சில வேலைக்காரர்கள் கூர்மையான மூங்கில்தடிகளால் குற்றுயிருடன் நெருப்பில்கிடந்து பரிதவிக்கும் அவ்விளம்பெண்ணைப் பலதரம் குத்திக்குத்தி நெருப்பில் தள்ளி வதைத்து எரித்தார்கள்."

இவ்வக்கிரமச் செயலேயும் 1841-ம் வருஷத்தில் ஆங்கில அரசாங்கம் சட்டம்செய்து நிறுத்தியது.

## 4. "புத்ரீ வதம்."

இது "ராஜபுதனு, ஒரிஸா முதலிய நாடுகளில் அதிகமாகவும், வேறு சில இடங்களில் குறைவாகவும் நடந்துவந்தது. க்ஷத்திரியர்கள் தங்கள் குலத்தின் மேன்மையைக் கெடுக்கக்கூடாதென நினைத்து நடத்திவந்த தீச்செயலே இது. பெண்பிறந்தால் அவளுக்கு வாய்க்கும் புருஷன் தன் குலத்திற்கு ஏதேனும் வழியில் குறைந்த அந்தஸ்த்துள்ளவனுயிருந்தால் என்னசெய்வதெனக் குழந்தைபிறக்கும்போதே அது பெண்ணுயிருந்தால் அதன் கழுத்தை நெறித்துக கொன்றுவிடுவார்களாம். இவ்வநியாயத்தை 1870-ம வருஷத்தில் சட்டமூலமாக நிறுத்தப்பட்டது.

## 5. "நர பேதம்."

பாரதநாடு முழுதும் இவ்வநியாயக் கொலை நடந்துகொண்டிருந்தது. இது வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ரிக்வேதத்திலுள்ள "சுனச்சேபசூக்தம்" இதற்கு பிரமாணமாகக் காட்டிவந்தார்கள். எவனேனும் வெளியூரான் அகப்பட்டால் அல்லது உள்ளூரிலேயே ஏழையானவன் இருந்தால் அவனை எவ்வாறேனும் அழைத்து வந்து யாகத்தில் பசுவாக்கி யூபத்தில்கட்டிக் கொலைசெய்துவருவது வழக்கம். இவ்வக்கிரமக் கொலையை 1845-மவருஷ 21-வது ஆக்ட்டுப்படி அரசாங்கத்தார் நிறுத்திவிட்டார்கள்.

## 6. "கங்காப்ரவாஹ பாதனம்."

தாய்தந்தையர்கள் தங்களுக்கு சந்ததி உண்டாகவேண்டுமென்று விரும்பி இஷ்டதெய்வத்தை இவ்வாறு வேண்டிக்கொள்வார்கள். "எங்களுக்குக் குழந்தை பிறந்தால் முதற்குழநதை ஆணுயிருந்தாலும பெண்ணுயிருநதாலும் சுவாமிக்கு அர்ப்பணம செய்துவிடுகிறோம. பிறகு குழந்தை பிறந்தால் அக்குழந்தையைத் தங்கள் பிரார்த்தனையின்படியே தெய்வத்திற்கு கொடுத்துவிடுவார்கள்.

அதெப்படியென்றால் எல்லாத் தெய்வங்களும் கங்கையில் இருக்கிறார்கள் என்றல்லவோ புராணவசனம். ஆகையால் கங்கையாறு கடலிற் கலக்குமிடமாகிய "கங்காசாகர சங்கமம்" என்னுமிடத்தில் ஆற்றுப் பெருக்கில் தங்கள் அருமைக் குழவியை எறிந்துவிடுவார்கள். இரக்கமற்ற இவ்விழி செய்கையை கவர்ன்மெண்டார் 1835-ம் வருஷத்தில் சட்டத்தினால் நிறுத்தினார்கள்.

## 7. "காசிகரவட்டு."

இவ்வநியாயச்செய்கையை "ஞானசூரியன்" என்னும் நூலில் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். இதையும் சட்டமூலம் கவர்ன்மெண்டார் நிறுத்தினார்கள்.

## 8. "பருகூத்பன்னம்."

"கிரநார்" சதபுடா முதலியமலைகளின் உச்சியிலிருந்து இளைஞர்கள் கீழேவிழுந்து உயிரை விட்டுவிடுவதே "பிருகூத்பன்ன" மென்பது. இதுவும் "கங்காப்ரவாஹ"த்தில் குழந்தைகளை எறிவதைப் போன்ற பிரார்த்தனையாகும். தாய்தந்தையர்கள் சந்ததிக்காகப் பரமசிவனை வேண்டிக்கொண்டபடி பிள்ளைபிறந்து அவனுக்கு யௌவனப் பருவம வந்ததும் அவனிடத்தில் தங்கள் வேண்டுகோளை வெளியிடுவார்கள். தாய்தந்தையரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட அப்பிள்ளையும் கடவுளின்பேரில் பழியைசசுமத்தி மலைமீதிலிருநது குதித்து உயிரை துறப்பான். இப்பாதகச்செயலையும சட்டத்தினால் இங்கினி வராத வண்ணம இங்கிலீஷ் அரசாங்கம் ஒழித்தது.

## 9. "தரணு"

போக்கிரிகளாகிய பிசசைக்காரர்கள் சில கிருகஸ்தரிடம் சென்று எங்களுக்கு இன்னது விருப்பம அதை மரியாதையாகக் கொடுத்தால் போய் விடுகிறோம. இல்லாவிட்டால் இங்கேயே உயிரை மாய்த்து விடுவோம்" என்று வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டுகத்தி ஈட்டி முதலிய ஆயுதங்களினால் தற்கொலை புரிந்து கொள்வதாகப் பாசாங்கு பண்ணுவார்கள். வீட்டிற்குடையவர்கள் போக்கிரிகளுக்குப் பயந்து

அவர்கள் விரும்பிக் கேட்கும் பொருள் பெண்ணோ பணமோ யாதா யினும் கொடுத்து வருந்திக் கொண்டே யிருப்பார்கள். இதை 1820-ம் வருத்தில் சட்டமியற்றி கவர்ன்மெண்டார் நிறுத்தி விட்டார்கள்.

## 10. * "மஹாப்ரஸ்தானம்."

நீரிலோ நெருப்பிலோ விழுந்து உயிரை விடுவதே "மஹாப்ரஸ் தான" மெனப்படும். இதனால் மோக்ஷம கிடைக்கு மென்ற குருட்டு நம்பிக்கை இந்துமக்களுக கிடையில் இருந்துவந்தது. "மிருச்சகடிக" மென்னும் நாடகத்தை இயற்றிய "சூத்திரக" னென்னும் அரசன் இவ்வாறு "மஹாப்ரஸ்தானத்"தினாலேயே உயிரை விடுத்தான். "சூத்ரகோக்நிம ப்ரவிஷ்ட:" என்னும் சொல் மிருச்ச கடிகம் புத்த க்த்திலேயே இருக்கிறது. இப்பேய் நம்பிக்கையைய்ம நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சட்ட மூலமாக ஒழித்து நாட்டிற்கு நலம் புரிந் தார்கள்.

## 11 "துஷானலம்."

பெருங்குற்றம் பண்ணின ஒருவன் அதற்குரிய தண்டனையைத் தானே அனுபவித்து குற்றத்தினின்றும் மீளும் வழியே இது. ஒரு குழியில் இறங்கி தனது கழுத்தளவு உமியைக் கொட்டி நெருப்பு வைத்து உமி நீற நீற மெல்ல அவனுடைய உடலும் நீறி விடும. பௌத்தர்களை அநியாயமாகக் கொன்ற "குமாரிலபட்டன்" முடிவில் உமித்தீயி லிறங்கியே உயிரை மாய்த்தான். இதையும் கவர்ன்மெண டார் சட்டத்தினால் நிறுத்தினார்கள்.

## 12. "ரதயாத்திரை."

"ஜகன்னாதம்" கோவிலில் ரதோற்சவத்தில் தேரோடும போது தேர் சக்கிரத்தடியில் சிக்கி உடல் சிதைந்து இறந்தால் உயிர் "விஷ்ணுஸாயுஜ்ய"த்தை அடையும என்கிற நம்பிக்கையினால் பலர் அவ வாறே செய்து உயிரை மாய்த்து வந்தார்கள். இதையும் நமது ஆங் கில அரசாங்கம் சட்ட மியற்றி நிறுத்தி விட்டது.

---

* நந்தனார் நெருப்பில் குதித்து சிவபதவியை யடைந்ததாகக் கதையி ருக்கிறதே. இது 'மஹாப்ரஸ்தான' மென்னும் ஏமாற்று வழியினால் பார்ப் பனா அவரைக் கொலை செய்த கதையேயாம்.

இதைப்போன்ற அநியாயங்கள் பல ஆங்கில அரசாங்கத்தால் நிறுததப்பட்டன. இத்தகைய அக்கிரமச் செய்கைகளைப் பார்ப்பனர்கள் நடத்தி வந்த காரணம் தங்களுடைய பொருள் வருமானத்தைக் கருதியே யொழிய வேறல்ல. இந்துக்களின் எந்தச் சடங்குக்கும் பார்ப்பானுக்கு தக்ஷிணை கொடுத்தாக வேண்டும். "இழவு வந்தாலும் பார்ப்பானுக்குப் பணத்தைக் கொடுத்தழு-" என்னும் பழமொழியும் இருக்கிறதன்றோ. மராட்டிய தேசம் பார்ப்பனர்களின் கையில் சிக்குண்ட காலத்தில் பலவகை அநியாயக்களைப் பார்ப்பனர்கள் நடத்தியுள்ளார்கள். அவைகளைக் குறித்து "ப்ராச்யவித்யா மஹார்வை ஸ்ரீ நாகேந்த்ரநாதவசு" என்னும் பெரியார் தனது "விசுவகோஷம்" என்னும் நூலில் எழுதி யிருக்கிறார். அதினின்றும் எடுத்தெழுதிய ஒரே ஒரு சமாசாரமாவது:—

"ரகுநாத ராவ்" என்பவருக்கு "சுபேதார்" பதவி கிடைத்த போது அவர் ஆங்கில அரசாங்கத்திற்கு எழுதிய ஒரு விண்ணப்பத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. விதவைப் பெண்கள் முன் போல் ஏலத்தில் விற்கப்படுவார்களா? அப்படி விற்று கிடைக்கும் பொருள் முன்போலவே அரசாங்க கஜானாவில் சேருமா? அன்றியும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் உதவியைக் கொண்டு ஒருவன் தனக்குப் பிறரால் சேரவேண்டும் தொகையை அடைநது விடுவானானால் அத்தொகையில் நான்கில்ஒன்று அரசாங்கத்துக்குச் சேருவது வழக்கம். அது முன்போலவே இருக்குமா? இல்லையா? ஒருவன் தனதுமனைவியையோ மகளையோ விற்று கிடைக்கும் பொருளில் நாலில் ஒன்று அரசாங்கத்திற்குச் சேரவேண்டியது முன்போலவே கிடைக்குமா? இல்லையா?

("விஸ்வகோஷம் ஆறும்பாகம் பக்கம் 736.")

பெரும்படிப் பாளியான பண்டித "பதரீ தத்த ஜோஷீ" என்பவர் "ப்ராஹ்மணீ ஹிந்து ஸ்வராஜ்யத்தின் அக்கிரமமும் அநியாயச் சட்டங்களும்" என்ற தலைப்பின் கீழ் எழுதியதின் சுருக்கம்:—

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் நமது நாட்டில் பல அட்டூழியங்களும் மதத்தின் பெயரால் நடத்தப்பட்டு

மக்கள் துன்பத்தை யனுபவித்து வந்தனர். அவைகளை ஆங்கில அரசாங்கம் கருணையோடு சட்டங்களைப் பாஸ் பண்ணி மிகமிகக் கஷ்டத்துடன் நிறுத்தியது. அவ்வாறு ஒழிக்கப் படாவிட்டால் நாம் இப்போது எதை விரும்புகிறோமோ எதனால் நாம் இவ்வாறு பெருமை பேசிக் கொள்ளுகிறோமோ அத்தகைய இந்நிலைமையை பாரத வாசிகள் அடைந்திருப்பார்களா? இல்லை இல்லை. ஆங்கில ஆட்சி யேற்பட்டு நம் நாட்டில் அமுலிலிருந்து வந்த அனுசாரங்களும் ஒழிந்திரா விட்டால் நாமனைவரும் கண்ணீர் வடித்துக் கொண்டு மூலைக்கு மூலை உட்கார்ந்திருக்க வேண்டியது தான்."

வாசகர்களே! முற் கூறியவைகளை நன்கு கவனிக்க வேண்டுகிறேன். மக்களுக்கு சுகத்தைத்தருவது எது? "இராமராச்சியம்" என்னும் பார்ப்பன ராச்சியமா? பார்ப்பன ராச்சியத்தின் அக்கிரமங்களிற் பல ஒழித்து மக்களைச் சமத்துவமாக நடத்தும்படிக்குச் சட்டமியற்றி ஆட்சிபுரியும் ஆங்கில ராச்சியமா? இக்காலத்தும் பார்ப்பனரல்லாதாருக்கு இன்னல் புரிபவர்யாவர்? பார்ப்பனரல்லாதாரின் பிள்ளைகளுக்கு கல்வி போதிப்பதில் எந்தப் பள்ளிக்கூடம் அதிக முயற்சியை எடுத்துக்கொள்ளுகிறது? கிருஸ்தவ மிஷனரிகளின் பள்ளிக்கூடமா? பார்ப்பனர் நிறைந்த ஏனைய பள்ளிக்கூடங்களா? பார்ப்பனரல்லாத தாழ்த்தப்பட்ட வகுப்பினன் பார்ப்பனனுக்கும் உயர்குடிப் பார்ப்பனரல்லாதானுக்கும் பரம்பரையாகத் தொண்டு செய்து வந்தாலும் அவனை நாய், பன்றி முதலிய விலங்குகள் நடமாடும் பொதுசசாலைகளிற் கூட நடமாட அனுமதிப்பதில்லை. ஆகவேஅவன் கிருஸ்தவமதத்திலோ துலுக்கமதத்திலோ சேர்ந்தால் மனிதனாக அதிலும பார்ப்பனனுக்குச் சமானமாகவோ அதைவிட உயர்ந்த நிலையிலோ கருதப்படுகிறான். காரணம் யாது? கிருஸ்தவ மதத்தினை வெகுமதிப்பது அரசாங்கத்திற்கு அஞ்சியும் துலுக்கமதத்தினை ஆதரிப்பது அவர்களின் சமுதாய ஒற்றுமையைக் கண்டு நடுக்குறுவதனாலுமே யொழிய வேறு காரணம் சொல்ல முடியாது. "தாடியுள்ளவனிடம் பேடி" என்று மலையாள பாஷையில் ஒரு பழமொழி யுண்டு அது துலுக்க மதத்தைச் சரண் புகுந்த புலையர் முதலிய தாழ்த்தப்பட்டவர்களிடம் இந்து உயர்குடிகள் நடந்து கொள்ளும் மரியாதையைப் பற்றியே எழுந்தது. ஜாதிப்

பேயின் தாண்டவம் எங்கு அதிகமதிகம் காணப்படுகிறதோ அங்கு மூதேவியின் ஆட்சியும் அதிகமதிகமாகஇருந்துவருகிறது. (மலேயாளம்) நீர்வளமநிலவளம் முதலியவையால் செழிப்புற்ற நாடாயிருந்தும் அது ஜாதிப்பேயின் கூத்துமேடையா யிருப்பதால் அந்நாட்டு விளை பொருள் யாவும் வெளிநாட்டு வியாபாரிகள் குறைந்தவிலேயில் வருத்த மின்றிப் பெற்றுக்கொண்டு பெருத்த லாபத்தை அடைகிறார்கள். காரணம் பணக்காரர்களில் பெரும் பகுதியினரும் பார்ப்பனர்கள். இவர்கள் தான் நிலசசுவான்தாரர்கள், சிறுபான்மை நாயர் பிரபுக்களும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குலத்தினருக்கு கூட உதவிபுரிய மாட்டார்கள். ஏழைகளுககு ஒரு வகையிலும் பணக்காரரின் உதவி யில்லே. ஆனல் தொந்தரை செய்வதில் குறைந்தவர்களென நினைக்க வேணடாம. ஏழைகளேத் துன்புறுத்துவதில் இந்தியாவிற்குள் ஏனைய நாட்டினரை விட மலேயாளிகள் மேன்பட்டவர்கள்.

சுயராச்சியத்திற்காகப் பாடுபடுபவருள் பார்ப்பனர் யாவரும் "ராம ராசசிய"த்தையே விரும்புகின்றார்கள். ஆதலால் ஆங்கில ஆட்சியைக் குறை கூறுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளதைப் பற்றி நமக்கு ஆச்சரியமில்லே. ஆனல் அன்னிய நாட்டினரை இந் நாட்டில் நிலேநிறுத்தி ஆட்சி புரியச செய்தது பிராமணரின் கொடுங் கோன்மையினல் என்பதை யுணர்ந்திருந்தும் இக்காலத்தும் பார்ப் பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு இழைத்துவரும் இன்னல்களேத் தாங்களும் அனுபவித்து வருபவர்களாயிருந்தும் அக்கொடுமைகளேக் களேந்தெறிவதே முதல் வேலேயாகக் கொள்ளாமல் பார்ப்பனரல்லா தாரிற் பல படிப்பாளிகளும் பார்ப்பனருடன் சேர்ந்து சுயராச்சியப் பிரசாரம் பண்ணிக் கஷ்டப்படுவதைப் பார்த்தால் ஆச்சரியமாகவும் பரிதாபமாகவும் இருக்கிறது. பார்ப்பனரல்லாத அறிஞர்கள் முதலில் தங்கள் சமுதாயத்தின் குறைகளேத் தீர்க்கட்டும். பார்ப்பனராலும் உயர்குடிப் பார்ப்பனரல்லாதாராலும பரம்பரையாகத் தாழ்த்தப்பட்டு கஷ்டப்படுத்திவருமட மக்களுக்கு எல்லா வகையிலும் மக்களுக்குரிய முன்னேற்றத் துறைகளில் சமத்துவம் வழங்கும் வரையில் இந்நாடு பிற நாட்டினரின் ஆட்சியிலேயே இருககவேண்டுமென்பது தெய்வ சமமத மாகையால் அவ்வாறே நடக்கத்தான் செய்யும். கடவுளின்

இக்கட்டளையை மீற ஒருவராலும் முடியாது. வட நாட்டில் இந்து சங்கடனம், சுத்தி இயக்கம், ஆரிய சமாஜிகளின் சமத்துவ மதப் பிர சாரம் முதலியவை ஏமாற்று வித்தைகளென்பதை "ஜாத்பாத் தோடக மண்டல்"த்தார் வெளியிட்ட சிறு புத்தகத்தில் விளக்கமாகக் கூறி யுள்ளார்கள். ஆரிய ஸமாஜத் தலைவர்கள் யாவரும பார்ப்பனர் க்ஷத்தி ரியர் முதலிய உயர்குடிகளே யாகையால் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை உயர்த்துவதற்கெனச் செய்துவரும் அனுதாபப் பிரசங் கங்களை "ஆடு நனைவதைப் பார்தது ஓநாய் அழுத கதைக்கு ஒப்பிட் டுக் கூறலாம. இவ்வுண்மையை ஆரிய சமாஜத்தில் பழகிய யாவரும் அறிந்திருப்பார்கள். கொலையைப் புண்ணியச செயலென உபதேசிக் கும் கொடுநூலாகிய வேதத்தைக் கடவுள் வாக்கென மெய்ப்பிக்க வேண்டியே ஆரிய ஸமாஜ ஸ்தாபகர் அரும்பாடுபட்டு பழைய உரை களையும அதன்படிக்குள்ள நடவடிக்கைகளையும் பொருட் படுத்தாதவ ராய்ப் புதுவுரையையும் வேறு பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். காலஞ் சென்ற "பால கங்காதர திலகர்" தற்காலத்திய சுயராச்சிய வாதிகளுக்க கெல்லாம் குருவைப்போன் றிருந்தவர். அவர் பார்ப் பனச் சுயராச்சியத்தை அடைவதன் வாயிலாகப் பார்ப்பனரல்லா தாரை அடிமைப் படுத்தவே விரும்பினர். இதை அவரால் எழுதப் பட்ட வாக்கியஙகளை மேற்கோள் காட்டியே உங்களுக்கு விளக்கு கிறேன்.

"ஸ்ரேயான் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வனுஷ்டி தாத்
ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேய:
பரதரமோ பயாவஹ:" (பகவத்கீதை அத். 3, சு. 35.)

பொருள்:—ஸ்வதர்மம் = தன் குலத்திற் குரிய தொழில் இழி யதும் அனுஷ்டானத்தில் கஷ்டமுடையதாகவுமிருந்தாலும் அதையே செய்தாக வேண்டும். பரதர்மம = பிற குலத்தினரின் தொழில் எளி தில் செய்யக்கூடியதும் மேன்மையைத் தரக்கூடியதாகவுமிருந்தாலும் அதை அனுஷ்டித்தல் முறையாகாது. தன் குலத்தொழிலைச்செய்து

மரணம் வரினும் அது சிறந்ததே. பிற குலத்தினரின் தொழில் பயத்தை உண்டுபண்ணுவதாகும்.

(பகவத்கீதை அத்தியாயம் 3, சுலோகம் 35.)

இந்த சுலோகத்திற்கு "திலகர்" தனது "கீதாரகசியம்" என்னும் நூலில் வியாக்கியானித்திருப்பதாவது:—

"ஸ்வதர்ம ஏக வ்யவஸாயஹை ஜோஸ்ம்ருதிகாரோம்கீ சாதுர் வர்ண்ய வ்யவஸ்தாகே அனுஸார ப்ரத்யேக மனுஷ்யகோ சாஸ்த்ரத் வாரா நியத கரதியாஹை; ஸ்வதர்மகா அர்த்த மோக்ஷ தர்ம நஹீஹை ஸப்லோகோம்கே கல்யாணகே லியேகுணகர்மகே விபாகஸே சாதுர் வர்ணய வ்யவஸ்தாகோ (கீதா 18, 41) சாஸ்தரகாரோம் நேப்ரவ் ருத்த கரதியாஹை. அத ஏவ பகவான் கஹதேஹை கிப்ராஹ்மண-க்ஷத்திரிய ஆதீஜ்ஞானி ஹோஜானே பரபீ அபநு வ்யவஸாய காதே ரஹே, இஸீமே உனகா ஔர ஸமாஜகா கல்யாணஹை, இஸவ்யவஸ் தாமே வாரவார கடபட கரநு யோக்ய நஹீஹை. "தேலிகா காம தம்போலீகரே தைவ நமாரே ஆயேமரே." இஸப்ரசலித லோகோக் திகா பாவார்த்தபீ யஹீஹை" (கீதா ரஹஸ்யம் இநதிபாஷை புத்தகம் பக்கம் 334-495-496.)

(திலகருடைய டிை வாக்கியங்களின் தமிழ்:-)

* "ஸ்வதர்ம"மென்பது ஒரு தொழிலாகும். அது ஸ்மிருதி காரர்களால் நான்கு வருணங்களை ஏற்படுத்தியதை அனுசரித்து ஒவ்வொருத்தருக்கும் சாஸ்திரவாயிலாக விதிக்கப்பட்டிருக்கிறது ஸ்வதர்மம் என்பதற்கு "மோக்ஷதர்மம்" என்னும் பொருள் இல்லை. எல்லோருடையவும் நன்மைக்காகவே நான்கு வர்ணங்களை குண கர்மவிபாகத்தினுல் (கீதை 18-41) சாஸ்திரகாரர்கள் ஏற்படுத்தி அமு

* ஸ்வதர்மம்:— மோக்ஷத்திற்குரிய நெறியெனச் சில பெரியோர்கள் சொல்லியிருக்கிறூர்கள், இக்கூற்று திலகரால் மறுக்கப்படுகிறது.

லுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகையால் பிராமணன், க்ஷத்திரியன் முதலியவர்கள் * ஞானிகளானாற்கூட தங்கள் குலத்தொழிலைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். இதனால் அவனுக்கும் அவன் குலத்திற்கும் நன்மையுண்டாகும். இந்த வியவஸ்தையைகுறித்து அடிக்கடி கிளர்ச்சிசெய்துகொண்டிருப்பது முறையாகாது. "தேலீகா, காமதம் போலிகரே தைவநகரே ஆபேமரே." ("எண்ணெய் விற்போன் தொழிலை வெற்றிலை விற்போன் சேய்தால் தைவம் கோல்லாமலே தானே சாவான்.") என்னும் ஆன்றோர் வாககின் கருத்தும இதுவே யாகும்." திலகரின் கீதாரகசியம் இந்திபாஷைப் புத்தகம் பக்கம 334-495-496. பாருங்கள்.)

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்துமதம் ஒருவகையிலும் நன்மை செய்வதில்லையானாலும் பலவகையிலும் தீமை புரிவதைக் கண்டு மனம புழுங்கி எவ்வாறேனும் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதே பிறவியப்பயனெனககண்டு அதற்கெனவே புத்தமதத்தில் புகுந்து துறவுபெற்று வெகு காலமாக லக்ஷ்மணபுரியில் வாசம்செய்துவரும் மகாத்மா "ஸ்வாமி போதானந்தஜீ மஹா ஸ்தவிர" என்பவர் எழுதியிருக்கும் "மூல பாரதவாஸீ ஔர ஆர்ய" (பாரதத்தின் பழங்குடிகளும் ஆரியர்களும்) என்னும் இந்திபாஷைப புத்தகத்தில் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரைப் பிரித்தாளும் முறையைக்குறித்து மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவையில் சில இதன்கீழ் எழுதுகிறேன்.

பிராமண சபை, பிராமண ஸம்மேளனம், க்ஷத்திரிய சபை, க்ஷத்திரிய ஸம்மேளனம், வைசிய சபை, வைசிய ஸம்மேளனம் இவை

---

* சூத்திரன் பிரிமஞானியானாலும், பிராமணனுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்பதே திலகர் கருத்து.

நடை பெறுகின்றன. ஆனால் இந்துக்களின் தொகையை அதிகப் படுத்திக் காட்டித் தன்னலத்தைச் சாதிப்பதற்காகமட்டும் இந்து மதத்தினராகக் கருதப்படுகின்ற சூத்திரர்களின் சங்கமோ சம்மேளனமோ நடைபெறுவதில்லை. காரணம் பார்ப்பனரின் பிளவுபடுத்தும் தந்திரமே யாம். எப்படி யென்றால் "நாயி" (நாபிதன்) என்னும் ஜாதியானிடம் சென்று நீங்கள் "நியாயி பிராஹ்மண"ர்களல்லவா? "தேலி" யின் சேர்க்கை உங்களுக்குத் தகுமா? அவர்கள் மஹா சூத்திரர்களாச்சே என்பார்கள். (தேலி=எண்ணெய் வாணியன்) "தேலி"யைப் பார்த்து; நீங்கள் தைல வைசியர்கள் என்னும் "ஸாஹு" வைசியர்கள். "தம்போலி"யின் கூட்டுறவு உங்களைத் 'தாழ்மைப் படுத்தும்' அவர்கள் "வர்ண சங்கர" ஜாதியினர். (தம்போலி=வெற்றிலை விற்போன்.) தம்போலியை அணுகி "சௌரஸீயா ப்ராஹ்மண"ராகிய நீங்கள் "வஜ்ர சூத்ர"ராகிய "கலவார்" ஜாதியினரோடு நட்பு வைத்துக் கொள்ளலாகாது. (கலவார்=கள்ளெடுப்போர்.) கலவார் குலத்தினைக் கண்டு நீங்கள் "ஹைஹய க்ஷத்திரியர்கள்" நீங்கள் "அஹீர்" ஜாதியானிடம் உறவாடலாகாது. அவர்கள் மஹாபாபிகளென்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. (அஹீர்=இடையன்)"அஹீர்", ஜாதியானைக் கண்டு நீங்கள் ஆனந்த கந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் குலத்திற் பிறந்த யாதவ க்ஷத்திரியர்களாயிருக்க காட்டில் செம்மறியாடுகளை மேய்த்துத் திரியும் "கடரி" ஜாதியானிடம் எவ்வாறு உறவு கொள்ள முடியும். (கடரி=குரும்பர்) அவர்கள் ஜகன்ய சூத்திரர்கள். முறகூறியவர்கள் யாவரும் ஸச்சூத்திரர்கள், இவர்களை பிளவுபடுத்தி ஆளுவதைப் போலவே சக்கிலி, பறையன் முதலிய அஸச்சூத்திரர்களையும் தந்திரப் பேச்சினால் பிரித்தாளுகிறார்கள்."

(மூலபாரதவாஸி ஔர ஆர்ய, பக்கம் 188, 189.)

வாசகர்களே! ஸ்ரீமத் போதானந்த சுவாமிகளின் இக்கூற்று வட இந்தியாவைப் பொறுத்ததாயினும் இதைப்போல் பிரித்தாளும் தந்திரம் நமது தமிழ் நாட்டுப் பிராமணர்களிடத்திலும் பரம்பரையாக இருந்து வருவதை நம்மவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியே இங்கு உதாகரித்தேன்.

மதவிசாரணை ஆறும் அத்தியாயம்

சமாப்தம்.

---

Swami Sivananda Sarasvathi
alias
M. K. KELUNNI NAIR,
Kolalambu Amsam,
Edakkal Taluk P. O. Ponnani,
S. Malabar.

# மதவிசாரணை.

## 7-ம் அத்தியாயம்.

### படைப்பைப் பற்றிய ஆராய்ச்சி.

இவ்வுலகமானது கடவுளால் படைக்கப்பட்டதென்று கிறிஸ்தவர்களும் முஸல்மான்களும் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். இதற்கு மோசே” என்பவர் எழுதிய நூலே ஆதாரம். இவ்வாறே இந்துக்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இதற்கு மனுஸ் மிருதியும் புராணங்களும் வேதங்களும் ஆதாரங்களாக இருககின்றன. ஆயினும் இவைகளில் முரண்பாடுகள் பல காணப்படுகின்றன. மோசையின் சிருஷ்டிக்கிரமத்தை அனுசரித்து மனுஸ் மிருதியும் சில புராணங்களும சிருஷ்டியை ஒப்புக்கொண்டாலும் வேதத்தில் பல விடங்களில் பலவாறாகச் சிருஷ்டியைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற படியால் இந்துக்களின் சிருஷ்டிக் கிரமம் பல முறண்பாடுகளுடன் இருக்கிறது. இந்து மதத்தினராகவே கருதப்பட்டு வருகின்ற சாங்கியர், பௌத்தர், ஜைனர் முதலிய பிரிவினர் உலகத்தைக் கடவுளின் படப்பென ஒப்புகக்கொள்ளுகிறார்களில்லை அவ்வாறே வேதம் கடவுளால் செய்யப்பட்டதென்பதும உடன் படுகின்றார்களில்லை.

அவைதிகர்களுக்கும் * வைதிகர்களுக்கும உலகப்படைபபைப் பொறுத்த விஷயத்தில் தர்ககம் நடந்திருக்கிறது. அவைதிகர்களுள் ஜைனர்களும், பௌத்தர்களும் முக்கிய மாணவர்கள் பௌத்தர்கள் படைப்பைப்பற்றி வைதிகர்களிடம வாதம் பண்ணவில்லை. ஆனால் யாகங்கள் கொடுந்தொழிலென மாத்திரம் சொன்னார்கள ஆகவே படைப்பைக்குறித்து வாதித்த அவைதிகர்கள் ஜைனர்களே யாவார்கள் 196 கோடி வருஷங்களுக்கு முன் கடவுள் உலகத்தைப் படைத்ததாக வேதம சொல்லுகிறது.

* வேதம் கடவுளால் செய்யப்பட்டது என்போர் வைதிகர்கள்.

அவைதிகர்களின் வினா:—

அந்த வேதத்தைச் செய்தது யார்?

விடை:—

196 கோடி வருடங்களுக்கு முன் யாதொரு கடவுள் இக் காணக்கூடிய சூரிய, சந்திர, நட்சந்திர, பூமி முதலியவைகளைப் படைத்தாரோ அதே காலத்தில் அதே கடவுளால் வேதம் திரு வாய் மலர்ந்தருளப்பட்டது. இதற்கு பிரமாணம் வேதமே தான். வேதத்தில் கூறப்பட்டவையாவும் எங்கட்குப் பிரமாணம்தான். அதில் முக்கிய விஷயங்களாவன:— "சாதுர்வர்ணம் த்ரயோ லோகாஸ் சத்வாரஸ்சாஸ்திரமா! ப்ருதக் பூதம் பவ்யம் பவிஷ்யம் சஸர்வம் வேதாத்ப்ரகீர்த்திதம்." (மனு அத்தியாயம் 12. சுலோகம் 97.)

பொருள்:— பிராமணர் முதலிய நான்கு வர்ணங்கள், பூமி சுவர்க்கம் முதலிய மூன்று லோகங்கள், பிரமசாரி முதலிய நான்கு * ஆச்சிரமங்கள், இறந்த காலம் முதலிய மூன்று காலங்கள் இவை யாவும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

வினா:—

வேதத்தில் யாகம் சொல்லப்பட்டுள்ளதே. அது உயிர்க்கொலை யினால் நிறைவேற்றவேண்டியதன்றோ?

விடை:—

யாகத்தில் செய்யப்படும் கொலை கொலையாகமாட்டாது. இதற்கு வேதமே பிரமாணம்.

வினா:— யாகத்தினால் மக்கள் அடையப் பெறுவது யாது?

விடை:—சுவர்க்கம்.

---

* நான்காவது ஸன்னியாஸ ஆச்சிரமம். இதை உபனிஷத்துககளில் கூறியிருக்கிறது. உபனிஷத்துக்களை வேதமாகக் கொள்ளாதவர் களுக்கு வேதத்தின்படி ஆச்சிரமங்கள் மூன்றுதான்.

வினு:—உயிர்க்கொலை செய்து யாகம் நடத்துவோன் சுவர்க்கமடைவானென்றால் கொலை, முதலிய பாதகங்களை ஒழித்து ஜீவகாருண்ய சீலர்களாய் மக்களைப் பிறப்பினுல் உயர்வு தாழ்வற்றவர்களாய்க் கருதிவரும் சமயத்தினர்கள் அடையும் பேறு எதுவென்று உங்கள்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது?

விடை:—வேதம் ஸ்மிருதி இவைகள் எங்களுக்கு பிரமாணம். அவைகளைப் பின்பற்றி ஒழுகுவோர் சுவர்க்கத்தை அடைவர். ஏனையோர் நாஸ்திகர்கள். அவர்களுக்கு நரகம்தான் கதி.

வினு:—உங்கள் சமயத்தைப் பின்பற்றி ஒழுகுவதற்கு மக்கள் யாவரும் சமஉரிமையுடையவரா?

விடை:—இல்லை பிராமணர்கள் உயர் குலத்தினர். அவர்களைப் படைக்கும்போதே பிரமதேவன் தனது முகத்தினின்று படைத்திருக்கிறுன் க்ஷத்திரியர் இரண்டாவது வருணத்தினர் அவர்களைப் புஜத்தினின்றும தோற்றுவித்தான். வைசியர் மூன்றுவது வர்ணத்தினர் அவர்களைத் துடையினின்றும உண்டாக்கினுன். சூத்திரர் கடையர், அவர்களைப் பிரமதேவன் தனது கால்களினின்றும் படைத்தார். இந் நான்கு வர்ணத்தினரில் பிராமணன் உலகிற்கு அதிபதியும் மற்றையாவரும முன்னவருக்கு பின்னவர் தாழ்ந்தவரும சூத்திரன் முற்றிலும தாழ்ந்தவனுமாவான். தற்சமயம் பராசரஸ்மிருதி முதலிய சில ஸ்மிருதியின்படி க்ஷத்திரிய வைசிய வர்ணக்கள் இல்லையெனப் பெறுவதால் பிராமணர் தவிர ஏனையோர் யாவரும் சூத்திரர்களாவார்கள். பிராமணர்களுக்கு பணிவிடை செய்வதே சூத்திரர்கள் பிறவி எடுத்ததன் பயன்.

வினு: —நீங்கள் சொல்லுகிறபடியானுல் பிராமணர்களாகிய உங்களைத்தவிர ஏனையமககள் யாவரும பரமபரை பரமபரையாக அடிமைபபட்டுக்கொண்டே வரவேண்டும. மனிதனுக்குரிய மேன்மை யாதொன்றும் அடைய உரிமையில்லாமல் இறந்துபடவும் வேண்டியதுதானே, இது அநியாயமன்றோ?

விடை:—சூத்திரர்களைப் படைத்த பிரமதேவன் தான் வேதத்தை யுண்டாக்கினுர். அதிலும அதன் கருததையுணர்ந்த ரிஷிகளால்

எழுதப்பட்ட ஸ்மிருதிகளிலும் சூத்திரனுக்கு உயர்வைக் கொடுக்க லாகாதெனவும் வற்புறுத்தி வேலை வாங்க வேண்டுமென்றும விதித்திருப்பதால் அதில் அநியாயமொன்றுமில்லை.

வினு:—உங்கள் வைதிகமதப்படி உலக படைப்பை அறிய விரும்புகிறோம்.

விடை:—"வேதா நானுவயம் ஜானுப்ரவோ சாமவி
பன்னியா..................... ........அமிர்தபந்தவ:

(ரிக்வேதம் மண்டலம் 10 சூகதம் 72.)

பொருள்:—பிரமணஸ்பதியாகிய தச்சன் தேவதைகளைச் செய்தான் தேவதைகளுடைய முன் யுகத்தில் இன்மையினின்றும் உண்மை தோன்றின. அவ்வுணமையினின்று திசைகளும் பிறகு உத்தானபதமும் தோன்றின அதினின்று பூமி உண்டாயிற்று. தக்ஷன் என்பவன் தோன்றினன். அவனிடத்திலிருந்து "அதிதி" தோனறினுள் அந்த அதிதியினின்றும் இறவாத் தேவர்கள் பிறந்தார்கள்.

வினு:—சிருஷ்டிககிரமம் இதோடு முடிந்ததா?

விடை:—இல்லை. வேறு விதமாகவும் வேதத்தில் சொல்லப் பட்டுள்ளது.

"ருதம ச ஸத்யம் சா பித்தாத்தபஸோ அத்யஜாயதாததோ ராத்ர்யஜாயதா"..........................1—3 ப்ரதிவிம்சா
ந்தரிக்ஷமதோஸ்வ: (ரிக்வேதம மண்டலம் 10 சூகதம் 191)

பொருள:—கடவுள் தபம் செய்தார், அதனின்று ஸத்தியம் உண்டாயிற்று. அதன் பின் இருள்தோன்றின. பின்னர் ஸமுத்திரம் தோன்றிற்று. அஹோராத்ரம், தோன்றின (அஹோராத்ரம் = இரவும பகலும்) பின் பன்னிரணடு மாதங்களையுடைய வருடம் தோன்றிற்று அப்படியே தாதாவானவர் சூரிய சந்திரர்களை முன்போலவே நினைத்தார். அவை உற்பத்தியாயின ஆகாசம் பூமி பாதாளம் அந்தரிக்ஷம் இவைகளை நினைததார். அவையும் தோன்றின.

வினு:—சிருஷ்டிக்கிரமம் இன்னும் இருக்கிறதா?

விடை:—வேதத்தில் எத்தனையோ விதங்களாக சிருஷ்டிக்கிரமங்கள் இருக்கின்றன. அவையுள் சில வருவாறு:—

"அபோ வா இதமக்ரே ஸலில மாஸீத் தேனப்ராஜாபதி ரச்ரா மயத்..................1-8 ப்ரதிவ்யை ப்ரதிவித்வம்.

## (தைத்திரீய ப்ராஹ்மணம் அஷ்டகம் 1)

## அத்தியாயம் 1. (அங்கம் 3.)

பொருள்:—இது முதன் முதல் நீராகவே இருந்தது. பிரஜாபதி இது எப்படியிருக்கிறதென நினைத்தார் ஓர் தாமரையிலையைக கண்டார். அதன் தண்டு வழியாக நீரில் மூழ்கி தாமரையிலைக்கும் தண்டிற்கும ஆதாரமாயிருக்கிற பூமியைக் கண்டு அதைப் பெயர்த்தெடுத்து மேலே தாமரையிலையில் வைத்தார். ஆதலால் இதற்குப் பூமியெனப் பெயர்.

மற்றொருவகைச் சிருஷ்டியாவது:—

"ஆபோ வா இதமக்ரே ஸலிலமாஸீத் தஸ்மின் ப்ராஜாபதிர் வாயு பூத்வா அசரத்ஸ...............5 பாட்டு, ஸாப்ரதிவ்யபவது தத் ப்ரதிவ்யை ப்ரதிவித்வம. (தைத்திரீயம் 7-1-5)

பொருள்:—முதன் முதல் நீர், பின்னர் காற்று, பிறகு பூமி, இவை தோன்றின.

மற்றொரு சிருஷ்டிக்கிரமமாவது:—

"நாஸதாஸீ.ந் நோஸதாஸீத் ததானீம் நாஸீத் ரஜோ நோவ்யோமா பரோயது"................10 பாட்டுகள் ஸ்வதா அவஸ்தாப்ரயதிப் ரஸ்தாத்." தைத்திரீயப்ராஹ்மணம் கண்டம் 2 (ப்ரபாடகம் 8. அத்தியாயம் 9.)

பொருள்:—முதல் சிருஷ்டி அழிந்துபோனபின் மறுபடியும் சிருஷ்டி உணடாவதற்கு முன் ஸத்து அஸத்து, ஆகாசம் தண்ணீர்

பூமி, மிருத்யு, அமிருதம், ராத்திரி, தினம், சூர்யன், சந்திரன் முதலிய ஒன்றுமே இல்லை. பிரமம் ஒன்றே இருந்தது. அது உலகைப்படைக்க விருப்பங்கொண்டது. அதைப்போல் படைப்புத் தொழிலைச் செய்தது.

"தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸம்பூத: ஆகாசாத் வாயு: வாயோரக்நி:...............அன்னாத் புருஷ:

(தைத்திரீய உபநிஷத்து வல்லி 2. அனுவாகம் 1.)

பொருள்:—ஆத்மாவினின்று ஆகாசமும் அதினின்று வாயுவும், அதினின்று அக்நியும் அக்நியிலிருந்து ஜலமும் ஜலத்திலிருந்து பூமியும் அதினின்று ஒஷதி (தானியம் செடிமுதலியன) களும அதிலிருந்து அன்னமும் அன்னத்தினின்றும் மனிதன் இவை தோன்றின.

"கோ அத்தா வேத க இஹப்ரவோசத் குத ஆஜாதா குத: இயம் விஸ்ருஷ்டி:...............யதோத்யாவாப்ருதிவீ நிஷ்டதக்ஷ."
(தைத்திரீயப் ராஹ்மணம் காண்டம் 2, ப்ரபாடகம் 8)

பொருள்:—உலக சிருஷ்டியாகிய இது, யாரால், எதனின்று, எதன் பொருட்டு ஏற்பட்டது? இவ்வுண்மையை யாரே அறிவார்? இதை விவரித்துக்கூற யாரே தக்கார்? இதன் பின்னரன்றோ தேவர்களும தோன்றினர்? ஆகவே இந்த சிருஷ்டியைச் செய்தவன் யாவன்? எதிலிருந்து ஆகாசமும பிருதிவியும தோன்றின. அந்த செடி எததகையது? எந்த காட்டில் உள்ளது? இதை அறிந்தோர் யாவர்? (இவ்வீ) யாவற்றிற்கும காரணம் பரமாகாசத்தில் இருக்கிறதாகச் சொல்லுகின்றார்களே. அதற்குத் தெரியுமென்றாலோ அவ்வாறும இல்லை. ஆகையால் உலகசிருஷ்டியைக் குறித்து ஒருவராலும ஒன்றும கூற முடியாது.

வினா:—ஸ்ருஷ்டிக் கிரமத்தைக் குறித்து யாராலும் அறிந்து கொள்ள முடியாதென்றால் அது கடவுளால் செய்யப்பட்டது என பதின் பொருள் யாது? அன்றியும் கடவுள் பிராமணர் முதலிய

நான்கு வர்ணங்களைச் சிருஷ்டித்து அவற்றுள் நான்காவது வர்ணத்திற் பிறந்த சூத்திரர்களைக கடையர்களாக்கியதோடு சிருஷ்டியானது உண்மையில் அவருடையதாயிருநதால் அவரால் படைக்கப்பட்ட உயிர்கள் யாவையும் (ஆடு, மாடு, குதிரை, பாம்பு, மனிதன் முதலியன) "யாக" மென்ற சடங்கின் பெயரால் கொலை செய்து தின்னச்சொல்லியிருககிறுரே இது முறையா? கடவுளை இவ்வாறு கூறும் வேதத்தைச் செய்தாரென்றுல் அவரைக கருணையுடையவரென்பது எப்படி?

வைதிகர் விடை:—

பிராமணர்களாகிய எங்களுக்குச சர்வாதிகாரமும் வேதம் ஸ்மிருதி இவைகளால் கொடுக்கப்பட்டுள்ளது. கடவுளை யாகத்தில் உயிர்க் கொலையை விதிததிருக்கிறுர் அவரைக் கருணாநிதியென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஹேதுவாதத்தினுல் யாகத்தையும் வேதத்தைச் செய்த கடவுளின் கருணைத்திறத்தையும் மறப்பது நாஸ்தீகச் செயலாகும். முற்காலத்தில் (வைதீக அரசர்காலம) நாஸ்தீகர்களுக்குத தக்க தண்டனை கிடைத்திருக்கிறது. அதனுல் நாஸ்தீகப் பரம்பரை அடங்கியிருநதது ஆகையால் நாஸ்தீகப் பிரசாரஞ் செய்துபிரமத்துவேஷத்தைஏற்றுக்கொள்ளவேண்டாம் ப்ராஹ்மணோ மமதைவதம்" என்றல்லவோ கிருஷ்ணபரமாத்மாவும் திருவாய் மலர்ந்தருளினுர். இவ்வுண்மையை நமபி உஜ்ஜீவியுங்கள்..

வினு:—"ப்ராஹ்மணன்" என்றுல் பிரமத்தையுணர்ந்தவன் எனச்சில சன்னியாசிகளும் வித்வான்களாகிய கிருகஸ்தர்களும் சொல்லுகிறுர்களே? "ப்ராஹ்மணோ மமதைவதம்" என்று கிருஷ்ணன் சொன்னதாகச் சொன்னீர்களே. அது பிரமத்தை யுணர்ந்த ஞானிகளைக் குறித்துதானு? அல்லது இக்காலத்தில் பிராமணர் என்று சொல்லிக்கொண்டு அடுத்தவன் குடியைக் குட்டிச சுவராக்கும் சில பேடிகள் திரிகின்றுர்கள்? நேராக முகஸ்துதி பேசுவார்கள் மறைமுகமாக உபகாரிக்கும அபகாரமே செய்வார்கள். தாங்கள் பிரமதேவன் முகத்தினின்றம் தோன்றினவர்கள் என்ற சாரமற்றவார்த்தைகளைச் சொல்லுவதன் மூலம் தங்கள் பரம்பரையார் முற்காலத்தில் அறிவிலி அரசர்களின் அருளால்

சம்பாதித்த வீண் பெருமைகளை என்றென்றைக்கும் நிலைநிறுத்த ஆசைகொண்டிருக்கிறார்கள். பாம்பானது விஷப்பல் பிடுங்கப்பட்ட பின்னும் படமெடுத்துக்கொண்டு அடுத்தவரை பயமுறுத்துவது போல் ஆங்கில ஆட்சியால் இவ்விஷமிகளின் அக்கிரமம் ஒடுக்கப் பட்டுவிட்டபோதிலும் தங்களாலானவரைக்கும் படாடோபம் காட்டி மக்களை ஏய்க்கப்பார்க்கிற இவர்களைப் பார்ப்பார்கள் என்றும் சொல் வதுண்டு அத்தகையவர்களைக் குறித்ததா? இவ்விருவகையினரில் "ப்ராஹ்மணோ மமதைவதம" என்னும் சொல் யாரைப் பொருட் படுத்தும்?

விடை:—ஹரி! ஹரி!! கஷ்டம்!!! கஷ்டம்!!!! பிராம்மணர்கள் பிரம் மதேவனால் சிருஷ்டிகாலத்திலேயே தன் முகத்தினின்றும் தோற்று விக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பரம்பரையார்கள் நல்லொழுகக மோதிய வொழுக்கமோ உடையவர்களா யிருந்தாலும் ப்ராஹ்மணர் கள்தாமென்றும் அவர்கள் யாவராலும் வழிபடத்தக்கவர்களென்றும் வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறப்பட்டுள்ளது. அன்றியும் சன் னியாசாச்சிரமம் பிராமணருக்கே உரித்தானதாகையால் அவர்களைப் "பிராமணோமமதைவத்தம" என்னும் சொல் பொருட் படுத்தத்தான் செய்யும். ஆனால் இக்காலத்தில் சூத்திரர் காவித்துணியைக் கட்டிக் கொண்டு தங்களைச் சன்னியாசிகளெனக் கூறிக் கொள்ளுகிறார்கள். இவர்களின் கூற்று பொருளற்றதேயாம். உண்மையில சன்னியாசாச் சிரமம தங்கள் குலத்தினருக்கில்லை யென்பது இவர்களுக்குத்தெரியும் ஆகையால்தான் பிராமணரைக்கண்ட மாத்திரையில் சுவாமி! சுவாமி! யென மரியாதையாகவே அழைபபார்கள். நாங்களும் ஆசீர்வாத முறையில் இடதுகையைச் சிறிது உயர்த்திப் * பிரத்தியபி வாதனம் பண்ணுவதும் வழக்கம்.

வினா:—வேதத்தைக் கடவுள் எப்படி உண்டாக்கினார்?

விடை:—"தஸ்மாத் யஜ்ஞாத ஸர்வ ஹுதரிச ஸாமானி ஜஜ் ஞிரே சந்தாம்ஸிஜஜ்ஞிதஸ்மாத் யஜுஸ்தஸ் மாதஜாயத".

பொருள்:—அந்த யாகத்திலிருந்து ரிக்வேதம, சாமவேதம், யஜுர் வேதம், சந்தஸ்ஸுகள் முதலியவைகள் தோன்றின."

* ப்ரதயபிவர்தனம் = தன்னை வணங்கினவனை ஆசீர்வதித்தல்.

(யஜுர்வேதம் அத்யாயம் 31 மந்த்ரம் 7.)

"தஸ்மாத்ருசோ அபாதக்ஷன் யஜுர்யஸ்மாத பாகஷன் சாமானி யஸ்ய லோமானி யத்ர வாங்கிரசோ முகம. ஸ்கம்பம தம் ப்ரூஹி கதம: ஸ்விதேவஸ:" (அதர்வணகாண்டம 10 ப்ரபாடகம் 23 அனுவாகம் 4 மந்திரம் 20.)

பொருள்:—கடவுளிடத்திலிருந்து ரிக்வேதமும் யஜுர்வேதமும் சாமவேதமும் ஆங்கிரஸ (அதர்வண) வேதமும் தோன்றின. அவையில் ரிக்வேதம் கடவுளுக்கு மூச்சுக்காற்ருகவும், யஜுர்வேதம் ஹ்ருதயமாகவும் சாமவேதம மயிராகவும் அதர்வண வேதம் முகமாகவும் இருக்கின்றன. ஸ்கம்பம (தூண்) போன்ற அக்கடவுளை அறிந்தவன் யாவன்?

"ஏவம்வா அரே! அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸித மேதத்யத் ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ அதர்வாங்கிரஸ:" (சதபதகாண்டம் 14 அத்தியாயம் 5 ப்ராஹ்மணம் 4,)

பொருள்:—பெரிய பூதமாகிய அக்கடவுளுக்கு ரிக்வேத முதலிய நான்கும் மூச்சுக்காற்றெனவறிக.

இத்தகைய பெருமை வாய்ந்த வேதத்தையும் அதைச் சார்ந்த ஸ்மிருதிகளையும் மற்றும் மறுப்பவர்கள் "நாஸ்திகர்கள்" என்பதும் அவர்களைப் புறக்கணிக்க வேண்டுமென்பதும் எங்கள்முன்னோர்களின் துணிபு. அதை அனுசரித்தே நாங்கள் நடந்து வருவோம்.

வினு:—வைதிகமதப்படி கடவுளின் இலக்கணம் யாது?

விடை:—"யஸ்ய பூமி ப்ரமாந்த ரிக்ஷமுதோதரம் திவம் யசக்ரே மூர்த்தானம் தஸ்மை ஜ்யேஷ்டாய ப்ரஹ்மணே நம:"

"யஸ்ய சூர்யஸ் சக்ஷுஸ் சந்த்ரமாஸ்ச புனர்ணவ: அக்நிம் யஸ்சக்ர ஆஸ்யம் தஸ்மை ஜ்யேஷ்டாய ப்ரஹ்மணே நம:"
"யஸ்ய வாத ப்ராணுபானௌ சக்ஷுரங்கிரஸோ பவன் திசோ யஸ்சக்ரே ப்ரஜ்ஞானீ தஸ்மை ஜ்யேஷ்டாய ப்ரஹ்மணே நம:",

அதர்வணவேத ஸம்ஹிதாகாண்டம் 10 ப்ரபாடகம் 23, அனுவாகம் 4 மந்த்ரம் 32, 33, 34.

பொருள்:—எவனொருவனுக்கு கால் பூமியும அந்தரிக்ஷம் (ஆகாசம்) வயிறும் தலை நக்ஷத்திரலோகமுமாக இருக்கின்றதோ அத்தகைய பெருமை பொருந்திய பிரமத்திற்கு நமஸ்காரம்.

எவனொருவனுக்கு சூரிய சந்திரர்கள் கணகளாகவும அக்கினி வாயாகவும் இருக்கின்றதோ பெருமை பொருந்திய அந்தப் பிரமத்திற்கு நமஸ்காரம்.

"அண்டத்திலும் பிண்டத்திலும் இருக்கின்ற வாயுவானது எவனுடை மூச்சுக்காற்று யிருக்கின்றதோ ஒளிகள் யாவும் எவனுடைய கண்ணொளியோ எல்லாச் செயல்களும் எவன் செயலோ அத்தகைய பெரிய பிரமத்திற்கு நமஸ்காரம்.

கேட்டீர்களா? கடவுளின் பெருமையை பகவற்கீதை 11-ம அத்தியாயத்திலும் மற்ற புராணங்களிலும் "விராட்" என்னும இக்கடவுளை வருணித்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விராட் புருஷனே "கிருஷ்ணபரமாத்மா"வாக அவதாரஞ்செய்து பாரதயுத்தத்தில் அர்ச்சுனனை நிமித்தமாகக் கொண்டு துஷ்ட நிக்கிரகத்தினால் பூமிபாரத்தை ஒழித்து சிஷ்டர்களைக் (ப்ராஹ்மணர்களும அவர்களின் அடிமைகளும் சிஷ்டர்கள்) க்காப்பாற்றி "ப்ராஹ்மணோ மமதைவதம்" என்னும் தன் வார்த்தையை அனுஷ்டித்து காட்டினார்.

வினா;—கடவுள் அழியுந் தன்மையினரா? அழியாத் தன்மையினரா? அழியாத் தன்மையினராயின் நீர் சொன்ன லக்ஷணம் பொருந்தாது. இவ்விலக்ஷணத்தை ஜைனர்கள் மாற்றமுடியதாயும் பௌத்தர்கள் அழிந்து போவதாயும் வேறு சிலர் "மாயை" யென்றும் சொல்லுகின்றார்கள். எவர் கூற்றை ஆதாரமாகக் கொண்டு பார்க்கினும உங்கள் கடவுளுக்கு உங்கள் இலக்கணப்படி அழியாத்தன்மை சித்தமாகாது.

விடை:—ஜைனர்களும் பௌத்தர்களும் எங்கள் கடவுளிலக்க ணப்படிக்குள்ள பொருட்களை மாற்ற முடையவை யென்றும் அழி பவை யென்றும்சொல்லி இரண்டாயிரத் தைஞ்ஞூறுண்டுகளே ஆகின் றன. ஆனால் கடவுள் இலக்கணத்தை எங்கள் ரிஷிகள் பல கோடி வருஷங்களுக்கு முன் அனுபவத்தில் அறிந்து கூறி யிருக்கிறார்கள். ஆகவே எங்களுக்கு ரிஷிகளின் வாக்கே பிரமாணம அன்றியும் "மாயை" என்று சொன்னவர் ஸ்ரீசங்கராசார்ய சுவாமி என்னும் அத் வைத மதஸ்தாபக ராவர். அதவைதமாவது பௌத்த மதத்தின் ஒரு வகை மாறுதலேயாம. அம்மதத்தை ஸ்தாபித்துப் பிரசாரம செய்யா விட்டால் அககாலத்தில் வைதிகமதத்தை நிலை நிறுத்தி வருணாச்சிரம தருமத்தை ஸ்தாபிகக முடியாதெனக் கண்டே சுவாமிகள அவ்வாறு செய்துள்ளார். அவரும வியவஹாரத்தில் எங்கள் மதத்தையே ஒப் புக்கொண்டுள்ளார். சூத்திரனுக்கு அவர் மதத்தில் அதிகாரம் ஒன் றும் இல்லாததே அவர் எங்கள் பக்ஷத்தினரென்பதை உறுதிப்படுத்து கின்றது. பாமார்தததத்தில் பிரமம ஒன்றே உளது என்று சொல்லா விட்டால் "ஜகத் குருத்வ"மும் அதன் வழியாய் மக்களை முக்கியமா கப பார்ப்பனரல்லாத "வைதிக இந்துக்கள்" என்று பொருளற்ற முறையில் தங்களை நினைத்துககொண்டிருப்போரை ஏய்த்து அடிமைப் படுத்தவும் ஆதாயமடையவும் முடியாதன்றோ. பிரமம் சந்தர்ப்பத்திற் குத்தக்கபடி நிற்குணமாகவும் சகுணமாகவுமமாற்றிப்பிரமாணமெழுதி வைத்திருப்பதையும அவைகளை உபநிஷத்துக்க ளென்ற பெயருடன் வேதத்தில் புகுத்தி வேதத்தின் தலை (சிரசு) யென்றும "ஞானசாத்திர மெனறும்" கூறி யிருபபதையும் அவைகளை வேதமாக "மீமாமஸகர்" கள் ஒப்புககொள்ளாமல் ஒதுககித தள்ளி யிருப்பதையும அவ்வா றிருந்தும இருகக்ஷியினரும வைதிகராயிருந்து வருவதையும் கவனிக் கும ஆராய்ச்சியாளருக்கு இவ்வுண்மை விளங்காமற் போகாது.

வினா:—"யோக சூத்திரம" உங்களுக்கு உடன்பாடுதானா?

விடை:—ஆம்.

வினா:—"க்லேச கர்மவிபாகாசயை ரபராம்ருஷ்ட: புருஷ விசே ஷஈச்வர:," (சுகதுக்கம் புண்ணிய பாபாதிக ளின்றும் வேறாகநிற்கும்

புருஷவிசேஷம் ஈசுவரன்) என்று யோக சூத்திரத்தில் கடவுளி லக்க ணம கூறப்பட்டுள்ளதே? இதற்கென்ன சொல்லுவீர்கள்.

விடை:—சந்தர்ப்பத்திற் கேற்றபடி நடந்து கொள்ளுவோம். அதாவது சில பாகங்களை ஏற்றும் சில் பாகங்களை ஒதுக்கியும எவ்வா றுனல் சிருஷ்டி கர்த்தாவான ஒரு கடவுளை நிலை நிறுத்த முடியுமோ அவ்வாறு செய்வோம. எங்கள் முடிவை யுகதி வாதத்தால் யாரே னும் மறுத்தால் அவர்கள் மறுபடியும் எங்கள் சபையில் தலைகாட்ட முடியாதபடிககு தகக ஏற்பாடுகளும் செய்வோம். அன்றியும் "தேன விஞத்ருணயபி நசலதி ("அவனன்றி ஓரணுவு மசையாது") என்னும் சொல்லினல் "பக்தர்கள்" என்னும பார்ப்பனரல்லா மடச்சாம்பிரா ணிகளை ஏய்த்து நாங்கள் (பிராமணர்கள்) அவர்களின் சமூகத்திற்குச் செய்து வரும அநீதிகளை ஆராய்ச்சி பண்ண வொட்டாமல் அடக்கி விடுவோம். இவ்வாறே ஆரியர்களாகிய நாங்கள் எங்கெஙகுகுடியேறி ஞேமோ அந்தந்த நாட்டுக குடிகளைத் தநதிரததிஞல் எங்களுக்கு அடிமைப்படுததி யுள்ளோம. உதாகரணமாக "மோசை"யின சிருஷ் டிகர்மத்தைக கவனியுங்கள.

விஞ:—"மோசையின்" சிருஷ்டிக்கிரமம் எப்படி?

விடை:—கேட்பீராக.

1. "ஆதியிலே தேவன் வானததையும பூமியையும சிருஷ்டித் தார்"

2. "பூமியானது ஒழுஙகின்மையும் வெறுமையுமா யிருந்தது. ஆழத்தின்மேல் இருளிருநதது. தேவன் ஆவியானவர் ஜலத்தில் அசைந்து கொண்டிருந்தார்."

3. "தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது, என்று சொன் ஞர் வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். வெளிசசத்தையும இருளையும் வேருகப் பிரித்தார்."

---

* இரதுக்களில் ஒரு வகையினா; இக்காலத்தில் செய்கையில் மீபாம் சைக கொள்கையும் சொல்லில் வேதாந்தமும் சங்கா மதத்தினளை கடைப் பிடித்திருக்கிருர்கள்.

4. "தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்றும் இருளுக்கு இரவென்றும் பெயரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதல் நாளாயிற்று.

5. "பின்பு தேவன் நீரின் நடுவில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும அது ஜலத்தில் நின்றும ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.

6. "தேவன் ஆகாய விரிவை உண்டு பண்ணி ஆகாய விரிவிற்குக கீழிருககிற ஜலததிற்கும் ஆகாயவிரிவுக்கு மேலிருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார். அப்படியே ஆயிற்று."

7. "தேவன ஆகாயவிரிவிற்கு வானமெனப் பெயரிட்டார். சாயங்காலமும விடியறகாலமுமாய் இரண்டாம நாளாயிற்று."

8. பினபு தேவன் வானத்தின் கீழிருககிற ஜலம் ஓரிடத்தில் சேரவும் தரை காணக்கடவது என்றார் அப்படியே ஆயிற்று.

9. தேவன தரைக்குப் "பூமி" யென்றும ஜலத்திற்குச் "சமுத்திர" மென்றும பெயரிட்டார். தேவன் அது நல்லதென்று கண்டார்.

10. "அப்பொழுது தேவன் பூமியானது புல்லையும் விதையையும் பிரசவிககும பூண்டுகளையும பூமியின மேல் தங்கள் தங்கள் ஜாதியின்படி கொடுக்கும கனி விருக்ஷஙகளையும் முளைப்பிக்ககடவது என்றார் அது அப்படியே ஆயிற்று. இன்னும் சில முளைக்கச் செய்து சாயங்காலமும் விடியற்காலமுமாய் மூன்றும் நாளாயிற்று."

11. "பிற்பாடு தேவன் பகலுக்கும் இரவுக்கும வித்தியாசம் உண்டாககத் தக்கதாக வானம எனற ஆகாய விரிவிலே சுடர் உண்டாகக கடவது. அவைகளை அடையாளங்களுக்காகவும காலங்களையும நாடுகளையும குறிப்பதற்காகவும் இருக்ககடவது என்றார் அதோடு பூமியின்மேல் பிரகாசிக்கவும் வானத்தில் சுடராக இரு என்று சொனனார் அப்படியே இருந்து விட்டது"

"பகலை ஆளக்கூடிய சுடர் இரவை ஆளக்கூடிய சுடர் நக்ஷத்திரங்களையும் உண்டாக்கினார்.

"தேவன் அது நல்லது என்று கண்டார் பகலும் இரவும் சேர்ந்து நான்காம் நாளாயிற்று."

20. "நீந்தும் ஜீவஜந்துக்களேயும் பூமியின்மேல் பறக்கும் பறவைகளேயும் ஜலமானது திரளாய் ஜனிப்பிக்கக் கடவது என்றார்."

21. "தேவன் பெரிய மச்சங்களேயும் ஜலத்தில் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜனிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழ் ஜந்துக்களேயும சிறகுள்ள பல ஜாதி பக்ஷிகளேயும் சிருஷ்டித்தார்."

"தேவன் அது நல்லது என்று கண்டார் தேவன் ஆசீர்வதித்துப் பலுகிப் பெருகி சமுத்திரத் தண்ணீரை நிரப்புங்கள். பறவைகள் பூமியில் பெருககககடவது என்று சொன்னார் இரண்டு வேளேயும சேர்ந்து ஐந்தாம நாளாயிற்று."

24. "பின்பு தேவன் காட்டு நாட்டு மிருகங்களே வேறு வேருகச் சிருஷ்டிககச் சொன்னார். அப்படியே ஆயிற்று."

25. "பின்பு தேவன் தமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும மனிதனே உணடாக்குவோமாக. அவர்கள் எல்லா ஜீவிகளேயும் ஆளககடவது தேவன் தேவச்சாயலாகவே ஆணும் பெண்ணுமாக மனிதனேச் சிருஷ்டித்தார். தாங்கள பலுகிப்பெருகிப் பூமியை நிரப்பி 29, 30, 30, எலலா வஸ்துக்களேயும நடப்பன ஊர்வன பறப்பன வாகிய எல்லா ஜீவிகளேயும புசித்து எல்லாப் பூண்டு செடிகளேயும் புசிக்கக கட்டளேயிட்டார் * அப்படியே ஆய் விட்டது."

இதுதான் "மோசை"யின் சிருஷ்டிககிரமம. இதைக் கிருஸ்தவர்களும யூதர்களும முஸ்லீமகளும ஒத்துக்கொள்ளுகின்றனர்.

---

* பழிபாவத்திற் கஞ்சாப் பார்ப்பனர், "அடுத்தோரை அழிக்கும் அவாந்திரச்சைவர் முதலிய வகுப்பினரைச் சிருஷ்டித்து மக்களே மாக்களாக்கித்துன்புறுத்தும்படிக் கட்டளேயிட்டதாக "மோசை" யின் சிருஷ்டிக் கிரமத்தில் இல்லாதது கிறிஸதவ, இஸ்லாம் சமயத்தினரின் பாக்கியமேயாம்.

"மோசை"யின் கடவுளும் வைதிகர்களின் கடவுளைப்போன்று அருந்தல் பொருந்தல முதலிய விவகாரங்களிலும் சண்டையிலும் ஈடுபடுகின்றவர், ஆடு, மாடு பலி இக் கடவுளுக்கும் இஷ்டம். தன்னை வழிபடுவோரைக் காப்பதும் ஏனையோரை அழிப்பதும மண்மாரி பொழியச் செய்து பகைவர்களின் ஊரை அழிப்பதும் சாபம் கொடுப்பதும வைதிகக கடவுளைப்போலவே "மோசை"யின் கடவுளும் செய்துள்ளார். விவரமாயறிய விரும்புவோர் கிறிஸ்தவர்களின், பழைய நியமம் பார்க்க.

வைதிகர்களாகிய எங்களுக்கு மற்றுமபல சிருஷ்டிக்கிரமங்களும் உள, அவை; விசுவாமித்திர சிருஷ்டி, வசிஷ்ட சிருஷ்டி முதலிய பெயரால் அறியப்படும்.

வின:—அவைகளை விவரமாயறிய விரும்புகிறோம்.

விடை:—புராணத்திலுள்ள பல வகைச் சிருஷ்டிகளில் பிரஹ்மசிருஷ்டியாவது; "ஆதிசேடன்" என்னும் பாம்பு ஆயிரம் தலைகளையுடையது, அதன் தலைகளில உலகம இருக்கிறது. அதன் உடம்பைப் படுக்கையாகக்கொண்டு "விஷ்ணு"வானவர் "லக்ஷ்மி" தேவியுடன் சயினித்துக்கொண்டிருக்கிறார் அப்பாம்பு சமுத்திரத்தில் இருக்கின்றது. சமுத்திரம் "பாதாள"த்தில் உள்ளது பாதாளம் "ஆமை"யின் முதுகில் இருககிறது. அவ்வாமைமை "அஷ்டதிக் கஜங்கள்" என்னும் எட்டு யானைகள் தாங்கிக்கொண்டிருககின்றன, ஆதிசேஷனைத்தாங்கும அவவாமைமையைத் தாங்கா நிற்கும் அவ்வி யானைகள் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டே ஆமையைத் தாங்குகின்றன.

வின:—அவ்வியானைகள் எட்டிற்கும் ஆதாரம் எது?

விடை:...அவைகள் கால்களைக் தொங்கவிட்டுக்கொண்டிருக்கின்றனவென்று சொன்னதை நீர் கவனிக்கவில்லையா.

வின:—எந்தப்பொருளும் ஆதாரமற்ற நிலையில் அந்தரத்தில் சதாகாலமும் நிற்கமுடியாது. ஆகையால் உங்கள் கூற்று யுக்திககும் அனுபவத்திற்கும் முரணாயிருக்கின்றது.

விடை:—இவ்வாறு எங்கள் சிருஷ்டிக்கிரமத்தை மறுப்பவர்களைத் தற்காலத்தில் "நாஸ்திகர்" களென்று மட்டும் நாங்கள் நிச்சயமாய்ச் சொல்லுவோம் எங்களுடைய வார்த்தையைப் பிரமாணமாகக் கொள்ளும் அறிவிலிகளை ஏவி நாஸ்திகர்களாகிய "பிரமத்வேஷி" களுக்கு ஏதேனும் பாடம் கற்பிக்க முடியுமானல் அவ்வாறும் செய்வோம். இது தேசகாலங்களைப் பொறுத்தே இருக்கின்றது. ஆனல் முற்காலத்தில் உம்மைப் போன்ற நாஸ்திகர்களைத் தண்டிக்க க்ஷத்திரிய ராஜ்யம் இருந்தது. கலியின் வன்மையால் "நீசாமஹத்வம்கதா:" என்னும் பிரமாணப்படி தர்மராச்சியம் அழிந்து அதனல் வர்ணச்சிரமமுறைகளும் அதன்படிக்குள்ள உயர்வுதாழ்வுகளும் தலைகீழாயிருக்கின்றன. ஆகையால் "தர்மஸம்ஸ்தாபனர்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" (ஸனதன தர்மத்தை நிலை நிறுத்த நான் அவ்வக்காலங்களில் தோன்றுவேன்) என்னும் பகவத்வசனத்தை நம்பி; விரைவில் அவதரித்து அனரியர்களை அழித்து ஆரியர்களைக் காக்கும்படி பகவானை வேண்டிக்கொண்டபடியே காலங்கழிக்கின்றோம்.

வினு:—ப்ரஹ்மசிருஷ்டி யென்கிறீரே அதன் பொருள் யாது?

விடை:—ப்ரஹ்மசிருஷ்டியென்றல் பிரமதேவனுடைய சிருஷ்டி யென்று பொருள். இதனல் உலகம பிரமதேவனல் படைக்கப்பட்டதென்பதாகிறது.

வினு:—பிரமதேவனைப் படைத்தவன் யாவன்?

விடை:—தாமரைப்பூவினின்றும் தோன்றினன்.

வினு:—பிரமதேவனைத் தோற்றுவித்த தாமரைப்பூவைத் தோற்றுவித்தவன் யாவன்? அல்லது எங்ஙனம் தோன்றிற்று.

விடை:—அது விஷ்ணுவின் நாபியில் இருந்ததென் மட்டும் புராணங்களில் இருக்கின்றதே யொழிய மற்றொன்றும் காணுமையால் உம்முடைய வினுவிற்கு விடையளிக்க எம்மால் முடியாது. ஆனல் சுருதி ஸ்மிருதிகளுக்கு முரணன வினுக்களைக் கிளப்பும் உம்போன்ற நாஸ்திகர்களைத் தண்டிக்க முடியாமையினல் • வருந்துகின்றோம்.

ஆகையால் மேலிலேனும் இத்தகைய கேள்விகளால் வைதிகரின் மனதைப் புண்படுத்தவேண்டாமென்றும் "வைதிகராகிய பிராமணர்" பாம்பைப்போன்று தங்களைத் துன்புறுத்தியவர்களைச் சமயம்பார்த்து அழித்துவிடுவரென்றும் உமக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

ஐயா! வைதிகரே! அநியாயக்காரரின் அடக்குமுறைகள் ஆங்கில ஆட்சியில் செல்லாதென்பதை நீர் நன்கு உணரவில்லையென நினைக்கின்றேன். கேள்விக்குத் தக்கபதில் கொடுக்கமுடியாவிட்டால் அக்குற்றத்தை ஒப்புக்கொள்வதன்றோ முறை. அவ்வாறிருக்க கேள்விகள் நியாயமற்றவை யென்றும் வைதிகர் மனம் புண்படுத்துபவை யென்றும் கூறுவதனால் வைதிகர்களுக்குப் பயந்து அவர்களின் அட்டூழியங்களைப் பொறுத்துக்கொண்டிருக்கும் மக்கள் ஒரு சிலர் கூட இருக்கமாட்டார்கள் என்பதையும் மக்களை மாக்களாக்கிய அப்பேய்மதத்தைப் பாழ்படுத்துவதே கடமையாகக்கொண்டு உழைக்கப் பல அறிஞர்கள் வெளிப்பட்டு வேலைசெய்கிறார்களென்பதையும் உமக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவ்வாறு வைதிகரும் அவைதிகரும் சிருஷ்டிககிர மதத்தைப்பற்றி விவாதித்து முடிவில் வைதிகனை பிரமாணம ஏமாற்றுவித்தையென அவைதிகர் ஒதுக்கித் தள்ளினார். அச்சமயம் மற்றொருவர் குறுக்கிட்டு ஐயா! அவைதிகரே உம்மால் இதுகாறும் கேள்விகேட்கப்பட்டவர் பழைய கர்ணாடகம் அவர் போலிவைதிகர். அவருக்கு வேதத்தின் கருத்து தெரியவே தெரியாது. வீணே அவரிடத்தில் வாய் கொடுப்பதைக் காட்டிலும் குட்டிச் சுவற்றில் முட்டிக் கொண்டால் நெற்றியிலேனும் சிறிது புண் பட்டு அதனால் சிறிது சந்துஷ்டியை யடைந்தாலும் அடையலாம்.

அவைதிகர்; சரி; எனக்கு வைதிகச் சிருஷ்டி விஷயங்களில் சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன அவைகளை உம்மால் நீக்க முடியுமா? நீர் யுகதிவாதத்திற்கு வழிப்படுவீரா?

வைதிகர், தாராளமாக முடியும் நான் காசியில் பன்னிரண்டு வருடங்களும் ஆரியகுருகுலத்தில் பதினாறு வருடங்களும் சாஸ்திரங்களைப்பயின்றுள்ளேன். ஆகையால் எத்தகைய சந்தேகங்களையும்தீர்த்து வைக்க என்னால் இயலும்.

அவைதிகர்:—தங்கள் பெயர் யாது?

வைதிகர்:—சந்தேகத்வாந்ததிவாகர, நயபய பயோதி சுதாகர, நிகிலகலா விலாஸினீமனோஹர தூர்வாதிகஜ கேஸரீ நிகமாந்தவனவிஹாரீ, புராணதீர்த்த சஞ்சாரீ, ரவிசங்கர ஹரிவினாயக துர்க்காப்ரஸாத சாஸ்திரி.

அவைதிகர்:—பெயர் அழகாக இருக்கிறது ஆனால் அரைக்காத தூரத்திற்கு அதிகமாகவே நீண்டிருப்பதால் பல நாட்கள் உருப்போட்டுப் படித்தாலும் மனதில் அமைவது அரிது.

ஆயினும் சரி:—கடவுளைப்பற்றியும் வேதத்தைப்பற்றியும் உங்கள் சித்தாந்தத்தைச் சொல்லுங்கள்.

வைதிகர்:—கடவுள் எப்போது உலகத்தைப் படைத்தாரோ அப்போதே ரிக் முதலிய வேதங்களையும் உண்டாக்கினார். வேதங்களைச் 'சந்தர்ப்பானு சாரம் அனாதி (ஆக்கப்படாதது) யென்றும் சொல்லுவோம். ஆரியமதப்படி உலகம் படைத்து 1960852976 ஆண்டுகளாய்விட்டன. ஆகையால் வேதங்களும் 'அவ்வளவு பழக்கமுடையவை. இக் காலநிர்ணயம் நாற்பத்தைந்தாண்டுகளுக்கு முன் சுவாமி "தயானந்தஸரஸ்வதி" என்பவரால் செய்யப்பட்டது. வேண்டுமானால் "ரிக்வேதபாஷ்யபூமிகா" என்னும் நூலைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவைதிகர்:—எனக்கு உங்களுடைய எந்த நூலையும் பார்க்க வேண்டாம். நான் உலகத்தை அனாதி, ஆனால் அடிக்கடி மாறுதலுடையது என்னும் கொள்கையை யுடையவன் அன்றியும் அத்தகைய இவ்வுலகத்தை ஒரு கடவுள் சிருஷ்டித்தார் அவரை அடைவதுதான் மோட்சம்; என்று பயனற்ற பேச்சுப் பேசி மக்களை ஏய்க்கும் மோசக்காரர்களை மேலில் சபையில் தலை நீட்டாவண்ணம் சரமாரியாகக் கேள்விகள் கேட்டு தோற்கடித்து விடவும் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் நடுவில் கோபங்கொண்டு எழுந்து, போகாமல் சாந்தமாயிருப்பீர்களானால் எனது சந்தேகங்களைக் கிளப்புவேன்.

வினா:—ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய ஈசுவரன் எத்தகையவன்.

விடை:—ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தன், ஸர்வாந்தர்யாமி. அசரீரி முதலிய பல லக்ஷணங்களையும் உடையவன் ஈசுவரன்.

வினு:—அசரீரி யென்றால் உருவமில்லாதவனென்று பொருளாகிறது, அரூபியாகி ஈசுவரன் ரூபத்தையுடைய சிருஷ்டியைச் செய்தானென்றால் எங்ஙனம் பொருந்தும், காரணமின்றிக் காரியம் நடைபெறுதன்றோ.

விடை:—ஈசுவரன் ஸ்ருஷ்டியைச் செய்யவில்லை. ஈசுவரனுடைய மாயையால் செய்யப்பட்டது'

வினு:—ஈசுவரனுடைய மாயை என்றீரே, அது ஈசுவரனுடன் ஒன்றாயிருக்கிறதா? வேறுபட்டிருக்கிறதா? ஈசுவரன் சுவதந்திரனு பாதந்திரனு?

விடை:—ஈசுவரன் சுவதந்திரன், மாயைக்குச் சுதந்திரமில்லை.

ஈசுவரன் பரந்திரன் என்றால் அவனுடைய ஸர்வசக்தி மத்வம் பாதிக்கப்பட்டுவிடும்.

வினு:—சுவதந்திரமில்லாத மாயையினால் உலகம் படைக்கப்பட்டது என்பது அறிஞ உலகம ஒப்புக்கொள்ளப் போவதில்லை. சுவதந்திரையாகிய மாயைக்கு அடிமைப்பட்டு ஈசுவரன் பாரந்திரனாக இருக்கிறான் என்று ஒப்புக்கொள்ளுவீரா?

விடை;—இல்லை. இல்லை. சிருஷ்டியானது கடவுளின் லீலையாகும் "லோகவத் லிலா கைவல்யம்." என்னும் பிரஹ்ம சூத்திரம் இதற்குப் பிரமாணம்.

வினு:—கடவுள் ஸர்வ சக்தியுமான் என்று முன்னமே சொன்னீர் இப்போது சிருஷ்டி "விளையாட்டு" என்கிறீர் ஆகவே அரசகுமாரனைப்போன்று சுவதந்திரனாய் முரண்பட்ட பலதொழில்களையும் கடவுள் செய்து விளையாடுகிறானென்று வைத்துக்கொள்ளுவோமா?

விடை:—ஆஹா! அப்படியே வைத்துக்கொள்ளலாம்-

வினு:—அப்படியானல் அரசகுமாரனைப்போல் ஈசுவரனும் ராகத்வேஷ முதலிய தோஷங்களையுடையவனுவான். அத்தகைய ஈசுவரனை அடைவதே மோக்ஷமடைவதென்ருல் ராகத்வேஷாதி தோஷங்களையுடையவர்களின் கூட்டுறவினுல் எது நேருமோ அதே யேமோக்ஷமடைந்தவனும் அனுபவிப்பான். ஆனுல் ராகத்வேஷமோஹங்கள் அற்றவிடத்தில் தான் "முக்தி" யென்று அறிஞர் சொல்லுகின்ருர்கள். இதற்கென்ன பதில் கூறுவீர்.

விடை:—கடவுள் ராகத்வேஷாதி தோஷங்களற்றவர் ஜீவர்களின் பேரில் வைத்துள்ள கருணையினுலேயே உலகத்தைப்படைத்தார். கடவுள் கருணை நிறைந்தவர்.

வினு:—கருணை நிறைந்த கடவுள் எலி, பூனை, பாம்பு, கீரி, புலி, பசு முதலிய ஒன்றுக கொன்று பகைத்துக் கொள்ளும் இயல்புடைய உயிர்களையும் மாககளில் சிலருக்கு வறுமையும் சிலருக்கு சுகமும் சிலருக்கு சரீரவன்மையும் சிலருக்கு உபகாரியைச் சமயமபார்த்து அழிக்கும் எண்ணமும் உண்டு பண்ணுவானேன் இவை நிறைந்த கருணையுடைய கடவுளுக்கு அழகுதானே?

விடை:—உயிர்கள் அவைகளின் முற்பிறப்பிற் குரிய கருமத்திற் கேற்ப வேறுபட்ட செயல்களுடன் பிறக்கின்றனவே யொழிய இதனுல் கடவுளுக்கு ஓர் குறையுமில்லை.

வினு:—அப்படியானல் சுவதந்திரனுன கடவுள் உலகத்தைப் படைத்தார் என்பது பிழை. உயிர்கள் தத்தம் வினைகளுக கேற்பப் பிறவிகளை எடுப்பதும் சுகதுக்கங்களை அனுபவிப்பதும உண்மையென ஒத்துக்கொண்டால் இடையில் ஒருபயனுமற்ற ஓர்கடவுளை நுழைத்து சங்கடப்படுவானேன்.

விடை:— இதற்கு இவ்வளவு தர்க்கமா. ஸர்வசக்திமானுன கடவுளின் சிருஷ்டியைக் குறித்து சிற்றறிவுடைய மக்களால் விவரமாக ஒன்றும அறிய முடியாது.

வினு:—தெரிந்து கொள்ள முடியாத விஷயத்தில் தலையிட்டுச சங்கடப்படுவானேன். சாஸ்திரத்தில் கடவுள் சிருஷ்டி கர்த்தர் என்

னும மற்றும் எழுதி வைத்திருப்பது மக்களைக் கஷ்டப்படுத்தும் நோக்கத்துடனு? அல்லது அறியாமையினுலா? கிருஸ்தவர்களுடையவும் இஸ்லாமக்களுடையவும சமயத்தில் யுக்திக்குப் பொருத்தமில்லாவிட்டாலும் ஒரே சிருஷ்டிக் கிரமத்தை எழுதி வைத்திருக்கிறுர்கள். அவர்களை எதிர்த்துக கேள்வி கேட்டால் பதில் சொல்லப் போவதுமில்லை. உங்களுடைய வைதிக சமயத்தில் பலவகைச் சிருஷ்டிக் கிரமங்களைச சொல்லி மக்களை மயக்கியிருப்பதால் உண்மையை நாடுவோன் உயிர் விடும வரையில் உபத்திரவப்பட்டுக் கொண்டே இருக்கும்படி உங்கள் வேதமும் புராணங்களும ஸ்மிருதிகளும இதிகாசங்களும்இருககின்றன. ஆசாரங்கள் சவுகரியமுமம சந்தர்ப்பமும் பார்த்து தேசமதோறும வேறுவேருகவும் நடை பெறுகின்றன. இத்தகைய அநியாய மதவலையில் சிககிய மனிதன் எப்படி விடப்படுவான்.

விடை:—அவைதிகரே! உம்மிடததில் சமாதானம் சொல்ல என்னுல் இயலாது. சாஸ்திரத்தையும் வேதத்தையும் உடன் படாத உம்மை "நாஸ்திகன்" என ஒதுக்கி வைப்பதே எனது கடமை. வேறென்றும் இக்காலத்தில் நடைபெருது. முற்காலத்திலானுல் உமக்குத்தகக தண்டனை கிடைத்திருக்கும். துஷ்டனுன உனனைத் தண்டிககுமபடி நான் எவனையேனும சூத்திரனை ஏவினுல் அவன் இப்போது என்னையே அடிப்பான். காலம கலியுகம, பிராமண விசுவாசம் போய்விட்டது. ஆகையால் நான் வாயை மூடிக்கொண்டு எங்கேனும போகிறேன்.

அவைதிகர்:—ஐயா! வைதிகரே! ஏன் கோபித்துக் கொள்ளுகிறீர், நான் வைதிகனல்லாததால் வீணே ஒருயிருக்குக் கெடுதி செய்ய மாட்டேனென்பதை நீரும் அறிந்திருப்பீரே. எனககு இன்னும் பல சந்தேகங்கள் இருககின்றன, அவை வேறு யாரிடத்தில் அளந்து கொட்டுவேன். உம்மைப்போல் பெரிய பெயர் வழிகள் அகப்படுவது அரிதினும அரிதன்ரே, ஆகையால் தயவு செய்து சிறிது நேரங்கூடப் பொறுத்திருந்து எனது வினக்களுககு உமககுத் தெரிந்த வகையில் விடையளிகக வேண்டும்.

வைதிகர்:—ஒருபடி இறங்கினீர், போதும்; உமது சந்தேகங்கள் ஏவை?

அவைதிகர் வினு:—ஈசுவரனுக்கு சரீரம் உண்டா? இல்லையா? உண்டென்றால் சரீரிகளுக்குப் புண்ணியமும் பாபமும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். அசரீரி யென்று சொல்லும் பக்ஷத்தில் சரீரமில்லாதவரான ஈசுவரன் சிருஷ்டி செய்தாரென்பது அபத்தம். "குயவன்" குடம சட்டி முதலியவைவயைச்செய்வது போலவே "ஈசுவரன்" பலவகையான சிருஷ்டிகளைச் செய்கின்றார் என்னும் கூற்றுமபொருந்தாது.

விடை:—ஈசுவரன் சரீரியென்றே வைத்துக்கொள்ளுவோம் அத்தகைய ஈசுவரனுலேயே உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பல உதாகரணங்கள் உள.

வினு:—அப்படியானல் உம்மைப்போலவும் என்னைப்போலவும பிறர் கண்களுக்கு விஷயமா யிருக்கவேண்டும், ஈசுவரன் அவ்வாறு யாராலும் காணப்படவில்லையே?

விடை:—கடவுள் உலகைப் படைத்தா ரென்றும வேதத்தை உண்டாக்கினுரென்றும் பிரமாணங்கள் இருக்கின்றன. அவைகளை நான் நம்புகிறேன். அதாவது உலகப்படைப்பிற்கு ஈசுவரன் நிமித்த காரணமாகவே இருக்கிருர்.

வினு:—அப்படியானல் உலகப்படைப்பிற்கு உபாதான காரணம் யாது?

விடை:—ஈசுவரனுடைய சக்தியே உபாதானம.

வினு:—ஈசுவரனுடைய சக்தியானது அவனுடன் சேர்ந்து நிற்கிறதா? பிரிந்து நிற்கிறதா? சேர்ந்தே நிற்கிற தென்றுல் ஜட்மா? சேதனமா? ஜட்மாஞல் அழியும் பொருளா? அழியாபபொருளா? அழியாதெதென்றுல் ஈசுவரன ஒருவனே நித்தியன் மற்றவை யாவும் அழிவன என்னும கூற்றுப் பொய்யாய் விடும். அழிபொரு ளென்றுல் அழியாப் பொருளிலிருந்து அழியும் பொருள் தோன்றியது எங்ஙனம்?

விடை:—அந்த சக்தி ஈசுவரனுடன் சேர்ந்தே இருப்பதாகச் சாஸ்திரம் இருக்கிறது. ஆனால் அதை நம்ப என்னால் இயலவில்லை.

வினா:—வைதிகரே! சாஸ்திரங்களை நம்பக் கூடவில்லை யென்கிறீர் அவை கடவுளாலும் ரிஷிகளாலும் செய்யப்பட்டவை யென்றும் நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் சொல்லவும் செய்கிறீர்கள். ஆகையால் உமது இக்கூற்று தோல்வியைக் குறிக்கிறதாகும். கடவுளின் சக்தி அவருடன் சேர்ந்தே யிருக்கிறதென வைத்துக் கொண்டால் அவரையும், அவர் சக்தியையும் வேறு வேறாக அழைப்பதும் அவ்வாறு ஒத்துக் கொள்வதும் பயனற்ற காரியமாய் விடும்.

விடை:—அவ்வாறில்லை. சர்வம் ப்ரஹ்மமயம் ஜகத் ஆகையால் ஈசுவரனும் சக்தியு அபேதமே.

வினா:—சரி; சுவர்க்கம் நரகம் புண்ணியம் பாபம் அரசன், குடிகள், ஏழை, பணக்காரன், யாவும் ஈசுவரன் தானே? அப்படியானால் ஈசுவரன் தானாகவே கெட்டு இவ்வாறெல்லாமாயினனா? இத்தகைய ஈசுவரனையும் அவனுடைய லீலைகளையும் பற்றி கூறும் வைதீக சாஸ்திரங்களைப் பகுத்தறிவுடையவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

விடை:—ஈசுவரன் தன்னைத்தனே கெடுத்து உருவபதார்த்தமாகத் தோன்றவில்லை, உருவபதார்த்தம் ஈசுவரனை விட்டு தனியே இருப்பதாகவும் சாஸ்திரத்தில் இருக்கிறது. அதனால் சிருஷ்டியைச் செய்திருப்பார்.

வினா:—அந்தப் பொருள் யாது? ஈசுவரன அதை எவ்வாறு அடைந்தார்?

விடை:—அது அனாதி எனச் சாஸ்திரங்கள் கூறும்.

வினா:—சிருஷ்டிக்கு வேண்டிய சாமான்கள் அனாதியாகவே உள்ளவையானால் அவை சிருஷ்டிக்கப்பட்டவையல்ல வென்று தீர்மானமாய்விட்டது. அப்படியானால் ஈசுவரனால் விசேஷமாக ஒன்றும் உண்டுபண்ணப்படவில்லை. சிருஷ்டிக்கு முன் ஒரே கடவுள்

தான் இருந்தார். அவரால் யாவும் செய்யப்பட்டன. என்னும் கூற்று இதனுல் பொய்த்து விட்டது.

விடை:—ஈசுவரன் சிருஷ்டி கர்த்தனல்லவென்று சொன்னுல் அவனுடைய சர்வசக்திமத்வம் (முழுவல்லமை) பாதிககப்பட்டு விடும. ஆகையால் சிருஷ்டி கர்த்தாவே ஈசுவரன்.

வினு:—உங்கள் மதப்படிகருள்ள கடவுள் உலகத்தையும் வேதத்தையும் படைத்தவர் ஸர்வஸகதிமான் என்பது உங்களைச் சார்ந்தோர்களால் சொல்லப்படவேண்டுமே யொழிய ஒப்புக்கொள்ளும் அறிஞர் ஒருவர்கூட இரார். இதற்குக் காரணம் பூனை, எலி, யானை, சிங்கம், பாம்பு, கீரி, ப்ராஹ்மணன், சூத்திரன், நரகம சுவர்க்கம் முதலிய ஒன்றுக்கொன்று பகைத்துக்கொள்ளும் படைப்பைப் படைத்தக கொலையை நன்னெறியென வுணர்த்தும் வேதத்தையும் வெளிப்படுத்தினதால்தான், இத்தகைய ஈசுவரனை வழிபடுபவன் பிராமணனை வாதிபட்டுய்ய நினைக்கும் சூத்திரன் அடையும் கதி யாதோ அத்தகைய அதோ கதிதான் அவனும் அடைவான், பிராமணனை வழிப்படும் சூத்திரர்களின் பரிதபிக்கத் தக்க நிலைமை இங்கு யாவர்க்கும் பிரததியக்ஷமல்லவா? சுகவாழ்க்கையையடைய விரும்பும் சூத்திரன் பார்ப்பன வழிபாட்டை விடுத்து மதாந்தரங்களில் சேர்ந்து அது முதல் சுக வாழ்க்கையிலீடுபடுகிருன். அவ்வாறே ஞானத்தையுடைய விரும்புபவன் யாவனுயினும வைதிகசாஸ்திரங்களை ஒதுககித் தள்ளினுல்தான் விரும்பிய பலன் அடையப் பெறுவான்.

விடை;—கடவுளிடத்திலிருந்தே உருவ பதார்த்தங்களும் உண்டாயின.

வினு:—வைதிகரே! உருவமில்லாத கடவுளிடத்திலிருந்து உருவப்பொருள்கள் தோன்றுவது எப்போதுமில்லை தோன்றுவதனுல் அவை முன்னமே கடவுளிடத்தில் இருந்திருக்க வேண்டும், பெண் கருத்தரிக்காமல் பிரசவிக்க முடியுமா? கடவுளிடத்தில் ஏற்கனவே இல்லையானுல் சிருஷ்டி சமயததில் அதற்கு வேண்டிய

பொருட்களை எவ்வாறு சம்பாதித்தார்? தாங்கள் சொல்வதைப் போலவே ஒத்துக்கொள்ளுவோம். ஜீவனுடைய உபாதானகாரணம் ஈசுவரன்தான். ஆகவே காரியம் தனது உபாதானகாரணத்தைவிட்டு நிற்காது. ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் பேதத்தையும் சொல்லுகிறார். இவைபோன்ற முரண்பாட்டை எப்படி ஒத்துக் கொள்வது? அன்றியும் கடவுள் விரும்பியபடியே ஜீவர்கள் தோன்றினார்கள் என்றால் அவர்களின் தவறுதலும ஒருவர்க்கொருவர் பகைத்துக் கொள்ளுதலும் கடவுளின் விருப்பந்தானா? அவ்வாறானால் பாவத்தைப்பண்ணின ஜீவர்கள் நரகத்தை அடைவதும் ஈசுவரனுடைய விருப்பமேயாகும் அந்தோ! இதனால்தான் கடவுள் மனிதனுடைய கண்களுக்குப் புலப்படாமல் இருக்கிறார்போலும் இவ்வாறு ஒத்துக்கொண்டால் உலகத்தில் நடைபெறும் அககிரமங்கள் யாவும் கடவுளால் வேண்டுமென்றே நடக்தப்படுகிறது என்றல்லவோ சொல்ல வேண்டும். இதனால் குற்றம் செய்தவனை உங்கள் மதப்படி தண்டிப்பது நியாயமல்ல.

விடை:—மனிதர்களுடைய அக்கிரமங்களைக் கடவுள்மீது சுமத்துவது முறையாகாது. ஆகையால் குற்றவாளியைத் தண்டிப்பது நியாயமதான்.

அவைதிகர்:—"அவனன்றி யோரணுவு மசையாது" ஸர்வம் ப்ரஹ்மமயம் ஜகத்" என்றெல்லாம் சொன்னீரே. அப்படியிருக்க பரதந்திரர்களாகிய ஜீவர்களைக் குற்றவாளிகளென்பது முறையாகாது.

வைதிகர்:—போதும் போதும் நிறுத்தும் உம்மிடத்தில் இனி சாஸ்த்ரீயவிஷயங்கள் எதும் பேசப்போவதில்லை யென்று சொல்லிப்பின்னும ஏதேதல்லாமோ முணு முணுத்துக்கொண்டு போய்விட்டார். அவைதிகரும் புன்னகை பூத்த முகத்துடன் தனதாசிரமத்தைப் பார்க்கச் சென்றார்.

ஏழாம் அத்தியாயம் சிருஷ்டிக்கிரமம் சமாப்தம்.

---

**M. K. கேலுண்ணி நாயர்** என்னும்

சுவாமி சிவானந்த சரஸ்வதி

கோலொளம்பு அம்ஸம், பொன்னானித் தாலுக்கா,

தென்மலேயாளம்.

# மதவிசாரணை.

## எட்டாம் அத்தியாயம்.

### இந்து சமுசாயத்தின் பெண்களின் துயர வாழ்க்கை.

*யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே*
*ரமந்தே தத்ர தேவதா: |*
*ஸ்திரியஸ்துஷ்டா: ஸ்திரியோ புருஷா*
*ருஷ்டாஸ்துஷ்டாஸ்ச தேவதா: ||*
*வாத்தயந்தி குலம் துஷ்டா*
*நாசயந்த்யப மாநிதா: ||*

சகோதரர்களே!

நமது நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களில் சற்றேறக்குறைய இருபத்தோரு கோடிக்கு மேற்பட்டவர்கள் இந்துக்கள் எனப் படுவரேயாம். ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிறசமயத்தினரே யில்லாதிருந்த இந்த நாட்டில் தற்போது மூன்றி லொரு பங்கு பிறசமயத்தினரா யிருப்பதோடு முற்காலத்தில் பிற நாட்டினருக்கு நாகரீகம் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்த தலைமை நாடென்னும பெருமையும் அழிந்து அன்னியருக்கு அதிலும் நடையுடை பாவனைகளில் வெகுவித வேற்றுமையுடைய குறைந்த எண்ணிக்கையையுடைய சில ஜனங்களுக்கு அடிமையாக்கப் பட்டு நாட்டிலுள்ளாரை நாயினுங் கடைப்பட்டாராயாகவாழ்க்கை நடத்தப்பட்டுவருகிறதை நேரே நாம் காணக்கூடியதாயிருக்கின்ற தன்றோ; இதற்குக் காரணமென்ன? இவ்வனாய நரகவேதனையினின்று மக்களை மீட்பது எவ்வாறு? என்னும் எனது அபிப்பிராயமே இப்புத்தகத்தின் விஷயம். சர்வசுதந்தஜனபரமேஸ்வரன் எனது அந்தக் கரணத்தைத் தூய்மைப்படுத்தி என் மனமொழி மெய்களைப் பரோபகார மாக்க அனுக்கிரகிப்பானாக.

ஒரு நாடு செழிப்படைய வேண்டுமானல் அந்நாட்டிற் கென்று பிறந்த ஆண் பெண் அனைவருமே சமனுற நடத்தப்படல் வேண்டும்.

இந்து சமயம் அவ்வாறில்லை. பிறப்பினால் உயர்வுந் தாழ்வுமாகக் குறிப்பிடப்பட்டு நான்கு வருணங்கள் (பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்) உள்ளன. இந்த வருணங்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுமுள்ளன. முதல் வர்ணமாகிய பிராமண வர்ணத்திற் பிறந்த ஒருவன் எவ்வளவு துர்நடத்தை யுள்ளவனாயிருந்தாலும் வாழ்க்கைக் கேற்றதான எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையவும் மற்ற மூ வருணத்தினரையும் ஜீவபரியந்தம் தனக்கு அடிமைப்படுத்தி வைக்கவும் உரியவனாகின்றான். இவ்வண்ணமே க்ஷத்திரியன், பிராமணனுக்கு அடிமையேயானாலும் வைசிய சூத்திரர்களை அடக்கியாள அதிகாரியா யிருக்கிறான். வைசியன், க்ஷத்திரியனுக்கும் பிராமணனுக்கும் அடிமையும் சூத்திரனுக்கு எஜமானனுமாகிறான். நான்காம் வருணத்தவனான சூத்திரன் முற்கூறிய மூன்று (பிராமண-க்ஷத்திரிய-வைசிய) வருணத்தினருக்கும் அடிமையேயொழிய எக்காலத்திலும் சுதந்திரனல்ல. பெண்களும் இவ்வாறே. இச்சூத்திரர்களும் பெண்களும் பிறப்பினால் மனிதரா யிருந்த போதிலும் விலங்குகளை விடக் கேவலமான வாழ்க்கை நடத்தும்படி இந்து சமயம் கூறுகிறது. ஆங்கில ஆட்சி நடைபெறும் இக்காலத்தில் சட்டப்படிக்கு முன்னேற வழி யிருந்தும் இந்த சமயத்திலும் கூட இயன்றவரைப் பிராமணரல்லாதாரைப் பிராமணர் முன்னேற்ற எவ்வகையினும் விடுகின்றார்களில்லை. இதனாலே சிலர், நரகமென்பதைக் காட்டினும் அதிகத்துன்பத்தைத் தரக்கூடிய இச்சமய வாழ்க்கையை விட்டு வெறுத்துப் பிறசமயத்தைச் சரண்புகுகின்றார்கள். அன்றியும் பிராமணன்; பிராமணரல்லாதார் அனைவரையும் அடக்கி யாண்டு வருவது போல் பிராமணரல்லாதாரும், தங்களின் மேல் பெரும் பகுதியினரைத் தீண்டத்தகாதவரென ஒதுக்கி அடக்கியாண்டு வருவதாலும் பிராமணரல்லாதா ருள்ளிருக்கும் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் தமக்குளுயர்வு தாழ்வு கற்பித்துச் சண்டை யிடுவதேயா யிருந்து வருவதாலும் அனைவருமே ஒருமிக்க ஒன்று சேர்ந்து பெண்களைக் கொடுமையாக நடத்துவதாலும் சமூக உயர் நலம் நாளுக்கு நாள் அழிந்து கொண்டே வருவது கண் கூடாகும்.

சமூக முன்னேற்றத்துக்கு முதற்சாதனமாய் இருந்துவரவேண்டிய கல்வியைப் பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் கற்பிக்கலாகாது

என்பது இந்துமதம் வற்புறுத்தியுள்ள முக்கிய கோட்பாடுகளில் ஒன்று. இதற்கு பிரமாணம (ஸ்தீரீ சூத்ரௌநாதியீதாம்) நசூத்ராய மதிமத்யாத்" (பெண்களும் சூத்திரர்களும் படிக்கலாகாது. சூத்திர னுக்கு அறிவை கொடுக்காதே "அறிவு வளர்ச்சிக்குறிய நூலகளைத் தெரிவிக்கலாகாது." எனவும "சூத்ர மக்ஷரஸம்யுக்தம் தூரத: பரி வர்ஜயேத்" (கல்வி அறிவுடைய சூத்திரனை ஒதுக்கித் தூரத்திலே வைக்கப்படல்வேண்டும். சுயநலத்துக்கு அடிமைப்பட்டதனால் நம் நாட்டையே அடிமைப்படுத்திய பிராமணர்களும அவர்களின் வால் களைப் பின்பற்றித் தாங்கிக்கொண்டே திரியும சில பிராமணரல்லாதா ரும் இந்துமதப் பிரமாணபபடி பெண்களுககுக் கல்வி கற்பியாதிருத் தலே உலக தர்மத்துக்கு ஏற்றதென்றும, கல்வியறிவுடைய பெண கள் கள்ளப் புருஷனுககுக் கடிதம எழுதுவார்களென்றும் வாய் கூசாமற் சொல்லுகிறார்கள். இத்தகையோர்களின் தாய் பெண் ணென்பதை மறந்துள்ளார்கள்போலும். ஆண்மககள் அனைவரும் நேர் மையான ஒழுககமுள்ளவர்களாயிருப்பின் பெண்மக்கள் ஒழுக்கங்கெடு வது எப்படி? பெண்கள் தங்கள் உயிரின் விடுதலையைக் கருதிக் கடவுளையும் வழிபடலாகாது. பஞ்சமா பாதகங்களையும் நெஞ்சஞ் சாது, கூசாது செய்பவனாயிருந்தாலும் அக்கணவனைமட்டுந் தெய்வ மாகத் தொழவேண்டும். எதிர்மறையா ஒரு ஆண தனது மனைவி எவ்வளவு நல்லொழுக்கமுள்ளவளாயிருநதாலும் காரணமில்லாமற் கூட அவளைத் தண்டிக்கலாம. பெண் நல்ல உடை தரிக்கக்கூடாது அவ்வாறு தரிப்பவளை வேசையென்று வசைபாட தொடங்கிவிடுவார் கள். காற்றோட்டமில்லாத இருண்ட வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்து உடலை வாட்டவேண்டுமேயல்லாது வெளியில் உலாவி நல்ல காற்றுவாங்க நினைக்கலாகாது. மீறி நடந்தால் வந்ததுமோசம். சோர நாயகனைத் தேடித்திரிகின்றாள் என்பதுதான். யாரிடத்தும் பேசலாகாது. பெண் என்பாள் குழந்தைப்பருவத்திலிருந்தபொழு திலுங்கூட ஆண்பிள்ளையோடு வார்த்தையாடக்கண்டால் இவள் வீட் டுக்கு அடங்கமாட்டாள் அலறுவாய்ப் பிடாரி ஆய்விடுவாள் (விளையும் பயிர் முளையிலேயே தெரியாதா என ஒரு வினையமும் தெரியாத குழவியை வீணாய்ப் பேசி மனம் நொந்துபோகப் புண்படுத்துவார் கள். வீட்டு வேலைகளைச்செய்து களைப்புற்றபெண் சிறிது நேரமே

னும் ஓரிடத்தில் சற்று கண்ணயர்ந்து முடக்கியிருக்கக்கண்டால் தூங்குமூஞ்சி, எழுமூட்டு மூதி இங்கு எங்கேயிருந்து வந்தது என் பார்கள். வீட்டு வேலைபார்த்துவிட்டு ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பெண்ணைத் தன் புருஷனுங்கூடச் சோம்பேறியென்றழைப்பானானால் அன்னை மாமி முதலியவர்கள் எவ்வாறு நடத்துவார்கள் என்பதையும் சொல்லவும் வேண்டுமோ? இத்தகைய பழிச்சொற்களுக்கெல்லாம் அடங்கிப் பேசாதிருப்பவளையுங்கூட இவர்கள் சும்மா விடமாட்டார்கள். இவள் பேசாமடந்தை, ஒன்றுந் தெரியாத மண்ணுந்தை ஊர்ச் சண்டைக்கு இராசாளி அப்படித் தின்கிற மதக்கமல்லவோ வாயடைத்துப்போயிருக்கிறது ஏன் பேசப்போகிறாளென்று நிந்தாஸ்துதியாக வசைமேளம் போடத் தொடங்கிவிடுவார்கள்.

புருஷனுடைய வீட்டில் அடைந்துவருந் துன்பங்களைச் சகிக்க முடியாததாக கவலைக் கடலுள் ஆழ்ந்துக்கிடக்கின்றபெண் அத்துன்பத்தைச் சற்று ஆற்றிக்கொள்ளலாமென்ற நம்பிக்கையோடு தாய்யோடு போய்ச் சேர்ந்த பெண்ணைப் பேயினுங் கொடியவளாக வாயில் வந்தவாறெல்லாம் பேசி கற்பில்லாதவளாக அறிவிக்கவேண்டி என்ன வைதாலும் அடித்தாலும் எதுவந்தாலும் புருஷனே தஞ்சமென்றிருந்து உயிர்விடுபவளல்லவோ உத்தமி என்ன வந்துவிட்டது இப்பொழுது வாழமாட்டாது இங்கே வந்துவிட்டாய்என்று கண்டிப்பான கடுமொழி செவிக்கேறக் கடுகடுத்து இகழ்வார்கள். இம்மட்டோடே போயிற்றா? பெண் விவாகமாய் வீடுவந்து சேர்ந்து ஒருவருஷத்துக்குள் ஓராண்டு குழந்தை பிரசவிக்கவேண்டும். ஒன்றுமில்லாவிட்டால் மலடியென்று பட்டங்கட்டத் தொடங்குவார்கள். மகனுக்கு வேறு கலியாணம் செய்யவேண்டியதுதான் என்றும் பிரஸ்தாபிப்பார்கள். அப்பெண்ணே பிரசவித்தாலும் குழந்தை யாரைப்போலேயோ இருக்கிறதென்றும் தகப்பனைப்போல இல்லையென்றும் சொல்லிக்கொண்டு தந்தையின் உடம்பிலுள்ள மேகம், தழும்பு, கருமபுள்ளிகள் ஒன்றையுங் காணோமென்ற பல்லவியை வந்தவர்களுக்குப் பதியும்படி பாடத்தொடங்கிவிடுவார்கள். இதனால் தகப்பனுடைய அச்சு அடையாளம் ஒரு சிறிதும் குறையக்கூடாது அப்படிக்கில்லாது போயின் சோரம்போய்ப் பெற்ற பிள்ளையென்பார்கள். பெண்,

வீட்டுக்கு வந்தவுடனே பொருள் அதிகமாகச் சேரவேணடும் இல்லாவிட்டால் கிரகம்பிடித்த மூதேவியென்பார்கள். புருஷன் வீட்டில் யாரேனும இறந்துபோனால் இந்த நீலி கால்லெடுத்துவைத்த நேரம் மலைபோலஇருந்தவர் அடித்துககொன்றாலும்ஆறுமாசஞ்செல்லுமென்று நீலிப்பாட்டுமுழங்கமாரடிப்பார்கள். மாமியார் நாததியார்முதலியனவர்களால் நாள்தோறும படும் பாடு இவ்வள வவ்வளவல்ல எண்ணித்தொலையாது எழுதியுமுடியாது. புருஷனுடைய தன்மையறிந்து தருணம பார்த்து ஒரு நாளைக்கு உள்ளதைச் சொல்லிக் கொள்வாளானால் ஒரு வீட்டை ஒன்பது வீடாயாக்க வந்த கொடும்பாவி யென்றும் கோள் குண்டுணி பேசுதற்கு ராஜா ராணிக் கோலங் கட்ட வந்தவளுக்குப்பட்டத்தைக கட்டிவிடு என்று மாமியாள் சாமாரியாய் சொற்போருக்கிழுப்பார்கள். இவள் நாக்கை அறுககவேண்டாமா? இவளைத் துண்டு துண்டாக வெட்டினால் தான் என்ன? என்ன ஆககினை தான் செய்யககூடாது என்று ஊராரறிய வாய்ப்பறை யடிப்பார்கள். இன்னோரன்ன கொடுமைகள் இன்னும பலவுள. இத்தகைய கொடுமைகளைநாள்தோரும பொறுமையோடு அனுபவித்துப் பார்த்தும் பொறுக்கமுடியாது போய் விஷந்தின்றோ உடையில் மண்ணெண்ணையை விட்டு நெருப்பு வைத்தோ கழுத்தில் கயிற்றைக் கொண்டோ கிணறு குளங்களில் வீழ்ந்தோ ஆருயிரை மாய்த்துக கொள்ளுகிறார்கள் ஒரு சில பெண்கள், பிற புருஷர்களை கைவசமாகி அவர்களுடன் தேசாந்தரம் போய் அங்கு பிசசை யேற்று கூலித்தொழில செய்தோ நாளைககழிககின்றார்கள். கிறிஸ்தவ சமயத்திலோ துலுகக சமயத்திலோ விடுதலையடைந்தோமெனப் புகுந்து இளைப்பாறிச் சிறிது சுகம பெற்று வாழும பெண்கள் பல்லாயிரம உளர். இவைகள்தாம் ஒருவருக்கிடையாது இந்துக்களான நமககென்று கிடைத்த நித்தியானுபவ நியாயங்களாகும.

ஸ்திரீயத் துஷ்டா ஸ்திரீயோ ருஷ்டா
ருஷ்டாஸ்துஷ்டாஸ்ச தேவதா:
வர்த்தயந்தி குலம துஷ்டா
நாசயந்த்யபி மாணிதா: || க || .

யத்ர நார் யஸ்து பூஜ்யந்தே
ரமந்தே தத்ர தேவதா: || உ ||

(பெண்கள் மகிழ்வுற வாழ்ந்தால் தெய்வங்களு மகிழுறும் அத னுலே சமுதாயமும் சமயமும வளர்ந்தோங்குதல் பெறும். பெண்கள் துன்புறுவார்களேயாயின் தெய்வங்களும மிகு கோபமுற்றுச் சமுதாயங்களையும் சமய உயர்வுகளையும் அழிந்துபோகச் செய்து விடும்.) க || (எந்த சமூகத்தில் அல்லது சமயததில் பெண்கள் நன்கு நடத்தப் படுகின்றார்களோ அங்கு தேவதைகளும ரம்மியத்தோடு விளங்குகின் றார்கள். அதாவது அங்குள்ளார் கோறும கோறிக்கை யேற்றுத் திரு விளையாடலால் அனுக்கிரகிக்கின்றார்கள் என்பதாம்.

இவைகள் ஆன்றோர் வாக்கினின்று வந்தவைகளே யாகும். நம நாடு பௌத்த சமையத்திருந்த வக்காலத்தில் இவ்வாறே நிகழ்ந்து வந் ததாம். நாடு நன்கு செழிப்படைந்து இருநதது. இற்றைக்காலம் போல பௌத்தசமயம பெருக்குற்றிருநதது அற்றைக்காலத்தில் பிறப்பினுல் உயர்வென்றுந் தாழ்வென்றும் இல்லாதிருந்தமை பற்று பொறுமையே குடிகொண்ட வஞ்சகப் பார்ப்பனர்கள் "பகையாளி வீட்டை உறவாடிக் கெடு" என்ற உபாயத்தைக் கடைப்பிடித்து பௌத்தசமயம் புகுந்து சமயம்பார்த்து அம்மதத்தை சின்னபின்ன மாக அழித்துவிட்டு வர்ணச்சிரம தர்மமென்ற அதர்ம ரூபநச்சு வித் துக்கள் நாடெங்கும் பரவிப்போம்படி விதைத்து வளர்க்கலானார்கள் பின்னர் (பிதா ரக்ஷதி கௌமாரே, பர்த்தா ரக்ஷதி யௌவனே, புத்ரோ ரக்ஷதி வார்த்திக்யே, நஸ்திரீன் வாதந்தர்ய மாக்ஷதி (ஸ்திரீ இளமை யில் தந்தையினுடையவும யௌவனத்தில் பர்த்தாவினுடையவும வார்த்திகத்தில் பிள்ளையினுடையவும் பாதுகாப்பில் இருக்கவேண்டும் ஸ்திரீக்கு ஒருபோதும் சுதந்திரமில்லை. இவை முதலிய பிரமாணங் கள் நடப்பில் வந்தன. நாடும் சீர்கெட்டது.

பின்னும் நம் நாட்டில வைதிக மதமென்னும் பார்பபனமதபபடி நடைபெற்றது யாதெனில்:—காளிகோயில், பைரவர்கோயில் முதலிய இடங்களில் நரபலி, காசி முதலிய க்ஷேத்திரங்களில் கைலாசம், வைகுண்டம், மோக்ஷவீடு வாங்கித்தருவதாக ஆசைகாட்டி (கங்கையில

செய்து) விட்டுப் பணத்தை அபகரிப்பது. கணவன் இறந்துபோன பின் அவனைச்சேர்ந்தவர்களாலும் அவன் மனைவியான பெண்ணை கணவன் பிணத்தோடே சேர்த்து யிருடன்வைத்துத் தீக்கொளுத்து வது. (இதற்கு ஸ்திரீதர்மம் என்று பெயர்.) அவள் அனல்பொறுக் காது பிராணவேதனையால் கூச்சலிட்டலறும் பொழுது அச்சத்தம பிறர் காதில் விழாதபடி பெரும்பறை முழக்குவது, மடிந்துசாம்ப ரானபின் புருஷன் மனைவியிருவரும ஸ்வர்க்கத்திலோ வைகுண்டத் திலோ, கைலாசத்திலோ இடமபெற்றார்கள் என்று சொல்லுவார்கள். இக் கொடுஞ்செயல் ஆங்கில ஆட்சியின் தொடக்கத்திலேயே சட்டப் படி நிறுத்திவிட்டபோதிலும மறைமுகமாகச் சிற்சில விடங்களில் கொன்றுவிடுவர். இககாலத்தில் முற்றிலும் நின்றுவிட வில்லை இத னுல் பெண்கள், தங்கள் வாழ்ககை ஒருநாள்கூடச் சுகமாகக் கழிக்கலா காதென்பதே இமமதத்தினர் கருத்து என்று வெளிப்படையாய்க் காண்கிறது.

இத்தகையோர்கள், முஸ்லீம்கள் மனிதவேட்டை யாடினூர்க ளென்பார்களேயாமாகில் அதில் வியப்பு என்ன இருக்கிறது.

தற்போது இந்தியாவில் 10 வயதிலிருந்து 40 வயதுக்குள்ளா கக் கணவனையிழந்த பெண்ணின் எண்ணிக்கை 24000000 இரண்டு கோடியே நாற்பது லக்ஷம எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதன் காரணம், பெண், குழந்தையாயிருககும்போதே பெற்றோர்கள் பணத்திற்கோ ஜாதிக்கோ ஜாதிகௌரவத்திற்கோ ஆசைப்பட்டுக் கிழவர்களுக்கு மணமுடித்துக் கொடுப்பதனுலேயாகும. புருஷன் இறந்தபின் பெண் மறுமணமுடித்துக்கொள்ளவும மதமும் இடந்தரு வதாயில்லை. மணமுடித்தபின் பெண தன் வாழ்நாள் முழுவதும் வெளியில் வரமுடியாமல் கணவனுக்கும் அவனைச் சார்ந்தவர்கட்கும் அடங்கிக் கஷ்டப்பட்டுத் தனது வாணுட்களின் நீங்காத் தொல்லை யைக்குறித்து நீளயோஜித்துப் பெருமூச்சுவிட்டுச் சலிப்பினுல் மரணத்தை எதிர்பார்த்தவர்களாய் மரணத்தருவாயிலே நாழிகை தோறும் உயிரற்றவர்களாகக் காலங்கழிக்க வேண்டியிருக்கிறது. ஜெயிலில் குற்றவாளிகளுக்காவது காலவரை இன்னதென்று அறிவிக் கப்பட்டிருக்கிறது. கைதிகள் குற்றம் செய்தவர்களாகையால்

தண்டனை அனுபவிப்பது நியாயமே. ஆனால் ஒரு குற்றமும் புரியாத பெண்களுக்கு இன்னல் விளைவிக்கின்றது ஹிந்துமதம். "விவாஹஸ்ச விவாதஸ்சசம்யோரேவ சோபதே" (விவாஹமும் விவாதமும் ஒத்த அந்தஸ்துடையவர்களுக்கே பொருத்தமாகும்) என்ற நியாயப்படி இந்துமதத்தில் விவாகம் நடைபெறாததால் வதூவரர்கள்பிறருக் கெவ்வளவு நன்னடக்கை யுள்ளவர்களாயிருந்தாலும் தங்களுக்குள் கீரியும் பாம்பும்போல்தான் இருப்பார்கள் என்பது சொல்லவும் வேண்டுமோ? அன்றியும் புருஷன், குடியனோ, திருடனோ எனவாகி இருப்பின் அத்தகையவன் மனைவிக்கு எமனாய் முடிவதில் என்ன ஆச்சரியம்.

இளமையிலே புருஷனையிழந்த கைம்பெண்கள் பிறந்தவீட்டிலும் வாழ்க்கைப்பட்ட விடத்திலும் யாதொரு உரிமையுமின்றித் தவிக்கின்றார்கள். ஒருசமயம் பிள்ளையைப்பெற்றிருந்தால் பொருளை யடையப் பாத்தியம் ஏற்பட்டு விடுமோ எனப் பொறாமை கொண்ட பங்காளிகள், அப்பிள்ளையைத் தந்திரத்தினால் கொன்று விடுவார்கள் அல்லது அப்பிள்ளைக்குக் கார்டியன் என்ற நிலையில்வந்து பொருளைக் கொள்ளையடிப்பார்கள். அல்லது அப் பெண்ணின் சுற்றத்தார்களே வந்து அவளை மாயவார்த்தைகளால் மயக்கி எவ்விதமேனும் பொருளைத் தங்களுடையதாக ஆக்கிக் கொள்வார்கள் அதுவும் முடியாதுபோய் விட்டால் அவ்விளம் கைம்பெண்மீது வீண்பழிகூறி அவளை ஊர்சிரிக் கச்செய்வார்கள். இத்தகைய அநீதிகளெல்லாம் லக்ஷணமாய்க்கொண்டு விளங்கிய இந்துமதமே காரணமாவது. நாடகமேடையில் நல்லதங் காள் கதை யாடுவதைக்கண்ட ஜனங்கள் துக்கப்படுகிறார்களன்றோ; ஆனால் இந்துக்களின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் நாள் தோறும் பதினாயிரக்கணக்கில் விதவிதமான நல்லதங்காள்கதைப் பட்டப்பகலில் வீட்டரங்குகளில் நாடகங்களாக ஆங்காங்கு கண்கூடா கக்காணலாம். இத்தகைய மதத்தில் இருந்து நரகவேதனைப்படும் லக்ஷக்கணக்கான பெண்களில் பல பெண்கள் வேறுமதத்தில் புகுந்து அங்கு சுகமாகக் காலங்கழிக்க எண்ணுவதில் குற்றம் என்ன இருக் கிறது? சென்னைமாகாணத்தில் மற்றமாகாணத்தைவிடத் துலுக்கர் கள் எண்ணிக்கையில் குறைவா யிருக்கிறார்கள் அந்நிலைமையில்

இந்துக்களின் எண்ணிக்கை அதிகமென்று எடுத்துக்கூற வேண்டியதில்லை. அவ்வாறிருந்தும் இம்மகாணத்தின் நலைநகரான சென்னப்பட்டினத்தில் துலுக்கர் அதிகமாயிருக்கிற இடங்களில் சில துருக்கத்துஷ்டர்கள் அனுதைப் பெண்களைக்கண்டால் காரணமில்லாது எச்சில் பீடியை மெல்ல மேலேவீசி எறிவதும் புகையை மேலே விடுவதுமாக அவமானத்துக்குள்ளாக்குகிருர்கள். இவர்களுடன் சிலசமயம் இந்துப்போக்கிரிகள் சிலரும் சேர்ந்துகொள்வதுமுண்டு இத்தகைய கொடுஞ்செயல்களைப் பன்முறை பலராலுஞ் சொல்லக் கேள்விப்பட்டு வந்ததோடும் பலதடவையில் நேரில்பார்த்து மிருக்கிறேன். புகைவண்டியில்கூட இந்துஸ்திரீகள்மேல் இத்தகைய துஷ்டர்கள் பீடிகுடித்த புகையை வேண்டுமென்றே அவர்கள் முகத்தில் ஊதுவார்கள். இதைக் காணும் இந்துக்களில் அபிமானமுள்ளவர்களுங்கூட நாம் ஏதாகிலும் சொன்னுல் குழப்பம் உண்டாகுமென்று தங்கள் ஒற்றுமைக் குறைவை நினைத்து ஏங்குவார்களே யொழிய வேறென்றுஞ் செய்ய வகையறியார்கள். வேறுசிலர், அந்தப் பெண்பால் என்ன ஜாதியோ எந்த ஊரோ எக்கேடுகெட்டாலும் நமக்கென்னவென்று ஒருவர்க்கொருவர் மழுங்கணிப்பேச்சுப்பேசிச சும்மா இருந்துவிடுவார்கள் இதனுல் துலுக்கர்களை நான் குறைகூறினதாய் நினைக்க வேண்டாம். அவர்களில் நல்லொழுக்கத்தைக்கடைபிடித்து வாழும் எம்மதத்தினர் சம்மதத்தையும் மேற்கொண்டு விளங்கும் நலலறிவாளர் பலர் இருப்பது எனக்குத்தெரியும். அன்றியும் துஷ்டர்கள் எல்லா சமுதாயத்திலும் இருககின்ருர்கள். அவர்களை பக்ஷபாதகமின்றிக் கண்டிக்கவேதான் வேண்டும். ஆனுலும் ஒருவகையில் துலுக்கமதத்திலிருக்கிற துஷ்டர்கள் இடத்திலும் எனக்கு ஒரு பிரியங் கொடுக்கிறது. ஏனெனில் அவர்கள் தங்கள் மதத்தினன் எந்த ஊரானுயிருப்பினுஞ் சரி அவனைப் பிறமதத்தானெருவன் அவனமாப்படுத்தக் கண்டால் எவனும் பார்த்துக்கொண்டு சும்மா போய்விடமாட்டான்.

இந்து மதத்தில் நான்கு வர்ணங்களும் அவற்றுள் பலபிரிவுகளும் அப்பிரி வொவ்வொன்றிற்கும் ஆசாரமென்பதும் வெவ்வேருஇருந்துவருவதினுல் தாங்கள் ஒற்றுமை பெருமல் வேற்றுமைக்குட்

பட்டவர்களாய் எப்பொழுதும் ஒருவர்க் கொருவர் சச்சரவிட்டுக் கொண்டே யிருந்தவர்களாயிருக்கின்றார்கள். இவ்வாறாய் இந்துமதம் அழிவடையும்வரை மாச்சரியமே மேற்கொண்டு சச்சரவிட்டு வருவார்கள். ஆனால் பிராமண வர்ணமாத்திரம் அதற்குள் எத்தனை பிரிவிருந்து வருவதாயிருந்தாலும் மற்ற வர்ணங்களை அடக்கியாண்டு வருவதில் தம்மினத்தோடு ஒற்றுமையானவேலையை ஜாக்கிரதையோடு முனைந்துசெய்துகொண்டுவருதலையே கண்ணுங் கருத்துமாய்க்கொண்டு வஞ்சகப் பான்மையை மறைத்தொழுகி வருகின்றது. இந்த அதர்மம் எந்த நிமிடத்தில் நிலைசாய்ந்து அழிந்துவிடுமோ அந்த நிமிடத்திலேயிருந்து அதிவேகத்தில் மககளுக்குள் அதிசயிக்கத் தகுந்த நிலைபேறுபெற்ற ஒற்றுமையுண்டாகும். அடிமை வாழ்வும் ஒழியும். தமிழ் மக்கள் பண்டைக்காலத் தமிழக வாழ்வான சுதந்தரமுடையவராய் யாவரும் சமனிலையிலிருந்தவாறே வேண்டியதான சுகவாழ்வைப் பெறுவார்கள். இக்காலத்தில் இந்துமதாபிமானிகளாயிருந்து சுயராஜ்யம் கேட்கும் தலைவர்கள்உண்மையில் தலைவர்களல்ல, போலித்தலைவர்களே, ஏனெனில் அவர்களில் பிராமணர்கள் ஆங்கில அரசாட்சியினால் மோசமான பார்ப்பன தந்திரம் இழக்க நேரிட்டபடியால் பக்ஷபாத மற்ற வெள்ளைக்கார அரசாட்சியை யாவரும் வெறுக்க வைத்துக் காட்டி, மற்ற சமூகங்கள் அடைந்துள்ள சமனிலை வாழ்வான சவுகரியத்தைப் பறித்து (பார்ப்பனரல்லாதரைப்) பழய கருப்பன்களாக நம்மை ஆக்கும் பொருட்டு பாதாளஜோகிமீட்டிங்கில்ஒருவருக்கும்தெரியாமல்முடித்துக்கொண்டு வெளிக்கிளம்பி யிருக்கிறார்கள், பிராமணரல்லாத தலைவர்களாய் வுள்ளவர்கள் பிராமணத் தலைவர்களின் பசப்பு வார்த்தைகளில் மயங்கித் தங்கள் சமூகத்துக்கு வரப்போகும் கேட்டை யுணராது பார்ப்பன சுயராஜ்யத்துக்காகக் காதுக்குருத்துக்கிழிய "வந்தேமாதரம்" என்று உரத்த கூப்பாட்டில் நின்றுவிட வேண்டிய நமக்குச் சுதந்தரமில்லாத சுயராஜ்யமும சிறு கூட்டததாருக்குச் சுதந்தர சுயராஜ்யமும ஜாதிப் பேயின உசசாடனத்தால் உண்டு பண்ணுவதை இன்னும் கோறினால் பிறப்பினால் உயர்வு தாழ்வு வேற்றுமை ஜாதிகளுள் புகாது அக்கிரமமான ஜாதிப்பேயின் தலைமை ஸ்தானத்தை இடித்துக் கொட்டை முத்து விதைத்து அடையாளமே யில்லாது அழித்துவிட முன்வாட்

டும். ஆட்டுவிக்கும் ஜாதியோ சொல்பம், அது பிடித்தாட்டுவதால் ஆடுகின்ற (பிராமணரல்லாத) ஜாதிகளனந்தம். ஆடுகின்ற ஜாதிப்பேயழிந்துப்போனால் ஆடுகின்றஜாதிப்பேய் எங்கே தோன்றும். ஆடுகின்ற நாமெல்லாம் இனிச்சுதந்தரத்திற்கே யாடவும பாடவும் ஜய பேரிகை முழககவும் நம் தலைவர்கள் வீரக்கழல் புனைந்து வலது காலை முன் வைத்து அரங்கங்களில் கிகரற்று தோன்றுவார்களானால் அவர்களுக்கு அன்றே சுதந்தரம்;சுதந்தரமலர்வதாலே சுயராஜியமண வீசுவதாகும் சுதந்தர மில்லாத சுயராஜியம்என்பது அடிமைகளின் ராஜியம் என்பதேயாகும். அது பிணநாறு முதுகாடை யொத்ததாம் என்பதையும் அறிந்து கொள்வீர்களாக. சுதந்திர ஒளி மண்டலத்தின் கிரணம் எங்கே வீசுகிறதோ அங்கேதான் சுயராஜியநாடு காணப்பெறுவதாம்.

தற்காலத்தில் நம்மவர்களில் தலைவர்களென்று சொல்லிக் கொள்வதில் பெரும்பகுதியாகக் காணமுன் வருவோர்கள் பிராமணர்கள் இவர்கள் தம்மினத்தாரைத் தவிர மற்றவர்கள், வாழ்க்கைத் துறைகளில் முயன்று பயின்று உயர் பதவி பெற்று வாழ்ந்து வருதலைக்கண்டு விட்டால் மனம் பொறுக்கமாட்டார்கள். தங்களினத்தவர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஏகபோகமாய் அனுபவித்து வருவதான நலனமைந்த உயர்பதவிகளை முன்னிட்டு வெளிப்படையாய்ப் போலிப் புறமொழிகூறி நமது உயர் பதவியை உள்ளூற அழித்துக் கெடுத்து "நாய்க்குமுழுத்தேங்காய் தக்குமோ"வென ஆரியக்கூத்தாடிக்கொண்டேதங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் எவ்வகையாலும் சாதித்துக் கொள்ளுவார்கள்.

வெளிப்படையா யிருக்க அதனைச சொல்லால் பசப்பி மறைத்து இவ்விதமாக நமக்குத் துயரம் விளைவிக்கும் எந்திரங்களான ஒரு சிறு பகுதியார் தாம் கொண்ட வைதிக மதத்தால் விளைய வைத்த மாதர் துயரம ஹிந்து மதாசார மென்று பெயரோடு புறப்பட்டதை உற்று ஆராயவேண்டாமா? ஆராய்ந்து தெரியவேண்டியது அவசியத்திலும் அவசியமேயாகும். அதாவது பெணகள் (சூத்திரர்களென்று சொல்வோர்களையும் சேர்த்து) பிராமணனல்லாதார்; இவர்கள்பொருளுக்குச் சொந்தக்காரர்களல்ல. இவர்கள் முக்கியமான ஐம்பெரு முனனேற்றங்களுக்கும் அதிகாரிகளுமல்ல என்பதாம் அவையாவன:—

கிடையாது. அவற்றில் பிரவேசிக்கவுங்கூடாது என்று பல்மாகத்தடுக்கப்பட்டிருப்பதோடு எவ்வித சபந்தம் பெறுவதற்கும் தாங்கள் எந்த நூலிலும் கைத்தவறுதலாகவேனும் எழுதிவிடவுமில்லை. அனுபவத்தில் வந்து விடவும விட்டு விடவுமில்லை. இக்காலங்களில் பிராமணரல்லாதாரின் பெண்கள் சில விஷயங்களில் முன்னேறி யிருப்பது ஆங்கிலேயப் படிப்பிலும் அந்த ராஜாங்கத்தினாலும் என்றறியவேண்டியது. பெண்கள் அப்படி முன்னேறி வருவதையும் மனம் பிடிக்காது பலரும் அதுவுங் கூடாதென்று தடுத்து வருகிறார்கள். நமது நாட்டில் சில வைதிகப்போலிகள், சாஸ்திரபுராணங்கள் வாசித்துக்காட்டி வாய்ப்பறையடித்துக்கொண்டே ஓயாது மிரட்டிவருவது என்னவென்றால் (1) பெண்கள் வாசிக்ககூடாது (2) நற்கதிக்காண ஜபதபம கடவுள் வணக்கம செய்யக் கூடாது. களகுடியனாயினும் கொலைகாரனாயினும வாய்த்த புருஷனை கடவுளென்று கொள்ள வேணடும. இல்லாவிட்டால் நல்ல கதி கிடையாது. (3) நல்லுடை உடுதது அழகு செய்து மகிழ்ந்துவிடக் கூடாது. (4) இடுக்கபிடித்த இருண்ட வீடாக விருந்தால் வெளிச்சம் பெற காற்றடிககுமிடத்தில் புழுக்கத்தை மாற்றி ஆறுதலடைய வீட்டை விட்டு வெளியில் வந்து சற்று தாமதிககக்கூடாது. (5) எவர்முன்பும பேசககூடாது. பெண் குழந்தை தன கன்னிப்பருவத்திலுங்கூட ஆண்பிள்ளையிடமவந்து அதிசயமாகதோன்றியதை விளையாட்டிலும பேசககூடாது. அப்படிப் பேசினால் பின்பு விபசாரியாகி வீட்டைவிட்டு வெளியேற நேர்ந்து விடும் என்பது. (6) வீட்டுவேலையின அலுப்பினால் தலைசாய்த்தாலும் மூதேவிஎன்று பெயர்வந்துவிடும். அதுவும் கூடாது (7) பசித்த அளவுக்குச் சாப்பிடும் உணவு இதிகமாய்ப் போனால் அதுவும் கூடாது. பெருந் தீனிக்காரியானதால் வீடு விளங்காது (8) வேலைகளெல்லாம செய்து முடித்தபினனும சற்று ஓய்ந்து உடகார்ந்து விடக்கூடாது அப்படிஉகுட்கார்நது விட்டால் புருஷர்கள் சோமபேறி எனப்படடம் புனைந்து விடுவது (9) பேசினால் வாதாரி (வாயுதாரி) பேசாமல் இருப்பாளானால் பேசாமடந்தை என்ற பரிகாசம் (10) தாய்வீடு போகக்கூடாது அங்குபோனால் சோமபேறிவள் என்று கூறுவது. (11) கட்டிக்கொடுத்து வீடு வந்த ஒரு வருஷத்தில் பிள்ளைப் பேறில்லாவிட்டால் மலடி; மகனுக்கு வேறு

கலியாணம் முடிக்கவேண்டுமென்று மனதை புண்படுத்துவது அப்படிப் பிரசவித்தாலும் தகப்பன் முகமபோலே இல்லை இது யாரைப்போலேயோ இருக்கிறதென்று காதில் நாராசம் பாய்ச்சுவது. (12) வீட்டுக்கு வந்த வருஷத்திலே கால்வரிசைக் சொத்தாவது வராவிட்டால் கணவனது தாய், சகோதரிகள் "தரித்திரம வெறுவாய்கிலைகெட்ட மூதேவி" என்று ஏசிகொண்டேயிருப்பது. (13) கலியாணம பண்ணி வீடு வந்து சேர்ந்து ஒரு வருடத்துக்குள் புருஷன் வீட்டில் யாராவது இறந்து விட்டால் அலங்காரி கால்வைத்தவேளை இப்படிக்காயிற்றென்று இழவு வீட்டில், வந்தவர்கள் கேட்க மாரடித்தழுவது. இனி யாருக்கு என்னமோவென்று கூடிக்கூடி பெண் மனம புண்படப்பேசி வருவது. இன்னும் கொடுநீலி என்றும் ஒரு வீட்டை ஒன்பது வீடு ஆக்க வந்தவள் என்றும் ஒரு ஆதரவு மில்லாது இவர்களை நமபி வந்த பெண்ணின் குலை துடிக்கத்துடிக்க இடித்துக கூறுவது. இப்படியாய்ப் பொறுக்க முடியாமல நடந்து வருவதை தருணமறிந்து பயத்துடன் புருஷனிடம ஒன்றிரண்டு சொலலைப்போனால் இவள் கலககக்காரி கூறைமேலேறியும சண்டை போடுவாளென்று தெருவார் கேட்க மாமியாள் முதலியவர்கள் கடுங்குரல் எடுத்துப்பாடுவது. இவ்வாறெல்லாம் நடாத்திக் கடைசியில் வந்தபெண், வாழ்வதற்கு ஒருவழியு மில்லாமல் விஷம் தினறும கிணறு, குளம், குட்டையில வீழ்ந்தும் தூணியில் மண்ணெண்ணெய் விட்டு நெருப்பிடும மேல்மெத்தையி னின்று குதித்தும் உயிர்விடுவது. இறப்பது, நாள்தோறும் எத்தனைஎத்தனையென்று கணககிட்டு முடியுமா? வீட்டின் கஷ்டம் பொறுக்காமல் வெளியேறிக் குடிகாரன் வெறிகாரன கையில்ப்போய் உருக்குலைந்து மாிததுப்போவது ஒரு நாளைக கெத்தனை யெத்தனை யென்று எண்ணித்தான் முடியுமா? பிச்சை யெடுத்தோ கூலிககலைந்தோ தெருத்தெருவாய்த் திரிவதற்கும் ஒரு கணககு முணடா? இத்தனையும் விடடுக கிருஸ்து துலுககு மதத்தில் போய் வாழ்நது வருவதும ஆயிர மாயிரமல்லவா? வைதிகமதக் கொடுங்கோலின் அடக்கு முறையால் துயரத்தழுந்தி நாசமடையும் பெண்களை வருடநதோறும் கணக்கெடுததால் லக்ஷகக ணககல்லவோ கூறியழ வேண்டும். நிற்க,

பாரஹ்மண மதமான வைதிகமதககொள்கை நாட்டில்நுழைந்து நடத்தி வந்ததும் நடைபெறுவது ஆனதை கூறுவதென்றால், அதனல் சேர்ந்த கொடுமைகள் கொஞ்சமா நஞ்சமா? நரபலி யென்று சொல்லி மனிதரைப் பலியிடுவதும் காசி முதலிய க்ஷேத்திரங்களில் மோக்ஷங் கிடைப்பதாகப் போய்க் கங்கையில் மூழ்கி அங்குக் கயாவபளியினல் ஜலத்தினுள்ளே இழுத்துக கொண்டு போகப்பட்டு நகைக்காக உயிர் கொடுத்ததைக் கங்கை சேர்த்துக்கொண்ட புண்ணியவதி என்றும் மறைத்துக் கூறி வருவதில்,மடிந்துபோன பெண்கள் எத்தனை ஆயிரம் மென்பதும் உடன்கட்டையேறச் செய்து உததமியென்று பெண்கள் உயிர்கள் போம்படி வதைத்தமை எத்தனை லெக்ஷமென்பதும வைதிக மத்தின் அதிகாரியான சிறு கூட்டம், கண்டு கொண்ட நுட்பம இப் பொழுதாவது நீங்கள் அறிந்துகொள்ளக் கூடுமா? இக்கொடுங்கொலை புரிவதற்கு ஏதுவாய் இருந்து வந்தும் வருவதுமான வைதிகமதம் கொலையிலும் அலங்காரமாக யாவருமறியச் செய்து கொல்லும கொலை யலங்காரத்தைக கூறவென்றாலும நாவும் கூசுகின்றது. புருஷன் இருந்து விட்டால், அவன் இல்லாளாகிய பெண்ணைக் கொஞ்சமேனும் இரக்கமில்லாது உற்றார் உறவினர் ஒன்றுகூடி உயிரோடு கைகால்களைக் கட்டி கணவன் பிணத்தோடு ஒன்றுசேரவைத்து நெருப்பைச சூளப் போட்டு மஞ்சட் பொடியைத் தூவிப்புகைமண்டி உயிர் தவிகக அலறிக கதறும்பொழுது பிணப் பறைகளை முழக்கிக் சத்தங்கேளாது உயிர் துறக்கச் செய்து நெருப்பிட்டுககொளுத்திய வைதிகஅலங்கோலம் கோடிக்கணக்கான பெண்ணைக கூற்று வனுலகுக்கு அனுப்பியது· குற்றந்தானே குணந்தானே படிப்பவர் களாகிய நீங்களே கூறி மனமாறுங்கள். அநேக கோடி பெண்களுயிர்களைப் வாய்மடுத்துக் கெக்கலி கொட்டி விளையாடிவரும் வைதிக மதப் பேய்களை உங்களுக்கனுகூலமாகக்கொள்ள உங்களாண்மையை அப்பேய்மதம் உரிஞ்சிவிட்டு வெறுமையாக்கி விட்டதினுலோ உணர்ந்துகொள்ளக் கூடாமற் போயிற்றேபோலும், உடன் கட்டை யேறுபவர்க்குப பதிவிரதையென்று பேய் மதம்போர்கூறி முறை வைக்கச்சொன்னல் ஒரு முறயாகத் தலைமுறைத் தலைமுறையாகக் கூறி நடத்திவருவது அப்பேய் பிடித்துக்கொண்ட வலிமையாவோ மற்றெதனலோ யானறிகிலேன், இந்தக் கொடும் பாதகச்செயல்கள்

(1) ஆத்மசம்பந்தத்திலும் (2) சமூகத்திலும் (3) வித்தையிலும் (4) ஜீவி கத்திலும் (5) ராஜாங்கத்திலும முன்னேற யாதொரு பாத்தியமும் முசல்மான் ராஜாங்கத்திலும ஆங்கில ராஜாங்கததின் ஆதியிலுமாக நடந்து இப்பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறதென்றும் தெரியவருகினறதெனறாலும ரகசியமாகக் கருச்சிதைத்தலும நர பலி யிடுதலும உடன் கட்டை ஏறறுவதும நடந்து வருதலையும் உட்கொண்டிருக்கின்றது. இவர்களைத் துலுக்கராஜாக்கள் மனித வேட்டை ஆடினார்கள் என்று பழங்கதை கூறுவதில் ஒரு ஆச்ச ரியமுமில்லை. இந்தப்பாபிகள் கையாண்டு வரும பேய்மதமும அதன் கொள்கைகளும கொடுஞ்செய்கையும் இப்பொன்னுலகைக் கை விட்டுப் பேயுலகமான தீயுலகு எப்போதுதான் சென்றொழியுமோ யானறிகிலேன். எல்லாம வல்ல கருணாநிதியான கடவுளே! நீதான் வெளிப்படுத்தமாட்டாயா? இம்மதம் மழுக்க மடைந்திருப்பதைச் சீர்திருததம செய்யஹோம்ரூல்கேடகுமவழி யென்று வேஷம் போட்டுபபோக சூதுக்கு இன்னமா இணங்கிருககின்றனே எல்லாம் உனக்குத் தெரியும நமது நாட்டின நன்மககாள்! இன்னுங் கேளுங் கள், தற்காலம சென்னை முதலிய மகாணங்களிலும ஹிந்து ராஜாங்கமுள்ள ராஜ்ஜியங்களிலுமாகச் சேர்ந்து இவ்விந்திய தேசத தில் 10 வயதிலிருந்து 40 வயதுககு மேல்போகாது இருந்துவரும் விதவைப்பெண்கள் 240 லக்ஷமென்றால் இவ்விந்து விதவைகள் 240 லக்ஷமும எப்படித்தான் உருவெடுத்ததென்று தெரிந்து கொள்ளவேண்டாமா? அதன் காரணத்தைக்கேள்பின்.

அதன் காரணத்தை யெல்லாம் தனித்தனியாக எடுத்துக்கூறுவ தென்றால் இவ்வத்தியாயம ஒன்றிலடங்காது என்று தான் நான் நினைக்கிறேன். இங்ஙனம 2½கோடி விதவைகள் தோன்றுதற்கும் அதனாலாகிய பழிப்பு, தீங்கு, குறை, துயரம, மரணம, நாட்டின் கேடு,வறுமை,இழிவு,நமககுஇனிவரும கேடு, தற்கொலை, சிசுககொலை முதலிய அளவற்ற கொடுஞ் செயல்கள் நாளுக்கு நாள் வலிமை யடைந்து நாட்டைப்பாழ் நிலைமைககுக் கொண்டுவந்து விட்டதற்கும் விடுவதற்கும் ஏதுவாக இருந்து வநததும வருவதுமாகிய பிராமண மதமான வைதிகமதத்தின் சாஸ்திரச்சட்டங்களின் பிடிவாதச் செயல் களேயாகும். இவற்றையெல்லாம் விளங்கக்கூறி உலகிற்குதவ வேண் டுவது யாவற்றினும் சிறந்த பணியாதலால் அப்பணி இயற்ற ஆவன் மேற்கொண்டு தனிப்புத்தகமாய்ச் சீககிரம் வெளிவந் துலாவக்கருதி யிருக்கின்றமைகொண்டு இதனைவாசிக்கும் உங்கள்முன்கூறி இத்தோடு நிறுத்துகின்றேன். ஆதலால் பிராமணமதம அழிக, அழிக, ஒழிகச் சுபம. சுபம். சுபம்.

ராஜா பிரஸ், மதுரை-31.